
**1978 அவ்யக்த முரளி**



**பொருளடக்கம் - 22**

**02.01.1978** ஞான சந்திரன் மற்றும் ஞான நட்சத்திரங்களின் சாரல்!

**07.01.1978** வெளி தேச குழந்தைகளுடன் வெளி தேசத்து தந்தையின் சந்திப்பு!

**13.01.1978** காத்திருப்பதற்கு முன்பு முன்னேற்பாடு செய்யுங்கள்!

**18.01.1978** பாப்தாதாவின் சேவைக்கான பிரதிபலன்!

**24.01.1978** நிரந்தர சேவாதாரி!

**14.02.1978** நெருக்கமான ஆத்மாவின் அடையாளங்கள்!

**16.02.1978** உலகின் அதிகாரி நிலையிலிருந்து அனைவரின் மரியாதைக்குரியவர் ஆகுங்கள்!

**01.04.1978** நிரந்தர யோகி தான் நிரந்தர துணைவனாக இருக்கிறார்!

**14.11.1978** காலத்தின் அழைப்பு!

**27.11.1978** அற்ப காலத்து பெயர், புகழிலிருந்து விலகியிருப்பவர் தான் அனைவரின் அன்பிற்குரியவராக ஆக முடியும்!

**29.11.1978** திருப்தியான நிலை மூலம் மகிழ்ச்சி மற்றும் பாராட்டுதலின் பிராப்தி!

**01.12.1978** அனைத்து பொக்கிஷங்களின் சாவி ஒருவருடையவராக இருத்தல்!

**03.12.1978** பாவம் மற்றும் புண்ணியத்தின் ஆழமான விளைவுகள்!

**05.12.1978** மர்ஜீவா (மறுபிறவி) ஜென்மத்தின் இயற்கையான சம்ஸ்காரம் -முதல் நினைவு மற்றும் முதல் வார்த்தை!

**07.12.1978** தந்தைக்குச் சமமாக சம்பூர்ணம் ஆவதின் அடையாளம்!

**10.12.1978** விஸ்தாரத்தைப் பார்க்காமல் சாரம் அதாவது பிந்துவைப் பாருங்கள்!

**12.12.1978** பரோபகாரியாக ஆவது எப்படி?

**14.12.1978** தடைகளிலிருந்து விடுபடுவதற்கான சுலப வழி!

**19.12.1978** உண்மை நிலை தான் அனைத்தையும் விட உயர்ந்த இராஜவம்ச நிலை ஆகும்!

**21.12.1978** ஒவ்வொரு கல்பத்தின் மிக நெருக்கமான ஆத்மாக்களின் ரூபம், ரேகை மற்றும் வேளை!

**26.12.1978** இஷ்ட தேவதையின் விசேஷங்கள்!

**28.12.1978** பரமாத்மா பிரத்யக்ஷம் ஆவதற்கான ஆதாரம் சத்தியம் மேலும் சத்தியத்தின் ஆதாரம் தூய்மை மற்றும் பயமற்ற நிலை!

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

# 02.01.1978 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஞான சந்திரன் மற்றும் ஞான நட்சத்திரங்களின் சாரல்!

பாப்தாதா அனைத்து அன்பான மற்றும் அதிர்ஷ்டக் குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார். ஒவ்வொருவரின் நெற்றியிலும் அதிர்ஷ்டத்தின் நட்சத்திரம் மின்னிக் கொண்டிருப்பதாக பார்க்கிறார். ஸ்தூல உலகத்தின் ஆத்மாக்கள் ஆகாயத்தின் பக்கம் பார்க்கிறார்கள், மேலும் ஆகாயத்தையும் கடந்து இருக்கக்கூடிய தந்தை ஸ்தூல உலகின் பூமியின் நட்சத்திரங்களைப் பார்ப்பதற்காக வந்திருக்கிறார். எப்படி சந்திரனுடன் சேர்ந்து நட்சத்திரங்களின் சாரல் மழை போன்ற மினுமினுப்பு பார்க்க மிக அழகாக இருக்கும். அதே போல் சந்திரன் பிரம்மா, குழந்தைகள் அதாவது நட்சத்திரங்களினால் தான் அலங்கரிக்கப்படுகிறார். தாயின் அன்பு குழந்தைகள் மேல் அதிகமாக இருக்கிறதா அல்லது குழந்தைகளின் அன்பு தாயை விட அதிகமாக இருக்கிறதா? குழந்தைகள் விளையாட்டில் மும்முரமாக இருக்கிறார்கள் என்றால், தாயை மறந்து விடுகிறார்கள். தாயின் பாசம் குழந்தைகளுக்கு நினைவூட்டுகிறது. அப்படியே பார்த்தாலும் ஒருவேளை அன்பு இல்லை என்றால், குழந்தைகளுக்குப் பிராப்தியும் இருப்பதில்லை.

இன்று அமிர்தவேளையில் விசேஷமாக இந்த நேரத்தில் மதுபனில் ஒன்றாகக் கூடியிருக்கும் ஆத்மாக்கள் தந்தையின் நினைவையும் சேர்த்து பிரம்மா தாயின் நினைவில் அதிகமாக இருந்தார்கள், இன்று வதனத்தில் கூட தந்தை சூரியன் மறைவாக இருந்தார், ஆனால் சந்திரன் பிரம்மா பெரிய அம்மா பிராமணக் குழந்தைகள் அல்லது நட்சத்திரங்களுடன் சந்திப்பதின் அன்பிலேயே மூழ்கியிருந்தார், இன்று வதனத்தில் என்ன காட்சி தெரிந்தது? தாய் தந்தை மற்றும் குழந்தைகளிடையே ஆன்மீக உரையாடல் எப்பொழுதுமே நடந்து கொண்டிருக்கிறது ஆனால் இன்று தாய் தந்தை இடையே உரையாடல்

நடந்தது. என்ன ஆன்மீக உரையாடலாக இருந்திருக்கும் என்று அறிவீர்களா? இன்று அமிர்தவேளையில் விசேஷமாக பிராமணர்களின் அன்பில் பிரம்மாபாபா இருந்தார், ஏனென்றால் மதுபன் பிரம்மாபாபாவின் சாகார ரூபத்தின் காம பூமி, சேவை பூமி அல்லது தாய் தந்தை இரண்டு ரூபத்திலும் சாகார ரூபத்தில் குழந்தைகளை சந்திக்கும் பூமி ஆகும். அந்த மாதிரி தன் மூலமாக, உடல் மற்றும் மனம் மூலமாக அலங்கரிக்கப்பட்ட அந்த பூமியில் அன்பு தூறலைப் பார்த்து இன்று பிரம்மாபாபா அல்லது தாய்க்கு சாகார ரூபத்தின், சாகார உலகின் விசேஷ நினைவு வந்தது. பிரம்மா கூறினார் -சந்திரன் நட்சத்திரங்களுடன் ஒரே சமமான ரூபத்தில் சந்திப்பதற்கு இன்னும் எவ்வளவு காலம் இருக்கிறது அதாவது வியக்த ரூபம் மற்றும் அவ்யக்த ரூபத்தின் சந்திப்பு இன்னும் எவ்வளவு காலம் இருக்கும்? என்ன பதில் கிடைத்திருக்கும்? தந்தை கூறினார் -அனைவரும் தயாராகி விட்டார்கள் என்று தாய் எப்பொழுது கூறுவாரோ அப்பொழுது, எனவே பிரம்மா தாய் உலகை வலம் வர புறப்பட்டுச் சென்றார். நாலாபுறங்களிலும் சுற்றி வந்து ஒவ்வொரு பிராமணனின் ஆன்மீக நிலையைப் பார்த்து வந்தார். சுற்றி வந்த பிறகு வதனத்தில் எப்பொழுது ஆன்மீக உரையாடல் நடந்ததோ அப்பொழுது பிரம்மா கூறினார் -என்னுடைய குழந்தைகள் லட்சியம் வைப்பதில் நம்பர் ஒன் ஆக இருக்கிறார்கள், அனைவரிடமும் நேரத்திற்காகக் காத்திருத்தல் இருக்கிறது, அந்த நேரம் தயாராகியே விடுவார்கள். தந்தை கூறினார் இராஜ்யம் ஸ்தாபனை ஆகி விட்டதா? பிரம்மா இன்று பிராமண குழந்தைகளின் பக்கம் சார்ந்திருந்தார், பிரம்மா கூறினார் 16,108'ன் மாலையோ தயாராகவே இருக்கிறது. பிராமணர்களின் எண்ணிக்கையாக என்ன கூறுகிறீர்கள்? 50-ஆயிரத்திலிருந்து 16,108 உருவாக மாட்டார்களா? மணிகள் தயாராகி விட்டன ஆனால் வரிசைக்கிரமமாக உருளுவதற்கான கடைசி விநாடி மட்டும் இன்னும் பாக்கி இருக்கிறது. மணிகள் நிச்சயிக்கப்பட்டு விட்டன. அவர்களின் இடம் இன்னும் நிச்சயிக்கப்படவில்லை. கடைசியில் வந்தவரும் முன்னுக்குப் போக முடியும், இன்று பிரம்மா 16,108 மணிகள் அதாவது அனைத்து சகயோகி ஆத்மாக்களின் அதிர்ஷ்ட ரேகையை முடிவு செய்தார். இதன் காரணமாக பாக்கியத்தை உருவாக்குபவர். பாக்கியத்தை வழங்குபவர் என்று பிரம்மாவைத் தான் கூறுகிறார்கள். மேலும் நினைவுச் சின்ன ரூபத்திலும் ஜாதகத்தில் பிறந்த நாளன்று அல்லது பெயர் சூட்டும் நிகழ்ச்சியிலும் பிராமணர்

தான் ஜாதகத்தை எழுதுகிறார், அப்படி தாய் பிரம்மா 16,108 மணிகளின் நிச்சயிக்கப்பட்ட அதிர்ஷ்டத்தை கூறினார். நீங்கள் அனைவருமே அதில் இருக்கிறீர்கள் தான் இல்லையா?

இன்று விசேஷமாக பிரம்மா மூலமாக வெளிநாடு மற்றும் பாரதம் இரண்டு பக்கத்திலும் உள்ள குழந்தைகளின் மகிமையைப் பாடிக் கொண்டிருந்தார். எப்படி தொடக்கத்தில் வந்திருக்கும் குழந்தைகளின் பாக்கியத்தின் மகிமை இருக்கிறது. அதே போலவே அவ்யக்த ரூபத்தில் பாலனை பெறும் புதுக் குழந்தைகளுக்கும் இந்தளவே மகிமை இருக்கிறது. எப்படி தொடக்கத்தில் எந்த நடைமுறை வாழ்க்கையின் பிரபாவமும் இருந்ததில்லை. ஒரே ஒரு தந்தையின் அன்பு மட்டும் தான் காரணமாக இருந்தது. எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்ற இது ஒன்றும் தெளிவாக இருக்கவில்லை, மறைவாக இருந்தது ஆனால் ஆத்மாக்கள் அந்த ஜோதியில் முழுமையாக பலியாகும் விட்டில் பூச்சிகளாக இருந்தார்கள். அதே போலவே புதுக் குழந்தைகளின் எதிரில் அனேகரின் வாழ்க்கையின் எடுத்துக்காட்டு இருக்கிறது, முதல், இடை, கடை தெளிவாக இருக்கிறது. 64- பிறவிகளின் ஜாதகம் தெளிவாக இருக்கிறது. முயற்சி செய்வது மற்றும் பலன் அடைவது இரண்டுமே தெளிவாக இருக்கிறது ஆனால் தந்தை அவ்பக்தமாக இருக்கிறார். தந்தையின் பாலனை அவ்யக்த ரூபத்தில் இருந்த போதிலும், வியக்த ரூபத்தின் அனுபவம் செய்விக்கிறது. அவ்யக்தமாக இருப்பவரை வியக்தத்தில் அனுபவம் செய்வது, நெருக்கமான துணையில் அனுபவம் செய்வது, இது புதுக் குழந்தைகளின் அதிசயச் செயலாக இருக்கிறது. எப்படி தொடக்கத்தில் குழந்தைகளின் அதிசயம் இருந்தது. அது போலவே கடைசியில் வந்தும் வேகமாக செல்பவர்களின் அதிசயக் காரியம் இருக்கிறது. அந்த மாதிரியான அதிசயத்தின் மகிமை பாடிக் கொண்டிருந்தோம். இன்று நடந்த ஆன்மீக உரையாடலைக் கேட்டீர்களா?

புகார்களின் மாலைகளும் அதிகமாக இருந்தன. அந்த புகார்களின் மாலைகள் பிரம்மாவை அன்பு ரூபமாக ஆக்கிக் கொண்டிருந்தன. இன்று விசேஷமாக பிரம்மா குழந்தைகளின் அன்பில் மூழ்கியிருந்தார் என்று கூறினோம் இல்லையா? அன்பின் மூர்த்தியாக இருந்த போதிலும் நாடகம் என்ற ஆசனத்தில் உறுதியாக அமர்ந்திருந்தார்.

எனவே அன்பை உள்ளடக்கிக் கொண்டிருந்தார். கடவின் குழந்தைகள் நீங்களும் உள்ளடக்குபவர்கள் தான் இல்லையா? வெளிக்காட்டவும் முடியும். மேலும் உள்ளடக்கவும் முடியும். உள்ளடக்குவது மற்றும் வெளிப்படுத்துவதை மிக நல்ல முறையில் தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா? ஏனென்றால் நீங்களோ கதாநாயக நடிகர்கள். எப்பொழுது விரும்புகிறீர்களோ. எப்படி விரும்புகிறீர்களோ அந்த மாதிரியான ரூபத்தை தாரணை செய்ய முடியும். அதாவது கதாபாத்திரத்தை நடிக்க முடியும். நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் அன்பான, அனைத்து சக்திகளும் நிரம்பிய குழந்தைகளுக்கு, எப்பொழுதும் மிகவும் அன்பான, மிக விலகியிருக்கும். எப்பொழுதும் தன்னுடைய அதிர்ஷ்டத்தின் மின்னிக் கொண்டிருக்கும் நட்சத்திரங்களைப் பார்க்கக்கூடிய, மிக உயர்ந்த அதிர்ஷ்டம் நிறைந்தவர்களுக்கு, தற்சமய மற்றும் எதிர்கால சிம்மாசனதாரிகளுக்கு அந்த மாதிரி பல மடங்கு செல்வம் நிறைந்த, ஒரு நொடியில் தன்னை அல்லது மற்றவர்களை மாற்றம் செய்யக்கூடிய உலகிற்கு நன்மை செய்யும் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

தாதிகளுடன் சந்திப்பு: இன்று அமிர்தவேளையில் பிரம்மா எந்த விசேஷ ஆத்மாக்களின் அதிர்ஷ்ட ரேகையை முடிவு செய்தாரோ அந்த முடிவில் எந்த இரத்தினம் இருப்பார்கள்? 8-இரத்தினங்கள் முடிவு செய்யப்பட்டிருக்கலாம். தாய் தந்தையிடமோ நிச்சயமாக அந்த விஷயம் இருக்கவே இருக்கிறது. மற்றபடி மேடையில் வெளிப்படுத்த வேண்டும். தந்தையிடம் 108-தான் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. ஏன்? தந்தையிடம் எப்படி நிகழ்காலமோ அதே போல் எதிர்காலமும் தெளிவாக இருக்கிறது. அதே போலவே நெருக்கமான குழந்தைகளிடமும் எதிர்காலம் தெளிவாகிக் கொண்டிருக்கிறது. ஏனென்றால் தந்தையுடன் அனைத்து காரியங்களிலும் நெருக்கமாக மற்றும் சகயோகிகளாக இருக்கிறார்கள் என்றால், அஷ்ட இரத்தினங்கள் தான், தலைமை நீதிபதிகள், நீதிபதியின் தீர்ப்பு ஆம் அல்லது இல்லை என்று முடிவாக இருக்கும். தந்தை ஜனாதிபதியாக இருக்கிறார். குழந்தைகள் தலைமை நீதிபதிகள், தீர்ப்பு குழந்தைகளினுடையது. தலைமை நீதிபதியின் தீர்ப்பு எப்பொழுதுமே

மிகச் சரியானதாக இருக்கும். நீதிபதிக்கு மேலே தலைமை நீதிபதி ஆம் அல்லது இல்லை என்று சொல்ல முடியும் ஆனால் தலைமை நீதிபதியின் தீர்ப்புக்கு, மிகுந்த மதிப்பு இருக்கிறது. எனவே எதுவரை எதிர்காலமும், நிகழ்காலத்திற்குச் சமமாக தெளிவாக இல்லை என்றால் தீர்ப்பை யதார்த்தமானதாக எப்படி கொடுக்க முடியும். நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தின் சமநிலையைத் தான் தந்தைக்குச் சமமான நிலை என்று கூறுவது, அந்த மாதிரியான நிலையை அனுபவத்தில் கொண்டு வந்திருக்கிறீர்களா?

இன்று (பிரம்மாபாபாவை) சாகார ரூபத்தில் நினைவு செய்தீர்களா அல்லது அவ்யக்த ரூபத்திலா? நட்சத்திரங்களைப் பார்த்து சந்திரன் நினைவு வருகிறது தான் இல்லையா? எனவே இன்று பிரம்மாவும் நினைவு செய்தார். நல்லது.

பார்டிகளுடன் சந்திப்பு: குஜராத் பார்ட்டி குஜராத்திற்கு விசேஷமாக கடைசியில் வந்தும் வேகமாக செல்வதற்கான வரதானம் கிடைத்திருக்கிறது. குஜராத்தைச் சேர்ந்தவர்களுக்கு நாடகப்படி ஆத்மாக்கள் நமக்கு விசேஷ பாக்கியம் பிராப்தியாகியிருக்கிறது என்ற இந்த போதை இருக்கிறது. எப்படி ஸ்தானத்தின் கணக்குப்படியும் குஜராத் மதுபனின் அருகில் இருக்கிறது. அதே போலவே முயற்சி செய்வதிலும் நெருக்கத்தை க் கொண்டு வருவதற்கான இயல்பான வரதானமும் நாடகப்படி பிராப்தி ஆகியிருக்கிறது. ஏனென்றால், எப்படி ஸ்தானத்தின் கணக்குப்படி அருகில் இருக்கிறீர்கள். அதே போல் ஞானத்தின் தாரணையின் கணக்குப்படி தாரணைக்குத் தகுதியான பூமியாகும். எப்படி நிலம் நன்றாக இருக்கிறது என்றால், அதிலிருக்கும் மரம் விரைவில் பழம் கொடுக்கும். உழைப்பு குறைவு மற்றும் பலன் அதிகமாக கிடைக்கும். அதே போல் குஜராத்தின் பூமிக்கும் மற்றும் அருகில் இருப்பதற்கான வரதானம் இருக்கிறது. அந்த மாதிரி வரம் பெற்ற ஆத்மாக்கள் முயற்சி செய்வதில் எவ்வளவு வேகம் இருக்கும். தாரணையின் பாடத்தில் குஜராத் பாரதத்தின் நிவாசிகளுக்கு ஒரு லி்ப்ட் ஆகும். பார்ப்பதற்கு மிகக் கடினமாக இருக்கும் ஆனால் மிக சுலபமான முறையில் தீர்வு கிடைத்து விடும். இதைத் தான் மலையும் கடுகுக்கு சமமாக ஆகி விடுகிறது என்று கூறுவது. கடுகு இருந்தாலும்

கொஞ்சம் கடினமானது, பஞ்சு மென்மையானதாகவும், லேசானதாகவும் இருக்கும். அப்படி அனுபவம் செய்கிறீர்களா? நல்லது.

சேவாதாரிகள், சேவையின் பங்கையோ செய்தார்கள். சேவாதாரிக்கு விசேஷமாக என்ன இருக்கிறது? அதைப் பார்த்து அனைவரும் இவர் தான் அனைவரையும் விட ஃபர்ஸ்ட் கிளாஸ் சேவாதாரி என்று கூறும் அளவிற்கு சேவை செய்வதிலும் வரிசைக்கிரமம் இருக்கிறது. நம்டர் ஓன் சேவாதாரியின் விசேஷமாக என்ன இருக்கும்? ஃபர்ஸ்ட் கிளாஸ் சேவாதாரியின் விசேஷமாக இது தான் தென்படும் -அவர் சேவை செய்து கொண்டே சேவை மூலமாக தந்தையின் குணங்கள் மற்றும் காரியத்தை பிரசித்தி ஆக்குவார். உடல் மூலமாக செய்யும் சேவை மட்டும் அல்ல. ஸ்தூலமாக செய்து கொண்டிருந்தாலும் ஒவ்வொரு காரியம் மூலமாக ஒவ்வொரு அடி மூலமாக தந்தையின் குணம் மற்றும் காரியத்தை பிரசித்தி ஆக்க வேண்டும். இது தான் முதல் தரமான சேவை ஆகும். சேவை செய்து கொண்டே நாள் மாஸ்டர் ஞானக் கடல், சுகக்கடல், அமைதியின் கடல் என்ற அனுபவம் இருக்க வேண்டும். அப்படியானால் அந்த மாதிரி வட்சியம் வைத்திருக்கிறீர்களா அல்லது உடல் மூலம் செய்யும் சேவையில் மட்டும் களைப்பற்றவர் ஆக வேண்டும் என்ற லட்சியம் வைத்திருக்கிறீர்களா? முதல் தர சேவாதாரி என்றால், ஒரே நேரத்தில் மூன்று விதமான சேவை செய்பவர். மனசக்தி மூலம், உடல் மூலமாக மற்றும் காரியங்கள் மூலமாக, தோற்றம் மூலமாக ஆன்மீக சேவாதாரியின் பொலிவு அதாவது ஃபரிஸ்தா நிலையின் பொலிவு தென்பட வேண்டும். மேலும் மனம் மூலம் தன்னுடைய உயர்ந்த நினைவு மூலமாக சேவை செய்கிறார் என்றால், அந்த மாதிரி ஒரே நேரத்தில் சேவைகள் ஒன்றாக இருக்க வேண்டும். இவரைத் தான் ஃபர்ஸ்ட் கிளாஸ் சேவாதாரி என்று கூறுவது, சேவை செய்வது என்பது ஒரு குணமானது ஆனால் மாஸ்டர் அனைத்து குணங்களின் கடலாக இருக்க வேண்டும். இது விசேஷமாகும். இது வேறு எங்குமே இருக்க முடியாது. களைப்பற்றவராகவோ அனைவரும் ஆக முடியும், ஆனால் ஆல்ரவுண்ட் சேவாதாரி, ஒரே நேரத்தில் மூன்று விதமான சேவை செய்யும் சேவாதாரி கிடைக்க மாட்டார். எனவே பிராமணர்களின் விசேஷமாக என்ன இருக்கிறதோ அந்த லட்சியத்தை வைத்து லட்சணம் மூலமாகக் காண்பிக்க வேண்டும். இப்பொழுது விசேஷ

காரியம் என்ன செய்வீர்கள்? நினைவு யாத்திரையை, ஒவ்வொரு பிராப்தியின் இன்னும் அதிகமாக உள்நோக்கு முகமுடையவராகி மிக சூட்சும மற்றும் ஆழத்திலும் ஆழமான அனுபவம் செய்யுங்கள், ஆராய்ச்சி செய்யுங்கள், எண்ணத்தை உருவாக்குங்கள், மேலும் பிறகு அதனுடைய விளைவுகளைப் பாருங்கள், என்ன நினைத்திருந்தேனோ அது நிறைவேறியதா அல்லது இல்லையா என்று முடிவைப் பாருங்கள் என்று ஏற்கனவே கூறியிருந்தோம். என்ன சக்தியை தாரணை செய்திருந்தோமோ அந்த சக்தியின் நடைமுறை முடிவு (ரிசல்ட்) எத்தனை சதவிகிதத்தில் இருந்தது. இப்பொழுது அனுபவங்களின் நுணுக்கத்தை, செயல்படுத்தும் கூடத்தில் இருக்க வேண்டும். இவர்கள் அனைவரும் ஏதோ விசேஷமான முழு ஈடுபாட்டில் இவ்வுலக விஷயங்களிலிருந்து விலகியிருக்கிறார்கள் என்று மற்றவர்களுக்கு அனுபவம் ஆகட்டும். செய்யும் காரியம் மற்றும் யோகாவில் சமநிலை இருக்கட்டும் இதை அதிகரித்துக் கொண்டே இருங்கள், காரியம் செய்து கொண்டே யோகாவின் சக்திசாலியான நிலை இருக்க வேண்டும். இதன் பயிற்சியை அதிகரியுங்கள். சமநிலை இருப்பது என்றால் அதிவேகம். சமநிலை இல்லாத காரணத்தினால் நடைமுறையில் அதிவேகத்திற்குப் பதிலாக சாதாரண வேகம் ஆகி விடுகிறது. எனவே இப்பொழுது எப்படி சேவைக்காக புதுப் புது கண்டுபிடிப்புகளை செய்கிறீர்கள், அதே போல் இந்த விசேஷ அனுபவங்களின் பயிற்சிக்காக நேரத்தை எடுங்கள். மேலும் புதுமையைக் கொண்டு வந்து அனைவரின் எதிரில் உதாரணமாக ஆகுங்கள். அனைவரும் யோகா என்றால் நிளைவு யோகா என்றால் தொடர்பு என்று வர்ணனை செய்கிறார்கள், ஆனால் தொடர்பின் நடைமுறை ஊக்கம், அதற்கான நிரூபணம் என்ன, பிராப்தி என்ன, அதன் நுணுக்கத்தில் செல்லுங்கள். மேலோட்டமான ரூபத்தில் இல்லாமல் ஆன்மீகத்தின் நுணுக்கத்தில் செல்லுங்கள், அப்பொழுதே ஃபரிஷ்தா ரூபம் பிரத்யக்ஷம் ஆகும். பிரத்யக்ஷதாவின் சாதனமே முதலில் தன்னில் அனைத்து அனுபவமும் பிரத்யக்ஷமாக வேண்டும். எப்படி வெளிநாட்டு சேவையின் முடிவு எப்படி இருந்ததாகக் கேள்விப்படுகிறோம். எதன் பாதிப்பு ஏற்படுகிறது? திருஷ்டியின் மற்றும் ஆன்மீகத்தின் சக்தியின், மொழி புரியாவிட்டாலும் ஃபரிஸ்தா நிலையில், முகம் மற்றும் கண்கள் மூலமாக ஆன்மீகப் பார்வையின் முத்திரை பதிக்கப்படுகிறது. சேவையின் முடிவாக இதைத் தானே பார்த்தோம் இல்லையா? கடைசி நேரத்தில் நேரமும் இருக்காது, இந்த

அளவு சக்தியும் இருக்காது. நாளாக நாளாக பேசுவதின் சக்தியும் குறைந்து கொண்டே செல்லும், ஆனால் வார்த்தைகள் என்ன காரியம் செய்யுமோ அதை விட பல மடங்கு ஆன்மீகத்தின் சக்தி காரியம் செய்ய முடியும். எப்படி சொல்லில் பேச்சில் வருவதற்கான பயிற்சி ஆகி விட்டது. அதே போல் ஆன்மீகத்தின் பயிற்சியும் ஏற்பட்டு விட்டது என்றால், அதிகமாக பேச்சில் வருவதற்கு மனம் விரும்பாது, நல்லது.

வரதானம்: சாட்சியாகி கர்ம இந்திரியங்கள் மூலம் காரியம் செய்விக்கக்கூடிய, காரியம் செய்பவர் உணர்விலிருந்து விடுபட்ட அசரீரி ஆகுக!

எப்பொழுது விரும்புகிறீர்களோ உடலில் வாருங்கள், மேலும் எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது அசரீரி ஆகுங்கள். ஏதாவது காரியம் செய்ய வேண்டும் என்றால், கர்ம இந்திரியங்களின் ஆதாரத்தை எடுங்கள் ஆனால் ஆதாரம் எடுப்பது நான் ஆத்மா தான் என்ற இதை மறக்காதீர்கள். நான் செய்பவன் அல்ல செய்விட்பவள் ஆவேன், எப்படி மற்றவர்கள் மூலம் காரியம் செய்விக்கிறீர்கள் என்றால், அந்த நேரம் தன்னை வேறாகப் புரிந்து கொள்கிறீர்கள். அதே போல் சாட்சியாகி கர்ம இந்திரியங்கள் மூலம் காரியம் செய்வித்தீர்கள் என்றால், காரியம் செய்யும் உணர்விலிருந்து விடுபட்டு அசரீரி ஆகி விடுவீர்கள். காரியத்தின் இடையிடையே ஓரிரு நிமிடம் அசரீரி ஆவதற்கான பயிற்சி செய்தீர்கள் என்றால் கடைசி நேரம் மிகுந்த உதவி கிடைக்கும்.

சுலோகன்: விஷ்வ (உலக) ராஜன் ஆக வேண்டும் என்றால் உலகத்திற்கு சக்தி வழங்குபவர் ஆகுங்கள்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 07.01.1978 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# வெளி தேச குழந்தைகளுடன் வெளி தேசத்து தந்தையின் சந்திப்பு!

இன்று விதேஷி (வெளி தேசத்து தந்தை இந்த ஸ்தூன உலகத்தின் வெளிநாட்டு குழந்தைகளை சந்திப்பதற்காக வந்திருக்கிறார். இருவருமே வெளி தேசிகள் தான். விசேஷமாக இன்று வெளிநாட்டு குழந்தைகளோடு சந்திப்பதற்காக ஏன் வந்திருக்கிறோம்? உங்களுடைய விசேஷத்தைத் தெரிந்திருக்கிறீர்களா? அந்த விசேஷத்தின் காரணமாக தந்தையும் விசேஷ ரூபத்தில் வந்திருக்கிறார். வெளிநாட்டினரிடம் என்ன விசேஷம் இருக்கிறது? சென்ற கல்பத்து என்னுடைய குழந்தைகளே யார் தொலைதூரத்தில் இந்த ஸ்தூல் தேசங்களில் வேறு வேறு பெயர், ரூபம் மற்றும் மதங்களில் சென்று விட்டார்களோ அவர்கள் மீண்டும் பிரிந்து சென்ற தன்னுடைய தந்தை மற்றும் குடும்பத்தை சந்திப்பதற்காக தங்களுடைய உண்மையான இடத்தில் வந்து சேர்ந்து விட்டார்கள் என்று தந்தை தெரிந்திருக்கிறார். அந்த மாதிரி அனுபவம் ஆகிறதா? எவ்வளவு உங்களுக்கு தந்தையை அடைந்த மற்றும் தன்னுடைய தெய்வீக குடும்பத்தை அடைந்ததில் குஷி இருக்கிறதோ அதை விட அதிகமாக தந்தைக்கு குஷி இருக்கிறது. ஏனென்றால், குழந்தைகள் தான் வீட்டின் அலங்காரம் என்று தந்தை தெரிந்திருக்கிறார், அலங்காரமின்றி எந்தவொரு நபரும், இடமும் நன்றாக இருப்பதில்லை. அதே போலவே தந்தைக்கும் குழந்தைகளின் அலங்காரமின்றி நன்றாக இருப்ப தில்லை. வெளிநாட்டு ஆத்மாக்களில் ஒரு விசேஷத்தின் காரணமாக தந்தைக்கும் விசேஷமாக அதிக அன்பு இருக்கிறது. அது எந்த விசேஷம்? எப்படி பாரதத்தில் ஒரு விளையாட்டு விளையாடுகிறார்கள். அனேசு பொருட்களை ஒரு துணிக்குள் மறைத்து வைத்து மேலே துணி மேல் ஒரு உறை போட்டு விடுகிறார்கள், பின்பு உறையை பிரித்து உள்ளே இருக்கும் அனைத்து பொருட்களையும் பாருங்கள், பிறகு உறையை மீண்டும் போட்டு விடுங்கள் என்று குழந்தைகளிடம் கூறுவார்கள். பிறகு என்னென்ன பொருட்கள்

இருந்தன, எத்தனை பொருட்கள் இருந்தன என்று குழந்தைகளின் புத்திக்கான பரீட்சை வைப்பார்கள். பின்பு என்னென்ன பொருட்கள் இருந்தன, எத்தனை இருந்தன என்று அவை அனைத்தையும் நினைவு செய்து விடுகிறார்கள் மற்றும் கூறுகிறார்கள் என்றால், அவருக்கு முதல் எண் கிடைத்து விடுகிறது. இந்த மாதிரி புத்தியின் விளையாட்டை குழந்தைகளுக்கு செய்விக்கிறார்கள். அது போலவே வெளிநாட்டுக் குழந்தைகளும் வேறு மதம், வேறு தத்துவம், வேறு விதமான வாழ்க்கை, பழக்க வழக்கம் இருந்தும் இந்த உறைக்கு உள்ளே மறைந்திருக்கும் தந்தையை எட்டி இருக்கிறாரோ, என்னவாக இருக்கிறாரோ அப்படியே தெரிந்து கொண்டார்கள். இந்த புத்தியின் அதிசபத்தின் காரணமாக வெளிநாட்டுக் குழந்தைகளின் மேல் விசேஷ அன்பு பிறக்கிறது. புரிந்ததா?

இந்த புத்தியின் விளையாட்டில் கோடியில் சிவராக யார் தேர்ச்சி பெற்று இருக்கிறார்களோ அந்த மாதிரி குழந்தைகளைப் பார்த்து பாப்தாதாவும் மகிழ்ச்சி அடைகிறார். நீங்கள் அனைவரும் மகிழ்ச்சி அடைகிறீர்களா? என்ன அடைய வேண்டுமோ அதை அடைந்தாகி விட்டது என்ற இந்த குஷியின் பாடலை எப்பொழுதும் பாடிக் கொண்டே இருங்கள். இந்த குஷியில் இருப்பதினால் எந்த விதமான குழப்பமோ சோர்வோ வர முடியாது. அதாவது மாயாவால் தாக்க முடியாதவர்கள் ஆகி விடுவீர்கள். அந்த மாதிரி மாயா ப்ரூ:ப், (மாயாவால் தாக்க முடியாதவர்கள்) ஆகி விடுங்கள். உங்களுடைய உதாரணத்தை பாப்தாதா அனைவருக்கும் காண்பிப்பார். அந்த மாதிரி உதாரணமாக ஆகியிருக்கிறீர்களா? உங்களில் யார் நாள் அந்த மாதிரி உதாரணமாய் இருக்கிறேன், என்னை பாப்தாதா உலகின் எதிரில் வைக்க முடியும். என்று நினைக்கிறீர்கள்? எவரெடி வேண்டாம், ரெடியாக இருக்கிறீகளா? ஏனென்றால், வெளிநாட்டில் இருக்கும் குழந்தைகளுக்கு இதுவும் ஒரு விசேஷ லி:ப்ட் ஆகும். யார் தன்னை உலகின் எதிரில் வெளிப்படுத்தி தந்தையின் அறிமுகம் கொடுக்கிறாரோ அந்த மாதிரி சேவை செய்வதினால் அதிகப்படியான மதிப்பெண் கிடைத்து விடுகிறது, அந்த மாதிரி சேவை செய்திருக்கிறீர்கள அல்லது செய்ய வேண்டுமா? பாரதத்தின் ஆத்மாக்கள் உங்களைப் பார்த்து இவர்கள் தந்தையைத் தெரிந்து கொண்டார்கள் ஆனால் நாங்கள் தெரிந்து கொள்ளவில்லை என்று நினைப்பார்கள். தெரிந்திருக்கும் உங்களுடைய முகத்தைப்

பார்த்து பாரதவாசிகளுக்கு நாங்கள் எங்களுடைய பாக்கியத்தை இழந்து விட்டோம் என்று வேதனை ஏற்படும். எனவே நீங்கள் அனைவரும் சேவைக்காக பொறுப்பாளராக இருக்கிறீர்கள். இப்பொழுது டில்லியில் மாநாட்டில் கூட வெளிநாட்டிலிருந்து வந்திருக்கும் குழந்தைகள் உங்கள் அனைவரின் விசேஷ சேவை இது தான், யாராவது உங்களில் எந்த ஆத்மாவைப் பார்த்தாலும் ஒவ்வொருவர் முகத்திலும் தந்தை மூலமாகக் கிடைத்திருக்கும் அழியாத குஷி, அதீந்திரிய சுகத்தின், அழியாத அமைதியின் பொலிவு தென்பட வேண்டும். உங்கள் அளைவரின் முகமும் தந்தை மூலமாகக் கிடைத்திருக்கும் செல்வத்தை வெளிப்படுத்தக்கூடிய கண்ணாடி ஆகி விட வேண்டும். அந்த மாதிரி சேவை செய்யக்கூடிய குழந்தைகளுக்கு பாப்தாதா மூலமாக மதிப்பெண்கள் என்ற விக்ஷேஷ பரிசு கிடைக்கும். இந்த சேவையோ சுடைம் தான் இல்லையா அல்லது கடினமா?

எந்த விதமான ஒளியும் தன் பக்கம் நிச்சயம் கவர்ந்திழுக்கும். அதே போல் அனைத்து ஆத்மாக்கள் நீங்களும் லைட் மற்றும் மைட் (ஒளி மற்றும் சக்தி) ரூபமானவர்கள். எனவே பிறரை தந்தையின் பக்கம் கவர்ந்திழுங்கள், மகான் ஆகி என்ன சேவை செய்ய வேண்டுமென்று புரிந்ததா? வெளிநாட்டிலிருக்கும் குழந்தைகளிடம் மாயா வருகிறதா? பயப்படுபவர்களாக நீங்கள் இல்லையே? சவால் விடுபவர்கள் தான் இல்லையா? மாயாவிற்கு வா மற்றும் வந்து விடைபெற்றுச் செல் என்று சவால் விடுகிறீர்களா? மாயா வருவது என்றால் அனுபவி ஆவது. எனவே மாயாவிடம் ஒரு பொழுதும் பயப்படாதீர்கள். பயந்தீர்கள் என்றால் அதுவும் கொடூரமான குடம் தாரணை செய்து விடும். பயப்படவில்லை என்றால் நமஸ்காரம் செய்யும். உண்மையிலேயே அது ஒன்றுமில்லை. காகிதப்புலி ஆகும். காகிதப்புலியிடம் நீங்கள் பயப்படுபவீர்களா என்ன? கொடூரமான ரூபம் தரணை செய்கிறது ஆனால் சக்தியில்லாதது. எப்படி இங்கேயும் பயங்கரமான முகமுடியைப் போட்டு பயமுறுத்துகிறார்கள் ஆனால் உள்ளே இருப்பதோ மனிதன் தானே? வெளியில் உள்ள உறையை எடுத்து விட்டீர்கள் என்றால், ஒரு பயமும் இல்லை, ஆனால் ஒருவேளை வெளி ரூபத்தைப் பார்த்து பயந்தீர்கள் என்றால், தோல்வி அடைந்து விடுவீர்கள். மாயாவிடம் தோல்வி அதிகமாக ஏற்படுகிறதா அல்லது வெற்றி அதிகமாக ஏற்படுகிறதா?

# 1978 அவ்யக்த முரளி

வெளிநாட்டிலிருந்து வந்திருக்கும் குழந்தைகளில் யார் நான் 108-மணி மாலையில் மணிகளில் இருக்கிறேன் என்று நினைக்கிறீர்கள்? நிச்சயத்தின் வெற்றி ஏற்பட்டே தீரும். ஒருபொழுதும் லட்சியத்தை பலஹீனமானதாக வைக்காதீர்கள். எப்பொழுதும் நான் தான் சென்ற கல்பத்திலும் வெற்றி அடைந்தவன் மேலும் எப்பொழுதுமே வெற்றி அடைவேன் என்ற உயர்ந்த வட்சியத்தை வைத்தீர்கள் என்றால், எப்பொழுதும் தன்னை வெற்றி இரத்தினம் என்று தான் அனுபவம் செய்வீர்கள். அதிக நாடுகளிலிருந்து வந்திருக்கிறார்கள். எந்தெந்த தேசங்களிலிருந்து தந்தையின் குழந்தைகள் உருவாகியிருக்கிறார்களோ அந்த இடங்களுக்கும் மகத்துவம் இருக்கிறது. அந்த இடங்கள் ஏதா ஒரு ரூபத்தில் நினைவுச்சின்னங்கள் ஆகி விடுகின்றன. நீங்கள் விசேஷமாக அந்த இடங்களில் சுற்றி வந்து கொண்டே இருப்பீர்கள் (மின்சாரம் தடைபட்டது). அசரீரி ஆவது கூட இந்த அளவே சுலபமானதாக இருக்க வேண்டும். எப்படி ஸ்தூலமான ஆடையை களைந்து விடுகிறீர்கள், அதே போல் தேக அபிமானத்தின் ஆடையை ஒரு நொடியில் களைய வேண்டும். எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது அணிந்து கொள்ள வேண்டும். மேலும் எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது அதனை களைந்து விட வேண்டும் ஆனால் எப்பொழுது எந்த விதமான பந்தனமும் இருக்காதோ அப்பொழுது தான் இந்தப் பயிற்சியும் இருக்கும். ஒருவேளை மனதின் எண்ணங்களின் பந்தனம் இருந்தால் கூட விடுபட முடியாது. ஏதாவது இறுக்கமான ஆடை இருக்கிறது என்றால், அதை சுலபமாகவும் விரைவாகவும் களைய முடியாது, இதே விதமாக எண்னாம், சொல், உறவில் ஏதாவது பற்றுதல் இருக்கிறது. மிகுந்த ஈடுபாடு இருக்கிறது என்றால் விடுபட மூடியாது. அந்த மாதிரியான பயிற்சியை சுலபமாக செய்ய முடியுமா? எப்படி நினைக்கிறீர்களோ அப்படியே சொரூபம் ஆகி விட வேண்டும். எண்ணத்தின் கூடவே சொருபமாகி விடுகிறீர்களா அல்லது எண்ணம் வைத்த பிறகு சொரூபம் ஆவதில் கால தாமதம் ஆகிறதா? நினைத்தீர்கள், உடனேயே அசரீரி ஆகி விடுங்கள், நாள் மாஸ்டர் அன்புக் கடல் என்ற நிலையில் நிலைத்து விட வேண்டும் என்று நினைத்தீர்கள், உடன் அந்த சொரூபம் ஆகி விட வேண்டும். அந்த மாதிரி பயிற்சி இருக்கிறதா? இப்பொழுது இந்தப் பயிற்சியை

அதிகப்படுத்துங்கள். இந்தப் பயிற்சியின் ஆதாரத்தில் ஸ்காலர்ஷிப் (உதவித் தொகை) பெற்று விடுனீகள்,

இதுவரையிலும் வெளிநாட்டினர் ஒரு திட்டத்தை நடைமுறை படுத்தவில்லை. எந்த திட்டம் கொடுத்திருந்தோம் என்று நினைவிருக்கிறதா? இப்பொழுது பாரதத்தின் கும்பகர்ணன் நன்றாக தூங்கிக் கொண்டிருக்கிறான், மகாநாட்டில் எப்படி தண்னீர் தெளிக்கிறீர்கள் என்று பார்க்கலாம். யாராவது ஆழ்ந்த உறக்கத்தில் உறங்கிக் கொண்டிருக்கிறார் என்றால், அவரை தண்ணீர் துளிகள் தெளித்து எழுப்ப வேண்டியதாக இருக்கிறது. இந்த திட்டத்தை நடைமுறையில் கொண்டு வாருங்கள். அதே போல் யாராவது உங்கள் எதிரில் வந்தவுடனேயே நாங்களும் எழுந்திருக்க வேண்டும் மேலும் இந்த மாதிரி ஆக வேண்டும் என்று புரிந்து கொள்ள வேண்டும். அனைவருக்கும் விரும்பாவிட்டாலும் அவர்களின் பேச்சின் பக்கம் கவனம் செல்ல வேண்டும். அந்த மாதிரி வெளிநாட்டின் எந்த பகுதியிலாவது யாரையாவது தயார் செய்திருக்கிறீர்களா?

அனைத்து சேவை நிலையங்கள் சரியாக நடந்து கொண்டிருக்கின்றனவா? அனைவரும் தன் மீதும், சேவை மீதும் திருப்தியாக இருக்கிறீர்களா? நீங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலிகள். நாங்கள் விசேஷமான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லக்குழந்தைகள் என்று நினைக்கிறீர்களா? அனைத்து சென்டர்களிலும் பந்தயத்தில் யார் நம்பர் ஒன் ஆக இருக்கிறார். ஒவ்வொரு தேசத்திற்கும் அதனதனுடைய விசேஷம் இருக்கிறது. லண்டனோ பொறுப்பான காரணத்தினால் திட்டமிடும் மையமாகி விட்டது. இந்த விசேஷத்தின் காரணமாக லண்டனை நம்பர் ஒன் என்று கூறுவோம் ஆனால் சேவை செய்வதில் மற்றும் செய்தியை பரப்புவதிலும் விசேஷமான, தரமான சேவை செய்வதிலும் கயானாவை நம்பர் ஒன் என்று கூறுவோம். எண்ணிக்கையின் அடிப்படையில் மொரீசியஸ் நம்பர் ஒன் மேலும் லுசாகா இவை அனைத்தையும் சகித்துக் கொண்டு சூழ்நிலையை கடந்து செல்வதில், குழப்பமான சூழ்நிலை இருந்த போதிலும் உறுதியாக முன்னேறுவதில் நம்பர் ஒன் ஆகும். ஆஸ்திரேலியாவிற்கும் விசேஷம் இருக்கிறது. ஒவ்வொரு தீபம் மூலம் அனேக தீபத்தை எரிய வைத்து தீபாவளி

கொண்டாடுவதில் நம்பர் ஒன் ஆகும். ஆஸ்திரேலியா இன்னும் முன்னேறிச் செல்ல முடியும். திட்டமிடும் புத்தி இருக்கிறது, மேலும் திட்டத்தையும் மிக நல்லதாக உருவாக்குகிறார்கள். ஒருவேளை அதே திட்டத்தை நடைமுறையில் கொண்டு வந்து விட்டார்கள் என்றால் லண்டனையும் விட நம்பர் ஒன்-ஆக ஆக முடியும் ஆனால் இப்பொழுது புத்தி வரையிலும் திட்டம் இருக்கிறது. நடைமுறையில் கொண்டு வரவில்லை.

ஒவ்வொரு இரத்தினமும் மிகவும் மதிப்புள்ளது ஆனால் அந்த மதிப்பை மேடை வரை கொண்டு வரவில்லை, பாப்தாதாவிற்கு நம்பிக்கை இருக்கிறது. இந்த மாரியா (ஒரு சகோதரி) செய்ய முடியும். தியாகம் மற்றும் தபஸ்யாவின் ஆடையை அணிந்து மட்டும் மேடையில் வந்தீர்கள் என்றால், வெற்றி உங்கள் கழுத்தின் மாலையாகி விடும். சேவை செய்து பிறகு யாரையாவது உங்களுடன் இந்தியாவிற்கு அழைத்து வாருங்கள். ஆஸ்திரேலியா நல்ல பூமியாகும்.

ஜெர்மனியிலிருந்தும் செய்தியைப் பரப்பக்கூடிய ஆத்மாக்கள் உருவாக முடியும். நன்றாக உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது அங்கிருந்து நடைமுறையில் இந்த மாதிரி யாராவது விசேஷ உதாரணமாக வேண்டும். அவரைப் பார்த்து மற்ற ஆத்மாக்களுக்கு விசேஷ பிரேரணை கிடைக்க வேண்டும் ஆனால் தைரியம் மற்றும் உற்சாகத்தில் நம்பர் ஒன் ஆக இருக்கிறார்கள். லெஸ்டர் லண்டனுடன் சேர்ந்திருக்கிறது. லெஸ்டரைச் சேர்ந்தவர்களிடம் அதிசயம் இருக்கிறது. லெஸ்டரில் நிச்சயபுத்தியுடைய வெற்றி அடையும் மிக நல்ல குழந்தைகள் இருக்கிறார்கள். குடும்பத்தோடு குடும்பமாக முன் உதாரணமாக மிக நல்ல முறையில் தயாராகியிருக்கிறார்கள். பாப்தாதாவின் இதயத்திற்கு விருப்பமானவர்கள். நைரோபி மற்றும் பொலிவியா தீவிரமாக முயற்சி செய்வதிலும், மிகுந்த ஈடுபாட்டில் இருப்பதிலும் குறைந்தவர்கள் அல்ல. எண் முன்னுக்கு இருக்கிறது. ஜோதியில் விழுந்து பலியாகும் விட்டில்பூச்சி ஆவதின் உதாரணத்தை நடைமுறையில் பார்த்தீர்கள் இல்லையா? ஒருவேளை அந்த பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆத்மா எங்காவது தன்னுடைய அனுபவத்தைச் கூறினார் என்றால், அவருடைய வார்த்தையும் கூட சேவை செய்ய முடியும். ஹாங்காங்கின் பூமியில் அன்புள்ள மற்றும்

சகயோகி ஆத்மாக்களின் விசேஷம் இருக்கிறது. மேலும் சக்திசாவியான ஆத்மாக்களும் ஊராங்கங்கின் பூமியில் இருக்கிறார்கள் ஆனால் இப்பொழுது மறைந்திருக்கிறார்கள். நேரம் வரும்பொழுது ஹாங்காங்கில் மறைந்திருக்கும் ஆத்மாக்கள் அனைவருக்கும் தென்படுவார்கள். அப்படி ஒவ்வொரு வெளிநாட்டு சேவை நிலையத்தின் விசேஷம் அவரவர்களுடையது. எனவே அனைவரும் நம்பர் ஒன். கனடாவும் இப்பொழுது இதில் நம்பர் எடுத்துக் கொண்டிருக்கிறது. ரெடியாகிக் கொண்டிருக்கிறது. கனடாவின் பூமியிலும் விசேஷம் இருக்கிறது, அங்கிருந்து யாராவது ஒருவர் ஒருவேளை உருவானார் என்றாலும், அவர் அனேகரை உருவாக்க முடியும். நம்பிக்கைக்குரியவர்களாக இருக்கிறர்கள். ஒருவர் உருவானால் கூட காலதாமதம் ஆகாது. கடைசியில் வந்தாலும் அதிவேகமாகச் செல்பவர்களாக ஆகி விடுவார்கள், கடுமையாக உழைக்கிறார்கள். நல்ல ஈடுபாடும் இருக்கிறது. உழைப்பும் நன்றாக இருக்கிறது. சுப பாவனையும் நன்றாக இருக்கிறது. சுப பாவனை அதனுடைய பலனை அவசியம் கொடுக்கும்.

இருந்த போதிலும் அதிசயம் ஜனக்கினுடையது (ஜானகி தாதி). அவர் வெளிநாட்டு பூமியில் எப்பொழுதும் ஊக்கம், உற்சாகத்தை அதிகரிப்பதற்குப் பொறுப்பாளர் ஆகியிருக்கிறார், சவாலை ஏற்றுக் கொண்டிருக்கிறார். சகயோகிகளும் மிக நல்லவர்கள். இருந்தாலும் சவாலை எடுத்திருக்கிறார் என்று தான் கூறுவோம். வினாஷத்தின் நேரம் அருகில் வந்து கொண்டே இருக்கிறது என்றால், சூழ்நிலையைப் பார்த்து செய்தியைக் கொடுக்கும் உங்களை யார் இந்த பரிஷ்தாக்கள், இவர்களே தந்தையின் அறிமுகத்தை எங்களுக்குக் கொடுத்தார்கள் என்று தேடுவார்கள். சேவையில் எங்கெல்லாம் கால் வைத்தீர்களோ அங்கு வெற்றி இல்லை என்று அப்படி இருக்க முடியாது. சில பூமி உடனே பழம் கொடுக்கும். சில பூமி பழம் கொடுப்பதில் கால தாமதமாகும் ஆனால் அவசியம் பழம் கொடுக்கும்.

எப்படி இந்தியாவில் தொடர்வண்டி (ரயில்) செல்கிறது என்றால், இடையிடையே நமது இடங்கள், சேவை நிலையங்கள் இருக்கின்றன, அப்படியே (வெளிநாட்டில்) விமானம் எங்கெங்கெல்லாம் நிற்கிறதோ

அங்கு சென்டர் இருக்க வேண்டும். அவசியம் அது நடக்கும். மற்றபடி வெளிநாட்டினரின் பந்தயம் நன்றாக நடந்து கொண்டிருக்கிறது. நல்லது

**பார்ட்டிகளுடன்:** 1) உள்உணர்வு சஞ்சலம் ஆவதற்கான காரணம் மற்றும் ஸ்திரமாக ஆவதற்கான சகஜ வழி: உள்ளுணர்வு சஞ்சலம் ஆவதற்கான காரணம், ஏன் மற்றும் என்ன? என்ற இந்த இரண்டு வார்த்தைகள் தான் சஞ்சலத்தில் கொண்டு வருகிறது. மேலும் இது ஒன்றும் புதிதல்ல என்ற ஒரு வார்த்தை ஸ்திரமாக்கி விடுகிறது. கண்டிப்பாக நடக்கும் இதைத் தவிர வேறு ஒரு விஷயம் இல்லை என்றால் எப்படி சஞ்சலப்படும். இது ஒன்றும் புதிதல்ல என்றால் ஏன் மற்றும் என்ன என்பது முடிவடைந்து விடும், எப்படிப்பட்ட விஷயம் வந்தாலும் சரி அது எண்ணத்திலோ, வார்த்தையிலோ, உறவு நெருக்கத்திலோ இருந்தாலும் ஒன்றும் புதிதல்ல, ஏன் மற்றும் என்ன என்ற கேள்வி புதியவைகளின் மீது தான் ஏற்படும். இது ஒன்றும் புதிதல்ல என்கிற போது கேள்விக்குறியும் இல்லை, ஆச்சரியக்குறியும் இல்லை. எனவே இந்தப் பாடத்தை மீண்டும் படித்து உறுதிப்படுத்துங்கள்.

**2) மாயாவின் சாதுர்யத்திலிருந்து பாதுகாப்பாகி எப்பொழுதும் வெற்றி அடைபவர் ஆவதற்கான விதி:** மாஸ்டர் சர்வ சக்திவானின் நிலையில் நிலைத்திருங்கள், மாஸ்டர் சர்வ சக்திவான் என்றால் வெற்றி இரத்தினம், மாயா உள்ளுக்குள்ளே முற்றிலும் சக்தியில்லாததாக இருக்கிறது. அதன் வெளிரூபத்தைப் உ பார்த்து பயப்படாதீர்கள், அது உயிரோடிருக்கிறது என்று நினைத்து மூர்ச்சையாகாதீர்கள். அது மூர்ச்சையாகிக் கிடக்கிறது ஆனால் சில நேரம் மூர்ச்சையாகிக் கிடப்பவரைப் பார்த்தும் சிலர் மூர்ச்சையாகி விடுகிறார்கள். இப்பொழுது அதற்கு மிகவும் குஷியோடு விடை கொடுங்கள், ஞானம் நிறைந்த நிலையில் இருந்தீர்கள் என்றால், ஒருபொழுதும் ஏமாற்றம் அடைய மாட்டீர்கள்,

**3) அமர்நாத் தந்தை மூலமாக சங்கமயுகத்திலும் எப்பொழுதும் அமரராக இருப்பதற்கான வரதானம்:** அமர்பவ என்ற இந்த வரதானம் இந்த பிறவியிலும் எதிர்காலத்திலும் பிராப்தி ஆகிறது, சங்கமயுகத்தில் மாயாவிடமிருந்து பாதுகாப்பாக ஆவதற்கு அமர்பவ என்ற வரதானம்,

மேலும் எதிர்காலத்தில் அகால மரணத்திலிருந்து பாதுகாப்பாக ஆவதற்கும் இந்த வரதானமாகும். அமர்பவ என்ற இந்த வரதானத்தைப் பெறுபவர்களை மாயா அசைக்க முடியாது. தூரத்திலிருந்தும் பார்வையை வைக்க முடியாது. எப்பொழுதும் நமஸ்காரம் செய்யும். எனக்கு அமர்பவ என்ற வரதானம் கிடைத்திருக்கிறது என்பதை எப்பொழுதும் நினைவில் வையுங்கள், வரதானம் பெற்ற ஆத்மா நிச்சயபுத்தி உடையவராக இருக்கும் காரணத்தினால் வெற்றி அடைபவர் ஆகிறார். யாருக்கு இந்த வரதானத்தின் போதை இருக்கிறதோ அவர் கனவில் கூட மாயாவிடம் மூர்ச்சையாக முடியாது. தந்தையிடமிருந்து வரதானம் கிடைப்பது சாதாரண விஷயமா என்ன? சத்குரு அவரே வரதானம் கொடுக்கிறார் என்றால் எவ்வளவு போதை இருக்க வேண்டும். நல்லது.

வரதானம்: முகம் மூலமாக அனைத்து உயர்ந்த பிராப்திகளையும் அனுபவம் செய்விக்கக்கூடிய அனைத்து பிராப்தி நிரம்பியவர் ஆகுக!

சங்கமயுகத்தில் பிராமண ஆத்மாக்கள் உங்களுக்கு அனைத்து பிராப்திகள் நிரம்பியவர் ஆகுக என்ற வரதானம் இருக்கிறது, அந்த மாதிரி வரம் பெற்ற ஆத்மாக்களுக்கு கடின உழைப்பு செய்ய வேண்டியதாக இருக்காது. அவர்களுடைய முகத்தின் ஜொலிப்பு இவர் எதையோ அடைந்திருக்கிறார். இவர் பிராப்தி சொரூபமான ஆத்மா என்று கூறும் சில குழந்தைகளின் முகத்தைப் பார்த்து இது மிக உயர்ந்த நிலை, இவர்கள் மிக உயர்ந்த தியாகம் செய்திருக்கிறார் என்று மக்கள் கூறுவார்கள், தியாகம் பார்க்கத் தென்படும் ஆனால் பாக்கியம் தென்படாது. அனைத்து பிராப்திகளின் போதையிலிருந்து தன்னுடைய பாக்கியத்தை பிறருக்குக் காண்பித்தீர்கள் என்றால் சுலபமாக கவரப்பட்டு வருவார்கள்.

சுலோகன்: எங்கு ஊக்கம் உற்சாகம் மற்றும் ஒற்றுமையின் கூட்டமைப்பு இருக்கிறதோ அங்கு வெற்றி அடங்கியிருக்கிறது!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 13.01.1978 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# காத்திருப்பதற்கு முன்பு முன்னேற்பாடு செய்யுங்கள்!

தந்தை குழந்தைகளைப் பார்த்து எப்பொழுதும் மகிழ்ச்சி அடைகிறார். ஒவ்வொரு குழந்தையும் தற்சமய உலகின் அனைத்து ஆத்மாக்களை விட உயர்ந்தவர்களாக இருக்கிறார்கள் மற்றும் எதிர்காலத்திலும் உலகம் மூலமாக பூஜைக்குரியவர்களாகவும் ஆகிறார்கள். அந்த மாதிரி அனைத்து உயர்ந்த, மகிமைக்குரிய மற்றும் பூஜைக்குத் தகுதியான யோகி ஆத்மாக்கள், ஞானம் நிறைந்த ஆத்மாக்கள், தெய்வீக குணங்கள் உள்ளவர்கள், எப்பொழுதும் உலக சேவாதாரி பாப்தாதாவின் அன்பு மற்றும் சகயோகத்தில் இருக்கும் அந்த மாதிரி குழந்தைகளைப் பார்த்து தந்தைக்கு எவ்வளவு குஷி ஏற்படுகிறது. வரிசைக்கிரமமாக இருந்தபோதிலும் முயற்சியில் கடைசியிலிருக்கும் மணி கூட உலகின் எதிரில் மகான் ஆவார். அந்த மாதிரி தன்னுடைய மகான் நிலையை, தன்னுடைய மகிமையை உணர்ந்த நிலையில் நடந்து கொண்டிருக்கிறீர்களா? அல்லது போகப் போக தன்னை சாதாரணமாக நினைத்து விடுகிறீர்களா? ஆன்மீகத் தந்தை மூலமாக கிடைத்திருக்கும் ஆன்மீக வாழ்க்கை, ஆன்மீக காரியம், சாதாரணமானது அல்ல. மாலையில் கடைசியில் உள்ள மணியையும் இன்று வரை பக்த ஆத்மாக்கள் பய பக்தியோடு கண்களில் ஒத்திக் கொள்கிறார்கள், ஏனென்றால் கடைசி எண்ணில் இருப்பவரும் பாப்தாதாவின் கண்களின் நட்சத்திரம் ஆவார். கண்ணின் மணி ஆவார். அந்த மாதிரி கண்ணின் மணி இன்று வரையிலும் கூட கண்ணில் வைக்கப்படுகிறது. தன்னுடைய உயர்ந்த பாக்கியத்தைத் தெரிந்து கொண்டு, வர்ணனை செய்து கொண்டே அறியாதவர்களாக ஆகி விடாதீர்கள், ஒரு தடவையாவது மனதால், உண்மையான உள்ளத்தோடு தன்னை தந்தையின் குழந்தை என்று நிச்சயம் செய்தீர்கள் என்றால் அந்த ஒரு நொடியின் மகிமை மற்றும் பிராப்தி மிகப் பெரியது. நேரடியாக தந்தையின் குழந்தை ஆவது எவ்வளவு பெரிய லாட்டரி என்று

தெரிந்திருக்கிறீர்களா? ஒரு நொடியில் சூத்திரனிலிருந்து பிராமணன் என்று பெயர் சூட்டப்பட்டு விடுகிறது. உலகம் மாறிவிடுகிறது. சம்ஸ்காரம் மாறிவிடுகிறது. பிறகு பார்வை, உள்உணர்வு, நினைவு அனைத்தும் ஒரு நொடி விளையாட்டில் மாறி விடுகிறது. அப்படிப்பட்ட மாதிரி உன்னதமான நொடியை மறந்து விடுகிறீர்கள், உலகத்தினர் இன்று வரையிலும் மறக்கவில்லை. நீங்கள் ஆத்மாக்கள் சுற்றி வந்து மாறியும் விட்டீர்கள், ஆனால் உலகத்தினர் மறக்கவில்லை. இப்பொழுது உ உங்கள் அனைவரின் பாக்கியத்தை வர்ணளை செய்து அந்த அளவு குஷி அடைகிறார்கள். பகவானே கிடைத்து விட்டார் என்று நினைக்கிறார்கள், எப்பொழுது உலகத்தினரே மறக்கவில்லையோ, நீங்கள் சுயம் அனுபவம் நிறைந்தவர்கள், அனைத்தையும் பிராப்தி செய்யும் ஆத்மாக்கள் ஆவீர்கள், இருந்தும் ஏன் மறந்து விடுகிறீர்கள். மறக்கக்கூடாது ஆனால் மறந்து விடுகிறீர்கள்.

இந்த புது வருடத்தில் பாப்தாதாவிற்கு என்ன புதுமையைக் காண்பிக்கப் போகிறீர்கள். என்ன நேரம் கொடுத்திருந்தோமோ அதன்படியோ அனைவரும் சம்பூர்ணமாகத் தான் தென்பட வேண்டும், லட்சியத்திற்கு ஏற்றபடி அனைத்து பிராமண ஆத்மாக்களுக்கும் அவர்களுடைய முயற்சி முழுமையாகியிருக்க வேண்டும். நீங்களோ மாற்றத்திற்காகத் தயாராக இருக்கிறீர்கள் இல்லையா? இப்பொழுது என்ன நேரம் கிடைத்திருக்கிறதோ அது பிராமணர்களின் சுயமுயற்சிக்காக அல்ல, ஆனால் ஒவ்வொரு எண்ணம், ஒவ்வொரு வார்த்தை மூலமாக வள்ளலின் குழந்தைகள் நீங்கள் அடைந்துள்ள கஜானாக்களை உலக ஆத்மாக்களுக்கு வழங்குவதற்காக உள்ளது. இந்த அதிகப்படியான நேரம் உங்களுடைய முயற்சிக்காக அல்ல, ஆனால் மற்றவர்களுக்காக நேரம், குணம் மற்றும் பொக்கிஷத்தைக் கொடுப்பதற்காக இருக்கிறது. தந்தை எந்தக் காரியத்திற்காக நேரம் மற்றும் பொக்கிஷத்தை கொடுத்தாரோ அதற்குப் பதிலாக ஒருவேளை தனக்காக நேரம் மற்றும் செல்வத்தை ஈடுபடுத்துகிறீர்கள் என்றால், இதுவும் நம்பிக்கை வைத்து உங்களிடம் கொடுத்து வைக்கப்பட்டதை மோசம் செய்வதாகும். இந்த விசேஷ வருடம் பிராமண ஆத்மாக்கள் மகாதானி, வரதானி ஆவதற்காக இருக்கிறது. இந்த மாதத்தில் விசேஷமாக யோகாவின் நிகழ்ச்சி, அடுத்த மாதத்தில் விசேஷமாக சேவையின் நிகழ்ச்சி என்று நீங்கள் நிகழ்ச்சிகளை தயாரிக்கிறீர்கள் இல்லையா? அதே போல்

நாடகத் திட்டத்தின்படி இந்த அதிகப்படியான நேரம் நீங்கள் மகாதானி ஆவதற்காகக் கிடைத்துள்ளது. இதுவரை பழைய பேச்சு, பழைய விஷயங்கள், பழைய பழக்க வழக்கங்கள் இருக்கிறது என்பதை நீங்களும் நன்றாகத் தெரிந்திருக்கிறீர்கள், இந்த வருடத்தின் நேரம் இதற்காக அல்ல. எப்படி தந்தையின் எதிரில் தன்னை சமர்ப்பணம் செய்திருக்கிறீர்கள், அதே போல் இப்பொழுது தன்னுடைய நேரம் மற்றும் அனைத்து பிராப்திகளாகிய ஞானம், குணம் மற்றும் சக்திகளை உலக சேவைக்காக சமர்ப்பணம் செய்யுங்கள். என்ன எண்ணம் எழுகிறதோ அதை இது உலக சேவைக்கானதாக இருக்கிறதா என்று சோதனை செய்யுங்கள், அந்த மாதிரி சேவைக்காக அர்ப்பணம் ஆகும்போது நீங்கள் சுலபமாக முழுமை ஆகி விடுவீர்கள், எப்படி எப்பொழுதாவது ஏதாவது சேவையில் முக்கியமான நிகழ்ச்சியை செய்கிறீர்கள் என்றால் அந்த முக்கிய காரியத்தில் பிஸியாகும் காரணத்தினால் தன்னுடைய ஓய்வு அல்லது தனக்காக பிராப்தி செய்விக்கும் விஷயங்கள் அல்லது நடைமுறையில் மற்ற ஆத்மாக்கள் மூலமாக வரும் சிறு சிறு சோதனைகள், தடைகள் மீது கவனம் செலுத்துவதில்லை, தவிர்க்கிறீர்கள். ஏனென்றால், செய்ய வேண்டிய முக்கியமான காரியத்தை எப்பொழுதும் எதிரில் வைக்கிறீர்கள் மற்றும் பிஸியாக இருக்கிறீர்கள். தனக்காக நேரத்தைப் பயன்படுத்தாமல் விசேஷமாக சேவையில் ஈடுபடுத்துகிறீர்கள், அது போலவே இந்த புதிய வருடத்தில் ஒவ்வொரு விநாடி மற்றும் எண்ணம் சேவைக்காக இருக்கிறது என்று நினைப்பதினால், இந்தக் காரியத்தில் பிஸியாவதினால் சோதனைகளை, தடைகளை அவை ஒன்றுமே இல்லை என்பது போல் கடந்து செல்வீர்கள். இந்த விஷயம் எப்படி இருந்தது மற்றும் என்ன ஆனது என்று எண்ணம் கூட வராது. தன்னை சமர்ப்பணம் செய்வதினால் இந்த சேவையின் ஈடுபாட்டில் வந்திருக்கும் சிறிய மற்றும் பெரிய பரீட்சைகள் மற்றும் சோதனைகள் தானாகவே அகன்றுவிடும். எப்படி நெருப்பில் போடப்பட்ட ஒவ்வொரு பொருளின் பெயர் ரூபம் மாறிவிடுகிறதோ, அதே போல் சோதனை தடையின் பெயர், ரூபம் மாறி பிராப்தியின் ரூபமா ஆகி விடும், மாயா என்ற வார்த்தையால் பயப்படமாட்டீர்கள். எப்பொழுதும் வெற்றி அடைபவர் ஆவதின் குஷியில் நடனமாடிக் கொண்டே இருப்பீர்கள், மாயாவை தன்னுடைய வேலைக்காரர் என்று அனுபவம் செய்வீர்கள், அப்படியானால் மாயை வேலைக்காரரா அல்லது அதைக் கண்டு

பயப்படுவீர்களா? நீங்கள் சேவையில் சமர்ப்பணம் ஆகி விடுங்கள். பின்பு மாயா தானாகவே சமர்ப்பணம் ஆகி விடும் ஆனால் நீங்கள் சமர்ப்பணம் ஆவதில்லை. அதனால் மாயாவும் மிக நன்றாக வாய்ப்பை (சான்ஸ்) எடுத்துக் கொள்கிறது. சான்ஸை எடுக்கும் காரணத்தினால் மாயா பிராமணர்களுக்கும் சான்ஸலர் (தலைவன்) ஆகி விடுகிறது, மாயாவை சான்ஸலர் ஆகவிடாதீர்கள். நீங்களே சேவையின் சான்ஸை எடுத்து சான்ஸலர் ஆகுங்கள். அதிகப்படியான நேரம் ஏன் கிடைத்திருக்கிறது என்று இப்பொழுது தெரிந்ததா? இப்பொழுது எந்தப் புகாரும் செய்யாதீர்கள், நேரத்தின் கணக்குப்படி ஒவ்வொருவருக்கும் கம்ப்ளீட் (முழுமை) ஆக வேண்டும். கம்ப்ளீட் ஆத்மா ஒருபொழுதும் கம்ளைன்ட் (புகார்) செய்யாது. இந்த மாதிரி ஆகியே விடும். ஆகத் தான் செய்கிறது என்ற இந்த வார்த்தைகளை கூறாதீர்கள், புதிய வருடம், புதிய வார்த்தை கள் மற்றும் புதிய அனுபவம் இருக்க வேண்டும். பழைய பொருளை பத்திரமாக வைத்திருப்பது நல்லது தான் ஆனால் உபயோகிப்பதற்கு நன்றாக இருப்பதில்லை. அப்படியாளால் ஏன் உபயோகிக்கிறீர்கள்? 5000 வருடங்களுக்காக பத்திரமாக வைத்து விடுங்கள் ஆனால் பழையவைகளின் மீது அன்பு வைக்காதீர்கள்.

எப்பொழுதும் பக்த ஆத்மாக்கள், யாசிக்கும் ஆத்மாக்கள் மற்றும் தாகத்திலிருக்கும் ஆத்மாக்களின் எதிரில் தன்னை சாட்சாத் தந்தை மற்றும் சாட்சாத்கார மூர்த்தி என்று புரிந்து நடந்து கொள்ளுங்கள். இந்த மூன்று வரிசைகளும் மிக நீளமானது. இந்த வரிசையை அகற்றுவதில் ஈடுபடுங்கள். தாகத்திலிருக்கும் ஆத்மாக்களின் தாகத்தைத் தணியுங்கள், யாசிப்பவர்களுக்கு தானம் கொடுங்கள், பக்தர்களுக்கு பக்தியின் பலனாக தந்தை கிடைப்பதற்கான மார்க்கத்தைக் கூறுங்கள். இந்த வரிசையை முழுமையாக்குவதில் பிஸியாக இருந்தீர்கள் என்றால் தனக்காக ஏன்? எப்படி? என்று எழும் வரிசை முடிவடைந்து விடும். நேரத்திற்காகக் காத்துக் கொண்டு இருக்காதீர்கள், ஆனால் மூன்று விதமான ஆத்மாக்களையும் முழுமை யாக்கும் முன்னேற்பாட்டில் இருங்கள். இப்பொழுது வினாஷம் எப்பொழுது ஏற்படும் என்று கேட்க மாட்டீர்களே? ஏன் எப்படியேனும் வரிசையை அகற்றி விட்டீர்கள் என்றால் மாற்றம் ஆவதற்கான நேரமும் முடிவடைந்து விடும். சங்கமயுகத்தின் நேரம் சத்யுகத்தை விட உயர்ந்ததாக அனுபவம் ஆக வில்லையா? களைப்படைந்து விட்டீர்களா

என்ன? வினாஷம் எப்பொழுது ஏற்படும் என்று கேட்கிறீர்கள் என்றால், களைப்படைந்து விட்டீர்கள், அதனால் தான் கேட்கிறீர்கள். தந்தைக்கு குழந்தைகள் மேல் அதிக அன்பு இருக்கிறது. தந்தைக்கு இந்த சந்திப்பு மிகவும் பிடித்திருக்கிறது மற்றும் குழந்தைகளுக்கு சொர்க்கம் மிகவும் பிடித்திருக்கிறது. சொர்க்கமோ 21-பிறவிகளுக்கு கண்டிப்பாக கிடைக்கும் ஆனால் இந்த சங்கமயுகம் கிடைக்காது. எனவே களைப்படைந்து விடாதீர்கள். சேவையில் ஈடுபட்டு விட்டீர்கள் என்றால் பிரத்யக்ஷக்ஷ் பலனை அனுபவம் செய்வீர்கள். எதிர்கால பலனோ உங்களுக்கு நிச்சயமாக இருக்கிறது ஆனால் பிரத்யக்ஷ பலனின் சுகத்தின் அனுபவம் முழு கல்பத்தில் கிடைக்காது. எனவே பக்தர்களின் கூக்குரலைக் கேளுங்கள், இரக்க மனமுடையவர் ஆகுங்கள், மகாதானி ஆகுங்கள். மகான் புண்ணிய ஆத்மாவின் பங்கை செய்யுங்கள், நல்லது.

அந்த மாதிரி தந்தையின் கட்டளைப்படி நடக்கும் திட எண்ணம் உள்ள மற்றும் ஒரு நொடியில் கட்டளைப்படி நடப்பவர்களுக்கு, தந்தைக்குச் சமமாக எப்பொழுதும் உலகிற்கு நன்மை செய்யும் பெரும் வள்ளல், மகான் வரம் அளிப்பவர் மற்றும் அனைவரையும் சம்பன்னம் ஆக்கக்கூடியவர்களுக்கு, எப்பொழுதும் தன்னை சேவையிலேயே ஈடுபடுத்திக் கொண்டிருப்பவர்களுக்கு அந்த மாதிரி தந்தைக்குச் சமமான குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

தாதிகளுடன் உரையாடல்: அனைவருக்கும் ஒரு விஷயத்தின் காத்திருத்தல் இருக்கிறது, அது எந்த விஷயம்? அது நான் யார் என்ற தொடக்கத்தின் விடுகதையாகும். அது தான் கடைசி வரையிலும் இருக்கிறது. அனைவருக்கும் முடிவாக எதிர்காலத்தில் நான் யார் அல்லது மாலையில் நான் எங்கே இருக்கிறேன் என்ற இதன் காத்திருத்தல் தான் இருக்கிறது. இப்பொழுது இந்த காத்திருத்தல் எப்பொழுது முடிவடையும்? 8-ல் யார் இருப்பார்கள், 100-ல் யார் இருப்பார்கள், 15,000-த்திற்கோ கேள்வியே இல்லை என்று அனைவரும் மற்றவர்களுடன் உரையாடல் செய்கிறீர்கள். வெளிநாட்டினர் நாங்கள் எந்த மாலையில் இருப்போம் என்று யோசிக்கிறார்கள். மேலும் தொடக்கத்தில் வந்தவர்கள், கடைசியில் வந்தவர்கள் முதலில் இருக்க முடியும் என்று இதையும் யோசிக்கிறார்கள். எங்களுடைய இடம்

இருக்கிறதா அல்லது கடைசியில் வந்தவர்களுக்காகவா என்று ஒன்றும் தெரியவில்லை என்றும் யோசிக்கிறார்கள், கடைசியில் என்ன தான் கணக்கு? இவை அனைத்தும் தந்தையிடம் இருக்கிறது தான் இல்லையா? இன்னும் நிச்சயம் செய்யப்படவில்லை. நீங்கள் அனைவரும் கூட ஓவியப் போட்டிக்கான படத்தை எப்படி தேர்ந்தெடுத்தீர்கள்? முதலில் கொஞ்ச படங்களை பிரித்து தனியாக எடுத்தீர்கள். பின்பு அதிலிருந்து முதல், இரண்டாவது மற்றும் மூன்றாவது எண் கொடுத்தீர்கள். முதலில் தேர்ந்தெடுத்து பிரிக்க வேண்டியதாக இருக்கிறது, பிறகு வரிசைக்கிரமம் நிச்சயிக்கப்படுகிறது. அப்படி இப்பொழுது தேர்ந்து எடுக்கப்பட்டிருக்கிறீர்கள் ஆனால் (ஒன்று இரண்டு மூன்று என) நிச்சயிக்கப்படவில்லை. பிற்காலத்தில் வருபவர்களுக்கு என்ன ஆகும்? எப்பொழுதும் சில இடங்கள் கடைசி வரையிலும் இருக்கும். முன்பதிவு நடக்கிறது என்றாலும் கடைசி வரையிலும் கொஞ்சம் கோட்டா (பிரத்யேக ஒதுக்கீடு) வைக்கிறார்கள், அது கோடியில் சிலர். சிலரிலும் சிலராக இருப்பார்கள்.

நல்லது, நீங்கள் அனைவரும் எந்த மாலையில் இருக்கிறீர்கள்? தங்கள் மேல் நம்பிக்கை வையுங்கள். ஏதாவது அந்த மாதிரி அதிசயமான விஷயம் நடக்கும். அதன் ஆதாரத்தில் உங்கள் அனைவரின் நம்பிக்கை நிறைவேறியே தீரும். அஷ்ட இரத்தினங்களின் விசேஷம் ஒரு விசேஷமான விஷயத்தினால் இருக்கிறது. அஷ்ட சக்திகள் என்ன, என்ன இருக்கின்றனவோ அவை தான் இவர் களுடைய நினைவுச்சின்னம் அந்த ஒவ்வொரு சக்தியும் அவர்களுடைய வாழ்க்கையின் நடைமுறையில் தென்படும். ஒருவேளை நடைமுறை வாழ்க்கையில் ஒரு சக்தி கூட குறைவாகத் தென்படுகிறது என்றால், எப்படி ஒருவேளை சிலையில் ஒரு கை துண்டிக்கப்பட்டு இருக்கிறது என்றால் பூஜைக்குரியதாக ஆவதில்லை. அதே போன்று ஒருவேளை ஒரு சக்தியாவது குறைவாகத் தென்படுகிறது என்றால் அஷ்ட தேவதைகளின் பட்டியலில் இதுவரை நிச்சயிக்கப்படவில்லை என்று தான் கூறுவோம். இரண்டாவது விஷயம் அஷ்ட தேவதைகள் பக்தர்களுக்காக விசேஷமாக இஷ்ட தேவதைகளாக நம்பப்படுகிறார்கள். இஷ்ட தேவதை என்றால் மகாள் பூஜைக்குரியவர். இஷ்ட தேவதை மூலமாக ஒவ்வொரு பக்தருக்கும் ஒவ்வொரு விதமான விதி மற்றும் சித்தி பிராப்தி ஆகிறது. இங்கேயும் யார் அஷ்ட

இரத்தினமாக இருப்பாரோ அவர் பிராமண பரிவாரத்தின் எதிரில் இப்பொழுது கூட இஷ்டமான வராக அதாவது ஒவ்வொரு எண்ணம் மற்றும் நடத்தை மூலமாக விதி மற்றும் சித்திக்கான வழிகாட்டுபவராக அனைவர் எதிரிலும் இப்பொழுது கூட அதே போலவே மகானாக ஏற்றுக் கொள்ளப்படுவார். அப்படி அஷ்ட சக்திகளும் நிறைந்திருக்கும், ஈஸ்வரிய குடும்பத்தின் எதிரில் இஷ்டமானவர் அதாவது உயர்ந்த ஆத்மா, மகான் ஆத்மா, வரதானி ஆத்மாவின் ரூபத்தில் இருப்பார். இதுவே அஷ்ட இரத்தினங்களின் விசேஷமாகும். நல்லது.

**பார்ட்டிகளுடன்:** உலகின் வைப்ரேஷனிலிருந்து (அதிர்வலைகளிலிருந்து) மற்றும் மாயாவிடம் பாதுகாப்பாக இருப்பதற்கான வழி: 1) எப்பொழுதும் ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை என்ற இந்த முழு லயிப்பிலேயே இருந்தீர்கள் என்றால் மாயாவின் வித விதமான தாக்குதலிலிருந்து பாதுகாப்பாக இருக்க முடியும். எப்படி எப்பொழுது போர்க்காலத்தில் குண்டுகள் போடுகிறார்கள் என்றால், பூமிக்கடியில் சென்று விடுவார்கள். அதனால் அந்த குண்டுகளின் பாதிப்பு அவர்களுக்கு ஏற்படுவதில்லை. அது போலவே எப்பொழுது ஒருவரின் லயிப்பிலேயே இருந்தீர்கள் என்றால் உலகியல் வைப்ரேஷனிலிருந்து, மாயாவிடம் இருந்து பாதுகாப்பாக இருப்பீர்கள். எப்பொழுதும் பத்திரமாக இருப்பீர்கள். தாக்குவதற்கு மாயாவிற்கு தைரியமே இருக்காது, எனவே தந்தையின் நினைவு என்ற முழு லயிப்பிலேயே மூழ்கியிருங்கள். இது தான் பாதுகாப்பிற்கான சாதனம்;

2) தந்தையின் நெருக்கமான இரத்தினங்களின் அடையாளம்: தந்தையின் நெருக்கத்தில் இருப்பவர்களின் மேல் தந்தையின் சத்தியமான தொடர்பின் தாக்கம் ஏற்பட்டிருக்கும், சத்தியமானவரின் தொடர்பின் தாக்கம் ஆன்மீக நிலை ஆகும். அப்படி நெருக்கமான இரத்தினங்கள் எப்பொழுதும் ஆன்மீக நிலையில் நிலைத்திருப்பார்கள். உடலில் இருந்து கொண்டே விலகியிருப்பவராக, ஆன்மீக நிலையில் நிலைத்திருப்பார். உடலைப் பார்த்துக் கொண்டும் பார்க்காமல் மேலும் ஆத்மா எது கண்களில் புலப்படாததோ அது பிரத்யக்ஷமாகத் தென்பட வேண்டும். இது தான் அதிசயக் காணியம் ஆகும். ஆன்மீக மகிழ்ச்சியில்

இருப்பவர்கள் தான் தந்தையின் துணைவனாக ஆக முடியும். ஏனென்றால் தந்தை (பரம) ஆத்மாவாக இருக்கிறார்.

3) பழைய உலகத்தின் அனைத்து கவர்ச்சிகளிவிருந்தும் விடுபட்டிருப்பதற்காள சகஜமான யுக்தி: நாம் அழியாத பொக்கிஷத்தின் அதிபதிகள் என்ற போதையில் எப்பொழுதும் இருங்கள். தந்தையின் பொக்கிஷமான ஞாளம், சுகம், சாந்தி, ஆனந்தம் மற்றும் அனைத்து குணங்களும் நம்முடையது. குழந்தை தந்தையின் சொத்திற்கு இயல்பாகவே அதிபதி ஆகிறார். அதிகாரி ஆத்மாவிற்கு தன்னுடைய அதிகாரத்தின் போதை இருக்கிறது, போதையில் அனைத்தும் மறந்து விடுகிறது இல்லையா? எந்த நினைவும் இருப்பதில்லை, நான் மற்றும் தந்தை இந்த ஒரு நினைவு மட்டும் இருக்கட்டும். மேலும் இதே நினைவு மூலம் பழைய உலகத்தின் கவர்ச்சியிலிருந்து தானாகவே விடுபட்டு விடுவீர்கள். போதையில் இருப்பவர்களின் எதிரில் இலக்கும் எப்பொழுதும் தெளிவாக இருக்கும் பரிஷ்தா மற்றும் தேவதை ஆவது தான் இலக்காகும்.

4) ஒரு விநாடியின் அதிசயமான செயல் மூலமாக மதிப்புடன் தேர்ச்சி பெறுபவராக ஆக வேண்டும்: ஒரு விநாடியின் செயலானது இந்த நேரம் உடலில் வருவது மற்றும் அடுத்த நேரம் உடலிலிருந்து விலகி உடலற்ற நிலையில் நிலைத்திருப்பது, இந்த ஒரு நொடியின் காரியத்தின் பயிற்சி உடையவராக இருக்கிறீர்களா? எப்பொழுது விரும்புகிறீர்களோ, எப்படி விரும்புகிறீர்களோ அதே நிலையில் நிலைத்திருக்க முடிய வேண்டும். கடைசி பரீட்சை ஒரு நொடிக்கானதாக இருக்கும். அந்த ஒரு நொடியில் குழப்பத்தில் வந்தால் தோல்வி அடைந்து விடுவீகள், ஸ்திரமாக இருந்தால் தேர்ச்சி பெற்று விடுவீர்கள், அந்த மாதிரி கட்டுப்படுத்தும் சக்தி இருக்கிறதா? இப்பொழுது அந்த மாதிரியான பயிற்சி தீவிரமான ரூபத்தில் இருக்க வேண்டும். எவ்வளவு குழப்பம் இருக்குமோ அந்த அளவு தன்னுடைய மனநிலை மிக அமைதியானதாக இருக்க வேண்டும். எப்படி கடல் வெளியில் சப்தம் நிறைந்ததாக இருக்கிறது, உள்ளே முற்றிலும் அமைதி. அந்த மாதிரி பயிற்சி வேண்டும். கட்டுப்படுத்தும் சக்தி உள்ளவர்கள் தான் உலகைக் கட்டுப்படுத்த முடியும். யார் தன்னைக் கட்டுப்படுத்த முடியாதவரோ அவர் உலக இராஜ்யம் எப்படி செய்வார்?

உள்ளடக்கும் சக்தி வேண்டும். ஒரு நொடியில் விஸ்தாரத்திலிருந்து சாரத்தில் சென்று விட வேண்டும் மற்றும் ஒரு நொடியில் சாரத்திலிருந்து விஸ்தாரத்தில் வந்து விட வேண்டும். இது தாள் அதிசயமான காரியம் ஆகும்.

5) அதீந்திரிய சுகம் என்ற ஊஞ்சலில் ஆடிக் கொண்ட இருங்கள்: உங்களை அனைத்து ஆத்மாக்கள் ககத்தில் ஆடிக் கொண்டிருப்பதைப் பார்த்து துக்கமானவர்கள் சுகமானவர்களாக ஆகி விட வேண்டும். உங்களுடைய கண்கள், வாய், முகம் அனைத்தும் சுகம் கொடுக்க வேண்டும். அந்த மாதிரி சுகம் நிறைந்தவராக ஆகுங்கள். அந்த மாதிரி யார் சுகம் நிறைந்தவர் களாக ஆகிறார்களோ அவர்களுக்கு எண்ணத்தில் கூட துக்க உணர்வுகள் வர முடியாது. நல்லது.

வரதானம்: தந்தை மற்றும் சேவையில் மூழ்கியிருக்கக்கூடிய தடையற்ற, நிரந்தர சேவாதாரி ஆகுக!

எங்கு சேவையின் ஊக்கம் இருக்கிறதோ அங்கு அனேக விஷயங்களிலிருந்து கலபமாகவே விலகி விடுகிறார். ஒரு தந்தை மற்றும் சேவையில் மூழ்கியிருந்தீர்கள் என்றால் தடையற்றவராக, நிரந்தர சேவாதாரியாக, சுலபமாக மாயாவை வென்றவராக ஆகி விடுவீர்கள், அவ்வப்பொழுது சேவையின் வடிவம் மாறுகிறது. மேலும் மாறிக் கொண்டே இருக்கும். இப்பொழுது உங்களுக்கு அதிகமாகக் கூற வேண்டியதாக இருக்காது ஆனால் அவர்கள் இது உயர்ந்த காரியம் ஆகும். எனவே எங்களையும் சகயோகி ஆக்குங்கள் என்று அவர்களே கூறுவார்கள். இது நேரத்தின் அருகாமையின் அடையாளம் ஆகும். எனவே மிகுந்த ஊக்கம் உற்சாகத்தோடு சேவை செய்து முன்னேறிச் சென்று கொண்டே இருங்கள்.

சுலோகன்: நிரம்பிய நிலையில் நிலைத்திருங்கள், இயற்கையின் குழப்பத்தை, கடந்து செல்லும் மேகத்திற்கு சமமாக அனுபவம் செய்யுங்கள்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 18.01.1978 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## பாப்தாதாவின் சேவைக்கான பிரதிபலன்!

இன்று நினைவு நாள் அதாவது சக்திசாலியான நாளன்று அனைத்து குழந்தைகளும் அவரவர்களின் ஆழ்ந்த ஆர்வத்தின் அனுசாரம் விதவிதமான ரூபத்தில் நினைவு செய்தார்கள். பாப்தாதாவிடம் நாலா புறங்களிலுமுள்ள அன்பான, சகயோகி, சக்தி சொரூபமான மற்றும் நெருக்கத்தில் இருக்கும் ஆத்மாக்களின் அனைத்து ரூபத்தின் நினைவு வதனம் வரை வந்தடைந்தது. பாப்தாதா மூலமாக ஒவ்வொரு குழந்தைகளுக்கும் எப்படி நினைவோ அப்படி அதற்கான பலனும் அதே நேரம் கிடைத்து விடுகிறது. எந்த ரூபத்தில் யார் நினைவு செய்கிறாரோ அதே ரூபத்தில் பாப்தாதா குழந்தைகளின் எதிரில் பிரத்யக்ஷமாக (காட்சியாக தோன்றி) ஆகியே விடுகிறார். யார் யோக சொரூப ஆத்மாவோ அவருக்கு யோகாவின் விதி கிடைத்து விடுகிறது. சில குழந்தைகள் யோகி ஆத்மாவிற்குப் பதிலாக யோகம் இல்லாத ஆத்மாவாக ஆகி விடுகிறார்கள், அதன் காரணமாக சந்திப்பதற்குப் பதிலாக (வியோகி) பிரிந்திருப்பதின் அனுபவம் செய்கிறார்கள். யோகி ஆத்மா எப்பொழுதும் பாப்தாதாவின் இதய சிம்மாசனதாரியாக இருப்பார், ஒருபொழுதும் தூரமாக இருப்பதில்லை, வியோகி ஆத்மாக்கள் யோகம் இல்லாத காரணத்தினால் பாப்தாதாவை எதிரில் கொண்டு வர முயற்சி செய்கிறார்கள். தற்சமயத்தை மறந்து கடந்த காலத்தை நினைவு செய்கிறார்கள். இந்தக் காரணத்தினால் பாப்தாதா ஒருபொழுதும் பிரத்யக்ஷமாகத் தென்படுவதில்லை, சில நேரம்

திரைக்குப் பின்னால் மறைந்திருப்பதாகத் தென்படுகிறார் ஆனால் பாப்தாதா எப்பொழுதும் குழந்தைகளின் எதிரில் (பிரத்யக்ஷமாக) காட்சியாகத் தோன்றுகிறார். குழந்தைகளிடமிருந்து மறைந்திருக்க முடியாது. எப்பொழுது தந்தை இருப்பதே குழந்தைகளுக்காகத் தான் என்றால், எது வரை குழந்தைகளுக்கு ஸ்தாபனையின் காரியத்தின் பங்கு இருக்கிறதோ அதுவரை பாப்தாதா குழந்தைகளின் ஒவ்வொரு எண்ணம் மற்றும் ஒவ்வொரு நொடியும் கூடவே இருக்கிறார். உடன் கூடவே செல்வோம் என்பது தான் தந்தையின் உறுதிமொழி ஆகும். எப்பொழுது செல்வோம்? இப்பொழுது காரியம் முடிவடைந்து விட்டதா? அப்படியானால் முன்பாகவே தந்தையை ஏன் அனுப்பி விடுகிறீர்கள்? பாபா சென்று விட்டால்... என்று இதைக் கூறி, அழியாத சம்மந்தத்தை அழிவதாக ஏன் ஆக்குகிறீர்கள்? அவருடைய கதாபாத்திரம் மட்டும் மாறியிருக்கிறது. எப்படி நீங்களும் சேவை ஸ்தானங்களை மாற்றுகிறீர்கள் தான் இல்லையா? அப்படி பிரம்மாபாபாவும் தனது சேவை இடத்தை மாற்றியிருக்கிறார். ரூபம் அதே தான் சேவையும் அதே தான், ஆயிரம் புஜங்கள் உள்ள பிரம்மாவின் ரூபத்தின் தற்சமயத்து பங்கு நடந்து கொண்டிருக்கிறது. அதனால் தான் சாகார உலகத்தில் இந்த ரூபத்தின் மகிமையும் நினைவுச் சின்னமும் இருக்கிறது. புஜங்களின்றி தந்தையும் எந்தக் காரியமும் செய்ய முடியாது. புஜங்கள் (குழந்தைகள் நாம்) தந்தையை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றன. செய்விப்பவர் இருக்கிறார், அதனால் தான் செய்து கொண்டிருக்கிறார்கள். எப்படி ஆத்மா இன்றி புஜம் ஒன்றும் செய்ய முடியாதோ, அதே போல் பாப்தாதாவின் இணைந்த துணையின்றி குழந்தைகள் என்ற புஜங்கள் என்ன செய்ய முடியும்? ஒவ்வொரு காரியத்திலும் கடைசி வரை, முதலில் காரியத்தின் பங்கீடு கூட பிரம்மாவினுடையது தான். பிரம்மா என்றால் ஆதிதேவ், ஆதிதேவ் என்றால் ஒவ்வொரு நல்ல காரியத்தையும் தொடங்கி வைப்பவர். பாப்தாதா எந்தக் காரியத்தையும் தொடங்கி வைக்காமல் எப்படி வெற்றியை அடைய முடியும். ஒவ்வொரு காரியத்திலும் முதலில் தந்தையின் உதவி இருக்கிறது. இதை அனுபவமும் செய்கிறீர்கள், வர்ணனையும் செய்கிறீர்கள். இருந்தும் சில நேரம் மறந்தும் விடுகிறீர்கள். அன்புக் கடலில், அன்பின் அலைகளில் என்னவாகி விடுகிறீர்கள். அலைகளில் விளையாட வேண்டுமேயன்றி அலைகளின் வசமாகி விடக் கூடாது. குணத்தை மகிமை செயயுங்கள் ஆனால்

கோழை ஆகாதீர்கள். குழந்தைகள் என்னுடைய துணைவர்கள் என்று தந்தை பார்ததுக் கொண்டே இருக்கிறார் ஆனால் குழந்தைகள் பிரிக்கும் திரைச்சீலையைப் போட்டு பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பின்பு தேடுவதிலேயே நேரத்தை இழந்து விடுகிறார்கள். எனவே கூப்பிட்ட குரலுக்கு வரும் தந்தையையும் மறைத்து விடுகிறார்கள். ஒருவேளை கண்ணாமூச்சி விளையாட்டு பிடித்திருக்கிறது என்றால் விளையாட்டு என்று புரிந்து நன்றாக விளையாடுங்கள் ஆனால் அந்த சொரூபமாக ஆகி விடாதீர்கள், மனமகிழ்விக்கும் விஷயங்களைக் கூறிக் கொண்டிருக்கவில்லை. இன்னும் சேவையின் வேகத்திற்கு அதிவேகம் கொடுப்பதற்காக ஸ்தானத்தை மட்டும் மாற்றியிருக்கிறோம். எனவே குழந்தைகளுக்கும் தந்தைக்குச் சமமாக சேவையின் வேகத்தை மிக வேகமாக ஆக்குவதில் பிஸியாக இருக்க வேண்டும். இது தான் தந்தையின் அன்பிற்கு பிரதிபலனாக நாம் செய்வது. குழந்தைகளுக்கு தந்தை மேல் மிகுந்த அன்பு இருக்கிறது என்று தந்தை தெரிந்திருக்கிறார் ஆனால் தந்தைக்கு குழந்தைகளையும் சேர்த்து சேவை மேலும் அன்பு இருக்கிறது. தந்தை மேல் உள்ள அன்பின் வெளிப்படையான அடையாளம் சேவை மேல் அன்பு இருப்பதாகும். எப்படி ஒவ்வொரு அடியிலும் பாபா, பாபா என்று கூறுகிறீர்கள், அதே போல் ஒவ்வொரு அடியிலும் தந்தை மற்றும் சேவை இருக்க வேண்டும். அப்பொழுது தான் சேவையின் காரியம் முடிவடையும். மேலும் (தந்தை) உடன் செல்வீர்கள், இப்பொழுது பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் லைட் மற்றும் மைட் ஹவுஸ் ரூபத்தில் பார்க்கிறார். மைக் (வாய்மொழி) சக்தி நிறைந்ததாக ஆகி விட்டது ஆனால் லைட் மைட் மற்றும் மைக் மூன்றுமே சக்தி நிறைந்ததாக சேர்ந்தே இருக்க வேண்டும். சப்தத்தில் (பேச்சில்) வருவது சுலபமாக இருக்கிறது இல்லையா? ஒவ்வொரு ஆத்மாவிற்கும் சுகம், சாந்தி மற்றும் தூய்மையின் மூன்று லைட்களையும் தன்னுடைய மைக் மூலமாக கொடுக்க முடிகிற மாதிரி இப்பொழுது அந்த மாதிரி சக்திசாலியான நிலையை உருவாக்குங்கள். எப்படி ஸ்தூல உலகத்தில் எந்த வண்ண மின் விளக்கை எரிய விடுகிறீர்களோ அப்பொழுது நாலாபுறங்களிலும் அந்த மாதிரியான வண்ணம் சூழ்ந்ததாக ஆகிறது. ஒருவேளை பச்சை ஒளி பரப்பும் விளக்காக இருக்கிறது என்றால் நாலாபுறங்களிலும் அதே ஒளி தான் பரவி விடுகிறது. ஒரே இடத்தில் இருந்த போதிலும் ஒரு விளக்கு சூழ்நிலையை மாற்றி விடுகிறது. எப்படி நீங்கள் கூட சிகப்பு

வினக்குகளை போடுகிறீர்கள் என்றால், நாலாபுறங்களிலும் அதே சூழ்நிலை அமைந்து விடுகிறது. இம்மாதிரி ஸ்தூலமான விளக்கு (லைட்) சூழ்நிலையை மாற்றி விடுகிறது என்றால் லைட் ஹவுஸ் ஆகிய நீங்கள் தூய்மையின் லைட் மூலம் மற்றும் சுகத்தின் ஒளி மூலம் அந்த மாதிரி சூழ்நிலையை உருவாக்க முடியாதா? ஸ்தூலமான லைட்டை கண்களால் பார்க்கிறீர்கள், ஆன்மீக விளக்கை அனுபவத்தினால் தெரிந்து கொள்வீர்கள். தற்சமயம் இந்த ஆன்மீக விளக்குகள் மூலமாக சூழ்நிலையை மாற்றம் செய்வதற்கான சேவை செய்ய வேண்டும். இப்பொழுது சேவையின் என்ன ரூபம் இருக்க வேண்டும். என்று கேட்டீர்களா? இரண்டு சேவையும் இப்பொழுது சேர்ந்து இருக்கட்டும். மைக் மற்றும் மைட் இரண்டும் இருந்தால் சுலபமாக வெற்றி அடைந்து விடுவீர்கள்.

**பார்ட்டிகளுடன் உரையாடல்:** 1) எல்லைக்கப்பாற்பட்ட தந்தைக்குக்கூட எல்லைக்குட்பட்ட மாற்றம் வரிசையாக எண் போட்டு சந்திக்க வேண்டியதாக இருக்கிறது! மற்றபடி தந்தை மற்றும் குழந்தைகள் சந்திப்பதற்கு பகலானால் என்ன அல்லது இரவானால் என்ன? உங்களுடைய உலகத்தில் தான் இந்த (வரிசையாக விடுவது) அனைத்து விஷயங்களும் இருக்கிறது. அங்கேயோ அனைவரும் தந்தையின் அருகில் இருக்கிறார்கள். புள்ளி எவ்வளவு இடத்தை எடுத்துக் கொள்ளும். இங்கேயோ உடலுக்கு இடம் தேவையாக இருக்கிறது அங்கு அருகில் இருந்தே விடுவீர்கள். இங்கு ஒவ்வொரு ஆத்மாவும் நான் அருகில் வர வேண்டும் என்று திளைக்கிறது. எவ்வளவு தந்தையின் குணத்தில். நிலையில் அருகில் இருக்கிறீர்களோ அந்த அளவு அங்கே அது வீடானாலும், இராஜ்யமானாலும் அருகில் இருப்பீர்கள். உங்கள் நிலை அவரது அருகில் கொண்டு செல்கிறது. ஒவ்வொருவரும் நான் அருகில் இருக்கிறேன். அருகாமையின் அனுபவமும் செய்கிறேன் என்கின்றனர் ஏனென்றால் எல்லைக்கப்பாற்பட்ட தந்தையோ குறைவில்லாதவர். இடைவிடாமல் அளிப்பவர், எனவே அனைவரும் அருகில் இருக்க முடியும். இது தான் அதிசயமாகும், திருப்தியாக இருப்பது மற்றும் மற்றவர்களை திருப்திப்படுத்துவது இது தான் தற்சமயத்திற்கான சுலோகன் ஆகும். திருப்தியின்மை என்றால் பிராப்தியின்மை. திருப்தி என்றால் பிராப்தி நிறைந்த நிலை. அனைத்து

பிராப்திகளையும் அடைந்தவர் ஒருபொழுதும் திருப்தியில்லாமல் இருக்க முடியாது.

2) எப்பொழுதும் தன்னை இறைமாணவன் என்று நினைக்கிறீர்களா? இறைமாணவ வாழ்க்கை அனைத்தையும் விட சிறந்தது என்று மகிமை செய்யப்பட்டிருக்கிறது. அந்த மாதிரி எப்பொழுதும் சிறந்தது அதாவது உயர்ந்த வாழ்க்கையின் அனுபவத்தை செய்கிறீர்களா? எப்படி மாணவன் எப்பொழுதும் சிரித்துக் கொண்டே விளையாடிக் கொண்டே மற்றும் படித்துக் கொண்டே இருப்பான், மேலும் எந்த விஷயமும் புத்தியில் தடையாக இருப்பதில்லை. அதே போலவே கற்பது கற்பிப்பது, தடையற்று இருப்பது, தந்தையுடன் அமர்வது எழுவது, அருந்துவது, குடிப்பது என்ற இது தான் இறைமாணவ வாழ்க்கை. குடும்பத்தில் இருந்து கொண்டும் தந்தையுடன் இருக்கிறீர்கள் இல்லையா! உடல் எங்கே வேண்டுமானாலும் இருக்கட்டும் ஆனால் மனம், தந்தை மற்றும் சேவையில் ஈடுபட்டிருக்கட்டும். அருந்துவது, உண்பது நடப்பது அனைத்தையும் தந்தையோடு செய்வது இதற்குத் தான் மகிமை இருக்கிறது எது மிகப் பிடித்தமான ஒன்றாக இருக்கிறதோ அதன் துணையை விடுவது கடினமாக இருக்கும். உடன் இருப்பது, யோகா செய்வது கடினம் அல்ல ஆனால் யோகா துண்டிக்கப்படுவது கடினமாக இருக்கட்டும். அந்த மாதிரி அனுபவம் உள்ளவரைத்தான் இறை மாணவ வாழ்க்கையில் இருப்பவர் என்று கூறுவது. ஒருவரை விடுவது கடினம், துண்டிப்பது கடினம் என்றிருந்தால் அவருடன் இருப்பது (துணைவர்) கடினம் அல்ல என்ற இது தான் சிறந்த வாழ்க்கை ஆகும். எப்பொழுதும் சிரித்துக் கொண்டே இருங்கள், பாடிக் கொண்டே இருங்கள் மேலும் தந்தையுடன் இருந்து கொண்டே இருங்கள், அந்த மாதிரி உடன் இருப்பது முழு கல்பத்திலும் கிடைக்க முடியாதது, சங்கமயுகத்தில் கூட ஒருவேளை வேறு யாரையாவது தேடினீர்கள் என்றால், கிடைப்பாரா? இல்லைதானே? தந்தை உங்களை தேடிக் கண்டுபிடித்தாரா அல்லது நீங்களா? நீங்களும் தேடிக் கொண்டு தான் இருந்தீர்கள், ஆனால் வழி தவறானதாக இருந்தது தந்தையைத் தேட வேண்டியதாக இருந்தது ஆனால் சகோதரர்களைத் தேடினீர்கள், அதனால் தேட முடியவில்லை.

3) தன்னுடைய முயற்சியில் மற்றும் சேவையில் எப்பொழுதும் வளர்ச்சி இருக்க வேண்டும் அதற்கான கலபமான வழி என்ன?

வளர்ச்சிக்கான சுலபமான வழி அமிர்தவேளையில் தொடங்கி முழுமையாக, விதிப்பூர்வமாக நடந்து கொண்டீர்கள் என்றால் வாழ்க்கை முன்னேற்றத்தை அடையும், எந்தவொரு காரியமும் எப்பொழுது விதியோடு செய்யப்படுகிறதோ அப்பொழுது வெற்றி கிடைக்கிறது. பிராமணன் என்றால் விதிப்பூர்வமான வாழ்க்கை ஒருவேளை ஏதாவது ஒரு விஷயத்தில் தன்னுடைய முயற்சியில் மற்றும் சேவையில் முன்னேற்றம் இல்லை என்றால் அவசியம் ஏதாவது ஒரு விதியின் குறை இருக்கிறது. எனவே அமிர்தவேளையில் தொடங்கி இரவு வரை எண்ணம், சொல் மற்றும் நெருக்கம் விதிப்பூர்வமாக இருந்ததா? அதாவது வளர்ச்சி அடைந்ததா என்று சோதனை செய்யுங்கள். ஒருவேளை இல்லை என்றால் காரணத்தை யோசித்து அதற்கு நிவாரணம் செய்யுங்கள். பிறகு மனமுடைந்து போக மாட்டீர்கள். ஒருவேளை விதிப்பூர்வமான வாழ்க்கை இருக்கிறது என்றால் அவசியம் முன்னேற்றம் ஏற்படும். நல்லது.

மதுபன் நிவாசி சகோதர சகோதரிகளுடன்: அனைத்து மதுபன் நிவாசிகளும் எப்பொழுதும் தந்தையின் நினைவின் அன்பிலேயே ஐக்கியமாகி இருப்பவர்கள் தான் இல்லையா? தந்தைக்குச் சமமாக எப்பொழுதும் களைப்பற்ற மற்றும் எப்பொழுதும் டபுள் லைட் நிலையில் நிலைத்திருக்கிறீர்கள் இல்லையா? யார் எவ்வளவு லேசாக இருப்பாரோ அவ்வளவு களைப்பற்றவராக இருப்பார். எந்த விதமான கணமும் களைப்படைய வைக்கும். எப்படி உடல் பருமனானவர் கூட களைப்படைந்து விடுகிறார். மெலிந்த உடல் உள்ளவர் களைப்படைவதில்லை. அந்த மாதிரி எந்த விதமான சுமையும் அது எண்ணத்தில், நெருக்கத்தில், சம்மந்தத்தில் இருந்தாலும் அந்த சுமை களைப்படைவதில் கொண்டு வரும். மதுபன் நிவாசிகளுக்கு களைப்பற்றவராய் இருங்கள்! என்ற வரதானம் கிடைத்திருக்கிறது. அப்படியானால் நீங்கள் களைப்பற்றவர் தான் இல்லையா? இன்னும் மேளாவை (சந்திப்பு விழாவை) நீடிக்கலாமா? இன்னும் வரும் நாட்களில் இந்த மேளா பெரியதாக இருக்கும், குறையாது. எவ்வளவு அதிப்படுத்திக் கொண்டே இருப்பீர்களோ அந்த அளவே அதிகரிக்கும். எவ்வளவு திட்டம் தீட்டினாலும், எவ்வளவு உருவாக்குவீர்களோ அந்த அளவு வளர்ந்து கொண்டே தான் இருக்கும். ஏனென்றால், சங்கமயுகத்தில் தான் ஈஸ்வரிய குடும்பத்தின் வளர்ச்சி ஏற்படுகிறது.

எவ்வளவு காலம் குறைவோ அந்த அளவு வளர்ச்சி அதிகம், மிக அதிகமானவர்கள் வந்து விட்டால் நாங்கள் பின்தங்கி போய்விடுவோம் என்று நினைக்கவில்லையே? யார் அவரே தியாகம் செய்தவராக இருக்கிறாரோ அவருக்கு இயல்பாகவே சிந்தனை இருக்கும். நீங்களோ எந்த சுயநலமும் இல்லாதவர்கள் தான் இல்லையா? எவ்வளவு ஒவ்வொரு விருப்பத்திலிருந்து விலகி இருப்பீர்களோ அந்த அளவு ஒவ்வொரு விருப்பமும் சுலபமாக நிறைவேறிக் கொண்டே இருக்கும், குஷியில், பிராப்தியில் களைப்பு ஏற்படாது. மதுபன் நிவாசிகளுக்கு முயற்சி செய்வதற்கான புது யுக்திகளைக் கண்டுபிடிக்க வேண்டும். அதை அனைவரும் பின்பற்ற வேண்டும், புதிய வருடம் தொடங்கியிருக்கிறது என்றால் புதிய விஷயம் வெளியாக வேண்டும். கல்ப முயற்சிக்கான புதிய கண்டுபிடிப்புகளை செய்யுங்கள் மேலும் நடைமுறையில் அனுபவம் செய்து மற்றவர்களுக்குக் கூறுங்கள். அனைத்து ஆத்மாக்களும் உங்களை உயர்ந்த பார்வையோடு பார்க்கிறார்கள். எப்படி ஆகாயத்தின் மேலிருக்கும் நட்சத்திரங்களை மேல்நோக்கிய பார்வையோடு பார்க்கிறார்கள். அதே போல் உங்களை அனைவரையும் விட உயர்ந்த மகான், அதிர்ஷ்டம் நிறைந்தவர்கள், நெருக்கமான ஆத்மாக்களின் பார்வையோடு பார்க்கிறார்கள். அப்படி எந்த பார்வையோடு பார்க்கிறார்களோ அதிலேயே நிலைத்திருங்கள். நீங்கள் அமருவது, எழுவது, நடப்பது அனைத்தையும் சரித்திர ரூபத்தில் பார்க்கிறார்கள். எப்படி தந்தையின் ஒவ்வொரு காரியத்தையும் நீங்கள் சரித்திர ரூபத்தில் பார்த்தீர்கள் இல்லையா? அதே போல் ஒவ்வொரு காரியத்தையும் செய்து கொண்டே ஒழுக்கமாக ஆக நடந்து கொள்ள வேண்டும். சாதாரணமாக அல்ல. உலகின் எதிரில் மதுபன் ஒரு மேடை ஆகும். மேடையில் எந்த நடிகர் இருப்பாரோ அவருடைய ஒவ்வொரு செயலின் மேலும் எவ்வளவு கவனம் இருக்கிறது. கையை தூக்குகிறார் என்றாலும் மிகவும் கவனத்தோடு செய்வார். ஏனென்றால், என்னை அனைவரும் பார்க்கிறார்கள் என்று அவருக்குத் தெரியும். உங்களுடைய ஒவ்வொரு காரியத்தின் மகத்துவம் இருக்கிறது. எவ்வளவு மதுபன் ஆத்மாக்களுக்கு மகத்துவம் இருக்கிறதோ, பாப்தாதாவும் அந்த மகத்துவத்தோடு தான் பார்க்கிறார். நல்லது.

இயல்பான மற்றும் சகஜயோகியாக எப்படி ஆவது என்ற புது திட்டத்தை உருவாக்குங்கள். ஏனென்றால் அனைவருமே இந்த வருடத்தில்

கடைசியில் சகஜயோகா மற்றும் இயல்பான யோகாவின் அனுபவம் அவசியம் இருக்க வேண்டும் என்ற இந்த லட்சியத்தை வைத்து நடந்து கொள்கிறார்கள். அப்படி சகஜயோகா எதன் ஆதாரத்தில் இருக்கிறது அல்லது இயல்பான யோகியாக எந்த யுக்தியால் ஆக முடியும்? இந்த திட்டத்தை உருவாக்குங்கள். மேலும் அனுபவம் செய்யுங்கள், பின்பு அனைவருக்கும் கூறினீர்கள் என்றால் உங்களை புகழ் பாடுவார்கள். உழைப்பு குறைவு மற்றும் வெற்றி அதிகம், அந்த மாதிரி புது முயற்சிக்கான வழியை உருவாக்குங்கள், திட்டத்தை அந்த மாதிரி உருவாக்குங்கள், அதைப் பார்த்து அனைவரும் மதுபன் நிவாசிகளுக்கு நன்றி கூற வேண்டும். நல்லது.

இராஜஸ்தான் பார்ட்டி: மதுபன்னில் ஒவ்வொரு அடியிலும் வருமானத்திற்கான அனுபவம் சுலபமாக ஏற்படுகிறது. மதுபன்னை வரதான பூமி என்று கூறியிருக்கிறார்கள், அப்படி வரதானம் என்று சகஜ பிராப்தியைத் தான் கூறுவது. அப்படி மதுபன்னில் வருவதினால் கஷ்டப்பட்டு உழைப்பது முடிவுக்கு வந்து விடுகிறது. மேலும் சகஜ பிராப்தி ஆவது தொடங்கி விடுகிறது. அப்படி இந்த கொஞ்ச காலத்தில் எவ்வளவு வருமானம் செய்திருக்கிறீர்கள், மதுபன்னில் வருவது என்றால், வருமானத்தின் சுரங்கத்தை ஒன்றாகச் சேர்ப்பது. அந்த மாதிரி மகத்துவத்தைத் தெரிந்து கொஞ்ச நேரத்தில் பொக்கிஷங்களை சேமித்திருக்கிறீர்கள். ஏனென்றால் மதுபன் தான் நேரடியாக பாப்தாதாவின் கர்ம பூமி, சரித்திர பூமி, சேவை பூமி மற்றும் தபஸ்யா பூமி ஆகும். இங்கு தபஸ்யாவின் வைப்ரேஷன், வாயுமண்டலம் இருக்கிறது. இந்த அனைத்து விஷயங்களையும் இந்த பூமியில் வருவதினால் சகஜமாக அனுபவம் செய்ய முடியும். எப்படி ஏதாவது விசேஷம் சீசன் இருக்கிறது என்றால், வருமானமின்றி இருக்க முடியாது. தூக்கத்தின் நேரத்தையும் தியாகம் செய்கிறார்கள் அப்படி மதுபன்னில் வருமானத்திற்கான அதிகப்படியான லாட்டரி இருக்கிறது. நீங்கள் தபஸ்வி குமாரர்கள் தான் இல்லையா? தபஸ்வியின் தவம் அமரும் நேரத்தில் மட்டும் இல்லை, தபஸ்யா என்றால் அன்பு ஆர்வம், நடைமுறையில் போகும் பொழுதும், வரும்பொழுதும், உணவு அருந்தும் போதும் நினைவின் ஆழ்ந்த ஆர்வம் இருக்கிறது. இல்லையா? ஒருவரின் நினைவில், ஒருவரின் துணையில் உணவை அருந்துவது இதுவும் தவமாகிறது இல்லையா? என்னென்ன வாய்ப்பு

கிடைக்கிறதோ அதை நல்ல முறையில் பயன்படுத்தி முழுமை ஆகுங்கள். மேலும் மற்றவர்களையும் சம்பன்னம் (முழுமை) ஆக்குங்கள்.

2) ஞானக்கடலின் குந்தைகள் எப்பொழுதும் ஞான இரத்தினங்களை வைத்து விளையாடிக் கொண்டிருக்கிறீர்களா? அனைத்தையும் விட உயர்ந்த அழியாத இரத்தினம் ஞான இரத்தினம் ஆகும். ஞானக்கடலின் குழந்தைகள் ஞான இரத்தினத்தோடு விளையாடுவார்கள். அரைக்கல்பமாக கல்புத்தி உடையவராக இருந்தீர்கள். மேலும் கற்களோடு விளையாடினீர்கள், எனவே துக்கம், அமைதியின்மை இருந்தது. நீங்கள் எதோடு விளையாடுகிறீர்கள்? ஞான இரத்தினங்களுடன், எப்படி இராஜாவின் குழந்தைகள் தங்கம், வெள்ளியால் உருவாக்கப்பட்ட பொம்மைகளோடு விளையாடுகிறார்கள் என்றால், ஞானக்கடலின் குழந்தைகள் எப்பொழுதும் ஞான இரத்தினங்களோடு விளையாடுகிறார்கள். ஞான இரத்தினங்களோடு விளையாடுவதினால் துக்கம், அமைதியின்மையின் உணர்வு வராது ஞான இரத்தினமும் இருக்கிறது என்றால் ஞானம் இருக்கிறது. ஞானத்தின் ஆதாரத்தில் துக்கம், அமைதியின்மை ஏற்பட முடியாது. இப்பொழுது புது வாழ்க்கை, துக்கம், அமைதியின்மை நிறைந்த வாழ்க்கை என்னுடையதே அல்ல வேறு ஒருவரின் வாழ்க்கையாகும் என்று அந்த மாதிரி அனுபவம் ஆகும். கடந்த கால வாழ்க்கை மேல் சிரிப்புதான் வருகிறது.

வரதானம்: தந்தையின் உதவி மூலமாக ஈட்டியை முள்ளாக ஆக்கக்கூடிய எப்பொழுதும் கவலையற்ற மற்றும் டிரஸ்டியாக ஆகுக!

பழைய கணக்கு ஈட்டி ஆகும் ஆனால் தந்தையின் உதவி மூலம் அது முள்ளாக ஆகி விடுகிறது. சூழ்நிலை அவசியம் வரும். ஏனென்றால் அனைத்தையும் இங்கேயே முடிக்க வேண்டும் ஆனால் தந்தையின் உதவி அவற்றை முட்களாக ஆக்கி விடுகிறது. பெரிய விஷயத்தை சிறியதாக ஆக்கி விடுகிறது. ஏனென்றால் பெரிய தந்தை உடன் இருக்கிறார். இந்த நிச்சயத்தின் ஆதாரத்தில் எப்பொழுதும் கவலையற்று இருங்கள், மேலும் டிரஸ்டியாகி என்னுடையதை

உன்னுடையதில் மாற்றம் செய்து லேசாகி விட்டீர்கள் என்றால் அனைத்து கமையும் ஒரு நொடியில் முடிவடைந்து விடும்.

சுலோகன்: சுப பாவனையின் கையிருப்பு மூலமாக எதிர்மறையை நேர்மறையில் மாற்றம் செய்யுங்கள்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

# 24.01.1978 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# நிரந்தர சேவாதாரி!

பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் நெற்றியின் நடுவில் பிரகாசமாக இருக்கும் நட்சத்திரம் என்று கூறினாலும் சரி அல்லது வைரம் என்று கூறினாலும் சரி, அதைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார். ஒவ்வொருவரின் ஜொலிப்பு வித்தியாசமானதாகவும், அழகானதாகவும் இருந்தது. இந்த மின்னிக் கொண்டிருக்கும் நட்சத்திரங்கள் மூலம் ஒவ்வொரு ஆத்மாவின் அதிர்ஷ்டத்தின் ரேகை தெளிவாகத் தென்படுகிறது. எப்படி பிரிந்து சென்ற குழந்தைகள் தன்னுடைய பாக்கியத்தை உருவாக்குவதற்காக எவ்வளவு மறைவாக (குப்தமாக) மற்றும் பிரத்யக்ஷமாக முயற்சி செய்கிறார்கள் என்று பாப்தாதாவிற்கும் பெருமிதமாக இருக்கிறது. குழந்தைகளுக்கு போதை இருக்கிறது. மேலும் தீவிர முயற்சியைப் பார்த்து தந்தையும் குழந்தைகளின் மேல் பலியாகி விடுகிறார். அதாவது குழந்தைகளின் கழுத்தின் மாலை ஆகி விடுகிறார், எப்படி மாலை எப்பொழுதும் கழுத்தில் தொங்கிக் கொண்டிருப்பதாக இருக்கும். அதே போல் குழந்தைகளின் வாயில், கண்களில், புத்தியில் தந்தை தான் நிரம்பியிருக்கிறார் அதாவது தந்தையை தன்னுடைய கழுத்தின் மாலையாக ஆக்கியிருக்கிறீர்கள், இன்று பாப்தாதா குழந்தைகளின் மகிமையின் பாடலை பாடிக் கொண்டிருந்தார், குழந்தைகளின் மகிமையாக இன்று என்ன பாடல் பாடினோம்? ஒவ்வொரு குழந்தையிடமும் தந்தையை பிரத்யக்ஷம் (வெளிப்படுத்த) செய்வதற்கான ஊக்கத்தைப் பார்த்தோம். குழந்தைகளின்றி தந்தை பிரத்யக்ஷம் ஆக முடியாது. அப்படி தந்தையையே (பிரத்யக்ஷம்) வெளிப்படுத்துபவர்கள் எவ்வளவு உயர்ந்தவர்களாகிறார்கள். இந்த அளவு போதை அல்லது சேவையின் நினைவு இருக்க வேண்டும். எப்படி தந்தை அழியாதவர். ஆத்மா அழியாதது. சங்கமயுகத்தின் அனைத்து பிராப்திகளும் அழியாதது. அதே போல் நினைவு அல்லது போதையும் அழியாததாக இருக்கட்டும். வேற்றுமை இருக்கக்கூடாது, வேற்றுமை

வருகிறது என்றால், மந்திரத்தை மறப்பது என்பதாகும். ஒருவேளை மந்திரம் நினைவு இருக்கிறது என்றால் போதையில் வேற்றுமை இருக்க முடியாது.

இன்று பாப்தாதா சந்திப்பதற்காக வந்திருக்கிறார், இதுவரை அதிகமாக கூறியாயிற்று ஆனால் இன்று அவ்வாறு கூறியதின் சொரூபத்தைப் பார்ப்பதற்காக வந்திருக்கிறோம். சொரூபத்தில் என்ன பார்த்தோம்? நன்றாக சேவை செய்திருக்கிறீர்கள். அனேக அஞ்ஞான ஆத்மாக்களுக்கு நினைவு அதாவது விழிப்புணர்வை ஏற்படுத்தியிருக்கிறீர்கள். டெல்லியின் பூமி அனைத்து பிராமண ஆத்மாக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. இப்பொழுது இவர்கள் யார் மற்றும் இவர்கள் செய்யும் காரியம் என்ன என்று கேள்வி எழுந்திருக்கிறது. அனைத்து பிராமணர்களும் உங்களைப் பார்த்து இது அதிசயம் என்று அனுபவம் செய்கிறார்கள். சாதாரண கன்யாக்கள், மாதர்கள், மறைவாக இருந்தே இவ்வளவு பெரிய சேவையை செய்திருக்கிறார்கள். இது மாதிரி ஒருபொழுதும் நினைத்ததும் இல்லை, புரிந்து கொண்டதும் இல்லை. அனைவரின் தெய்வீக முகங்கள் பாப்தாதாவின் உருவத்தை தமது செயல்களின் மூலமாக மக்களின் எதிரில் அவசியம் வெளிப்படுத்தியுள்ளன. இப்பொழுது கொஞ்சம் சலசலப்பு ஏற்படுத்தியிருக்கிறீர்கள். எப்படி நிலத்தில் முதலில் ஏர் உழுவார்கள் இல்லையா? மேலும் ஏர் உழுது கொண்டே விதையும் விதைப்பார்கள். அதே போல் தங்களது எதிர்கால தலைநகரத்தில் அல்லது தங்களது ஆரம்ப நிலத்தில் சலசலப்பு என்ற ஏர் உழுதிருக்கிறீர்கள். ஏதோ பலம் இருக்கிறது. ஏதோ சக்தி இருக்கிறது. இவர்கள் சாதாரண சக்திகள் இல்லை என்று சலசலப்பு ஏற்படுத்தியதன் கூடவே இந்த விதையையும் போட்டிருக்கிறீர்கள். நேரெதிரில் பார்க்காவிட்டாலும் உலகில் நாலாபுறங்களிலும் இவர்கள் யார் மேலும் என்ன செய்கிறார்கள் என்று பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறீர்கள். அரசாங்கத்தின் காதுகள் வரை இந்தச் செய்தி சென்றடைந்துள்ளது. இப்பொழுது இந்த விதையை வாய்மொழி மூலம் மற்றும் நினைவின் சக்தி மூலமாக வளரச் செய்ய வேண்டும் ஆனால் இதுவரை என்ன செய்திருக்கிறீர்களோ அதை மிக நன்றாகச் செய்திருக்கிறீர்கள், வெளிநாடுகளிவிருந்து வந்திருக்கும் குழந்தைகளை அல்லது பாரதத்திலிருந்து வந்திருக்கும் குழந்தைகளை, யாரெல்லாம்

சேவையில் உதவி என்ற விரல் கொடுத்தார்களோ அதாவது தன்னுடைய இராஜ்யத்தின் அஸ்திவாரத்தைப் போட்டார்களோ அவர்களைப் பார்த்து பாப்தாதா மகிழ்ச்சி அடைகிறார்.

இந்த மகாநாடு பிராமணர்களுக்கு அவரவர்களின் இராஜ்யத்தின் அதிகாரி ஆவதற்கான அடிக்கல் நாட்டு விழாவாக இருந்தது. எனவே எந்தவொரு வெளிநாட்டைச் சேர்ந்த சென்டரின் ஆத்மாக்கள் அல்லது பாரதத்திலும் எந்தவொரு மண்டலமும் தங்கிப் போகவில்லை, இது மறைவான சேவையாக இருந்தது. கொஞ்ச காலத்தில் வெளிப்படையாகத் தென்படும், இப்பொழுதோ மறைவான வேஷத்தில் அடிக்கல் நாட்டினீர்கள் அதாவது விதை விதைத்தீர்கள் ஆனால் சரியான நேரத்தில் இதே விதை பழத்தின் (பலனின்) ரூபத்தில் நீங்கள் அனைவரும் பார்ப்பீர்கள். இதே உலகத்து மனிதர்கள் உங்களை வரவேற்பார்கள், மரியாதை செய்வார்கள்.

அனைவரும் இருமும் ஓசை எழுந்தது. மிகவும் கடினமாக உழைத்தீர்களா என்ன? இயற்கையின் பாதிப்பு அதிகமாக ஆகி விட்டது. இதன் பலனும் கிடைத்து விடும், எப்படி சீதோஷணமோ அப்படி தன்னை நடத்திக் கொள்ள முடிய வேண்டும் என்ற இதையும் வெளிநாட்டைச் சேர்ந்த ஆத்மாக்கள் அனுபவம் செய்ய வேண்டியது மிக அவசியம் ஆகும். இந்த அனுபவமும் வேண்டும். சிறியவர், பெரியவர் என்று ஒவ்வொருவரின் மகத்துவம் இந்த சேவையில் இருந்தது. நன்றாக உழைத்தும் இருக்கிறீர்கள், முதல் அஸ்திவாரமாக இந்தக் கேள்வி எழுந்திருக்கிறது. இப்பொழுது மீண்டும் கேள்வியின் பதில் கிடைக்கும்.

இன்று பாப்தாதா இந்த ஆன்மீக உரையாடல் செய்து கொண்டிருந்தார். எப்படி நிரந்தர யோகி ஆவதற்கான வரதானம் தந்தை மூலமாக கிடைத்திருக்கிறது. அதே போல் எதிர்காலத்திற்காகவும் நிரந்தர சேவாதாரியாக ஆக வேண்டும். தூங்கிக் கொண்டிருந்தாலும் சேவை இருக்கட்டும், தூங்கிக் கொண்டிருக்கும்பொழுதும் உங்களை யாராவது பார்த்தால் உங்களுடைய முகம் மூலமாக அமைதி, ஆனந்தத்தின் எண்ண அலைகளை அனுபவம் செய்ய வேண்டும். எனவே தான் மிக இனிமையான தூக்கம் இருந்தது என்று கூறப்படுகிறது. ஒவ்வொருவரின் தூக்கத்திலும் வித்தியாசம் இருக்கும். ஒவ்வொரு

எண்ணத்திலும், ஒவ்வொரு காரியத்திலும் எப்பொழுதும் சேவை நிரம்பியிருக்க வேண்டும். இதைத் தான் நிரந்தர சேவாதாரி என்று கூறுவது. தந்தை மற்றும் சேவை எப்படி தந்தையை மிகப் பிரியமானவராக அனுபவம் செய்கிறோம். தந்தையின்றி வாழ்க்கை இல்லை, அதே போல் சேவையின்றி வாழ்க்கை இல்லை, அந்த மாதிரி நிரந்தர யோகி மற்றும் நிரந்தர சேவாதாரியானவர். விக்ன விநாஷக் (தடைகளை அழிப்பவர்) ஆக இருப்பார். தந்தையின் நினைவு மற்றும் சேவை என்ற இரட்டைப் பூட்டு போடப்பட்டு விடுகிறது. எனவே மாயா வர முடியாது. எப்பொழுதும் இரட்டைப் பூட்டு இருக்கிறதா என்று சோதனை செய்யுங்கள், ஒருவேளை ஒரு பூட்டு இருந்தால் கூட மாயா வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது, எனவே தந்தையின் நினைவு மற்றும் சேவையில் முழுமையாக ஈடுபட்டிருக்க வேண்டும் என்று அடிக்கடி கவனம் கொடுங்கள். ஒவ்வொரு கர்மேந்திரியங்கள் மூலமாக தந்தையின் நினைவை நினைவூட்டும் சேவை செய்ய வேண்டும் என்று எப்பொழுதும் நினைவு வைத்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு எண்ணம் மூலமாக உலக நன்மை செய்பவராகி லைட் ஹவுஸ்'ன் (கலங்கரை விளக்கத்தின்) காரியம் செய்ய வேண்டும். ஒவ்வொரு விநாடியிலும் ஈக்திசாலியான உள்ளுணர்வு மூலமாக நாலா புறங்களிலும் சக்திசாலியான எண்ண அலைகளைப் பரப்ப வேண்டும் அதாவது சூழலை மாற்றியமைக்க வேண்டும். ஒவ்வொரு காரியத்தின் மூலமாக ஒவ்வொரு ஆத்மாவிற்கும் கர்மயோகி ஆகுக என்ற வரதானம் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு அடியிலும் தனக்காக பல மடங்கின் வருமானத்தை சேமிக்க வேண்டும். எனவே எண்ணம், நேரம், உள்ளுணர்வு மற்றும் காரியத்தை நாலாபுறங்களின் சேவைக்காக ஈடுபடுத்துங்கள். இதைத்தான் நிரந்தர சேவாதரி அதாவது சேவைக்குத் தகுதியானவர் என்று கூறுவது நல்லது.

எப்படி மதுபன்னில் மேளா (சந்திப்பு) இருக்கிறது அதே போல் இறுதியில் ஆத்மாக்களின் மேளாவும் நடக்கவிருக்கிறது. மதுபன் பிடித்திருக்கிறதா அல்லது வெளிநாடு பிடித்திருக்கிறதா? மதுபன் என்று எதைக் கூறுவது? எங்கு பிராமணர்களின் கூட்டம் இருக்கிறதோ அங்கு மதுபன் இருக்கிறது. எனவே ஒவ்வொரு வெளிநாட்டு கிளையையும் மதுபன் ஆக்குங்கள். மதுபன்னாக ஆக்கினீர்கள் என்றால் பாப்தாதாவும் வருவார். ஏனென்றால் தந்தைக்கும் மதுபன்னில் வர வேண்டும் என்ற

உறுதிமொழி இருக்கிறது. வரும் நாட்களில் மிகுந்த அதிசயத்தைப் பார்ப்பீர்கள். இப்பொழுது எப்படி பாரதத்தின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருக்கிறதோ அதே போல் கொஞ்ச காலத்தில் வெளிநாட்டின் எண்ணிக்கையை அதிகப்படுத்துங்கள். எங்கு இருக்கிறீர்களோ அங்கு நாலாபுறங்களிலும் ஒலியைப் பரப்புங்கள். இவர்கள் யார் மற்றும் என்ன செய்கிறார்கள் என்று கேள்வி எழ வேண்டும். எப்பொழுது அந்த மாதிரி குழுவை தயார் செய்தீர்கள் என்றாலும் எங்கு அந்த மாதிரி குழு இருக்கிறதோ அங்கு பாப்தாதாவும் உடன் இருக்கிறார். அங்கே குஷி இருக்கிறதா அல்லது இங்கு வருவதில் குஷி ஏற்படுகிறதா? எவ்வளவு தான் கூறினாலும் இருந்தும் பெரியது பெரியது தான், சிறியது சிறியது தான். ஏனென்றால் நேரடியாக சாகார உடலின் ஜென்மபூமி மற்றும் கர்மபூமி, சரித்திரபூமியின் விசேஷ மகத்துவம் இருக்கத் தான் செய்கிறது. அதனால் தான் பக்தியில் கூட ஸ்தானத்திற்கு மகத்துவம் வைக்கிறார்கள், கோவிலில் இருக்கும் சிலை பழையதாக இருக்கும் ஆனால் வீட்டில் மிக நல்ல அழகான சிலை இருக்கும், இருந்தும் பக்தர்கள் ஸ்தானத்திற்கு மகத்துவம் கொடுக்கிறார்கள். அப்படி ஸ்தானத்திற்கு மகத்துவம் இருக்கிறது. அதனால் தன்னுடைய பூந்தோட்டத்தை வளர்ச்சி அடையச் செய்யுங்கள். மதுபன் மாதிரியான வடிவமைப்பை உருவாக்குங்கள், மினி மதுபன்னாக இருந்தால் கூட அனைவரும் பார்க்க வேண்டும் என்று ஈர்க்கப்படுவார்கள். நல்லது.

பாப்தாதா தற்சமயம் செய்த சேவைக்காக நன்றி கூறுகிறார் மற்றும் எதிர்கால சேவைக்காக பிறகு நினைவூட்டுகிறார். பாப்தாதாவிற்கு குழந்தைகள் மேல் அதிக அன்பு என்று கூறினாலும் அல்லது நல்ல பாசம் கூறினாலும், தாய்க்கு குழந்தைகள் மேல் பாசம் இருக்கும் இல்லையா? துடிப்பதில்லை ஆனால் உள்ளடக்கி விடுகிறார். சோர்வடைவதில்லை, ஆனால் குழந்தைகளை எதிரில் வெளிப்படுத்தி அன்பின் கடலில் உள்ளடக்கி விடுகிறார். தந்தைக்கு அன்பு இருக்கிறது. அதனால் தான் உங்களுக்கும் அன்பு உற்பத்தி ஆகிறது இல்லையா? அன்பு இருக்கிறது அதனால் தான் உடலற்ற நிலையில் இருந்தும் உடலில் வருகிறார் இல்லையா?

அந்த மாதிரி அன்பின் பந்தனத்தில் கட்டிப்போடக்கூடிய, அன்பினால் தந்தையை வெளிப்படுத்தக்கூடிய, சேவை மூலமாக உலக நன்மை

காரியத்திற்காக பொறுப்பாளர் ஆகியிருக்கும், எப்பொழுதும் மகாதானி மற்றும் வரதானி அந்த மாதிரி நிரந்தர யோகி, நிரந்தர சேவாதாரி குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்,

மகாராஷ்ட்ராவின் பார்ட்டிகளுடன்: எப்பொழுதும் தன்னை மிக உயர்ந்த மகான் ஆத்மா என்று நினைக்கிறீர்களா? மகான் ஆத்மா என்ற நினைவு மூலம் இயல்பாகவே ஒவ்வொரு எண்ணம் மற்றும் ஒவ்வொரு காரியமும் மகான் அதாவது மிக உயர்ந்ததாக இருக்கும். எப்படி இன்றைய காலத்து உலகத்தினர் அர்பகாலத்தின் பதவியிலிருக்கும் ஆத்மாக்கள் தன்னுடைய பதவியின் நிலையிலிருக்கும் காரணத்தினால் இரவு பகலாக இயல்பாகவே அதே போதையில் இருக்கிறார்கள். அதே போல் தந்தை மூலமாக கிடைத்திருக்கும் பதவியை நினைவில் வைப்பது சுலபம் மற்றும் இயல்பானது. எப்படி பதவியோ அப்படியே காரியம் இருக்கும், எப்படி பெயரோ அப்படியே உயர்ந்த காரியமும் இருக்கும். எனவே தற்சமயம் சகஜயோகியின் கூடவே கர்மயோகி என்று கூறுவோம். கர்மயோகி என்றால் ஒவ்வொரு காரியம் மூலமாக தந்தை மேல் உள்ள அன்பு மற்றும் சம்மந்தத்தின் சாட்சாத்காரம் ஒவ்வொரு ஆத்மாவிற்கும் ஏற்படும். எப்படி எல்லைக்குட்பட்ட ஆத்மாக்கள் மேல் அன்பு வைத்திருக்கும் ஆத்மாவிற்கு அவருடைய முகம் மற்றும் பொலிவு மூலம், இவர் யாருடைய அன்பிலேயோ மூழ்கியிருக்கிறார் என்று தென்படும். அதே போல் ஒவ்வொரு காரியம் செய்யும் போதும் தந்தையுடன் அன்பாக இருக்கும் ஆத்மாவின் அனுபவம் செய்விக்கிறேனா என்று தன்னைத் தானே கேளுங்கள், இதைத் தான் கர்மயோகி என்று கூறுவது கர்மயோகியின் அல்லது சகஜ இராஜயோகியின் விளக்கம் மிகவும் நுண்ணியமானது. கர்மயோகி அல்லது சகஜ இராஜயோகியின் ஒவ்வொரு எண்ணம் தந்தையின் அன்பின் எண்ண அலைகளைப் பரப்புவதாக இருக்கும். எப்படி ஜட விக்கிரகங்கள் கூட அமைதியின் அற்ப கால சுகத்தின் அலைகளை இன்று வரையிலும் ஆத்மாக்களுக்கு கொடுக்கும் காரியத்தை செய்து கொண்டிருக்கின்றன என்றால், அவசியம் சைத்தன்ய ரூபத்தில் எண்ணம் மூலமாக, வாய்மொழி மூலமாக, செயல்களின் மூலமாக உலகில் நிரந்தரமாக சுகம், சாந்தி, தந்தையின் அன்பின் அலைகளைப்

பரப்பும் காரியத்தைச் செய்திருக்கிறார்கள். அதனால் தான் ஜட விக்ரஹங்களிலும் அமைதி இருக்கிறது. எப்படி அறிவியலின் இயந்திரம் வெப்பத்தின் அல்லது குளிரின் அலைகள் மற்றும் சூழலை உருவாக்க முடியும் என்றால் மாஸ்டர் சர்வ சக்திவான் தன்னுடைய அமைதி அதாவது நினைவின் சக்தி மூலம் தன்னுடைய ஆர்வம் நிறைந்த மனநிலை மூலமாக எப்படிப்பட்ட சூழலை உருவாக்க மற்றும் அலைகளைப் பரப்ப விரும்புகிறாரோ அவை அனைத்தையும் செய்ய முடியும். அந்த மாதிரி பயிற்சி செய்யுங்கள். இந்த நேரம் சுகத்தின் அல்லது அமைதியின் சூழலை அல்லது சக்தி சொரூபத்தின் சூழலை உருவாக்க முடியும், அதன் சூழல் மூலம் உள்ளே எந்தெந்த ஆத்மாக்கள் இருக்கிறார்களோ அவர்கள் இங்கு துக்கத்திலிருந்து சுகத்தின் சூழல் வந்து விட்டோம் என்று அனுபவம் செய்ய வேண்டும். இங்கு மிகுந்த சுகம் கிடைத்துக் கொண்டிருக்கிறது என்று உணர வேண்டும். எப்படி குளிர்சாதனம் இருக்கும்பொழுது குளிர் அல்லது வெப்பத்தை உண்மையிலேயே வெப்பத்திலிருந்து குளுமையான காற்றில் வந்து விட்டோம் என்று அனுபவம் செய்கிறார்கள். குளிரிலிருந்து வெப்பத்தில் வந்து விட்டோம் என்றும் அனுபவம் செய்கிறார்கள். அதே போல் உங்களுடைய நடத்தை மற்றும் முகம் மூலமாக உங்களுடைய எண்ண சக்தி மூலமாக சுகம், சாந்தி மற்றும் சக்தியின் அனுபவம் செய்ய வேண்டும். எப்படி ஒரு நொடியில் இருளிலிருந்து வெளிச்சத்தின் அனுபவம் செய்கிறீர்கள் இல்லையா? அதே போல் இன்றைய மனிதன் தன்னுடைய சக்தியின் மூலம் அனுபவம் செய்ய முடியாது ஆனால் நீங்கள் அனைவரும் உங்களுடைய பிராப்தியின் ஆதாரத்தினால், நினைவின் ஆதாரத்தினால் அவர்களை அனுபவி ஆக்க வேண்டும். இது தான் உண்ணமயான சகஜ இராஜயோகா அல்லது கர்மயோகாவின் சூத்திரம் ஆகும். தனக்காக அமைதியின் அல்லது சக்தியின் அனுபவம் செய்கிறீர்கள் என்ற இது ஒன்றும் பெரிய விஷயம் இல்லை ஆனால் தன்னுடைய நினைவின் சக்தி மூலமாக இப்பொழுது உலகில் எண்ண அலைகள் மூலமாக சூழ்நிலையை உருவாக்குங்கள். அப்பொழுது தான் நம்பர் ஒன் சகஜ இராஜயோகி என்று கூறுவோம். நீங்கள் மட்டும் திருப்தியாக இருந்து விடாதீர்கள், திருப்தியாக இருக்க வேண்டும். அனைவரையும் திருப்திப்படுத்த வேண்டும், இது தான் யோகியின் கடமை ஆகும். நல்லது.

தந்தை மூலமாக எப்பொழுதும் குஷியாக இருப்பதற்கான சாதனம் கிடைத்துள்ளது தான் இல்லையா? எப்படிப்பட்ட சூழ்நிலையாக இருந்தாலும், தன்னிடம் சாதனம் இருக்கிறது என்றால் எப்பொழுதும் குஷியாக இருப்பார்கள். தந்தையை நினைவு செய்வதற்கான சாதனம் மட்டுமே மிக உயர்ந்ததாகும். பாபா என்று கூறுவது மற்றும் குஷியைப் பிராப்தி செய்வது. அந்த மாதிரி சாதனத்தை எப்பொழுதும் உபயோகித்துக் கொண்டே இருங்கள். பாபா என்ற வார்த்தையை நினைவு செய்வது என்றால் சுவிட்ச் ஆன் செய்வது (பொத்தானை அழுத்துவது), எப்படி சுவிட்ச் ஆன் செய்வதினால் ஒரு நொடியில் இருள் அகன்று விடுகிறது. அது போலவே பாபா என்று கூறுவது என்றால் இருள் அல்லது துக்கம், அசாந்தி, குழப்பம், சோர்வு, டென்ஷன் அனைத்தும் ஒரு நொடியில் முடிவடைந்து விடுகின்றன. அந்த மாதிரி மந்திரத்தை தந்தை கொடுத்திருக்கிறார். ஒரு வார்த்தைக்கான மந்திரம் தானே, பாபா என்பது மட்டும் தான். எப்படிப்பட்ட நேரமாக இருந்தாலும் இந்த மந்திரம் ஒரு நொடியில் கடந்து செல்ல வைக்கக்கூடியது. இந்த மந்திரத்தை விதிப்பூர்வமாக மட்டும் தேவையான நேரத்தில், காரியத்தில் ஈடுபடுத்துங்கள், இந்த ஒரு வார்த்தைக்கான மந்திரம் அதிசயமான மந்திர வேலை செய்யக்கூடியது. இந்த ஒரு வார்த்தையின் மந்திரம் மூலமாக என்ன விரும்புகிறீர்களோ அதைப் பெற முடியும். அது சுகம், சாந்தி, சக்தி, ஆனந்தம் என்று என்னவாக இருந்தாலும், அனைத்தையும் பிராப்தி செய்விக்கக்கூடிய மந்திரம் இது. எனவே மந்திரசக்தி உள்ள மந்திரம் என்று கூறுகிறோம். தந்தையோ அனைத்து குழந்தைகள் மேல் அனைவரும் தந்தைக்குச் சமமான எல்லைக்கப்பாற்பட்ட சேவாதாரி ஆக வேண்டும் என்ற விருப்பம் தான் வைக்கிறார். அவை அனைத்தும் எல்லைக்குட்பட்ட பொறுப்புக்கள், ஆனால் தந்தையின் பொறுப்பு எல்லைக்கப்பாற்பட்டது. அப்படியானால் எல்லைக்கப்பாற்பட்ட சக்தி கொடுக்க வேண்டியது இருக்கும் இல்லையா? அப்படி தந்தையின் இந்த நல்ல விருப்பத்தையும் நிறைவேற்ற வேண்டும். இப்பொழுது இராஜயோகி ஆக வேண்டும். இராஜயோகி இராஜ இராஜேஸ்வரன் ஆவார். ஆக அதற்கு முன்னதான நிலை இராஜயோகி நிலையாகும். இராஜயோகி ஆவது கடினம் அல்ல, வீடு, வாசலைத் துறந்து வீட்டு யோகி ஆவது கடினம் ஆகும். நல்லது.

வரதானம்: பிராப்தி சொரூபம் ஆகி ஏன், என்ன என்ற கேள்விகளிலிருந்து விடுபட்டிருக்கக்கூடிய எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்தவர் ஆகுக!

யார் பிராப்தி சொரூபம் நிரம்பிய ஆத்மாக்களோ அவர்களுக்கு ஒருபொழுதும் எந்த விஷயத்திலும் கேள்வி எழாது. அவர்களுடைய முகத்தில் மற்றும் நடத்தையில் மகிழ்ச்சியின் தனித்தன்மை தென்படும். இதைத்தான் திருப்தி என்று கூறுவது. திருப்தி ஒருவேளை குறைவாகிறது என்றால் அதற்கான காரணம் பிராப்தி குறைவு மேலும் பிராப்தியின் குறைவிற்குக் காரணம் ஏதாவது இச்சை இன்னும் இருக்கிறது. மிகுந்த சூட்சும இச்சைகள் பிராப்தியின்மையின் பக்கம் இழுத்து விடுகிறது, எனவே அற்ப காலத்து இச்சைகளை விட்டு விட்டு பிராப்தி சொரூபம் ஆனீர்கள் என்றால் எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்தவர்களாக இருப்பீர்கள்.

சுலோகன்: பரமாத்மா அன்பிலேயே மூழ்கியிருந்தீர்கள் என்றால் மாயாவின் கவர்ச்சி முடிவடைந்து விடும்!

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

## 14.02.1978 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## நெருக்கமான ஆத்மாவின் அடையாளங்கள்!

தன்னை எப்பொழுதும் பாப்தாதாவுடன் இருப்பதாக அதாவது எப்பொழுதும் நெருக்கமாக அனுபவம் செய்கிறீர்களா? நெருக்கமான ஆத்மாவின் அடையாளம் என்னவாக இருக்கும்? யார் எவ்வளவு நெருக்கமாக இருப்பாரோ அந்தளவு நிலையில், செய்யும் காரியத்தில், குணங்களில் தந்தைக்குச் சமமாக அதாவது எப்பொழுதும் நிரம்பிய அதாவது வள்ளலாக இருப்பார். எப்படி தந்தை ஒவ்வொரு விநாடியும் மற்றும் எண்ணத்திலும் உலகிற்கு நன்மை செய்பவராக இருக்கிறாரோ அதே போல் அவரும் தந்தைக்குச் சமமாக உலகிற்கு நன்மை செய்பவராக இருப்பார். உலகிற்கு நன்மை செய்பவரின் ஒவ்வொரு எண்ணம் உலகிலுள்ள ஒவ்வொரு ஆத்மாவிற்காக, இயற்கைக்காக சுப பாவனை நிரம்பியதாக இருக்கும், ஒரு எண்ணம் கூட சுப பாவனையற்றதாக இருக்காது. எப்படி விதை பழத்தினால் நிரம்பியிருக்கிறது அதாவது முழு மரத்தின் சாரம் விதையில் நிரம்பியிருப்பதாக இருக்கும். அதேபோல் எண்ணம் என்ற விதையில் சுப பாவனை அதாவது நன்மை பயக்கும் பாவனை, அனைவரையும் தந்தைக்குச் சுமமாக ஆக்கும் பாவனை, பலமற்றவர்களை பணம் நிறைந்தவர்களாக ஆக்கும் பாவனை, துக்கமான அமைதியற்றவர்களை தனக்கு பிராப்தியாகியிருக்கும் சக்திகளின் ஆதாரத்தினால் எப்பொழுதும் சுகம், அமைதி நிரம்பியவராக ஆக்கும் பாவனை, ஆக இந்த அனைத்து சாறு அல்லது சாரமும் ஒவ்வொரு எண்ணத்தில் நிரம்பியிருப்பதாக இருக்கும். எந்தவொரு எண்ணம் என்ற விதையும் இந்த ஆற்றிலிருந்து காவியாக அதாவது வீணானதாக இருக்காது. நன்மை பயக்கும் பாவனை மூலம் சக்திசாலியாக இருக்கும்.

எப்படி ஸ்தூல இசை ஆத்மாக்களை அற்ப காலத்திற்காக உல்லாசத்தில் கொண்டு வருகிறது. விரும்பாவிட்டால் கூட தன்னை அறியாமலேயே

அனைவரின் கால்கள் நடனமாடத் தொடங்குகின்றன, மனம் ஆடத் தொடங்குகிறது. அதேபோல் உலகிற்கு நன்மை செய்பவரின் ஒவ்வொரு வார்த்தையும் ஆன்மீக இசைக்குச் சமமாக உற்காகம் ஊக்கம் கொடுக்கும். சோர்வடைந்த ஆத்மா தந்தையை சந்திக்கும் அனுபவம் செய்கிறது மற்றும் குஷியில் நடனமாடத் தொடங்கி விடுகிறது. உலகிற்கு நன்மை செய்பவரின் காரியம், கர்மயோகியாக இருக்கும் காரணத்தினால் ஒவ்வொரு காரியமும் சரித்திரத்திற்குச் சமமாக மகிமைக்குத் தகுதியானதாக இருக்கும். ஒவ்வொரு காரியத்தின் மகிமை கீர்த்தனை செய்வதற்குத் தகுதியானதாக இருக்கும். எப்படி பக்தர்கள் கீர்த்தனையில் வர்ணனை செய்கிறார்கள் -பார்ப்பது தெய்வீகம், நடப்பது தெய்வீகம் ஒவ்வொரு கர்மேந்திரியத்தின் மகிமை அளவில்லாதது என்று சொல்கிறார்கள், அந்த மாதிரி ஒவ்வொரு காரியமும் மகானாக அதாவது மகிமைக்குத் தகுதியானதாக இருக்கும். அந்த மாதிரியான ஆத்மாவை தந்தைக்குச் சமமாக நெருக்கமான ஆத்மா என்று கூறுவேம். அந்த மாதிரி உலகிற்கு நன்மை செய்யும் ஆத்மாவின் ஒவ்வொரு விநாடியும் தனது நெருக்கத்தில் வரும் ஆத்மாவிற்கு அனைத்து விருப்பங்களின் பிராப்தியை அனுபவம் செய்விக்கும். சில ஆத்மாவிற்கு சக்தியின், சிலருக்கு சாந்தியின், கடினத்தை சகஜமாக்கியதின், அடிமைத்தனத்திலிருந்து அதிகாரி ஆவதின், சோர்வு நிலையிலிருந்து மகிழ்ச்சி நிலையில் வருவதற்காக இந்த விதமாக உலகிற்கு நன்மை செய்யும் மகான் ஆத்மாவின் தொடர்பு எப்பொழுதும் ஊக்கம் மற்றும் உற்சாகத்தைக் கொடுக்கிறது. மாற்றத்தின் அனுபவம் செய்விக்கிறது. பாதுகாப்பு குடை நிழவின் அனுபவம் செய்விக்கிறது. அந்த மாதிரி உலகிற்கு நன்மை செய்பவர் அதாவது நெருக்கமான ஆத்மா ஆகுபவர், அந்த மாதிரியானவரைத் தாள் தந்தையின் அன்பிலேயே மூழ்கியிருக்கும் ஆத்மா என்று கூறுவது. அந்த மாதிரி ஆகிக் கொண்டிருக்கிறீர்கள் இல்லையா?

நீங்கள் அனைவருமோ யாரைத் தந்தை தன்னுடைய குழந்தையாக ஆக்கியிருக்கிறாரோ, அனைவரும் அதிர்ஷ்டசாலிகள் தான், தந்தை குழந்தைகளை ஏற்றுக் கொண்டார் என்றால் அதிகாரியாக ஆக்கியிருக்கிறார்; இந்த அதிகாரமோ அனைவருக்குமே கிடைத்துள்ளது ஆனால் உலகிற்கு அதிபதியாகும் அதிகாரம் உலகிற்கு நன்மை செய்பவர் ஆவதின் ஆதாரத்தில் இருக்கும். இப்பொழுது நான்

அதிகரி ஆகியிருக்கிறேனா? இராஜ்ய பாக்கியத்தின் அதிகாரி ஆகியிருக்கிறேனா? சிம்மாசனதாரியாக ஆகும் அதிகாரி ஆகியிருக்கிறேனா அல்லது இராஜ குடும்பத்தில் வருவதற்கான அதிகாரி ஆகியிருக்கிறேனா? என்று ஒவ்வொருவரும் தன்னைத் தானே கேளுங்கள்.

வெளிநாட்டு ஆத்மாக்கள் தன்னை என்னவென்று நினைக்கிறார்கள்? அனைவரும் இராஜ்யம் செய்வீர்களா அல்லது இராஜ்யத்தில் வருவீர்களா? அல்லது என்ன கிடைக்கிறதோ அதை ஏற்றுக் கொள்வீர்களா? வெளிநாட்டு ஆத்மாக்களில் யார் சத்யுகத்தின் 8-இராஜ்ய பாக்கியத்தின் சிம்மாசனதாரி ஆவதற்கான நம்பிக்கைக்குரியவர் என்று தன்னை நினைக்கிறீர்கள்? 8-இராஜ பதவியில் முதல் லட்சுமி நாராயனான், இரண்டாம் லட்சுமி நாராயணன் என்று அப்படி அதில் வருவார்கள். 8-இராஜ பதவியில் வருவதற்காக என்ன செய்ய வேண்டும்? 8-மட்டும் தான் இருக்கிறது என்று அப்படி நினைக்கிறீர்களா? மிகவும் சாதாரண விஷயம் ஒவ்வொரு நேரமும், ஒவ்வொரு சூழ்நிலையில் அஷ்ட சக்திகள் சேர்ந்தே எமர்ஜ் ரூபத்தில் இருக்கிறதா? என்று இதைப் பாருங்கள், ஒருவேளை இரண்டு அல்லது நான்கு சக்திகள் இருக்கின்றன. மேலும் ஒரு சக்தியாவது குறைவாக இருக்கிறது என்றால் 8-இராஜபதவியில் வர முடியாது. அஷ்ட சக்தி கனின் சமநிலை வேண்டும். மேலும் ஒரே நேரத்தில் 8-சக்திகளின் வெளிப்பட்ட ரூபம் வேண்டும். சகித்துக் கொள்ளும் சக்தி 100-சதவிகிதம் இருக்கிறது ஆனால் முடிவெடுக்கும் சக்தி 80-சதவிகிதம் அல்லது 50-சதவிகிதம் என்று அப்படியும் வேண்டாம். இரண்டின் சமநிலை வேண்டும் அதாவது சதவிகிதம் முழுமையாக வேண்டும் அப்பொழுது தான் இராஜ சிம்மாசனத்தின் சம்பூர்ண அதிகாரி ஆவீர்கள். இப்பொழுது கூறுங்கள், நீங்கள் என்ன ஆவீர்கள்? அஷ்ட லட்சுமி நாராயணனின் இராஜபதவி அல்லது ஆசனத்தின் அதிகாரிகளாக ஆவீர்களா?

வெளிநாட்டு ஆத்மாக்களில் நல்ல ஊக்கம் மற்றும் தைரியம் இருக்கிறது. தைரியம் உள்ள குழந்தைகளுக்கு தந்தையின் உதவி கிடைக்கிறது. ஹை ஜம்ப், மிக உயரமாகத் தாண்டி முன்னேறிச் செல்லும் ஒரு உதாரணமாக ஆக முடியும் ஆனால் இந்த அனைத்து விஷயங்களையும் கவனத்தில் வைக்க வேண்டியதாக இருக்கும்.

நீங்கள் விசேஷ ஆத்மாக்களாவீர்கள். அதனால் தான் பாப்தாதாவும் பந்தயத்தில் முதலாவதாக ஓடக்கூடியவர்களும், அந்த மாதிரி ஊக்கம் உற்சாகம் நிறைந்தவர்கள் தூரத்திலிருந்தாலும் நெருக்கத்தை அனுபவம் செய்பவர்களாக இருக்கிறார்கள் என்று தெரிந்திருக்கிறார். இப்பொழுது மேடையில் நடைமுறையில் தனது பாத்திரத்தை ஏற்றுச் செய்யுங்கள். முயற்சி செய்வதை முன்னேற்றம் அடையச் செய்யுங்கள், முதல் எண்ணில் வருபவரின் விசேஷம் என்ன? அதற்கேற்றபடி தன்னுடைய முயற்சி இருக்க வேண்டும். ஒவ்வொரு செயலிலும் ஏறும் கலை இருக்க வேண்டும். நல்லது.

ஆப்பிரிக்கா பார்ட்டி: அனைவரும் தீவிரமாக முயற்சி செய்பவர்கள் தான் இல்லையா? தீவிர முயற்சியாளர் என்றால் நினைத்தார் மற்றும் செய்தார். நினைப்பதிலும் செய்வதிலும் வித்தியாசம் இருக்கக்கூடாது. எப்படி அனேக விஷயங்களில் திட்டங்களை அதிகமாக உருவாக்குகிறார்கள், நடைமுறையில் வேற்றுமை வந்து விடுகிறது. அப்படி தீவிர முயற்சி செய்பவராக யார் இருப்பாரோ அவர் என்ன திட்டம் உருவாக்குகிறாரோ அதுவே நடைமுறையில் இருக்கும். அப்படி அந்த மாதிரியான தீவிர முயற்சி செய்பவர்கள் தான் இல்லையா? மாற்றான் இராஜ்யம் இருக்கும் காரணத்தினால் சூழ்நிலைகள் உங்கள் பக்கம் மிக அதிகமாக வருகிறது ஆனால் யார் எப்பொழுதும் தந்தையின் துணையோடு இருக்கிறாரோ அவர் எதிரில் சூழ்நிலை கூட சுயநிலையின் ஆதாரத்தில் மாறி விடுகிறது. மலையும் கடுகாகி விடுகிறது. எப்படி அனேக தடவைகள் இந்த அனைத்து விஷயங்களையும் கடந்து விட்டோம். ஒன்றும் புதிதல்ல என்று அந்த மாதிரி அனுபவம் செய்வீர்கள், புது விஷயங்களில் பயப்பட வேண்டியதாக இருக்கும் ஆனால் ஒன்றும் புதிதல்ல. அந்த மாதிரி அனுபவம் செய்பவர்கள். எப்பொழுதும் தாமரை மலருக்குச் சமமாக இருக்கிறார்கள். எப்படி தண்ணீர் கீழே இருக்கிறது. தாமரை மேலே இருக்கிறது. அதே போல் சூழ்நிலை கீழே இருக்கிறது நாம் மேலே இருக்கிறோம், கீழே உள்ள விஷயம் கீழேயே இருந்து விடுகிறது. எப்பொழுதாவது ஏதாவது விஷயம் வந்தால் பாப்தாதா என்னுடன் இருக்கிறார் என்று நினையுங்கள். அனைத்து சக்திகள் நிறைந்தவரின் எதிரில் எவ்வளவு பெரிய பிரச்சனை கூட எறும்புக்குச் சமமாகிறது. எப்படிப்பட்ட பிரச்சனையாக இருந்தாலும் ஆனால் யார் தந்தையின்

குழந்தையாக ஆகியிருக்கிறாரோ அவருக்கு தந்தை பொறுப்பாவார். எங்கே இருப்போம், எப்படி இருப்போம், என்ன சாப்பிடுவோம் என்று அப்படி யோசிக்காதீர்கள், உண்மையான உள்ளத்தின் துணைவனாக தந்தை இருக்கிறார். எதுவரை தந்தை இருக்கிறாரோ அதுவரை பட்டினியாக இருக்க முடியாது. எப்பொழுது பக்தர்களுக்கு அனேக விதமான அனுபவம் ஏற்படுகிறது அவர்களே வேண்டுபவர்கள். அவர்களுடைய வயிறும் நிரம்பிவிடுகிறது என்றால், நீங்களோ அதிகாரி ஆவீர்கள். நீங்கள் எப்படி பசியோடு இருக்க முடியும். எனவே என்னவாகும் என்று கொஞ்சம் கூட பயப்படாதீர்கள். என்ன நடக்குமோ அது நல்லதாகவே நடக்கும். எவ்வளவு நிச்சயம் இருக்கிறது என்று ஒரு சிறிய பரீட்சை மட்டும் இருக்கும். பரீட்சை முழு வாழ்க்கையிலும் இருக்காது, ஒரு மணி நேரம் அல்லது இரண்டு மணி நேரத்திற்கான பரீட்சை தாள், ஒருவேளை பாப்தாதா எப்பொழுதும் உடன் இருக்கிறார், பரீட்சை எழுதும் நேரத்தில் ஒருவரின் பலம், அந்த ஒருவர் மேல் உள்ள நம்பிக்கை இருக்கிறது என்றால் ஒன்றுமே இல்லாதது போல் முற்றிலும் அந்த மாதிரி கடந்து விடுவீர்கள், எப்படி கனவு ஏற்படுகிறது தான் இல்லையா! கனவில் வந்த விஷயங்கள் தூக்கத்திலிருந்து எழுந்த பிறகு மறைந்து போய்விடுகின்றன. அதே போல் இதுவும் பார்ப்பதற்கு பெரிய ரூபமாக இருக்கிறது, ஆனால் ஒன்றுமில்லை, அப்படியானால் அந்த மாதிரி நிச்சயபுத்தி உடையவர்களாக இருக்கிறீர்கள்? ஒவ்வொருவரின் நெற்றியில் வெற்றியின் திலகம் இடப்பட்டு இருக்கிறது என்றால் அப்படி யார் வெற்றித் திலகமிட்ட ஆத்மாக்களோ அவர்களுக்கு தோல்வி ஏற்பட முடியாது. கடுமையாக முயற்சி செய்து வந்திருக்கிறீர்கள், பிரச்சனைகளை கடந்து வந்திருக்கிறீர்கள் என்றால் பாப்தாதாவும் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார். இதுவும் நாடகத்தில் இருந்தது. எப்படி கப்பல் உடைந்து விட்டது என்றால் சிலர் இங்கேயும் சிலர் அங்கேயும் சென்று விழுந்து கிடப்பார்கள். அப்படி இதுவும் துவாபர யுகத்தில் பிரிந்து சென்றவர்கள் சிலர் வெளிநாட்டில், சிலர் பாரதத்தில் இருக்கிறார்கள், இப்பொழுது தந்தை பிரிந்து சென்ற குழந்தைகளை ஒன்றாகச் சேர்த்து கொண்டிருக்கிறார். இப்பொழுது கவலையில்லாமல் இருங்கள். எதுவானாலும் சரி, முதலில் பாபாவின் எதிரில் வரும். நீங்கள் மகாவீரர்கள் தான் இல்லையா? கதை கேட்டீர்கள் இல்லையா? அடுப்பின் நடுவில் பூனைக்குட்டிகள் தப்பித்து விட்டார்கள். என்ற கதை கேட்டிர்கள் இல்லையா? என்னவானாலும் சரி ஆனால் நீங்கள்

பாதுகாப்பாக இருக்கிறீர்கள், மாயா தாக்க முடியாத ஆடையை மட்டும் அணிந்திருக்க வேண்டும். ஆடையோ எப்பொழுதும் உடன் இருக்கிறது தான் இல்லையா? மாயா தாக்க முடியாததாக இருக்கிறதா? விமானத்தில் கூட பாருங்கள், எமர்ஜென்சியில் (எதிர்பாராதது ஏதாவது நடந்தது என்றால்), இதை அணிந்து கொள்ளுங்கள் என்று டிரஸ் கொடுப்பார்கள். அப்படி உங்களுக்கு மிகுந்த சகஜமான சாதனம் கிடைத்திருக்கிறது.

ஒவ்வொரு இரத்தினமும் மிகவும் மதிப்புள்ளது. ஏனென்றால் ஒருவேளை மதிப்புள்ள இரத்தினமாக இல்லை என்றால் கோடியில் சிலராக நீங்களே எப்படி வருவீர்கள்? யாரை முழு உலகமுமே அடைவதற்காகத் துடித்துக் கொண்டிருக்கிறதோ அவர் உங்களை தன்னுடையவராக்கி இருக்கிறார். ஒரு விநாடி தரிசனத்திற்காக உலகம் துடித்துக் கொண்டிருக்கிறது நீங்களோ குழந்தைகள் ஆகி விட்டீர்கள் என்றால் எவ்வளவு போதை, எவ்வளவு குஷி இருக்க வேண்டும். மனம், எப்பொழுதும் குஷியில் நடனமாடிக் கொண்டே இருக்க வேண்டும். தற்சமயத்தில் குஷியினால் நீங்கள் ஆடுவதை வரும் காலத்து (சத்யுகம்) படங்களிலும் காண்பித்திருக்கிறார்கள். கிருஷ்ணரை எப்பொழுதும் நடனமாடும் தோற்றத்தில் தான் காண்பிப்பார்கள் இல்லையா?

எப்படி தந்தையோ அப்படி யாருமில்லை, அதே போல் உங்களுடைய பாக்கியம் மாதிரி வேறு யாருமே பாக்கியசாலி இல்லை. நல்லது. யார் யார் வந்து சேர முடியவில்லையோ அவர்களுக்கும் மிகுந்த அன்பைக் கொடுங்கள், பாப்தாதாவின் அன்பு அவசியம் அருகில் கொண்டு வருகிறது. அமிர்தவேளையில் எழுந்து தந்தையோடு ஆன்மீக உரையாடல் செய்தீர்கள் என்றால், அனைத்து பிரச்சனைகளுக்கான தீர்வு தெளிவாகத் தென்படும். எந்தவொரு விஷயத்திற்கான பதில் அந்த ஆன்மீக உரையாடலில் கிடைத்து விடும், வரதான பூமியாகிய மதுபனிலிருந்து இந்த விசேஷ வரதானத்தை எடுத்துச் சென்றீர்கள் என்றால் இன்னும் லி்ஃப்ட் கிடைத்து விடும், எப்பொழுது சுமையைத் தூக்குவதற்காக தந்தை அமர்ந்திருக்கிறார் என்றால் நீங்கள் ஏன் தூக்குகிறீர்கள்? எவ்வளவு லேசாக இருப்பீர்களோ அவ்வளவு மேலே

உயர்ந்து செல்வீர்கள், மனதால் லேசாக ஆவதினால் உயர்ந்த நிலை எப்படி உருவாகி விடுகிறது என்ற அனுபவம் செய்வீர்கள்.

தந்தையைத் தெரிந்து கொண்டீர்கள், அடைந்து விட்டீர்கள் இதை விட பெரிய பாக்கியமோ வேறு ஒன்றுமே இல்லை, வீட்டில் அமர்ந்திருக்கும்பொழுதே தந்தை கிடைத்திருக்கிறார். தந்தையே வந்து குழந்தையே எழுந்திரு என்று எழுப்பினார் இல்லையா? நீங்கள் எந்த தேசத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் ஆனால் உங்களுடைய மனநிலை எப்பொழுதும் தந்தையுடன் இருப்பதாக இருக்க வேண்டும், தேசத்தினால் வெகு தொலை தூரத்தில் இருந்தாலும், தந்தையின் உடன் இருப்பவர், மிக அருகில் இருக்கிறார். குமாரிகள் பந்தனமற்றவர்களாக இருக்கிறார்கள் எதற்காக? சேவைக்காக நாடகத்தில் இதுவும் ஒரு லிஃப்ட் ஆகும். இந்த லிஃப்ட்டின் லாபத்தை எடுக்க வேண்டும். எவ்வளவிற்கு எவ்வளவு தன்னுடைய நேரத்தை ஈஸ்வரிய சேவையின் ஈடுபடுத்திக் கொண்டே இருந்தீர்கள் என்றால் லௌகீக வேலையிலும் சகயோகம் கிடைக்கும், பந்தனம். இருக்காது. குமாரிகள் தந்தைக்கு மிகப் பிரியமானவர்கள், ஏனென்றால், எப்படி தந்தை பந்தனமில்லாதவராக இருக்கிறாரோ அதே போல் குமாரிகளும் இருக்கிறார்கள். அப்படி தந்தைக்குச் சமமாகி விட்டீர்கள் இல்லையா, நல்லது.

டிரினிடாட், கயானா: வரதான பூமியில் வந்து அனேக வரதானங்களினால் தன்னை நிரம்பியவர் ஆக்கினீர்கள். மதுபனே வருமானத்தினால் பையை நிரப்புவதற்கான ஸ்தானம் ஆகும், மதுபன் வருவது என்றால் தனக்கு தற்சமயத்து மற்றும் எதிர்காலத்தின் அதிகாரி ஆனதின் முத்திரை இடுவது. அதிகாரி ஆவதற்கான சாதனம் மாயாவின் அடிமைத்தனத்தை விடுவது. அப்படி நீங்கள் அதிகாரி தான் இல்லையா? நல்லது.

கனடா: கனடா எத்தனை ரத்தினங்களை உருவாக்கியிருக்கிறார்கள்? எண்ணிக்கையில் அதிகம் இல்லை என்றாலும் தரம் உள்ளவர்களோ இருக்கிறார்கள் இல்லையா? எப்பொழுது ஒரு தீபத்தின் மூலம் அனேக தீப ஒளி ஆகி விடுகிறது என்றால் ஒருவரிலிருந்து இந்தளை பேர் உருவாகியிருக்கிறார்கள் இல்லையா? எனவே நான் ஒருவன்

அனேகர்களுக்கு செய்தி கொடுத்து மாலையைத் தயார் செய்ய வேண்டும் என்று ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும். யார் தொடர்பில் வந்தாலும் அவர்களுக்கு தந்தையின் அறிமுகத்தைக் கொடுத்துக் கொண்டே சென்றீர்கள் என்றால் யாராவது உருவாகுவார்கள். யாருமே உருவாவது இல்லை என்று தைரியத்தை இழக்காதீர்கள். உருவாகுவார்கள். சில சில நிலம் பலனை வெகுகாலம் தாழ்த்திக் கொடுக்கும், சில விரைவில் கொடுக்கும். எனவே நாடகத்தின்படி எங்கெல்லாம் சேவைக்கு பொறுப்பாளர் ஆகி இருக்கிறீர்களோ அவசியம் அங்கு ஏதோ ஒரு இரத்தினம் இருக்கிறார் அதனால் தான் அங்கு பொறுப்பாளர் ஆகி இருக்கிறீர்கள் இல்லையா? இப்பொழுது நான் சேவை செய்து நிரூபணம் கொடுக்க வேண்டும் என்ற லட்சியத்தை சக்திசாலியானதாக வையுங்கள். எனவே கடும் உழைப்பினால் வெற்றி கிடைத்தே விடும்.

லெஸ்டர்: எப்பொழுதும் அதீந்திரிய சுகத்தில் ஆடுபவர்கள் தான் இல்லையா? தந்தை கிடைத்தார், அனைத்தும் கிடைத்தது. இந்த நினைவு மூலம் அதீந்திரிய சுகத்தின் அனுபவம் தானாகவே ஏற்பட்டுவிடும். துக்கம் என்றால் என்னவென்று தெரியாத நிலை, துக்கத்தின் பெயர், அடையாளம் இல்லாத நிலை. எப்படி எதிர்காலத்தில் துக்கம் மற்றும் அமைதியின்மையின் அறியாமை இருக்கும். அதே போல் இப்பொழுது துக்கம் மற்றும் அமைதியின்மையின் உலகமே வேறு என்று அனுபவம் செய்வீர்கள், அது கலியுகம், நான் சங்கமயுகத்தில் இருக்கிறேன். சங்கமயுகத்திலிருப்பவரிடம் துக்கம், அமைதியின்மையின் பெயரே இருக்காது. துக்கமானவர்களைப் பார்த்து இரக்கம் வரும், துக்கத்தின் அனுபவத்தையோ வெகு காலம் செய்திருக்கிறோம். இப்பொழுது சங்கமயுகம் இருப்பதே அதீந்திரிய சுகத்தில் இருப்பதற்கான காலம் ஆகும். இந்த அனுபவம் சத்யுகத்தில் இருக்காது. எப்படி நேரமோ அப்படி லாபத்தை எடுங்கள். இது அதீந்திரிய சுகத்தை அடைவதற்கான பருவ காலம் ஆகும். அப்படி அதனுடைய பருவ காலத்தில் அடையவில்லை என்றால் பின்பு எப்பொழுது அடைவீர்கள். தந்தையின் நினைவு தான் ஊஞ்சல் ஆகும். இந்த ஊஞ்சலிலேயே ஆடிக் கொண்டே இருங்கள், இதிலிருந்து கீழே இறங்காதீர்கள். லெஸ்டர் தேசமும் சேவையில் முன் வரிசையில் உள்ளது. லண்டனில் லெஸ்டரின் மகிமையும் நன்றாக இருக்கிறது.

இரக்கமனம் உடையவர்கள் தன்னைச் சார்ந்தவர்களை அதிகரித்துக் கொண்டே இருக்கிறார்கள். குமார், குமாரிகள், யுகல் (தம்பதியர்) அனைவரும் வளர்ச்சி அடைந்துக் கொண்டே இருக்கிறார்கன். ரிசல்ட் நன்றாக இருக்கிறது ஆனால் இன்னும் அதிகப்படுத்துங்கள். எப்பொழுது எண்ணிக்கை அதிகரித்து விட்டது என்றால், எங்கு பார்த்தாலும் அங்கு பிராமணர்களே தென்பட வேண்டும்.

வரதானம்: சேவைகளில் சுப பாவனையை இணைப்பதின் மூலம் சக்திசாலியான பலனை அடையக்கூடிய வெற்றியின் உருவாக ஆகுக!

என்ன சேவை செய்தாலும் அதில் அனைத்து ஆத்மாக்களின் சகயோகத்தின் பாவனை இருக்க வேண்டும். குஷியின் பாவனை, நன்மை பயக்கும் பாவனை இருந்தது என்றால், ஒவ்வொரு காரியமும் சுலபமாக வெற்றி அடையும், எப்படி அந்த காலத்தில் யாராவது ஏதாவது காரியம் செய்வதற்காக செல்கிறார் என்றால், குடும்பத்தினரின் ஆசீர்வாதத்தைப் பெற்றுச் செல்வார் அப்படி தற்சமயம் சேவைகளில் இதையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். எந்தவொரு காரியம் தொடங்கும் முன்பு முதலில் அனைவரின் சுப பாவனைகள் மற்றும் நல்ல விருப்பங்களை பெற்றுக் கொள்ளுங்கள். அனைவரின் திருப்தியின் பலத்தை நிரப்புங்கள். அப்பொழுது சக்திசாலியான பலன் கிடைக்கும்.

சுலோகன்: எப்படி தந்தை கூப்பிட்ட குரலுக்கு உடனே வந்து விடுகிறாரோ, அதே போல் நீங்களும் சேவையில் வந்து விட்டேன், வந்து விட்டேன் என்று கூறினீர்கள் என்றால், புண்ணியம் சேமிப்பாகி விடும்!

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳

## 16.02.1978 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# உலகின் அதிகாரி நிலையிலிருந்து அனைவரின் மரியாதைக்குரியவர் ஆகுங்கள்!

இன்று பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் கண்களிலிருந்து, நெற்றியின் ரேகைகளிலிருந்து முக்கியமான விடியத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அது எந்த விஷயமாக இருக்கும்? தெரிந்திருக்கிறீர்களா? மற்றவர்களுக்கு அறிமுகம் வழங்கும் போது தந்தை மூலமாக என்னென்ன பிராப்திகள் 21-பிறவிகளுக்குக் கிடைக்கிறது என்று கூறுகிறீர்கள், நிரந்தர ஆரோக்கியம், செல்வம் மற்றும் சந்தோஷம் மூன்றின் பிராப்தியுமே தற்சமயத்து பிராப்தியின் கணக்குப்படி 21-பிறவிகளுக்கு கிடைக்கிறது என்று (உலகைப் பார்த்து சவால் விடுகிறீர்கள் இல்லையா? பாப்தாதா ஒவ்வொருவரின் பிராப்தியின் ரேகையை நெற்றி மற்றும் கண்கள் மூலமாக பார்த்துக் கொண்டிருந்தார். சவால் விட்டதற்கு ஏற்ப இதுவரை "நிரந்தரம்" என்ற வார்த்தை நடைமுறையில் எதுவரை இருக்கிறது? சவாலில் ஆரோக்கியம், செல்வம் என்று மட்டும் கூறுவதில்லை ஆனால் நிரந்தர ஆரோக்கியம், நிரந்தர செல்வம் என்று கூறுகிறீர்கள். முதலில் நிகழ்காணம் மேலும் நிகழ்காலத்தின் ஆதாரத்தில் எதிர்காலம் இருக்கிறது. அப்படி நிரந்தரம் என்ற வார்த்தை மேல் கோடிட்டு முடிவை பார்த்துக் கொண்டிருந்தோம். முடிவு என்னவாக இருக்கும்? இந்த வாழ்க்கை நிகழ்காலத்திற்கானதா அல்லது எதிர்காலத்திற்கானதா? சேவைக்காக அந்த மாதிரி நிலை அவசியம் இப்பொழுது இருக்கிறதா அல்லது எதிர்காலத்திலா? ஒரே நேரத்தில் உடல், மனம் மற்றும் பொருள், எண்ணம், சொல் மற்றும் செயலால் அனைத்து விதமான சேவை சேர்ந்தே இருப்பதினால் சுலபமாக வெற்றி கிடைக்கிறது. அந்த மாதிரி நிலையை அனுபவம் செய்கிறீர்களா? எப்படி உடலின் வியாதி சீதோஷணத்தின் பாதிப்பினால், சூழ்நிலையின் பாதிப்பினால் அல்லது

உணவின் பாதிப்பினால் அந்த நோயின் தாக்கத்தில் வந்து விடுகிறார்கள், அதே போல் மனதின் நிலையிலும் பாதிப்பு ஏற்படுகிறது. நிரந்தர ஆரோக்கியமானவருக்குப் பதிலாக நோயாளி ஆகி விடுகிறீர்கள், ஆனால் நிரந்தர ஆரோக்கியமானவர் இந்த அனைத்து விஷயங்களின் ஞானம் நிறைந்தவராக இருக்கும் காரணத்தினால் பாதுகாப்பாக இருக்கிறார்.

இந்த விதமாக நிரந்தர செல்வந்தர் அதாவது எப்பொழுதும் அனைத்து சக்திகளின் பொக்கிஷத்தினால், அனைத்து குணங்களின் பொக்கிஷத்தினால், ஞானத்தின் பொக்கிஷத்தினால் நிரம்பியவராக இருப்பார். என்ன செய்வேன்? எப்படி செய்வேன்? விரும்புகிறேன் ஆனால் செய்ய முடிவதில்லை என்று அந்த மாதிரி ஒருபொழுதும் சக்தியில்லாத வார்த்தைகள் அல்லது எண்ணத்தை வைக்க முடியாது. தன்னையும் எப்பொழுதும் நிரம்பியவராக அனுபவம் செய்வார்கள். மேலும் செல்வமற்ற மற்ற ஆத்மாக்கள் நிரம்பியவரைப் பார்த்து அவருடைய நிரம்பிய நிலையின் குடைநிழலில் தாமும் ஊக்கம் மற்றும் உற்சாகம் நிறைந்தவராக அனுபவம் செய்வர்கள். அதே போலவே எவர் ஹாப்பி அதாவது எப்பொழுதும் குஷியாக இருப்பது எப்படிப்பட்ட, துக்கமான உணர்வுகளை உருவாக்கக்கூடிய சூழ்நிலையாக இருந்தாலும், சாரமற்ற சூழ்நிலையாக இருந்தாலும், எதையுமே பிராப்தியாக அடைய முடியாத சூழ்நிலையாக இருந்தாலும், அந்த மாதிரி சூழ்நிலையிலும் எப்பொழுதும் குஷியாக இருப்பார்கள் மேலும் தனது குஷியின் பொலிவின் மூலம் துக்கம் மற்றும் சோர்வான சூழ்நிலையை எப்படி சூரியன் இருளை மாற்றிவிடுகிறதோ அந்த மாதிரி மாற்றி விடுவார்கள், இருளின் நடுவே வெளிச்சத்தைக் கொண்டு வருவது, அமைதியின்மையின் நடுவே அமைதியைக் கொண்டு வருவது. சோர்வான சூழ்நிலையில் குஷியின் பொலிவைக் கொண்டு வருவது என்ற இதைத் தான் நிரந்தர சந்தோஷமானவர் என்று கூறுவது அந்த மாதிரி சேவைக்கான அவசியம் தற்போது மட்டுமே இருக்கிறதேயன்றி, எதிர்காலத்தில் இல்லை.

இன்று பாப்தாதா ஒவ்வொருவரின் பிராப்தியின் ரேகை நிரந்தரமான மற்றும் தெளிவான ரேகையாக இருக்கிறதா என்று பார்த்துக் கொண்டிருந்தார். எப்படி கைகள் மூலமாக ஆயுள் ரேகையைப்

பார்க்கிறீர்கள் இல்லையா? நீண்ட ஆயுளா, நோயற்ற வாழ்வா என்று பார்க்கிறீர்கள் இல்லையா? பாப்தாதாவும் ரேகையைப் பார்த்துக் கொண்டிருந்தார், பிறந்ததிலிருந்தே மூன்று பிராப்திகளும் இன்று வரை துண்டுபடாமன் இருக்கிறதா? அல்லது இடையிடையே பிராப்தியின் ரேகை துண்டிக்கப்பட்டு இருக்கிறதா? வெகுகாலமாக இருந்ததா அல்லது அற்ப காலத்திற்காகத்தானா? முடிவாக துண்டிக்கப்படாத மற்றும் தெளிவான விஷபத்தில் குறை பார்த்தோம். துண்டிக்கப்டாதவர்கள் மிகக் குறைவாக இருந்தார்கள் ஆனால் துண்டிக்கப்படாதவர்களிலும் தெளிவில்லை, இல்லை என்பதற்குச் சமமாக இருந்தது ஆனால் கடந்தது கடந்ததாக இருக்கட்டும்.

தற்சமயத்தில் உலக சேவை என்ற மேடையில் கதாநாயகன் மற்றும் கதாநாயகி பங்கை எப்பொழுது செய்து கொண்டிருக்கிறீர்களோ அதற்கேற்ப இந்த மூன்று பிராப்திகளுமே நெற்றி மற்றும் கண்கள் மூலமாக நிரந்தரமாக மற்றும் தெளிவாகத் தென்பட வேண்டும். இந்த மூன்று பிராப்திகளின் ஆதாரத்தினால் தான் உலகிற்கு நன்மை செய்பவரின் பங்கைச் செய்ய முடியும். இன்று அனைத்து ஆத்மாக்களுக்கும் இந்த மூன்று பிராப்திகளின் அவசியம் இருக்கிறது. அந்த மாதிரி பிராப்தியில்லாத ஆத்மாக்களுக்கு பிராப்தி செய்வித்து சவாலை நடைமுறையில் கொண்டு வாருங்கள். துக்கமான அமைதியற்ற ஆத்மாக்கள், நோயுற்ற ஆத்மாக்கள், சக்தியில்லாத ஆத்மாக்கள் ஒரு விநாடியின் பிராப்தியை அடைவதற்காக, ஒரு துளிக்காக மிகுந்த தாகம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். உங்களுடைய குஷி நிறைந்த அதாவது சிரித்த முகத்தைப் பார்த்து அவர்களில் மனித வாழ்க்கையை வாழ்வது என்றால் என்ன என்பதின் தைரியம், ஊக்கம், உற்சாகம் வரும். இப்பொழுதோ உயிரோடு இருந்தும் நம்பிக்கையின்மையின் சிதையில் அமர்ந்திருக்கிறார்கள், அந்த மாதிரி ஆத்மாக்களை மறுபிறவி பெற்றவர்களாக ஆக்குங்கள், புது வாழ்க்கையின் தாளம் கொடுங்கள் அதாவது மூன்று பிராப்திகளினால் நிரம்பியவர் ஆகுங்கள். மூன்று பிராப்திகளுமே நமது பிறப்புரிமை ஆகும் என்பது எப்பொழுதும் நினைவில் இருக்க வேண்டும். மூன்றின் நடைமுறை தாரணைக்காக இரட்டை கோடிடுங்கள், பிரபாவம் ஏற்படுத்துபவர்களாக ஆகுங்கள், எந்தவொரு இயற்கை, சூழ்நிலை மற்றும் பிரச்சனைகளின் பிரபாவத்தின் வசமாகாதீர்கள். தாமரை மலர்

சேறு மற்றும் தண்ணீரின் பிரபாவத்தில் வருவதில்லை. இம்மாதிரி நடக்கத் தான் செய்யும், இவ்வளவாவது அவசியம் நடக்கத் தானே வேண்டும். முழுமையாக யாரும் இன்னும் ஆகவில்லை என்று அந்த மாதிரி கண்ணோட்டத்தில் வராதீர்கள். யாராவது ஆகாவிட்டாலும் கூட நீங்கள் ஆகிக் காண்பியுங்கள், எப்படி முதல் எண்ணில் நான் வந்து காண்பிப்பேன், உலக மகாராஜா ஆகிக் காண்பிப்பேன் என்று நல்ல எண்ணங்களை வைக்கிறீர்கள், அதே போல் தற்சமயத்தில் முதலில் நான் ஆவேன். தந்தையைப் பின்பற்றி நடந்து நம்பர் ஒன்-ல் உதாரணம் ஆகிக் காண்பிப்பேன் என்று அந்த மாதிரி லட்சியத்தை வையுங்கள். லட்சியத்தின் கூடவே லட்சணத்தையும் தாரணை செய்து கொண்டே இருங்கள். இந்த விஷயத்தின் முதலில் நான் என்னும் உறுதியான எண்ணம் கொள்ளுங்கள். இதில் மற்றவர்களைப் பார்க்காதீர்கள், தன்னைப் பாருங்கள். மேலும் தந்தையைப் பாருங்கள், அப்பொழுது தான் சவால் மற்றும் நடைமுறை இரண்டிலும் சமமாக இருக்கிறீர்கள் என்று கூறுவோம். நல்லது.

கூறியதோ மிக அதிகமாகக் கூறியாயிற்று மேலும் நீங்களும் அதிகமாக கேட்டீர்கள், இந்த தடவையோ பாப்தாதா கூறுவதற்கு மட்டும் வரவில்லை, பார்க்க வந்திருக்கிறார், பார்த்ததில் என்ன பார்த்தாரோ அதைக் கூறிக் கொண்டிருக்கிறார். இந்த ஆத்மாக்களிலிருந்து தான் ஆக வேண்டும். அதிகாரி ஆத்மாக்கள் கூட நீங்களே தான் என்று தந்தை தெரிந்திருக்கிறார் ஆனால் அடிக்கடி நினைவூட்டுகிறார், நல்லது.

அந்த மாதிரி உலக இராஜ்ய பாக்கிய அதிகாரிகளுக்கு, தந்தை மூலமாக அனைத்து பிராப்திகளின் அதிகாரிகளுக்கு, மாயா மற்றும் இயற்கை மூலமாக மரியாதையைப் பெறுவதற்கான அதிகாரி ஆத்மாக்களுக்கு, அந்த மாதிரி அனைத்து உயர்ந்த ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

பார்ட்டிகளுடன் சந்திப்பு: ஆஸ்திரேலியா: சேவைக்குத் தகுதியானவர்கள் தான் இல்லையா? சேவைக்குத் தகுதியானவர் என்றால் ஒவ்வொரு எண்ணம், சொல் மற்றும் செயல் சேயையில் சேர்ந்தே ஈடுபட்டுக் கொண்டிருக்க வேண்டும். திரிமூர்த்தி தந்தையின் குழந்தைகள் என்றால் மூன்று சேவையுமே இணைந்தே இருக்க

வேண்டும். ஒரே நேரத்தில் மூன்று சேவையும் இருக்கிறது என்றால் உடனடி பலன் கிடைக்க முடியும், அப்படியானால் மூன்று சேவையும் சேர்ந்தே நடக்கிறதா? மனதின் எண்ணங்கள் மூலமாக ஆத்மாக்களை தந்தையோடு புத்தியின் நினைவை இணைப்பதற்கான சேவை, வாய்மொழி மூலமாக தந்தையின் அறிமுகம் கொடுக்கும் சேவை மேலும் செயல்களின் மூலமாக தெய்வீக குணம் நிறைந்தவர் ஆக்கும் சேவை. அப்படி முக்கிய அனைத்து பாடங்கள் யோகா, ஞானம் மற்றும் நெய்வீக குணங்கள் மூன்றுமே சேர்ந்தே இருக்க வேண்டும். அந்த மாதிரி ஒவ்வொரு விநாடியும் ஒருவேளை சக்திசாலியான சேவை செய்பவர் என்றால், ஒரு விநாடியில் மறுபிறவி எடுத்தவராக ஆனதின் முத்திரை இட முடியும். இது தான் இறுதி சேவையின் நிலை ஆகும். இப்பொழுது மிகவும் நன்றாக இருக்கிறது என்று வார்த்தைகள் மூலம் கூறுகிறார்கள் ஆனால் நல்லவராக முயல்வதில்லை. எப்பொழுது வாய்மொழி மற்றும் எண்ணத்தினால், காரியத்தினாள் மூன்று சேவையும் சேர்ந்தே இருக்குமோ அந்த நேரம் மிக நன்றாக இருக்கிறது என்று மட்டும் கூற மாட்டார்கள், ஆனால் நான் நடைமுறையில் ஆகிக் காண்பிக்க வேண்டும் என்று அந்த மாதிரி அனுபவத்தில் வந்து விடுவார்கள். எனவே அந்த மாதிரி சேவை செய்பவர்களாக ஆகுங்கள். இதைத் தான் வரதானி மற்றும் மகாதானியின் நிலை என்று கூறுவது. சேவைக்கான ஊக்கம் உற்சாகம் நன்றாக இருக்கிறது. தந்தைக்கும் தகுதியான குழந்தைகளைப் பார்த்து குஷி ஏற்படுகிறது. இப்பொழுது தெய்வீக குணங்களின் அலங்காரத்தை இன்னும் அதிகப்படுத்த வேண்டும், மரியாதையின் கோட்டிற்குள்ளே இருந்து மரியாதை புருஷோத்தமன் என்ற பட்டத்தைப் பெறுவதற்கான கவனம் இருக்கிறது என்றால், இந்த கிரீடம் மற்றும் திலகத்தை கவனம் கொடுத்து அணிந்து கொள்ள வேண்டும்.

எப்பொழுதும் ஒவ்வொரு காரியமும் செய்யும் போது நடிகன் ஆகி காரியம் செய்கிறீர்களா? நீங்களே உங்களுடைய பார்வையாளராகி என்ன பங்கை செய்தேனோ அது யதார்த்தமானதாக, மகிமைக்குத் தகுதியானதாக மேலும் சரித்திர ரூபத்தில் செய்தேனா என்று சோதனை செய்யுங்கள். எப்பொழுதும் எந்தக் காரியம் உயர்ந்ததாக இருக்கிறதோ அதற்கு மகிமை இருக்கும். எனவே நடிகனாகி நடியுங்கள், பிறகு பார்வையாளராகி மகானாக இருந்ததா அல்லது சாதாரணமாக

இருந்ததா என்று சோதனை செய்யுங்கள். ஜென்மமே ஆன்மீகம் என்றால் செய்யும் காரியமும் சாதாரணமானதாக இன்றி ஆன்மீகமானதாக இருக்க வேண்டும். எண்ணத்திலேயே சோதனை வேண்டும். ஏனென்றால் எண்ணம் தான் காரியத்தில் வருகிறது. ஒருவேளை எண்ணத்தையே சோதனை செய்து மாற்றிவிட்டீர்கள் என்றால் காரியம் மகானாக இருக்கும். முழு கல்பத்திலும் நடைமுறையில் மகான் ஆத்மாக்கள் நீங்கள் ஆவீர்கள். எனவே எண்ணத்திலும் கூட சோதனை மற்றும் மாற்றம் இருக்க வேண்டும். சாதாரணத்தை மகான் நிலை உள்ளதாக மாற்றம் செய்யுங்கள். நல்லது.

கயானா பார்ட்டி: பாப்தாதாவோ ஒவ்வொருவரையும் இதய சிம்மாசனதாரியாகப் பார்க்கிறார். எப்படி யாராவது மிகப் பிரியமான குழந்தை இருக்கிறார் அல்லது செல்லமான குழந்தை இருக்கிறார் என்றால், அவரை ஒருபொழுதும் கீழே தரையில் கால் வைக்க விடுவதில்லை அப்படி பாப்தாதாவும் செல்வமான குழந்தைகளை இதய சிம்மாசனத்திலிருந்து கீழே இறங்க விடுவதில்லை. அங்கேயே அமர வைத்து விடுகிறார். இதை விட உயர்ந்த ஸ்தானம் வேறு ஏதாவது இருக்கிறதா? அப்படியானால் எப்பொழுதுமே அங்கேயே தான் இருக்கிறீர்கள் இல்லையா கீழே வருவதில்லையே? எப்பொழுது வேறு ஸ்தானமே இல்லை என்றால் புத்தி என்ற கால்கள் எங்குமே புதிய முடியாது. நினைவு என்றால் இதயசிம்மானசம். யார் நிரந்தர யோகி குழந்தைகளோ அவர்கள் பாப்தாதாவிற்கு எப்பொழுதும் உடன் இருப்பதாகத் தென்படுகிறார்கள். சசுஜயோகி தான் இல்லையா? கடினமாக இருக்கவில்லையோ எந்தவொரு சூழ்நிலையிலும் அது குழப்பம் ஏற்படுத்துவதாக இருந்தாலும் ஆனால் பாபா என்று கூறினீர்கள் மற்றும் குழப்பம் சீரடைந்தது. அப்படி பாபா என்று கூறுவதில் எவ்வளவு நேரம் எடுக்கும். பிரச்சனைகளின் எண்ணத்தில் சென்று விடுகிறீர்கள் என்றால் எவ்வளவு நேரம் பிரச்சனையின் எண்ணம் இருக்கிறதோ அவ்வளவு நேரம் கடினமாக அனுபவம் ஆகிறது. ஒருவேளை காரணத்திற்குப் பதிலாக நிவாரணத்தில் சென்று விட்டீர்கள் என்றால் காரணமே நிவாரணம் ஆகி விடும். பிராமணர்களின் எதிரில் எந்தவொரு பிரச்சனையும் இருப்பதில்லை. ஏனென்றால் அவர் மாஸ்டர் சர்வ சக்திவான், அவர் எதிரில் இந்தப் பிரச்சனைகள் எறும்புக்குக் கூட சமமானது இல்லை ஆனால் என்ன

நடக்கிறது என்றால், எப்பொழுதாவது, ஏதாவது அம்மாதிரியான விஷயங்கள் வருகிறதோ. அந்த நேரம் அந்தக் காரணத்தில் ஏன் ஆனது? எப்படி ஆனது? என்று நேரத்தை செலவழித்து விடுகிறீர்கள். அதற்குப் பதிலாக என்ன நடந்ததோ அதில் நன்மை நிரம்பியிருக்கிறது. சேவை நிரம்பியிருக்கிறது என்று நினைத்தீர்கள் என்றால் அது மாறி விடும். பார்ப்பதற்கு பிரச்சனை மாதிரி இருந்தாலும், அதில் சேவை அடங்கியிருக்கிறது. இவ்வாறு நினைப்பதால் மேலும் இந்த கண்ணோட்டத்தில் பார்ப்பதால் எப்பொழுதும் ஆடாத அசையாதவர்களாக இருப்பீர்கள். அப்படி மதுபன்னில் இப்பொழுது என்ன மாற்றத்தை செய்து செல்வீர்கள்? எப்பொழுதும் கம்ப்ளீட் (நிறைவாக) எந்த கம்ப்ளைன்ட் (புகார்) இல்லை. இதுவரை என்ன ரிசல்ட்டாக இருக்கிறதோ அதனுடைய முடிவு நல்லதாக இருக்கிறது. இப்பொழுது நாண்புறங்களிலும் செய்தியைப் பரப்புவதற்கு மிக விரைவில் முயற்சி செய்யுங்கள், ஏனென்றால் இப்பொழுது நேரம் இருக்கிறது. பின்பு விருப்பம் இருக்கும், ஆனால் சூழ்நிலைகள் அந்த மாதிரி இருக்கும். உங்களால் செய்ய முடியாது. எனவே எவ்வளவு விரைவாக முடியுமோ அந்த அளவு சக்கரவர்த்தி ஆகி செய்தியைக் கொடுத்துக் கொண்டே செல்லுங்கள், விதை விதைத்துக் கொண்டே செல்லுங்கள். நீங்கள் அதிர்ஷ்டசாலிகள், ஏனென்றால் நாடகப்படி தன்னுடைய வாழ்க்கை மூலம், வார்த்தைகள் மூலம், காரியம் மூலம் அனைத்து விதத்திலும் சேவை செய்வதற்குப் பொறுப்பாளராக இருக்கிறீர்கள். மேலும் வரும் காலத்திலும் ஆக முடியும். ஒவ்வொரு காரியத்திலும் அனைவருக்கும் ஞானத்தின் சொரூபம் தென்பட வேண்டும். இந்த விசேஷ லட்சியத்தை வையுங்கள், ஏனென்றால் செய்யும் காரியம் அனைவரின் கவனத்தை இயல்பாகவே ஈர்க்கும். நடைமுறையில் செய்யும் காரியம் ஒரு செய்திப் பலகையின் காரியத்தைச் செய்கிறது. செய்யும் காரியத்தை பார்த்தாலேயே அந்த மாதிரி காரியத்தை கற்றுக் கொடுப்பவர் யார் என்று அனைவரின் கவனம் செல்லும், எனவே இப்பொழுது புதுமையாக என்ன செய்யப் போகிறீர்கள்? லைட் ஹவுஸ் ஆவீர்களா? ஒரு இடத்தில் இருந்து கொண்டே நாலா புறங்களிலும் ஒளியைப் பரப்ப வேண்டும். அதன் மூலம் இவ்வளவு அருகில் லைட் ஹவுஸ் இருந்தது. இருந்தும் எங்களுக்கு லைட் கிடைக்கவில்லை என்று யாரும் புகார் கூறக்கூடாது. நல்லது.

ஜெர்மனி: பாப்தாதாவிற்கு தரம் பிடித்திருக்கிறது. தரம் நல்லதாக இருக்கிறது என்றால் எண்ணிக்கை உருவாகியே விடும். கடினமாக உழைத்துக் கொண்டே இருங்கள், வெற்றி பிறப்புரிமை ஆகும். ஜெர்மனியின் பூமி மூலமாகவும் ஏதாவது விசேஷ காரியம் அவசியம் நடக்க வேண்டும். ஜெர்மனியின் பூமியில் அந்த மாதிரி விசேஷ நபர் இருக்கிறார். அவர் ஒருவரே பெயரை மிக நன்றாகப் பரப்ப முடியும். மறைந்திருக்கும் இரத்தினங்கள் ஜெர்மனியில் இருக்கிறார்கள். நாலா புறங்களிலும் செய்தியைப் பரப்பினீர்கள் என்றால் வெளியாகி விடுவார்கள், இப்பொழுதும் நன்றாக உழைத்திருக்கிறீர்கள், இன்னும் நாலாபுறங்களிலும் செய்தியைப் பரப்புங்கள். அடுத்த வருடம் வாரிசு தரமுள்ளவர்களை குரூப் ஆக உருவாக்கி அழைத்து வர வேண்டும் என்ற இந்த லட்சியத்தை வையுங்கள், லட்சியம் மூலம் வெற்றி கிடைத்தேவிடும். நல்லது. மற்ற அனைத்து எண்ணங்களையும் தவிர்த்து நான் ஒவ்வொரு கல்பத்திலும் வெற்றி அடைந்தவன், வெற்றி என்னுடைய பிறப்புரிமை ஆகும் என்ற ஒரே எண்ணத்தை வைத்தீர்கள் என்றால் உங்களுக்கு வெற்றியே வெற்றி தான், எண்ணம் வைத்தீர்கள் மேலும் வெற்றி கிடைத்தது. எனவே அதிகமாக யோசிக்காதீர்கள், திட்டத்தை உருவாக்குங்கள் ஆனால் தாமரை மலருக்குச் சமமாக லேசாக இருங்கள். நினைத்தீர்கள், செய்தீர்கள் மற்றும் முடிவடைந்தது. எவ்வளவு ஒரே எண்ணத்தில் இருப்பீர்களோ அந்த அளவு நல்ல உணர்த்துதல் ஆழ்மனதில் ஏற்படும். அதிகமான எண்ணத்தில் இருப்பதினால் தந்தையின் உண்மையான உதவியாக என்ன இருக்கிறதோ அது கலப்படம் ஆகி விடுகிறது. எனவே நான் பாபாவினுடையவன் மேலும் பாபா என்னுடையவர் என்ற ஒரே ஒரு எண்ணத்தை வையுங்கள், நான் கருவியாக இருக்கிறேன் என்ற இந்த எண்ணத்தினால் வெற்றி அவசியம் கிடைக்கும். சக்கரவர்த்தி ஆனீர்கள் என்றால் மிக நல்ல மலர்ச்செண்டு தயாராகி விடும். அதிகமானவர்கள் இல்லை என்றால் கூட ஜெர்மனியின் பூமியிலிருந்து அந்த மாதிரி ஒருவர் உருவானால் கூட பெயர் நாலா புறங்களிலும் பரவி விடும் நல்லது.

விடைபெறும் நேரத்தில்: எப்படி இப்பொழுது குஷியில் ஆடிக் கொண்டிருக்கிறீர்களோ அதே போல் எப்பொழுதும் குஷியில் ஆடிக்

கொண்டே இருங்கள். எந்த ஒரு பிரச்சனை வந்தாலும் கூட அந்த பிரச்சனையின் மேலேயும் ஆடிக் கொண்டே இருங்கள். பாம்பின் மேலேயும் ஆடிக் கொண்டிருப்பது போன்று படங்களைக் காண்பிக்கிறார்கள். இந்த ஜடச்சித்திரம் உங்கள் அனைவரின் நினைவுச்சின்னம் ஆகும். ஏதேனும் நேரத்தில் ஏதாவது பிரச்சனை வருகிறது என்றால், பிரச்சனை என்ற பாம்பின் மேல் நடனம் ஆடுபவன் நான் என்ற இந்தப் படத்தை நினைவில் வையுங்கள். இதே பாம்பு உங்களுடைய கழுத்தில் வெற்றியின் மாலையாக வந்து விழும். நல்லது.

**வரதானம்: நேரம் மற்றும் எண்ணம் என்ற பொக்கிஷத்தின் மேல் கவனம் செலுத்தி, சேமிப்பு கணக்கை அதிகரிக்கக்கூடிய பல மடங்கு செல்வந்தர் ஆகுக!**

பொக்கிஷங்களோ அதிகமாக இருக்கின்றன ஆனால் நேரம் மற்றும் எண்ணம் என்ற இந்த இரண்டு பொக்கிஷங்களின் மேல் கவனம் வையுங்கள். ஒவ்வொரு நேரமும் எண்ணம் உயர்ந்ததாக மற்றும் நல்லதாக இருந்தது என்றால் சேமிப்பு கணக்கு அதிகரித்துக் கொண்டே இருக்கும். இந்த நேரம் ஒன்றை சேமித்தீர்கள் என்றால், பல மடங்கு பின்னால் கிடைக்கும். இப்படி கணக்கு இருக்கிறது. ஒன்றை பல மடங்காக்கி கொடுக்கும் வங்கி இதுவாகும். எனவே தியாகம் செய்ய வேண்டியதாக இருந்தாலும், தபஸ்யா செய்ய வேண்டியதாக இருந்தாலும், பணிவானவர் ஆக வேண்டியதாக இருந்தாலும், என்ன ஆனாலும் சரி இந்த இரண்டு விஷயங்கள் மேல் கவனம் இருக்கிறது என்றால் பல மடங்கு செல்வந்தர் ஆகி விடுவீர்கள்.

**சுலோகன்: மனோபலம் மூலம் சேவை செய்தீர்கள் என்றால், அதனுடைய பலன் பல மடங்கு அதிகமாகக் கிடைக்கும்!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵ ✵✵✵✵✵✵✵✵

## 01.04.1978 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# நிரந்தர யோகி தான் நிரந்தர துணைவனாக இருக்கிறார்!

இன்று மாயாவை வென்ற வெற்றி இரத்தினங்களின் விசேஷமான சபையாகும். இன்றைய சபையில் பாப்தாதா எந்தக் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்? யார் தொடக்கத்திலிருந்தே இறுதிவரை பாப்தாதாவின் எப்பொழுதும் உண்மையானவர், எப்பொழுதும் தந்தையின் அடிமேல் அடி எடுத்து வைப்பவர், எப்பொழுதும் சகயோகி மற்றும் துணைவனாக இருப்பவர்களோ அவர்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு நேரமும் தந்தை மற்றும் சேவையில் மூழ்கியிருப்பவர்கள், எப்பொழுதும் உயர்ந்த மரியாதைகள் என்ற கோட்டை எண்ணத்தில் கூட தாண்டாத மரியாதா புருஷோத்தமர்கள் அந்த மாதிரியான குழந்தைகள் தான் எப்பொழுதும் ஒவ்வொரு விநாடி, ஒவ்வொரு எண்ணத்தில் பல பிறவிகளாக உடன் இருப்பார்கள். யார் இப்பொழுது உன்னோடு தான் இருப்பேன், உன்னோடு தான் ஒவ்வொரு விநாடியும், ஒவ்வொரு காரியத்திலும் துணையாக இருப்பேன் என்று தந்தையிடம் கொடுத்த உறுதிமொழியைக் கடைப்பிடித்து நடக்கிறார்களோ அந்த மாதிரி உண்மையான குழந்தைகளுடன் தந்தையும் பல ஜென்மங்களுக்கு துணைவன் ஆகுக என்ற வரதானத்தையும் இப்பொழுது கொடுக்கிறார். சாகார தந்தையுடன் பல பெயர்களில், ரூபத்தில் பூஜைக்குரிய நிலையிலும் உடன் இருப்பார்கள். மேலும் பூஜாரி நிலையிலும் உடன் இருப்பார்கள். ஞானம் நிறைந்த ஆத்மா ஆவதிலும் உடன் இருப்பவர்கள், மேலும் பக்த ஆத்மா ஆவதிலும் உடன் இருப்பவர்கள். அந்த மாதிரி எப்பொழுதும் துணையாக இருக்கும் விசேஷ ஆத்மாக்களுக்கு அதே போல் ஆகுங்கள் என்ற வரதானம் இப்பொழுது கிடைக்கிறது.

ஒவ்வொரு மகாரதியும் தற்சமயம் பாப்தாதாவின் குணங்களில், ஞானம் மற்றும் சேவையில் சமநிலை மற்றும் துணையாக இருக்கும் நிலை

எவ்வளவு இருக்கிறது. என்று தன்னைத் தான் சோதிக்க வேண்டும். சமநிலை தான் நெருக்கத்தைக் கொண்டு வரும். இப்பொழுதைய நிலை, எதிர்கால நிலையில் ஒ விநாடியின் துணையின் அனுபவம் பல ஜென்மங்களிலும் பெயர், ரூபம், சம்மந்தத்தில் துணையை அனுபவம் செய்வதற்குக் காரணம் ஆகிறது. விகர்மாஜீத் (பாவங்களை வென்றவர்) ஆவதிலும் துணையாக இருக்கிறார். மேலும் இராஜா விகர்மன் ஆகும் நேரத்திலும் துணையாக இருக்கிறார். ஒவ்வொரு பங்கிலும், ஒவ்வொரு வர்ணத்திலும் சேர்ந்தே இருப்பீர்கள். இதனுடைய வர்ணனையாகத் தான் உடன் வாழ்வோம், உடன் இறப்போம் அதாவது உடன் முன்னேறிச் செல்வோம், உடன் கீழே விழுவோம் என்பதாகும். ஏறும் கலை, இறங்கும் கலை, பகல் மற்றும் இரவு இரண்டிலும் நிரந்தர யோகி, நிரந்தர துணைவன். எவ்வளவு ஒருவர் இப்பொழுது சங்கமயுகத்தில் முழுமையாக (பாபா) உடன் இருப்பதைக் கடைபிடிக்கிறாரோ அந்த அளவே நெருக்கமான உறவினர் ஆவதிலும் சமீபத்தில் இருப்பார். உலகின் நம்பர் ஒன் உயர்ந்த ஆத்மாவிற்கும் டிராமாவில் மகத்துவம் இருக்கிறது. அந்த மாதிரி நம்பர் ஒன் ஆத்மாவுடன் எப்பொழுதும் தொடர்பு-சம்மந்தத்தில் இருக்கக்கூடிய ஆத்மாக்களுக்கும் மகத்துவம் ஏற்பட்டு விடுகிறது. எப்படி இன்றைய நாட்களிலும் அற்ப காலத்து பதவியை அடையும் ஆத்மாக்கள் சிலர் ஜனாதிபதி மற்றும் சிலர் பிரதம மந்திரி ஆகிறார்கள் என்றால், அவருடன் சேர்த்து அவருடைய குடும்பத்திற்கும் மகத்துவம் ஏற்பட்டு விடுகிறது. அப்படியானால் நிரந்தரமாக உயர்ந்த ஆத்மாக்களின் சம்மந்தத்தில் வரும் ஆத்மாக்களின் மகத்துவம் எவ்வளவு உயர்ந்ததாக இருக்கும். இப்பொழுது கொஞ்சம் குழப்பம், பிரச்சனை ஏற்படட்டும். பின்பு தொடக்கத்தில் வந்த பழைய ஆத்மாக்கள் யார் எப்பொழுதும் தந்தையின் துணையின் சம்மந்தத்தை வைத்து வந்தார்களோ அவர்களுக்கு எவ்வளவு மகத்துவம் ஏற்படுகிறது என்று பாருங்கள். எப்படி. பழைய பொருளுக்கு மகத்துவம் தருகிறார்கள், மதிப்புள்ளது என்று நினைக்கிறார்கள். அதே போல் ஆத்மாக்கள் உங்களின் மதிப்பை வர்ணனை செய்து செய்து மகிமை பாடிப்பாடியே தன்னையும் பாக்கியம் நிறைந்தவர்கள் என்று அனுபவம் செய்வார்கள். அந்த மாதிரி உயர்ந்த ஆத்மாக்கள் என்று தன்னை நினைக்கிறீர்களா? எவ்வளவு நீங்கள் தந்தையின் மகிமையைப் பாடுகிறீர்களோ அதன் பலனாக, ஆத்மாக்கள் அந்த மாதிரியாக உங்களை மகிமை பாடுவார்கள். இப்பொழுது ஏன்

மகிமை பாடுவதில்லை? இப்பொழுது சேவை செய்கிறீர்கள் ஆனால் முழுமையான பலன் கடைசியில் ஏன் கிடைக்கிறது? இப்பொழுதும் கிடைக்கிறது, ஆனால் குறைவாக. அதற்கான காரணத்தைத் தெரிந்திருக்கிறீர்களா? இப்பொழுது சில நேரம் தந்தையின் கூடவே தன்னையும் சில இடங்களில் கலந்து விடுகிறீர்கள். தந்தையின் மகிமையைப் பாடிப்பாடி கூடவே தன்னையும் மகிமைப் பாடத் தொடங்கி விடுகிறீர்கள். மிக இனிமையான வார்த்தைகளால் கூறுகிறீர்கள் ஆனால் நான் என்ற உணர்வு இருக்கும் காரணத்தினால் மற்ற ஆத்மாக்களின் மீதான பாலனை முடிவடைந்து விடுகிறது. ஒவ்வொரு நேரமும், ஒவ்வொரு எண்ணத்திலும் பாபா, பாபா என்ற நினைவு இருக்க வேண்டும். இது தான் அனைத்தையும் விட மிகப் பெரிய அதி சூட்சும தியாகம் ஆகும். நான் என்பது முடிவடைந்து விட வேண்டும். எப்பொழுது நான் என்பது இல்லையோ அப்போது என்னுடையது என்பதும் இல்லை. என்னுடைய சுபாவம், என்னுடைய சம்ஸ்காரம், என்னுடைய இயல்பு. என்னுடைய வேலை, என்னுடைய பெயர், என்னுடைய மதிப்பு என்ற அனைத்து என்னுடையதும் நான் என்பதோடு அகன்று விடும். நான் மற்றும் எனது என்பது முடிவடைந்தது என்றால், இது தான் சமநிலை மற்றும் சம்பூர்ண நிலை ஆகும். கனவில் கூட நான் என்பது இருக்க வேண்டாம். இதைத் தான் அஷ்வமேத யாகத்தில் நான் என்ற அஷ்வத்தை (குதிரையை) சுவாஹா செய்வது. இது தான் இறுதியாகப் போட வேண்டிய ஆகுதி ஆகும். மேலும் இதன் ஆதாரத்தில் தான் இறுதி வெற்றி முழக்கம் ஒலிக்கும். கூட்டாக இந்தக் கடைசி ஆகுதி போட உள்ளப்பூர்வமாக ஓசையை நாலாபுறங்களிலும் பரப்புங்கள். பின்பு இந்த ஐந்து தத்துவங்கள் எப்பொழுதும் அனைத்து விதமான வெற்றிகளின் மாலையை அணிவிப்பார்கள். தற்பொழுது வரையில் தத்துவமும் சேவையில் சில இடங்களில் தடையாக உள்ளது ஆனால் சுவாஹாவின் ஆகுதி (சமர்ப்பணம்) கொடுப்பதினால் ஆராதனை செய்வார்கள். குஷியின் வாத்தியத்தை இசைப்பார்கள். அனைத்து ஆத்மாக்களும் தங்களுடைய வெகு காலத்து இச்சைகளை பிராப்தி செய்து கொண்டு மகிமை என்ற சலங்கை கட்டி நடனமாடுவார்கள். அப்பொழுது தான் இறுதி பக்தியின் சம்ஸ்காரம் உள்ளடங்கி விடும். அந்த மாதிரி பக்த ஆத்மாக்களுக்கு பக்த தன்மையின் வரதானமும் இப்பொழுதே இஷ்ட தேவ ஆத்மாக்கள் உங்கள் மூலமாகக் கிடைக்கும். சிலருக்கு பக்தி சொரூப ஆத்மாவின்

வரதானம், சிலருக்கு ஆத்ம ஞானி ஆகுக என்ற வரதானம் கிடைக்கும், அனைத்து ஆத்மாக்களுக்கும் இப்பொழுது வரம் அளிப்பவராகி வரதானம் கொடுப்பீர்கள். அனைத்து சுகங்கள் நிறைந்த இராஜ்யம் செய்பவர்களுக்கு இராஜபதவியின் வரதானம் கொடுப்பீர்கள். அந்த மாதிரி வரமளிப்பவராக, காமதேனு (விருப்பங்களை நிறைவேற்றும்) ஆத்மாக்களாக ஆகியிருக்கிறீர்களா? எந்த ஆத்மா என்ன கேட்கிறதோ அதை வழங்க வேண்டும். அந்த மாதிரி ஆத்மாக்களை எப்பொழுதும் நெருக்கமான மற்றும் உடன் இருப்பவர் என்று கூறுவது. நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் மாவீரனாக இருக்கும், எப்பொழுதும் ஆசனதாரி மற்றும் கிரீடம் அணிந்தவர்களுக்கு, ஒவ்வொரு விநாடி, ஒவ்வொரு எண்ணத்தில் உயர்ந்த தியாகம் மூலம் உயர்ந்த பாக்கியத்தை உருவாக்கக்கூடிய, ஒவ்வொரு அடியிலும் பின்பற்றி நடக்கக்கூடிய, ஒவ்வொரு நேரமும் அனைத்து பொக்கிஷங்களினால் நிரம்பிய, அளவில்லா பொக்கிஷத்தினால் எப்பொழுதும் நிரம்பியிருக்கக்கூடிய, லட்சியம் மற்றும் லட்சணத்தை எப்பொழுதும் முழுமையாக வைத்திருக்கும் அந்த மாதிரி சம்பூர்ண உயர்ந்த ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**தாதி, தீதியுடன் சந்திப்பு:** எதிர்காலத்திற்கான திட்டத்தைத் தீட்ட வேண்டும், அதற்காக கூட்டத்தைக் கூட்டியிருக்கிறீர்களா? என்ன திட்டம் தீட்டுவீர்கள்? என்னென்ன செய்திருக்கிறீர்களோ அதை மிக நன்றாகவே செய்திருக்கிறீர்கள். மேலும் இப்பொழுது என்ன செய்வீர்களோ அதுவும் நல்லதாகவே உள்ளது. எந்தவொரு நிகழ்ச்சிக்கும் மற்றும் திட்டத்திற்கும் வெற்றிக்கான ஆதாரமாக என்ன இருக்கிறது? உலகியல் முறையில் கூட எந்தவொரு காரியத்தின் வெற்றிக்கான ஆதாரமாக என்ன இருக்கிறது? எந்தவொரு நிகழ்ச்சியும் வெற்றிகரமாக செய்ய விரும்புகிறீர்கள் என்றால் என்ன யோசிக்கிறீர்கள்? இப்பொழுது என்ன மகாநாடு நடத்தினீர்களோ அதன் வெற்றிக்கான முக்கிய ஆதாரமாக முக்கியமான நபரின் பெர்சனாலிட்டியின் (தனித்தன்மையின்) ஆதாரத்தில் இருக்கிறது. எப்படிப்பட்ட பெர்சனாலிட்டி உள்ளவர் வருவாரோ அதே போல் நாலாபுறங்களிலும் செய்தி பரவும். எப்பொழுதெல்லாம் நீங்கள் நிகழ்ச்சியை உருவாக்குகிறீர்களோ அப்பொழுது முக்கியமாக

நாலாபுறங்களிலும் செய்தி பரவ வேண்டும் என்ற லட்சியத்தை வைத்து திட்டத்தை உருவாக்குகிறீர்கள். விசேஷமான பெர்சனாலிட்டி வந்தார் என்றால் அதன் காரணமாக நிகழ்ச்சியைப் பற்றிய செய்தி நாலா புறங்களிலும் பரவும். அப்படி முக்கிய நபர்களின் பங்கேற்பே சாதனம் ஆகி விடுகிறது. உலகியல் பெர்சனாலிட்டி உள்ளவர்கள் வெளியில் செய்தியைப் பரப்புவதற்குக் காரணமாகிறார்கள். அதே போல் விசேஷமாக பொறுப்பாளர் ஆகியிருக்கும் சேவாதாரிகள் உங்களுடைய தற்சமய சேவையில் பெர்சனாலிட்டி (தனித்தன்மை) வேண்டும். பெர்சனாலிட்டி மனிதர்களை தன் பக்கம் கவர்ந்திழுக்கிறது. அதுபோன்று தங்களிடம் தற்சமயத்து பெர்சனாலிட்டியாக என்ன வேண்டும்? தூய்மை தான் பெர்சனாலிட்டி ஆகும். எவ்வளவிற்கு எவ்வளவு தூய்மை இருக்குமோ அந்த அளவு தூய்மையின் பெர்சனாலிட்டி இயல்பாகவே அனைவரையும் தலை வணங்க வைக்கும். எப்படி நாடகத்திற்குள் சன்னியாசிகளின் எதிரிலும் தலைவணங்குகிறார்கள். இதுவும் தூய்மையின் பெர்சனாலிட்டியின் காரணமாகத் தான், தூய்மையின் பெர்சனாலிட்டி பெரிய பெரிய மனிதர் களையும் தலைவணங்க வைக்கும். அப்படி தற்சமயம் தூய்மையின் பெர்சனாலிட்டியின் ஆதாரத்தில் தலை வணங்குவார்கள். எப்படி அகர்பத்தியின் நறுமணம் ஈர்க்கிறது தான் இல்லையா? அதே போல் வந்தவுடனேயே தூய்மையின் நறுமணம் அனுபவம் ஏற்பட வேண்டும். எங்கு பார்த்தாலும் தூய்மையே தூய்மை தான் தென்பட வேண்டும். தற்சமயம் இதனுடைய அனுபவத்தைத் தான் செய்ய விரும்புகிறார்கள். இது உலகில் எங்குமே தென்படுவதில்லை. ஒருவர் எவ்வளவு தான் மகான் ஆத்மாவாக இருந்தாலும் அவருக்கு பெயர் இருக்கிறது ஆனால் தூய்மையின் எண்ண அலைகள் இல்லை. ஏனென்றால், சித்தி அடைந்ததின் பெயர், புகழ், மரியாதையை ஏற்றுக் கொண்டு விடுகிறார்கள். எனவே தூய்மையின் எண்ண அலைகள் எங்கும் வருவதில்லை. அற்ப காலத்து பிராப்தியின் ஈர்ப்பு ஏற்படுகிறது ஆனால் தூய்மையின் ஈர்ப்பு இருப்பதில்லை. இப்பொழுது நடைமுறை வாழ்க்கையில் இந்த தூய்மையின் தனித்தன்மை வேண்டும். அது இயல்பாகவே அனைவரையும் கவர்ந்திழுக்க வேண்டும். எங்காவது பிரதம மந்திரி வருகிறார் என்றால் பெர்சனாலிட்டி இருக்கிறது அதனால் தான் அவரிடம் ஓடுகிறார்கள். அப்படி இந்த பெர்சனாலிட்டி தான் அனைத்தையும் விட நம்பர் ஒன் ஆகும். இப்பொழுது இந்த திட்டத்தை

உருவாக்குங்கள். தர்ம ஆத்மாக்களைக் கவர்ந்திழுப்பது கூட இந்த தனித்தன்மை தான். அவர்கள் எது நம்மிடம் இல்லையோ அது இங்கே இருக்கிறது என்று அனுபவம் செய்ய வேண்டும். இல்லையென்றால் ஆம், குமாரிகள், மாதர்கள் இருக்கிறார்கள். நன்றாக காரியம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்ற இந்த பாவனையிலேயே பார்க்கிறார்கள் ஆனால் இவர்கள் உலகிலேயே மிகப் பெரிய பெர்சனாலிட்டி என்று புரிந்து எதிரில் வர வேண்டும். இதுவரை புரிந்தது வேறொன்று, பார்த்தது வேறொன்று என்று அப்படி அனுபவம் செய்ய வேண்டும். எது நம்முடைய புத்தியில் இல்லாத விஷயமோ அது இவர்களுடைய நடைமுறை வாழ்க்கையில் இருக்கிறது. இது தான் மகாரதியை கீழே விழத்தட்டுவது. எப்படி எறும்பு யானையையும் விழச்செய்து விடுகிறது இல்லையா? அப்படி இந்த பெர்சனாலிட்டியில் (தூய்மையின் முன்) தலைவணங்கி விட வேண்டும். இப்பொழுது தன்னுடைய சொரூபம் அனைத்து பிராப்திகளின் காந்தத்தின் சொரூபமாக டும். அதனால் அனைவரும் இயல்பாகவே ஈர்க்கப்பட வேண்டும். எங்கு பார்த்தாலும், யாரைப் பார்த்தாலும் பிராப்தியின் அனுபவம் இருக்க வேண்டும். அப்படி பிராப்தி தான் காந்தம் ஆகும். மேலும் அனைத்து பிராப்திகளின் சொரூபம் தான் காந்தம் ஆகும்.

இப்பொழுது உழைப்பு, சக்தி மற்றும் பணத்தையும் ஈடுபடுத்த வேண்டியிருக்கிறது. பின்பு இந்த இரண்டின் வேலையை தூய்மையின் தனித்தன்மையே செய்து விடும். இப்பொழுது எண்ண அலைகள் இன்னும் மாறவில்லை, இப்பொழுதும் வேறு பார்வையோடு பார்க்கிறார்கள்.. இப்பொழுது தன்னுடைய எண்ண அலைகள் மூலமாக என்னவாக இருக்கிறார், எப்படி இருக்கிறார் அந்த பார்வையோடு பார்ப்பதின் எண்ண அலைகளைப் பரப்புங்கள். மேலும் தன்னுடைய வரதானி, மகாதானி உள்உணர்வினால் எண்ண அலைகள் மற்றும் சூழ்நிலையை மாற்றம் செய்யுங்கள். இன்று வரையிலும் பாவம் எங்கு செல்வது என்று துடித்துக் கொண்டும் தேடிக் கொண்டே இருக்கிறார்கள். தாகமுள்ள ஆத்மாக்களுக்கு இப்பொழுது கடல் மற்றும் நதிகளின் சரியான இடத்தின் அறிமுகம் கிடைக்கவில்லை, எனவே அதிகமாகத் தேடுகிறார்கள். எனவே தன்னுடைய லைட் ஹவுஸ் சொரூபத்தினால் இலக்கிற்கான வழியைக் காண்பியுங்கள், நல்லது.

## 1978 அவ்யக்த முரளி

ஜானகி தாதியுடன்: லண்டனிலும் தர்ம ஆத்மாக்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. எந்த வாய்ப்பை எடுத்துக் கொண்டாலும் அதில் ஆன்மீகத்தின் கவர்ச்சியின் தோற்றம் அவசியம் இருக்கட்டும். எப்படி தீர்த்த ஸ்தானங்களில் அமைதி குண்டம் அல்லது கதி, சத்கதியின் குண்டத்தை உருவாக்குகிறார்கள் இல்லையா? அப்படி அனைத்து பிராப்திக்கான குண்டம் இது தான் என்று அப்படி புரிந்து கொள்ளட்டும். வித்தியாசமான ஒரு நிலையை அனுபவம் செய்யட்டும், சாதாரணமாக இருக்கட்டும் ஆனால் சக்திசாலியாக இருக்க வேண்டும். மேலும் சத்தியத்தின் உணர்வு ஏற்பட வேண்டும். அந்த மாதிரி மேடையை எடுத்து எடுத்து உலக ராஜ்யத்தையும் எடுத்து விடுவீர்கள். இப்பொழுதோ நிகழ்ச்சிக்காக அழைப்பு கொடுக்கிறார்கள். பின்பு எப்படி ஜடச்சிலைகளை கண்களில் மற்றும் தலையில் வைத்து தூக்குகிறார்கள். அதே போல் உங்கள் அனைவரையும் அந்த பார்வையோடு எங்கே அமர வைப்பது, என்ன செய்வது என்று ஒன்றுமே பிடிப்படாது. மகிமையாக என்ன பேசுவது, என்ன பேசக்கூடாது என்று ஒன்றுமே பிடிப்படாது. கூட்டத்தைச் சேர்ப்பது நல்லது தான், கூட்டத்தின் மூலம் கூட ஊக்கம் உற்சாகம் அதிகரிக்கும். நல்லது.

வரதானம்: பரிஸ்தா சொரூபத்தின் நினைவு மூலம் தந்தையின் பாதுகாப்புக் குடைநிழலை அனுபவம் செய்யக்கூடிய தடையை வென்றவர் ஆகுக!

அமிர்தவேளை எழுந்தவுடனேயே நான் பரிஷ்தா ஆவேன் என்பதை நினைவில் கொண்டு வாருங்கள். பிரம்மாபாபாவிற்கு இந்த மனம் விரும்பிய பரிசை கொடுத்தீர்கள் என்றால், தினசரி அமிர்த வேளையில் பாப்தாதா உங்களை தன்னுடைய இரு கரங்களுக்குள் அடக்கிக் கொள்வார். நான் பாபாவின் கரங்களுக்குள் அதீந்திரிய சுகத்தின் ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருக்கிறேன் என்று அனுபவம் செய்வீர்கள். யார் பரிஷ்தா சொரூபத்தின் நினைவில் இருக்கிறார்களோ அவர்களுடைய எதிரில் எந்தவொரு பிரச்சனை மற்றும் தடை வந்தாலும் தந்தை அவருக்காக பாதுகாப்பு குடை நிழல் ஆகி விடுவார். அப்படி தந்தையின் பாதுகாப்பு குடை மற்றும் அன்பை அனுபவம் செய்து தடையை வென்றவர் ஆகுங்கள்.

சுலோகன்: சுகசொருப ஆத்மா சுயநிலை மூலம் சூழ்நிலைகளின் மீது சுலபமாக வெற்றியை அடைந்து விடுவார்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 14.11.1978 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# காலத்தின் அழைப்பு!

எப்பொழுதும் தன்னை உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தையின் நேரடி ஈஸ்வரிய குழந்தை என்று புரிந்து கொண்டு எப்பொழுதும் சக்திசாலியான நிலையில் நிலைத்திருக்கிறீர்களா? எப்படி தந்தை எப்பொழுதும் சக்திசாலியாக இருக்கிறாரோ அதே போல் தந்தைக்குச் சமமாக சக்திசாலியாக ஆகியிருக்கிறீர்களா? தற்சமயத்திற்கு ஏற்ப எப்பொழுது நீங்கள் அனைவருமே நேரத்தின் சவாலுக்கு ஏற்றபடி எவரெடியாக இருக்கிறீர்கள் என்றால், நேரத்திற்கு ஏற்றபடி இப்பொழுது வீணானவைகளின் கணக்கு ஏதோ பெயர் அளவில் தான் இருக்க வேண்டும். "ஒரு மூட்டை கோதுமை மாவில் ஒரு சிட்டிகை உப்பு போன்று", என்ற பழமொழி இருக்க வேண்டும். அந்த மாதிரி சக்திசாலியான நிலையின் கணக்கு 99-சதவிகிதம் இருக்க வேண்டும் அப்பொழுது தான் எதிர்காலத்து புது உலகிற்கான 100-சதவிகித சதோபிரதான இராஜ்யத்தின் அதிகாரி ஆக முடியும். இப்பொழுதோ எதிர்காலத்து இராஜ்யம் அல்லது உங்களுடைய இராஜ்யம் உங்கள் அனைவரையும் வரவழைத்துக் கொண்டிருக்கிறது. யாரை வரவழைக்கிறது? சர்வகுண சம்பன்ன, 16-கலைகள் நிரம்பிய ஆத்மாக்களை சமயத்திற்கு ஏற்றபடி தற்சமயத்து நிலையின் சார்ட் எழுதுங்கள் -சக்தி நிறைந்த நிலை எவ்வளவு மற்றும் வீணானவை எவ்வளவு? எண்ணம் மற்றும் நேரம் இரண்டிற்கும் சார்ட் வையுங்கள். முழு நாளின் நடவடிக்கைகளில் எந்தக் கணக்கு அதிகமாக இருக்கிறது. ஒருவேளை இப்பொழுது வரையிலும் கூட வீணான கணக்கு 50 அல்லது 60-சதவிகிதம் இருக்கிறது என்றால் அந்த மாதிரி ரிசல்ட்

உள்ளவர்கள் எந்தக் காலத்தின் இராஜ்ய அதிகாரி என்று கூறலாம். சத்யுகத்தின் முதல் இராஜ்யத்திற்கா அல்லது மத்திய காலத்தின் இராஜ்யத்திற்கா அல்லது திரேதாவின் தொடக்க காலத்திற்கா? தொடக்க காலத்து உலக அதிகாரியாக யார் ஆக முடியும் என்றால், எந்த ஆத்மாக்களுக்கு நிகழ்காலத்தில் எண்ணம் மற்றும் நேரத்தின் மேல் அதிகாரம் இருக்கிறதோ அவர்கள் தான். அந்த மாதிரி அதிகாரி ஆத்மாக்கள் தான் உலகின் ஆத்மாக்கள் மூலமாக சதோபிரதான தொடக்க காலத்தில் அனைவரது மரியாதையையும் பெற முடியும்.

முதலில் சுயராஜ்யம் பிறகு உலக இராஜ்யம். யார் சுயராஜ்யம் செய்ய முடியாதோ அவர் உலக இராஜ்யத்தின் அதிகாரி ஆக முடியாது. எனவே இப்பொழுது தன்னைத் தானே சோதனை செய்யுங்கள். உள்நோக்குமுகம் உடையவராகி சுயசிந்தனையில் இருங்கள். முதல் நாளில் முதல் விடுகதையாக நான் யார்? என்று கூறப்பட்டது. இப்பொழுது மீண்டும் இதே விடுகதையை தன்னுடைய சம்பூர்ண நிலைக்கேற்றபடி உயர்ந்த ஆத்ம நிலைக்கேற்றபடி நான் யார்? என்று சோதனை செய்யுங்கள். இந்த விடுகதைக்கு இப்பொழுது பதிலளிக்க வேண்டும். தன்னுடைய முழு நாளின் நிலை மூலமாக தொடக்க காலத்து அதிகாரியா அல்லது சத்யுகத்தின் மத்திய காலத்தின் அதிகாரியா என்று தெரிந்து கொள்ள முடியும். தொடக்க காலத்து அதிகாரி ஆக வேண்டும் என்ற லட்சியம் இருக்கிறது என்றால், அதன் பிரகாரம் தன்னுடைய நிகழ்காலத்தை எப்பொழுதும் சக்திசாலியாக ஆக்குங்கள். ஞான சிந்தனையின் கூடவே தன்னுடைய நிலையின் சோதனையும் மிக அவசியம் ஆகும். ஒவ்வொரு நாளும் சேமிப்பாகியிருக்கும் கணக்கில் தன் மேலேயே திருப்தியாக இருக்கிறீர்களா? அல்லது இதுவரையிலும் கூட எவ்வளவு விரும்பு கிறேனோ அந்த அளவு இல்லை என்று இதையே கூறுவீர்களா? இதுவரையிலும் அந்த மாதிரியான ரிசல்ட் இருக்கக்கூடாது யார் தன் மீதே திருப்தியாக இல்லையோ அவர் உலகின் ஆத்மாக்களை திருப்தி படுத்துபவராக எப்படி ஆக முடியும்? சத்யுகத்தின் தொடக்க காலத்தில் ஆத்மாக்கள் மட்டுமின்றி இயற்கையும் திருப்தியாக இருக்கும். ஏனென்றால் சம்பூர்ணமாக இருக்கிறார்கள். எனவே திருப்தியான ஆத்மா ஆகுங்கள். இப்பொழுது என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா?

சேவைக்கான சாதனமாக இதுவரை என்ன இருக்கிறதோ அதற்கேற்றபடி சேவையோ செய்து கொண்டு தான் இருக்கிறீர்கள் -முழு ஈடுபாட்டோடு செய்கிறீர்கள், அதிகமாக உழைக்கவும் செய்கிறீர்கள், ஊக்கம் உற்சாகமும் மிக நன்றாக இருக்கிறது ஆனால் சேவையின் கூடவே உலகின் சேவை மற்றும் சயத்தின் சேவை இருக்க வேண்டும். உலகிற்காகவும் இரக்க மனம் மற்றும் தனக்காகவும் இரக்க மனம் உடையவர் ஆகுங்கள். இரண்டும் சேர்ந்தே இருக்க வேண்டும். நேரம் வரும்போது சம்பன்னமாக ஆகியே விடுவோம் என்று நேரத்திற்காக காத்திருக்கக் கூடாது, மற்ற ஆத்மாக்களுக்கு, நாளை இல்லை இன்றே, இன்று இல்லை இப்பொழுது செய்யுங்கள் என்று கூறுகிறீர்கள் என்றால், அந்த மாதிரி முதலில் தனக்கு கூறுங்கள். அந்த மாதிரி எவரெடி ஆகியிருக்கிறீர்களா? இப்பொழுது இல்லை என்றால் ஒருபொழுதும் இல்லை என்பது எப்பொழுதும் நினைவில் இருக்கிறதா? அந்த மாதிரி தன்னோடு உரையாடல் செய்யுங்கள். நல்லது. கூறியதோ அதிகமாக கூறியிருக்கிறோம் - இப்பொழுது தந்தை என்ன விரும்புகிறார்? இப்பொழுது கூறுவதற்கான நேரம் இல்லை ஆனால் பார்ப்பதற்கான நேரம் ஆகும். தந்தை ஒவ்வொரு இரத்தினத்தையும் சம்பன்னம் மற்றும் சம்பூர்ணமாக பார்க்க விரும்புகிறார். புரிந்ததா?

அந்த மாதிரி சமிக்ஞைகள் மூலம் புரிந்து கொள்ளக்கூடிய கேட்பதையும், செய்வதையும் சமநிலையில் கொண்டு வரக்கூடிய, எப்பொழுதும் சக்திசாலியான தந்தையின் சக்திசாலியான நினைவில் இருக்கக்கூடிய சக்திசாலியான நிலையில் இருக்கும் வெற்றி அடையும் உயர்ந்த ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**தாதிகளுடன் சந்திப்பு:** மகாரதிகளைப் பார்த்து அனைவரும் குஷி அடைகிறார்கள். ஏன் குஷி அடைகிறார்கள்? ஏனென்றால் மகாரதிகள் சாகார தந்தைக்குச் சமமாக அனைவரின் எதிரில் சாகார ரூபத்தில் சம்பன்னம் மற்றும் சிரேஷ்டமாக இருக்கிறார்கள். எனவே தந்தையும் மகாரதிகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். ஏனென்றால் சமமாக இருக்கிறார்கள். அப்படி சமமானவர்களைப் பார்த்து மகிழ்ச்சி ஏற்படுகிறது. சங்கமயுகத்தில் தான் தந்தை குழந்தைகளை சேவையின்

ஆசனதாரியாக ஆக்குகிறார். இந்த சங்கமயுகத்தின் வழக்கம் வருங்காலத்திலும் தன்னுடைய கைகளாலேயே சிம்மாசனதாரியாகவும் ஆக்குவோம். சுயம் மறைந்த ரூபத்தில் ஆசனத்தில் அமர்ந்திருக்கும் குழந்தைகளைப் பார்க்கவும் செய்கிறோம், சகயோகியாகவும் இருக்கிறோம் ஆனால் நடைமுறையில் ஆசனதாரிகளாக குழந்தைகளைத் தான் ஆக்குகிறோம். இந்தப் பழக்கம் இப்பொழுதிலிருந்து ஆரம்பம் ஆகிறது.

செய்பவர் செய்விட்டவராக இருக்கிறார் என்றால் செய்பவரின் பங்கையும் செய்தோம். மேலும் இப்பொழுது செய்விப்பவரின் பங்கை செய்து கொண்டிருக்கிறோம். தந்தையின் ஆசனமாக இருக்கும் காரணத்தினால் ஆசனதாரி ஆவதில் சுமை அனுபவம் ஆவதில்லை. ஏனென்றால் தந்தையின் ஆசனம் இல்லையா? மேலும் தந்தை அவரே ஆசனதாரி ஆக்கியிருக்கிறார். இந்த பொறுப்பாளர் ஆவதின் ஆசனம் எவ்வளவு இலகுவானது. ஆசனத்தின் விசேஷம் இருக்கிறது, இந்த ஆசனத்தில் தான் விசேஷ மந்திரம் நிரம்பியிருக்கிறது, அது கடினத்தை ஒரு நொடியில் சுலபமாக்கி விடுகிறது. இந்த பொறுப்பாளர் ஆகும் ஆசனம் நேரத்திற்கு ஏற்றபடி, நாடகத்திற்கு ஏற்றபடி அனைத்தையும் விட உயர்ந்த ஆசனம் மற்றும் அதிக வெற்றி நிரம்பிய ஆசனம் என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது. யார் ஆசனத்தில் அமர்ந்தாலும் வெற்றி அடைபவர் ஆகிறார். பாப்தாதா மகாரதிகளை தற்சமயத்திலும் இரட்டை ஆசனதாரிகளாகப் பார்க்கிறார். இதயசிம்மாசனமோ இருக்கவே இருக்கிறது ஆனால் இந்த பொறுப்பாளர் ஆகும் ஆசனம் வெகு குறைவானவர்களுக்கே கிடைக்கிறது. இந்த இரகசியமும் மிகவும் ஆழமானது. நல்லது.

**மதுபன் நிவாசி சகோதரர்களுடன்:** மதுபன் நிவாசிகள் அதிகமாக கேட்டிருக்கிறீர்கள் இன்னும் கேட்பதற்கு ஏதாவது மிச்சம் இருக்கிறதா? நேரெதிரில் கேட்டீர்கள், ரிவைஸ் கோர்ஸ் (கேட்டதை மீண்டும்) கேட்டீர்கள், இப்பொழுது வேறென்ன கேட்பதற்கு மிச்சம் இருக்கிறது. எவ்வளவு அம்பை நிரப்பினீர்களோ அவ்வளவு எய்தீர்களா? மதுபன் நிவாசிகளுக்கு மூன்று விதமான சேவைக்கான வாய்ப்பு இருக்கிறது. எந்த விதமான சேவைக்கான விசேஷ வாய்ப்பு இருக்கிறது? விசேஷமாக மதுபன் நிவாசிகளுக்கு சுலபமான சேவைக்கான சாதனம்

# 1978 அவ்யக்த முரளி

இந்த வரதான பூமி அல்லது சரித்திர பூமிக்கான ஆதாரம் ஆகும். இந்த பூமியின் சரித்திரத்தின் மகிமையை ஒருவேளை ஏதாவது ஆத்மாவிற்கு கூறினீர்கள் என்றால், எப்படி பாகவதம் கேட்பதில் ஆர்வம் வைக்கிறார்களோ அந்த அளவு கீதை கேட்பதில் ஆர்வம் வைப்பதில்லை. அப்படி அந்த மாதிரியான நடைமுறை சரித்திரம் கூறுவதற்கான சாதனம் மதுபன்னைச் சேர்ந்தவர்களுக்கு இருக்கிறது. இந்த ஸ்தானத்தின் மற்றும் சரித்திரத்தின் அறிமுகம் கொடுத்தீர்கள் என்றால், ஆத்மாக்கள் குஷியில் நடனமாடத் தொடங்கி விடுவார்கள். எப்பொழுதெல்லாம் யாராவது வருகிறார்கள் என்றால் விசேஷமாக சரித்திர பூமியை தெரிந்து கொள்வதற்கும் அனுபவம் செய்வதற்கும் வருகிறார்கள் என்றால், மதுபன் நிவாசிகள் இங்கே அந்த மாதிரி நடக்கிறது என்று பாகவதம் மூலமாக சேவை செய்ய முடியும். அப்படி நீங்கள் இந்த பூமியின் விசேஷத்தின் மகத்துவத்தைக் கூறுவதற்கு பொறுப்பாளர் ஆவீர்கள். எந்தப் பார்வையோடு அனைத்து ஆத்மாக்களும் ஒவ்வொரு இரத்தினத்தைப் பார்க்கிறார்களோ அதே போல் அவர்களை தந்தையின் பக்கம் ஈர்த்தீர்கள் என்றால், எவ்வளவு சேவை நடக்கும். இங்கே அமர்ந்து கொண்டே பிரஜை உருவாக முடியும் அல்லது குடும்பம் உருவாக முடியும். எப்படி தாஜ்மகாலில் வழிகாட்டிகள் எவ்வளவு இரமணீகரமான முறையில் தாஜ்மகாலின் சரித்திரத்தைக் கூறுகிறார்கள். அந்த மாதிரி சரித்திரத்தை கூறினீர்கள் என்றால் அவர்களுக்கு சுலபமாகவே நினைவு இருக்கும். மேலும் அந்த சேவையின் பலன் உங்களுக்குக் கிடைத்து விடும். யார் வந்தாலும் அவருக்கு மிகவும் குஷியோடு, ஊக்கத்தோடு, ஈடுபாட்டோடு மகத்துவத்தில் நிலைத்திருந்து மகத்துவத்தை கூறினீர்கள் என்றால், மிக அதிக பலனை அடைய முடியும். மேலும் அந்த மாதிரி சேவை செய்வதினால் மிகுந்த குஷி இருக்கும். அதில் சேவையும் ஆனது, நினைவும் இருந்தது, மேலும் பிராப்தியும் ஆனது. வேறென்ன வேண்டும். அந்த மாதிரி அதிர்ஷ்டசாலிகள் மதுபன் நிவாசிகள்.

இந்த வருடத்தில் முக்கியமாக சுயம் மற்றும் சேவையின் சமநிலை வேண்டும். சேவையின் கூடவே சுயத்தின் தனித்தன்மை மேலும் பிரபாவம் அல்லது தாரணை செய்வதின் பிரபாவம் தங்கத்தின் மேல் உள்ள அழகிய வேலைப்பாட்டின் காரியத்தை செய்யும். யார் பார்த்தாலும் இவர் ஞானம் நிறைந்தவர் மற்றும் குணம் நிறைந்தவர்

என்று அனுபவம் செய்ய வேண்டும். இரண்டின் சமநிலை தென்பட வேண்டும். இதுவரையிலும் ஞானம் உயர்ந்தது ஆனால் நடத்தை அந்த மாதிரி இல்லை என்று கேட்சு முடிகிறது. எனவே இரண்டின் சமநிலையின் கவனம் வைப்பதினால் பிரஜை மற்றும் வாரிசு தென்படுவார்கள். சேவைக்கான சாதனமோ அதிகமாக இருக்கிறது, இப்பொழுது தர்மத் தலைவர்கள் வரை சென்றடையவில்லை. அது தான் இறுதி யுத்தம் ஆகும். அதன் மூலம் நாலாபுறங்களிலும் சப்தம் (பாபா செய்தி) பரவும். இது ஞானத்தின் விஷயம் மூலம் நடக்கும். எப்படி கீதை சொன்ன பகவானின் விஷயம் மூலம் பெயர் நாலாபுறமும் பரவ வேண்டும். இதற்காக சின்னச்சின்ன குழுவை உருவாக்கி நாலாபுறங்களிலும் முதலில் கொஞ்சம் தன்னுடைய சகயோகிகளை உருவாக்குங்கள். மாணவர்களுக்கு போட்டி வைத்தீர்கள் இல்லையா? பிறகு அதிலிருந்து ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதே போல் ஒவ்வொரு ஸ்தானத்திலும் சிறு சிறு குழு உருவாகி பிறகு அவர்கள் அனைவரும் ஓர் இடத்தில் கூடினார்கள் என்றால் பிறகு பெயர் பரவும். இந்த வருடமே பெயரை நாலாபுறங்களிலும் பரப்புவதற்கான வருடம் ஆகும்.

**வரதானம்: மனஒருமைப்பாட்டு சக்தியின் மூலமாக பிற மற்றும் பிறர் வசமான நிலையை மாற்றம் செய்யக்கூடிய அதிகாரி ஆத்மா ஆகுக!**

பிராமணன் என்றால் அதிகாரி ஆத்மா. ஒருபொழுதும் எந்த விதத்திலும் மற்றவைகளின் வசம் ஆக முடியாது. தன்னுடைய பலஹீனமான சம்ஸ்காரம், சுபாவத்தின் வசமும் ஆக முடியாது. ஏனென்றால், சுபாவம் (சுய பாவம்) என்றால் சுயத்திற்காக மற்றும் அனைவருக்காக ஆத்மீக பாவம் இருக்கிறது என்றால், பலஹீனமான சுபாவத்தின் வசம் ஆக முடியாது. மேலும் அனாதி மற்றும் ஆதி சம்ஸ்காரங்களின் நினைவு மூலமாக பலஹீனமான சம்ஸ்காரமும் சுலபமாக மாறி விடுகிறது. ஒருமுகப்பாட்டின் சக்தி மற்றதின் வசமான நிலையை மாற்றம் செய்து எஜமானத்தன்மையின் நிலையின் ஆசனத்தில் அமர வைத்து விடுகிறது.

**சுலோகன்: ஞானம் நிறைந்த நிலை மற்றும் குணம் நிறைந்த நிலை என்ற இரண்டின் சமநிலை மூலம் பிரஜை மற்றும் வாரிசுகளை தயார் செய்யுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋ ❋❋❋❋❋❋❋❋

# 27.11.1978 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அற்ப காலத்து பெயர், புகழிலிருந்து விலகியிருப்பவர் தான் அனைவரின் அன்பிற்குரியவராக ஆக முடியும்!

இன்று பாப்தாதா விசேஷமாக குழந்தைகளைச் சந்திப்பதற்காக வந்திருக்கிறார். எப்படி குழந்தைகள் நிரந்தர யோகிகளாக இருக்கிறார்களோ அதாவது தந்தையின் அன்பின் கடலில் எப்பொழுதுமே ஐக்கியமாகியிருக்கிறார்களோ அதே போலவே தந்தையும் குழந்தைகளின் அன்பில் நிரந்தரமாக குழந்தைகளின் மகிமை பாடுகிறார். ஒவ்வொரு குழந்தையின் குணமாலை மற்றும் ஒவ்வொரு குழந்தையின் உயர்ந்த சரித்திரத்தின் சித்திரம் பாப்தாதாவிடம் இருக்கிறது, பாப்தாதாவிடம் மிகப் பெரிய, மிக அழகான சைத்தன்ய மூர்த்திகளின் கோவில் என்று கூறினாலும் அல்லது ஓவிய அரங்கம் என்று கூறினாலும், அது எப்பொழுதும் எதிரில் இருக்கிறது. ஒவ்வொருவரின் சித்திரத்தையும், மாலையையும் தந்தை எப்பொழுதும் பார்த்துக் கொண்டே இருக்கிறார். சிலருடைய மாலை பெரியதாக இருக்கிறது. சிவருடையது சிறியதாக இருக்கிறது. நீங்கள் அனைவரும் ஒரு தந்தையை நிளைவு செய்ய வேண்டியதாக இருக்கிறது, பாப்தாதாவிற்கு அனைத்து குழந்தைகளையும் நினைவு செய்ய வேண்டியதாக இருக்கிறது. ஒருவரைக் கூட மறக்க முடியாது. ஒருவேளை மறந்தோம் என்றால் புகார்களின் மாலையை அணிய வேண்டியதாக இருக்கும். அப்படி குழந்தைகள் புகார்களின் மாலையை அணிவிக்கிறார்கள். தந்தை வெற்றி மாலை அணிவிக்கிறார், குழந்தைகள் மிகவும் புத்திசாலிகள், உதவியைப் பெறுவதில் புத்திசாவிகள், தைரியம் வைப்பதில் வரிசைக்கிரமமாக இருக்கிறார்கள். (ஞானத்தை) கேட்டதோ அதிகமாக கேட்டிருக்கிறீர்கள், இப்பொழுது வேறு என்ன செய்ய வேண்டும்? இப்பொழுதோ சந்திப்பை மட்டும் செய்து கொண்டிருக்க வேண்டும். எப்படி இப்பொழுதைய சந்திப்பு,

நிரம்பிய (சம்பன்ன நிலையின் அனுபவம் செய்விக்கிறது. அந்த மாதிரி நிரந்தரமாக சந்திப்பை செய்யுங்கள், இதுவரை கேட்டதின் பிரதிபலனாக எப்பொழுதும் தந்தைக்குச் சமமாக சம்பன்ன சொரூபத்தில் இருந்து காண்பியுங்கள், துடித்துக் கொண்டிருக்கும் அனேக ஆத்மாக்களின் காத்திருத்தலுக்கு முடிவு கொடுங்கள், காட்சியளிக்கும் சம்பன்ன மூர்த்தியாகி அனேகர்களுக்கு தரிசனம் காட்டுங்கள். இப்பொழுது துக்கம் அமைதியின்மையின் அனுபவம் அளவுக்கு அதிகமான நிலையில் சென்று கொண்டிருக்கிறது. தன்னுடைய இறுதி நிலை மூலமாக அதை முடிவுகட்டு வதற்கான காரியத்தை மிக வேகமாகச் செய்யுங்கள், மாஸ்டர் படைப்பவரின் நிலையில் நிலைத்திருந்து தன்னுடைய படைப்பின் அளவில்லா துக்கம் மற்றும் அமைதியின்மையின் பிரச்சனைக்கு முடிவு கட்டுங்கள். துக்கத்தை நீக்குபவர், சுகம் கொடுப்பவரின் பாகத்தை செய்யுங்கள், சுகம் சாந்தியின் பொக்கிஷத்தினால் தன்னுடைய படைப்பிற்கு மகாதானம் மற்றும் வரதானம் வழங்குங்கள். உங்களுடைய படைப்பின் கூக்குரலைக் கேட்க முடிகிறதா? அல்லது தன்னுடைய வாழ்க்கையின் கதையைக் கேட்பதிலும் மற்றும் பார்ப்பதிலேயே பிஸியாக இருக்கிறீர்களா? தன்னுடைய வாழ்க்கையின் கர்மங்களின் கதையைத் தெரிந்திருக்கும் திரிகாலதரிசியாக ஆகியிருக்கிறீர்கள் இல்லையா? அப்படியானால் இப்பொழுது ஒவ்வொரு காரியத்தையும் மற்ற ஆத்மாக்களின் நன்மைக்காக காரியத்தில் ஈடுபடுத்துங்கள். எனக்கும் ஏதாவது செய்யுங்கள் மற்றும் என்னுடையதையும் கொஞ்சம் கேளுங்கள், எனக்கு முடிவு சொல்வதற்கு நேரம் கொடுங்கள் என்று தன்னுடைய கதையை அதிகமாக வர்ணனை செய்யாதீர்கள். இப்பொழுது அனேகர்களுக்கு தீர்வு அளிப்பவர் ஆகுங்கள். ஒவ்வொருவரின் கர்மத்தின் விளைவைத் தெரிந்து கதி சத்கதி கொடுப்பதற்கு முடிவு செய்யுங்கள். வசதிகளை மட்டும் பெறாதீர்கள், இப்பொழுது வள்ளனாகி கொடுங்கள். ஏதாவது சேவைக்காக மற்றும் தன்னுடைய வசதிகளின் ஆதாரத்தில் தன்னுடைய முன்னேற்றம் மற்றும் சேவையிள் அற்ப காலத்தின் வெற்றி கிடைத்து விடும் ஆனால் இன்று மகானாக இருப்பீர்கள், நாளை மகான் நிலைக்கு தாகம் உள்ள ஆத்மாவாகி விடுவீர்கள். எப்பொழுதுமே பிராப்தி கிடைக்க வேண்டும் என்ற இச்சையில் இருப்பீர்கள் பெயர் கிடைத்து விட வேண்டும், காரியம் நடந்து விட வேண்டும். இதனுடைய ஆசையென்றால் என்னவென்று

அறியாத சொரூபம் ஆக முடியாது. எப்படி தந்தை பெயர், ரூபத்திலிருந்து விலகியிருக்கிறார் என்றால், அனைவரையும் விட தந்தையின் பெயருக்குத் தான் அதிக புகழ் பாடப்படுகிறது. அது போலவே அற்ப காலத்தின் பெயர் மற்றும் புகழிலிருந்து விலகியிருப்பவர் ஆனீர்கள் என்றால் நிரந்தரமாக அனைவரின் அன்பிற்குரியவராக இயல்பாகவே ஆகி விடுவீர்கள். பெயர் மற்றும் புகழின் பிச்சைக்காரத்தனத்தின் (அம்சம்) சிறிதளவையும் தியாகம் செய்யுங்கள், அந்த மாதிரியான தியாகிகளே உலகிற்கு பாக்கியத்தை உருவாக்குபவர் ஆக முடியும், காமத்தின் விளைவுகள் என்ற பழத்தை அதிகம் அருந்தும் பயிற்சி உள்ளவராக இருக்கிறார்கள். எனவே பழுக்காத பழத்தை உண்டு விடுகிறார்கள். சேமிப்பு ஆக அதாவது பழுக்கவிடுவதில்லை, பழுக்காத பழத்தை உண்பதால் என்னவாகும்? உடல் நிலையில் கொஞ்சம் மேலே கீழே போகும். அதுபோலவே மனநிலையில் மேலே கீழே அதாவது குழப்பம் ஏற்பட்டு விடுகிறது. கர்மத்தின் பலனோ தானாகவே உங்கள் எதிரில் சம்பன்ன ரூபத்தில் வரும். ஒரு உயர்ந்த காரியம் செய்வதின் 100-மடங்கு நிரம்பிய பலனின் சொரூபத்தில் வரும் ஆனால் அற்ப காலத்தின் இச்சை என்றால் என்னவென்றே தெரியாத நிலை (இச்சா மாத்ரம் அவித்யா) இருக்க வேண்டும். தியாகம் செய்தீர்கள் என்றால் பாக்கியம் அதுவாகவே உங்கள் பின்னால் வரும். இச்சை நல்ல காரியத்தை முடித்து விடுகிறது. எனவே இச்சையென்றால் என்னவென்றே தெரியாத நிலை வேண்டும். மகான் ஞானி சொரூபத்திலோ இருக்கிறீர்கள் ஆனால் இதில் அதிகம் புத்திசாலி ஆகாதீர்கள். இது நடக்கத்தான் வேண்டும். நாள் செய்தேன், எனக்கு கிடைக்கத் தான் வேண்டும் என்ற இதை நியாயம் என்று புரிந்து கொள்ளாதீர்கள். எனக்கும் கொஞ்சம் நியாயம் கிடைக்க வேண்டும். பகவானின் வீட்டில் கூட நியாயம் இல்லை என்றால் வேறு எங்கு கிடைக்கும்? அந்த மாதிரி ஒருபொழுதும் நியாயம் கேட்பவராக ஆகாதீர்கள், இதுபோன்று ஏதேனும் கேட்பவர் தன்னை திருப்தியான ஆத்மாவாக அனுபவம் செய்ய மாட்டார். எனவே எப்பொழுதும் அனைத்து பிராப்திகளினால் திருப்தியான ஆத்மா ஆகுங்கள், பிராமண வாழ்க்கையின் சுலோகன் மாஸ்டர் சர்வ சக்திவானின் பொக்கிஷத்தில் பிராப்தியில்லை என்ற பொருள் ஒன்றும் இல்லை. இந்த சுலோகனை எப்பொழுதும் நினைவில் வையுங்கள். இப்பொழுது ஆழமான ஞானத்தின் கூடவே பரிவர்த்தனையையும் (மாற்றம்) ஆழமாக

செய்யுங்கள், கஷ்டமாக இருக்கிறதா என்ன? நீங்கள் அனேகரின் கஷ்டத்தை சகஜமாக்கக்கூடிய மீட்பு படை ஆவீர்கள். நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் மகாதானி வரதானி, அற்ப காலத்தின் ஆசை என்றால் என்னவென்று தெரியாதவர்களுக்கு, தனக்கு தியாகியாகி, அனைவரின் பாக்கியத்தை ஏற்படுத்தும் பாக்கியத்தை உருவாக்குபவர்களுக்கு, எப்பொழுதும் நிரம்பிய மற்றும் திருப்தியாக இருப்பவர்களுக்கு, அனைவரின் பிரச்சனைகளுக்கு சமாதானம் செய்பவர்களுக்கு அந்த மாதிரி தந்தைக்குச் சமமான மகான் ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

தாதி, ப்ருஜேந்த்ராஜீ தனிப்பட்ட சந்திப்பு: விளையாட்டு வீரனாகி ஒவ்வொரு நேரத்தின் விளையாட்டைப் பார்ப்பதில் மகிழ்ச்சி வருகிறது தான் இல்லையா? விளையாட்டு வீரனின் நிலை, எப்பொழுதும் சிரித்த முகத்துடன் இருப்பதின் அனுபவம் செய்விக்கிறது. எந்தவிதமான ஏதாவது ஒரு விஷயம் எதை உலகியல் மனிதர்கள் ஆபத்து என்று நினைக்கிறார்கள், ஆனால் விளையாட்டு வீரணாகி விளையாடுபவர்கள் மற்றும் விளையாட்டைப் பார்ப்பவர்கள் அந்த மாதிரி ஆபத்தான ரூபத்தை விளையாட்டு என்று புரிந்து மனமகிழும் பொழுது போக்காக அனுபவம் செய்வார்கள். மிகப் பெரிய ஆபத்து கூட மனமகிழ்விக்கும் பொழுதுபோக்கிற்கான காட்சியாக அனுபவம் ஆக வேண்டும். இது தான் மாஸ்டர் படைப்பவரின் நிலை, எப்படி மகா விநாசத்தையும் சொர்க்கத்தின் கதவுகள் திறப்பதற்கான சாதனம் என்று கூறுகிறீர்கள். மகாவிநாஷம் எங்கே மற்றும் சொர்க்கத்தின் கதவுகள் எங்கே? அப்படி மகாவிநாஷத்தின் ஆபத்தையும் மனதை மகிழ்விக்கும் ரூபம் கொடுத்து விட்டீர்கள் இல்லையா? அதே போல் ஏதாவது சிறிய மற்றும் பெரிய பிரச்சனை அல்லது ஆபத்து போன்றவை மனதை மகிழ்விக்கும் நிகழ்வுகளாக தென்பட வேண்டும். ஐயோ, ஐயோ என்பதற்குப் பதிலாக "ஓஹோ" என்ற வார்த்தை வெளியாக வேண்டும். இதைத் தான் அங்கதனுக்குச் சமமான நிலை என்று கூறுவது எப்படி யோகியின் நிலையை மனிதர்கள் வர்ணனை செய்கிறார்கள் துக்கமும் சுகத்தின் ரூபத்தில் அனுபவம் ஆக வேண்டு துக்கம் சுகத்தில் சமநிலை, இகழ்ச்சி, புகழ்ச்சியில் சமநிலை. இது துக்கம், இது சுகம் என்ற இந்த ஞானம்

இருந்தபோதிலும் துக்கத்தின் பாதிப்பில் வராதீர்கள். சுகமான நாட்கள் வரப்போகின்றன என்று புரிந்து துக்கமும் பலியாகி விட வேண்டும். இதைத் தான் சம்பூர்ண யோகி நிலை என்று கூறுவது. எதிரியையும் நண்பனில் மாற்றி விட வேண்டும். எதிரியின் பகைமை செயல்பட முடியாது. எதிரியாகி வரட்டும் மற்றும் பலியானவராகி செல்லட்டும். இதைத் தான் பரிவர்த்தனையின் (மாற்றம்) சக்தி என்று கூறுவது, இது தான் சக்திகளின் மகினம அந்த மாதிரி சக்தி சேனை தயாராகி இருக்கிறதா? உலகத்தையே மாற்றுவதற்கான சவால் விடுகிறீர்கள் என்றால், இது என்ன பெரிய விஷயம்? இதற்கான சுலபமான வழி பெறுபவராக இல்லாமல் கொடுக்கும் வள்ளலாக ஆகுங்கள். கொடுக்கும் வள்ளலின் எதிரில் அனைவரும் தானாகவே தலைவணங்குவார்கள். பொதுவாகவே ஏதாவது பொருள் கொடுத்தீர்கள் என்றாலும், அவர்கள் தன்னுடைய தலையையும், கண்களையும் கீழே தாழ்த்திக் கொள்வார்கள். பணிவைக் காண்பிப்பதற்காக அந்த மாதிரி செய்கிறார்கள். அது ஸ்தூலமான யுக்தி ஆகும். மேலும் இங்கே சம்ஸ்காரம் சுபாவத்தினால் வளைந்து கொடுப்பீர்கள். அப்பொழுது தான் எதிரியும் பலியாவார்கள், அப்படியானால் அந்த மாதிரி சக்தி சேனை தயாராகி இருக்கிறதா?

(மும்பையைச் சேர்ந்தவர்கள் வெள்ளி விழா கொண்டாடுகிறார்கள்). வெள்ளி விழாவையோ மிக நன்றாகக் கொண்டாடுங்கள் ஆனால் தன்னுடைய சம்ஸ்காரம் இணைந்து போவதின் விழாவையும் கொண்டாடுங்கள். அந்த மாதிரி விழாவிலோ பாப்தாதாவும் வர முடியும். சொற்பொழிவு நிகழ்த்தும் விழாவில் வர மாட்டோம் -சம்ஸ்காரம் இணைந்து போவதின் விழாவில் வருவோம். சரி. முதலில் செய்து காண்பியுங்கள் மும்பை ஒரு உதாரணம் ஆகட்டும்; எப்பொழுதும் வெற்றி பெறுபவர்கள், எப்பொழுதும் தடையற்றவர்கள் என்று அந்த மாதிரி விழாவைக் கொண்டாடுங்கள், அந்த விழா மனிதர்களை எழுப்பி விடுவதற்காக இருக்கட்டும், மனிதர்களுக்கும் இன்றைய நாட்களில் அனுபவம் செய்விக்கும். அனுபவி மூர்த்திகளின் அவசியம் இருக்கிறது. எப்படி வெளிநாட்டில் அனுபவம் செய்விப்பது ஆரம்பம் ஆகியிருக்கிறது ஏதோ ஆன்மீக சக்தி பேசிக் கொண்டிருக்கிறது என்று அனுபவம் செய்கிறார்கள், அந்த மாதிரி அவையை பாரதத்திலும் அனுபவம் செய்வியுங்கள். அந்த மாதிரி

வெள்ளி விழாவைக் கொண்டாடுங்கள், டாபிக் (தலைப்பு) மூலமாக டாப் நிலையை (உயர்ந்த நிலையை) அனுபவம் செய்வியுங்கள். அந்த மாதிரி திட்டத்தைத் தயாரியுங்கள். எப்படி கோவிலுக்குச் சென்றவுடனேயே உள்உணர்வு மாறி விடுகிறது. அதே போல் நிகழ்ச்சியில் வந்தவுடனேயே ஏதாவது புது அனுபவத்தை அனுபவம் செய்ய வேண்டும். அற்ப காலத்திற்காக செய்தாலும் கூட அற்ப காலத்தின் முத்திரை நினைவில் இருந்து விடும். இப்பொழுது என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா? நல்லது.

**வரதானம்: அழியாத ஊக்கம், உற்சாகம் மூலமாக வருகின்ற புயலையும் (தூ:ஃபான்) பரிசாக (தோ:ஃபா) ஆக்கக்கூடிய உயர்ந்த பிராமண ஆத்மா ஆகுக!**

ஊக்கம், உற்சாகம் தான் பிராமணர்களின் பறக்கும் கலையின் இறக்கைகள் ஆகும். இந்த இறக்கைகள் மூலம் எப்பொழுதும் பறந்து கொண்டே இருங்கள், இந்த ஊக்கம் உற்சாகம் பிராமணர்கள் உங்களுக்காக மிகப் பெரிய சக்தி ஆகும். இரசனையற்ற வாழ்க்கை இல்லை எப்பொழுதும் ஊக்கம், உற்சாகம் என்ற இரசனை நிரம்பிய வாழ்க்கை ஆகும். ஊக்கம் உற்சாகம் கடினத்தையும் சுலபமாக்கி விடுகிறது. அவர் ஒருபொழுதும் மனமுடைந்து போக முடியாது. உற்சாகம் புயலையும் பரிசாக ஆக்கி விடுகிறது. உற்சாகம் எந்த விதமான சோதனை அல்லது பிரச்சனையையும் மனம் மகிழும் அனுபவமாக செய்விக்கிறது. அந்த மாதிரி அழியாத ஊக்கம் உற்சாகத்தில் இருப்பவர் தான் உயர்ந்த பிராமணன் ஆவார்.

**சுலோகன்: அமைதியின் அகர்பத்தியை எரிய வைத்தீர்கள் என்றால் அமைதியின்மையின் துர்நாற்றம் விலகி விடும்!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

## 29.11.1978 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# திருப்தியான நிலை மூலம் மகிழ்ச்சி மற்றும் பாராட்டுதலின் பிராப்தி!

பாப்தாதா இன்று உலகில் ஜொலித்துக் கொண்டிருக்கும் தன்னுடைய மணிகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார், ஒவ்வொரு மணிக்கும் அவரவர்களின் ஜொலிட்பு இருக்கிறது. ஒவ்வொரு மணியும் தன் மூலமாக தந்தையின் குணங்கள் மற்றும் காரியத்தை வரிசைக்கிரமமாக பிரத்யக்ஷம் செய்து கொண்டிருக் கிறது. ஒவ்வொரு மணி மூலமாக பாப்தாதா தென்படுகிறார். இந்த விசித்திர காட்சியை பக்தர்கள் "எங்கு பார்த்தாலும் அங்கு நீயே நீ தான்" என்று கூறிவிட்டார்கள், மகாரதிகளிலும் பாப்தாதா தென்படுகிறார். ஒவ்வொருவரின் வாயிலிருந்தும் ஒரே ஒரு, பாபா, பாடா என்ற வார்த்தையின் பாடலைக் கேட்க முடிகிறது. அனைத்து பிராமண ஆத்மாக்களின் கண்களில் ஒரு தந்தை கண்மணிக்குச் சமமாக நிரம்பியிருக்கிறார். எனவே பிராமண உலகத்தில் எங்கு பார்த்தாலும் அங்கு நீயே நீ தான் என்பதின் நடைமுறை அனுபவம் ஆகிறது. குழந்தைகளின் தற்சமயத்து அனுபவத்தை பக்தர்கள் தன்னுடைய வார்த்தைகளில் எங்கும் நிறைந்தவர் என்று கூறியிருக்கிறார்கள். பரந்தாமத்தில் வாசம் செய்பவர் தந்தை மேலும் ஒவ்வொரு எண்ணம் மற்றும் காரியத்தில் எப்பொழுதும் துணைவனாக தந்தையின் அனுபவம் ஆகிறதா? சாட்சியாகவா அல்லது துணைவனாகவா, என்ன அனுபவம் ஆகிறது? அனைவரின் துணைவன் என்றால் எங்கும் நிறைந்தவர் ஆகவில்லையா? பக்தர்கள் வார்த்தையை காப்பி செய்திருக்கிறார்கள் ஆனால் எப்பொழுது? எப்படி? என்ற உண்மையான அர்த்தத்தை மறந்து விட்ட காரணத்தினால் மகிமை மாறி நிந்தனையாகி விட்டது.

பாப்தாதா அனைத்து குழந்தைகளின் தற்சமய நிலையின் தாரணை சொரூபத்தைப் பார்த்து முக்கியமாக ஒரு விஷயம் பார்க்கிறார். அது

எது? அனைத்து குழந்தைகளிலும் எப்பொழுதும் திருப்தியாக இருக்கும் ஆதமாக்கள் எத்தனை பேர்? அனைத்தையும் விட விசேஷமான குணம் அது முகத்தின் ஜொலிப்பின் மூலம் தென்படும். அது தான் திருப்தி. திருப்தி மூன்று விதங்களிலும் வேண்டும். ஒன்று தந்தை மேல் திருப்தி, இரண்டாவது எப்பொழுதும் தனக்குத் தானே திருப்தியாக இருப்பது, மூன்றாவது அனைத்து உறவு மற்றும் சம்மந்தத்தில் திருப்தி. இதில் சைத்தன்ய ஆத்மாக்கள் மற்றும் இயற்கை இரண்டும் வந்து விடுகிறது. திருப்தியின் அடையாளமாக வெளிப்படை ரூபத்தில் மகிழ்ச்சி நிறைந்த நிலை தென்படும். எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்த நிலை, இந்த மகிழ்ச்சியின் ஆதாரத்தில் உடனடி பலனாக அந்த ஆத்மாவிற்கு எப்பொழுதும் இயல்பாகவே அனைவரின் பாராட்டும் கிடைக்கும். விசேஷம் திருப்தி, அதனுடைய அடையாளம் மகிழ்ச்சி. அதற்கான கண்கூடான (பிரத்யக்ஷ) பலன் பாராட்டு, இப்பொழுது உங்களை நீங்களே பாருங்கள். பாராட்டுதலை மகிழ்ச்சி மூலம் தான் பிராப்தி அடைய முடியும். யார் எப்பொழுதும் திருப்தியாக மற்றும் மகிழ்ச்சியாக இருக்கிறாரோ அவரை ஒவ்வொருவரும் அவசியம் பாராட்டுவார்கள். இந்த முயற்சி செய்யும் வாழ்க்கையில் காலப்போக்கில் பிரச்சனைகள் அல்லது சூழ்நிலைகள் நாடகத்தின்படி வரவே தான் செய்யும், பிறந்தவுடனேயே முன்னேற வேண்டும் என்ற லட்சியம் வைப்பது என்றால் சோதனைகள் மற்றும் பிரச்சனைகளை வரவழைப்பது. நீங்கள் செய்த வரவழைப்யை மறந்து விடுகிறீர்கள், எப்பொழுது பாதையை முடிவு செய்ய வேண்டும் என்றால் பாதை தென்படவில்லை என்ற இது இருக்க முடியுமா? பாதையில் வரும் காட்சிகளைப் பார்த்து நின்று விடுகிறீர்கள். எனவே அடைய வேண்டிய இலக்கை தூரமாக அனுபவம் செய்கிறீர்கள். காட்சிகளைப் பார்த்துக் கொண்டே கடந்து சென்று கொண்டே இருக்க வேண்டும் ஆனால் காட்சிகளைப் பார்த்து இது ஏன், இது என்ன, இது அப்படியில்லை, இது இப்படியில்லை என்ற இந்த விஷயங்களில் நின்று விடுகிறீர்கள். ஒவ்வொரு காட்சியையும் சரி செய்வதில் ஈடுபட்டு விடுகிறீர்கள். கடந்து செல்வதற்குப் பதிலாக சரி செய்வதில் பிஸியாகி விடுகிறீர்கள். எனவே தந்தையின் நினைவின் தொடர்பை தொய்வாக்கி விடுகிறீர்கள். மனமகிழ்ச்சிக்குப் பதிலாக மனதை சோர்வடைய வைத்து விடுகிறீர்கள், ஆஹா காட்சியே ஆஹா என்று ஆஹா. ஆரா என்பதற்குப் பதிலாக ஐயோ என்று அதிகம் கூறுகிறீர்கள், 'ஐ' எனறால் ஆச்சரியம் நிறைந்தது. எனவே போகப் போக

நின்று விடுகிறீர்கள், களைப்படையும் காரணத்தினால் சில நேரம் தந்தையோடு இனிமையிலும் இனிமையான புகார்களை கொடுத்துக் கொண்டே ராயல் ரூபத்தில் தந்தையிடம் அதிருப்தியாகி விடுகிறீர்கள். அனேக குழந்தைகள், இந்த மாதிரி முதலில் ஏன் கூறவில்லை என்கிறார்கள். எளிய (சகஜம்) மார்க்கம் என்று கூறினீர்கள், சகித்துக் கொள்ள வேண்டிய மார்க்கம் என்று கூறவில்லையே? சகஜ மார்க்கத்திற்குப் பதிலாக சகித்துக் கொள்வதற்கான மார்க்கம் என்று அனுபவம் செய்கிறார்கள் ஆனால் சகித்துக் கொள்வது தான் முன்னேறிச் செல்வதாகும். உண்மையில் சகித்துக் கொள்வது இருப்பதில்லை, ஆனால் தன்னுடைய பலஹீனத்தின் காரணமாக சகித்துக் கொள்ளும் அனுபவமாகிறது. எப்படி நெருப்பிள் குணம் எரிப்பது ஆனால் அதன் குணத்தின் ஞானம் இல்லாத காரணத்தினால் அதிலிருந்து லாபத்தை எடுப்பதற்குப் பதிலாக நஷ்டம் ஏற்படுத்தி விடுகிறார்கள் என்றால், சுகத்திற்குப் பதிலாக சகித்துக் கொள்ள வேண்டியதாக இருக்கிறது. ஏனென்றால் பொருளுக்குப் பதிலாக தன்னை எரித்துக் கொள்கிறார்கள், குணத்தின் ஞானம் இல்லாத காரணத்தினால் சுகத்திற்குப் பதிலாக சகித்துக் கொள்ள வேண்டியதாக இருக்கிறது. அதே போல் பிரச்சனைகள் அல்லது சூழ்நிலைகள் வரும் காரணத்தின் ஞானம் இல்லாத காரணத்தினால், முன்னேறிச் செல்வதற்கான சுகமான அனுபவத்திற்குப் பதிலாக சகித்துக் கொள்வதை அனுபவம் செய்கிறார்கள். எனவே சகஜ மார்க்கத்திற்குப் பதிலாக சகித்துக் கொள்வதின் மார்க்கமாக அனுபவம் செய்கிறார்கள். அந்த மாதிரி குழந்தைகள் தந்தை மேல் அதாவது தந்தையின் ஞானத்தின் மேல் மற்றும் ஞானத்தை தாரணை செய்யும் மார்க்கத்தின் மேல் அதிருப்தியாக இருக்கிறார்கள். கூடவே தன் மேலும் அதிருப்தியாக இருக்கிறார்கள். தன் மேல் (வழிமுறை) அதிருப்தி என்றால், அனைவரின் உறவு சம்மந்தத்தின் மீதும் அதிருப்தி. இந்தக் காரணத்தினால் பிரசன்னமாக (மகிழ்ச்சி) அதாவது எப்பொழுதும் குஷி இருப்பதில்லை. சில நேரம் திருப்தியாக அதாவது மகிழ்ச்சி நிறைந்தும் அடுத்த சில நேரம் அதிருப்தியானவராக இருக்கிறீர்கள். எனவே சங்கமயுகத்தின் விசேஷ பொக்கிஷமான அதீந்திரிய சுகத்தின் அனுபவம் செய்ய முடிவதில்லை.

எனவே இன்றிலிருந்து எப்பொழுதும் திருப்தியாக மற்றும் மகிழ்ச்சி நிறைந்த நிலையில் இருப்பதற்காக விசேஷ வரதானத்தை தானும் பெற்றுக் கொள்ளுங்கள் மேலும் பிறருக்கும் வழங்குங்கள். அந்த மாதிரி தான் தந்தையையும் அல்லது தனக்குத் தானேயும் பாராட்டிக் கொள்ள முடியும். பாராட்டுதலுக்கான உயர்ந்த சாதனமே ஒவ்வொரு பிராமணனின் மகிழ்ச்சி நிறைந்த நிலையாகும். ஒவ்வொரு காரியத்தின் பாராட்டுதல் அனைவரின் மகிழ்ச்சி நிறைந்த நிலையின் ஆதாரத்தில் இருக்கிறது. இந்த யக்ஞத்தின் இறுதி ஆவதி (சமர்ப்பணம்) அனைத்து பிராமணர்களின் திரந்தர மகிழ்ச்சி நிறைந்த நிலை, பிரத்யக்ஷம் என்றால் போற்றுதலின் ஓசை நாலாபுறமும் ஒலிக்கும், அதாவது வெற்றிக் கொடி பறக்கும். இப்பொழுது என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா? எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருங்கள் மேலும் எப்பொழுதும் அனைவரையும் மகிழ்வியுங்கள். நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் தந்தையின் கட்டளைப்படி நடக்கும், எப்பொழுதும் திருப்தியாக மற்றும் மகிழ்ச்சியாக இருப்பவர்களுக்கு, அனைவருக்கும் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருப்பதற்கான வரதானத்தைக் கொடுக்கக்கூடிய மகாதானி வரதானி குழந்தைகளுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

மும்பையில் இருப்பவர்களுக்கு விசேஷ ரூபத்தில் பாப்தாதா அன்பு நினைவுகளைக் கொடுக்கிறார். மும்பையில் இருப்பவர்களிடம் தைரியம் மற்றும் ஊக்கம் மிக நன்றாக இருக்கிறது. மும்பையைச் சேர்ந்தவர்களைப் பார்த்து தந்தையின் கூடவே இயற்கையும் வரவேற்பு செய்தது (ஏனென்றால் குளிர் அதிகமாகி விட்டது). இயற்கை பயிற்சி செய்வித்தது. கடைசியில் வரக்கூடிய சோதனையின் அனுபவத்தை முன்பாகவே செய்வித்து உறுதியாக ஆக்கியிருக்கிறது. எனவே பயப்படாதீர்கள், மும்பையில் இருப்பவர்களுக்கு தந்தை மேல் அன்பு இருக்கிறது தான். இல்லையா? பாப்தாதாவிற்கும் குழந்தைகள் மேல் விசேஷ அன்பு இருக்கிறது. மும்பையில் இருப்பவர்கள் இப்பொழுது எப்பொழுதும் திருப்தியாக மற்றும் மகிழ்ச்சியாக இருப்பதின் பரீட்சையில் நம்பர்-1'ல் தேர்ச்சி பெறுவார்கள், மிக நல்லது. நீங்கள் உடன் இருப்பதை (துணையை) விட்டுச் சென்றால் கூட பாப்தாதா விட மாட்டார். விசேஷமாக மும்பை மற்றும் டில்லியில் ஆதி இரத்தினங்கள்

அதிகமாக இருக்கிறர்கள். உலக சேவையின் ஸ்தாபனை காரியத்தில் மும்பை மற்றும் டெல்லியின் விசேஷ சகயோகம் இருக்கிறது. தேவையான நேரத்தில் சகயோகி ஆகுபவர்களுக்கு மகத்துவம் இருக்கிறது. எனவே சகயோகி குழந்தைகள் மேல் தந்தைக்கும் அன்பு இருக்கிறது. நல்லது.

**பார்ட்டிகளுடன்:** சதா வெற்றி அடைபவர்களாக ஆகுக என்ற வரம் பெற்றவர்களா? வரமளிப்பவர் என்ன வரதானம் கொடுத்திருக்கிறாரோ அதே வரதானத்தை எப்பொழுதும் வாழ்க்கையில் கொண்டு வருவது ஒவ்வொருவரின் வேலையாகும். இந்த வரதானத்தை வாழ்க்கையில் நிரப்புவது என்றால், வரம் பெற்ற சொரூபம் ஆவது. அந்த மாதிரி ஆகியிருக்கிறீர்களா? மகாவீரரையும் வரதானி என்று கூறுகிறார்கள், மேலும் சக்திகளையும் வரதானி என்று கூறுகிறார்கள். உங்களுடைய ஜட விக்கிரகங்கள் மூலமாக அனேக பக்தர்கள் வரதானத்தைப் பெற்று விடுகிறார்கள் என்றால், சைத்தன்யத்திலோ வரதானங்களினால் பையை நிரப்புபவர்கள் நீங்கள் இல்லையா? நீங்கள் மகாவீர் தான் இல்லையா? மகாவீர் என்றால் எப்பொழுதும் வெற்றி அடைபவர். அழியாத தந்தை இருக்கிறார் என்றால், வரதானமும் அழியாதது. அற்ப காலத்திற்கானது இல்லை, அதை பாதுகாக்கத் தெரிய வேண்டும் அல்லது திருடப்பட்டு விடுகிறதா? நான் பெறுபவன் அல்ல, ஆனால் கொடுப்பவன் என்ற இந்த ஒரு விஷயத்தை மட்டும் நினைவில் வையுங்கள். இப்பொழுது பெறுவதற்கான நாள் முடிவடைந்தது. இப்பொழுது வள்ளலாகிக் கொடுப்பதற்கான நேரம் ஆகும். கேட்பதோ குழந்தைப் பருவத்தில் இருக்கும். வயோதிகர் ஒரு சின்ன பொம்மை கொடுங்கள் என்று கேட்டால் நன்றாக இருக்குமா? கொஞ்சம் சக்தி கொடுத்து விடுங்கள், கொஞ்சம் உதவி செய்யுங்கள் என்ற இந்த பொம்மையைக் கேட்கிறீர்கள். இப்பொழுது திருப்தியான ஆத்மாவாக ஆகுங்கள். வள்ளலின் குழந்தைகள், யாசிக்கிறீர்கள் என்றால், பார்ப்பவர்கள் என்ன கூறுவார்கள்? வெற்றியின் சாதனம் சுயம் எப்பொழுதும் வெற்றி அடைபவராக ஆவது, தன்னுடைய உள்உணர்வு, எண்ண அலைகள் பரவுகிறது மேலும் எண்ண அலைகளின் ஆதாரத்தில் அனைவருக்கும் அனுபவம் ஆகும். எனவே காரியம் செய்வதற்கு முன்பு விசேஷமாக தன்னுடைய உள்உணர்வின் மேல் கவனம் வைக்கும் பட்டி வேண்டும், இதன் மூலமாகத்தான் எண்ண அலைகள் மூலமாக

அனேகர்களின் உள்உணர்வை மாற்றம் செய்ய முடியும். முதலில் நீங்கள் எப்பொழுதும் குஷியின் ஊஞ்சலில் ஆடிக் கொண்டே இருங்கள் என்ற இந்த கவனம் வைக்க வேண்டும். சிரித்த முகம் அனேகரை தன் பக்கம் கவர்ந்திழுக்கும்.

குமாரிகளைப் பார்த்து: குமாரிகளுக்கு மிக அதிக பெரிய பொறுப்பு இருக்கிறது. ஒருவர் அனேகரின் நன்மைக்காக பொறுப்பாளர் ஆக முடியும், யார் உலக நன்மைக்குப் பொறுப்பாளர் ஆகிறாரோ அவர் தான் பிரம்மாகுமாரி. எல்லைக்கப்பாற்பட்ட உலகிற்கு நன்மை செய்பவரேயன்றி எல்லைக்குட்பட்ட நன்மை அல்ல, ஆர்வத்தில் குறைவு இருக்கிறது என்றால், தடையும் தன்னுடைய காரியத்தை செய்யும். ஒருவேளை நெருப்பு தீவிரமாக சுடர்விட்டு எரிகிறது என்றால் குப்பை சாம்பல் ஆகி விடும். ஆர்வம் நிறைந்த ஈடுபாடு இருக்கிறது என்றால் தடை இருக்க முடியாது. கர்மயோகா மூலம் கர்மபோக் (கர்ம விளைவுகளை அனுபவித்தல்) கூட மாறி விடுகிறது. மாற்றம் செய்வது தன்னுடைய தைரியத்தினால் செய்யும் காரியம் ஆகும். குமாரிகள் மேலோ எப்பொழுதும் பாப்தாதாவிற்கு நம்பிக்கை இருக்கிறது. நல்லது.

வரதானம்: பிராமண வாழ்க்கையின் ஜாதகத்தைத் தெரிந்து எப்பொழுதும் குஷியில் இருக்கக்கூடிய உயர்ந்த பாக்கியம் நிறைந்தவர் ஆகுக!

பிராமண வாழ்க்கை புது வாழ்க்கை ஆகும். பிராமணன் தொடக்கத்தில் தேவி, தேவதையாக இருக்கிறார். மேலும் இப்பொழுது பி.கு. ஆக இருக்கிறார். பிராமணர்களின் ஜாதகத்தில் மூன்று காலங்களும் மிக நல்லதாக இருக்கிறது. என்ன நடந்ததோ அது நல்லதே, மேலும் என்ன நடந்து கொண்டிருக்கிறதோ அது இன்னும் நல்லது, மேலும் என்ன நடக்கப்போகிறதோ அது மிக மிக நல்லது. பிராமண வாழ்க்கையில் ஜாதகம் எப்பொழுதுமே நல்லதாக இருக்கிறது. இதற்கு உத்திரவாதம் இருக்கிறது. எனவே சுயம் பாக்கியத்தை உருவாக்கும் தந்தை பாக்கியத்தின் உயர்ந்த ரேகையை போட்டிருக்கிறார், என்னை அவருடையவராக ஆக்கி விட்டார் என்ற இந்த குஷியிலேயே எப்பொழுதும் இருங்கள்.

சுலோகன்: ஒரே சீரான நிலையை அனுபவம் செய்ய வேண்டும் என்றால் ஒரு தந்தையோடு அனைத்து உறவுகளின் சுவையை எடுத்துக் கொள்ளுங்கள்!

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳

# 01.12.1978 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அனைத்து பொக்கிஷங்களின் சாவி ஒருவருடையவராக இருத்தல்!

பாப்தாதா எப்பொழுதும் குழந்தைகளின் அதிர்ஷ்டத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். ஆஹா அதிர்ஷ்டமே ஆஹா அந்த மாதிரி உயர்ந்த அதிர்ஷ்டம், அது தந்தையையும் தன்னுடைய அன்பின் சம்மந்தத்தினால் உடலற்ற நிலையிலிருந்து உடலில் வருபவராக ஆக்கி விடுகிறது. சப்தத்திலிருந்து விலகிய தந்தையையும் சப்தத்தில் கொண்டு வருகிறது. சுயம் பகவானை எப்படி விரும்புகிறீர்களோ அப்படி சொரூபத்தில் கொண்டு வந்து எஜமானனை சேவகனாக ஆக்கி விடுகிறது. தந்தையின் அனைத்து பொக்கிஷங்களின் அதிகாரி ஆவதின் மற்றும் தந்தையை தன் மேல் சமர்ப்பணம் செய்விக்கும் சாவி குழந்தைகளின் கையில் இருக்கிறது. யாருடைய கையில் அந்த மாதிரி சாவி இருக்கிறதோ அவரை விட உயர்ந்தவர் வேறு யாராவது இருக்க முடியுமா? அந்த மாதிரி சாவியைப் பாதுகாப்பாக வைத்திருக்கக்கூடிய ஞானம் நிறைந்த மற்றும் அறிவு நிறைந்தவராக ஆகியிருக்கிறீர்களா? சாவியையோ தந்தை கொடுத்து விட்டார். அந்த சாவி மூலமாக என்ன விரும்புகிறீர்களோ அதை ஒரு விநாடியில் அடைய முடியும். படைப்பவரே சேவகனாக ஆகி விட்டார் என்றால். அனைத்து படைப்பும் உயர்ந்த ஆத்மாக்கள் உங்கள் எதிரில் சேவைக்காக கட்டுண்டு இருக்கிறது. எப்பொழுது அசுர இராவணன் தன்னுடைய அறிவியல் சக்தி மூலம் இயற்கை அதாவது தத்துவங்களை இன்று வரையிலும் தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறான் என்றால் ஈஸ்வரிய குழந்தைகள் நீங்கள் மாஸ்டர் படைப்பவர். மாஸ்டர் சர்வ சக்திவான் உங்கள் எதிரில் இந்த இயற்கை மற்றும் சூழ்நிலை தாசியாக ஆக முடியாதா? தன்னுடைய அமைதியின் சக்தியை நன்றாகத் தெரிந்திருக்கிறீர்களா? அல்லது அனேக சக்திகள் கிடைத்த காரணத்தினால் அதன் மகத்துவத்தை மறந்து விடுகிறீர்களா? அறிவியலின் அணு சக்தி மகான் காரியம் செய்ய முடியும் என்றால்,

ஆத்மீக சக்தி. பரமாத்மா சக்தி என்ன தான் செய்ய முடியாது? அதன் அனுபவத்தை மிகக்குறைவாக மற்றும் எப்பொழுதாவது செய்கிறீர்கள். பரமாத்மா சக்தியை தன்னுடையதாக ஆக்க முடியும், ரூபத்தை மாற்றம் செய்விக்க முடியும் என்றால், இயற்கை மற்றும் சூழ்நிலைகளின் ரூபம் மற்றும் குணங்களை மாற்றம் செய்ய முடியாதா? கீழான இயற்கையை தன்னுடைய உயர்ந்த நிலை மூலம் மாற்றம் செய்ய முடியாதா? சூழ்நிலையை தன்னுடைய சுயநிலையினால் வெற்றியை அடைய முடியாதா? அந்த மாதிரி மாஸ்டர் படைப்பவர், சக்திசாலியாக ஆகியிருக்கிறீர்களா?

பாப்தாதா குழந்தைகளின் உயர்ந்த பிராப்தியைப் பார்த்து ஒவ்வொரு குழந்தையும் அந்த மாதிரி உயர்ந்த ஆத்மா, ஒவ்வொரு குழந்தையும் அதிசயம் மிக்க காரியத்தை செய்ய முடியும் என்று இதைத் தான் கூறுகிறார். அப்படியானால் இத்தனை பேர் என்ன செய்வீர்கள்? சாவியோ மிக நல்லதாகக் கிடைத்திருக்கிறது, சாவியை உபயோகிக்க வேண்டியவர்கள் உபயோகிப்பதில்லை. அனைவருக்கும் சாவி கிடைத்திருக்கிறதா? அல்லது சிலருக்குத் தான் கிடைத்திருக்கிறதா? புதியவர்கள், பழையவர்கள். சிறியவர்கள் மற்றும் பெரியவர் அனைவரும் அதிகாரிகள் தான். எப்படி இன்றைய உலகில் கூட வரவேற்பு மற்றும் ஏதாவது விருந்தினரை வரவேற்கிறார்கள் என்றால், நகரின் சாவியைக் கொடுக்கிறார்கள் இல்லையா? பாப்தாதாவும் ஒவ்வொரு குழந்தையின் வரவேற்பில் குழந்தைகளுக்கு தன்னுடைய மற்றும் பொக்கிஷங்களின் சாவியை வந்தவுடனேயே கொடுத்து விடுகிறார். அது அந்த மாதிரி மந்திர சக்தி நிறைந்த சாவி, அதன் மூலம் எந்த சக்தியை வரவழைக்க விரும்புகிறீர்களோ அந்த சக்தியின் சொரூபம் ஆக முடியும். இந்த மந்திர சாவி மூலமாக ஒரு நொடியில் எந்த உலகத்திற்குச் செல்ல விரும்புகிறீர்களோ அவ்வுலகில் வசிப்பவராக ஆக முடியும். எந்தக் காலத்தைத் தெரிய விரும்புகிறீர்களோ அந்தக் காலத்தைத் தெரிந்திருக்கும் ஆன்மீக ஜோதிடனாக ஆக முடியும். எண்ண சக்தியை எந்த வேகத்தோடு, எந்த மார்க்கத்தில் கொண்டு செல்ல விரும்கிறீர்களோ அதே விதமாக எண்ண சக்தியின் அதிகாரி ஆக முடியும். அப்படியானால் அந்த மாதிரி சாவியை ஏன் காரியத்தில் ஈடுபடுத்துவதில்லை. மகத்துவத்தை தெரிந்திருக்கவில்லையா என்ன? ஓரமாக வைக்கும் சம்ஸ்காரம்

வெளிப்பட்டு விடுகிறது. நல்ல பொருளை பாதுகாப்பாக ஒரு பக்கம் வைப்பார்கள். தேவையான நேரத்தில் காரியத்தில் கொண்டு வருவோம் ஆனால் இந்த சாவியை ஒவ்வொரு நேரத்திலும் காரியத்தில் கொண்டு வாருங்கள். சாவியைப் போடுங்கள் மற்றும் பொக்கிஷத்தைப் பெறுங்கள். அதில் சிக்கனம் செய்யாதீர்கள் ஆனால் ஒருவருடைய வராக ஆகுங்கள். ஒருவருடையவராக ஆவது தான் சாவியை உபயோகிக்கும் முறை ஆகும். அப்படியானால் இதைச் செய்ய தெரியாதா? இன்றைய நாட்களிலோ சாவியை உடன் வைத்துக் கொள்ளும் நாகரீகம் இருக்கிறது. பரிசாகக் கூட சாவி வளையம் கொடுப்பார்கள். இதை பத்திரப்படுத்துவது கடினமாக இருக்கிறதா என்ன? எந்தவொரு காரியத்தையும் தொடங்குவதற்கு முன்பு முதலில் எப்படி காரியமோ அந்த சக்தியை இந்த சாவி மூலமாக வரவழைத்தீர்கள் என்றால், ஒவ்வொரு சக்தியும் மாஸ்டர் படைப்பவர் உங்களின் சேவகனாகி சேவை செய்யும். வரவழைப்பதில்லை ஆனால் காரியத்தின் குழப்பத்தில் வரவழைப்பதற்குப் பதிலாக வருவது போவதின் குழப்பத்தில் வந்து விடுகிறீர்கள். நல்லது -கெட்டது, வெற்றி - தோல்வி என்ற இந்த வருவது போவது என்ற குழப்பத்தில் வந்து விடுகிறீர்கள். வரவழையுங்கள் என்றால் எஜமானன் ஆகி கட்டளை இடுங்கள். இந்த அனைத்து சக்திகளும் உங்களுடைய புஜங்களுக்கு சமமானவை, உங்களுடைய புஜங்கள். உங்களுடைய கட்டளை இன்றி எதுவும் செய்ய முடியாது. சகித்துக் கொள்ளும் சக்தியே காரியத்தை வெற்றிகரமாக செய் என்று கட்டளை இடுங்கள். பின்பு வெற்றி எப்பொழுதுமே நிச்சயிக்கப்பட்டு இருக்கிறது என்பதைப் பார்ப்பீர்கள். கட்டளை இடுவதில்லை, ஆனால் என்ன செய்கிறீர்கள்? தெரிந்திருக்கிறீர்களா? கட்டளை இடுவதற்குப் பதிலாக எப்படி சகித்துக் கொள்ள முடியும், எப்படி எதிர்கொள்ள முடியும், செய்ய முடியுமா அல்லது செய்ய முடியாதா என்று பயப்படுகிறீர்கள். இந்த மாதிரியான பயப்படுபவர்கள் கட்டளை இட முடியாது. இப்பொழுது என்ன செய்வீர்கள்? பயப்படுவீர்களா அல்லது கட்டளை இடுவீர்களா? மகாகாலனின் குழந்தைகளும் பயப்படுகிறார்கள் என்றால், வேறு யார் பயமற்றவராக இருப்பார்? ஒவ்வொரு விஷயத்திலும் பயமற்றவர் ஆகுங்கள். அலட்சியம் மற்றும் சோம்பல்தனத்தின் பயமற்றவர் ஆகாதீர்கள். மாயாவை வென்றவர் ஆவதில் பயமற்றவர் ஆகுங்கள். அப்படி மந்திரச்சாவி எது என்று கேட்டீர்களா? பரிசைப் பாதுகாப்பாக

வைக்கக் கற்றுக் கொள்ளுங்கள். மேலும் எப்பொழுதும் காரியத்தில் ஈடுபடுத்துங்கள். நல்லது.

அந்த மாதிரி உயர்ந்த, அதிர்ஷ்டம் நிறைந்த ஆன்மீக சக்தி சொரூபமான மாஸ்டர் படைப்பவர், இயற்கை மற்றும் சூழ்நிலைகளை அதிகாரத்தினால் வெற்றி அடையக்கூடிய, எப்பொழுதும் வெற்றி அடையும் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

தாதிகளுடன் உரையாடல்: சங்கம யுகத்தின் இராஜாக்களின் சாட்சாத்காரம் ஏற்படுகிறதா? இராஜ வம்சம் இங்கிருந்தே தான் தொடங்குகிறது. இப்பொழுது இராஜா மற்றும் பிரஜைகள் இருவரின் சம்ஸ்காரமும் பிரத்யக்ஷ ரூபத்தில் தென்படுகிறதா? பிரஜை என்றால் எப்பொழுதும் ஒவ்வொரு விஷயத்திலும் அடிமைத்தனத்தின் சம்ஸ்காரம். அவருக்கு எவ்வளவு தான் அதிகாரம் நிறைந்த ஆசனத்தை கொடுத்தீர்கள் என்றாலும், அவர் ஆசனதாரியாக ஆக முடியாது. எப்பொழுதும் பலமற்ற மற்றும் பலஹீன ஆத்மாவாக தென்படுவார்கள். தன்னுடைய தைரியம் இருக்காது ஆனால் மற்றவர்களின் தைரியம் மற்றும் சகயோகத்தினால் காரியத்தை வெற்றிகரமாகச் செய்ய முடியும். சகயோகம் அது வேறு ஆகும். மேலும் தைரியத்தை அதிகரிப்பதற்காக சகயோகம் என்பது வேறு ஆகும். தைரியம் கொடுத்தீர்கள் என்றால் செய்ய முடியும். இது அதிகாரத்தன்மையின் அடையாளம் இல்லை. தைரியம் வைப்பதினால் சகயோகத்திற்கு உரியவராக இயல்பாகவே ஆவீர்கள். எனவே தான் இராஜ வம்சம் தென்படுகிறதா? என்று கேட்டோம். எப்பொழுது இப்பொழுதைய இராஜ வம்சம் பிரத்யக்ஷம் ஆகுமோ அப்பொழுது தான் பிரத்யக்ஷதா ஏற்படும். எத்தனை பேர் பிரத்யக்ஷம் ஆகியிருக்கிறார்கள்? எத்தனை இராஜாக்கள், எத்தனை இராணிகள் உருவாகியிருக்கிறார்கள்? இராஜா மற்றும் இராணியிலும் வித்தியாசம் இருக்கிறது - முதல் மற்றும் இரண்டாவதின் வேற்றுமை இருக்கும். இப்பொழுது இதன் மேல் ஆன்மீக உரையாடல் செய்ய வேண்டும். இராஜாவின் அடையாளம் என்னவாக இருக்கும். மேலும் அவருடைய குழந்தைகளின் தகுதி என்னவாக இருக்கும். இராஜ வம்சத்தின் குழந்தைகளிடமும்

வம்சத்தின் சம்ஸ்காரம் இருக்கும் இல்லையா. இதன் மேல் ஆன்மீக உரையாடல் செய்யுங்கள். நல்லது.

குமாரர்களுடன்: எப்பொழுதும் தந்தையுடன் இருப்பதாக குமாரர்களின் படத்தைக் காண்பித்திருக்கிறார்கள். உன்னோடு தான் விளையாடுவோம், உன்னோடு தான் அருந்துவோம் என்ற இந்த படத்தைக் தோழர்கள் ரூபத்தில் காண்பித்திருக்கிறார்கள். தோழன் என்றால் உடன் இருப்பவர். அப்படி குமாரர்களை தோழன் ரூபத்தில், துணைவன் ரூபத்தில் காண்பித்திருக்கிறார்கள். பசுவைப் பராமரிக்கும் ரூபத்தில் காண்பித்திருக்கிறார்கள் இல்லையா? அப்படி தன்னை எப்பொழுதும் தந்தையின் துணைவன் என்று புரிந்து உன்னோடு தான் அருந்துவேன், உன்னோடு தான் அமருவேன்... என்று அனைத்து குமாரர்களும் ஜோடியானவர்களாக இருந்து நடந்து கொள்கிறீர்களா? ஜோடியா அல்லது தனியாக இருக்கிறீர்களா? ஒருபொழுதும் தனியாக இருக்கிறேன் என்ற எண்ணத்தை எண்ணாதீர்கள். துணைவனை எப்பொழுதும் துணையாக வைத்தீர்கள் என்றால் எப்பொழுதும் குஷியாக இருப்பீர்கள். மேலும் இரவு, பகலாக குஷியில் நடனமாடிக் கொண்டே தன்னுடைய மற்றும் மற்றவர்களின் எதிர்காலத்தை உருவாக்குவீர்கள். தனியாக இருக்கிறேன் என்று ஒருபொழுதும் நினைக்காதீர்கள். தனியாக இருக்கிறேன் என்று நினைத்தீர்கள் என்றால், உடனே மாயா வந்து விடும். குமாரர்களுக்கு நாங்கள் தனியாக இருக்கிறோம் என்ற இந்த புகார் தான் இருக்கிறது. இந்த துணையோ துக்கத்திலும், சுகத்திலும் துணைவனாக இருப்பவர், அந்த துணையோ புத்தியைக் கெடுத்து விடும். அப்படி நீங்கள் ஜோடியாகத் தான் இருக்கிறீர்கள் இல்லையா?. இல்லறத்தைச் சேர்ந்தவர் இல்லை, சுகத்தின் இல்லறம் கிடைத்து விட்டது என்றால் வேறு என்ன வேண்டும். எனக்கு கிடைத்த துணைவன் மாதிரி வேறு யாருக்கும் கிடைக்க முடியாது. துணைவனை உடன் வைத்துக் கொள்ள வேண்டும். உடன் வைத்துக் கொண்டீர்கள் என்றால் மனம் எப்பொழுதும் மகிழ்ச்சியில் இருக்கும். நல்லது.

மாதர்களுடன்: பற்றற்றவர்களாக இருக்கிறீர்களா? நீங்கள் பற்றுதலை வென்றவர்கள் தான் இல்லையா? மாதர் களுக்கு விசேஷமாக பற்றுதலின் தடை தான் வருகிறது. பற்றுதலை வென்றவர் என்றால்

தீவிரமாக முயற்சி செய்பவர். ஒருவேளை உடல் சம்மந்தப்பட்ட உறவின் மேல் கொஞ்சமாவது பற்றுதல் இருக்கிறது என்றால் தீவிரமாக முயற்சி செய்பவருக்குப் பதிலாக முயற்சி செய்பவரில் வந்து விடுகிறார்கள். தீவிரமாக முயற்சி செய்பவர்கள் முதல் நம்பர், முயற்சி செய்பவர்கள் இரண்டாம் நம்பர். என்ன ஆனாலும் சரி, எதுவானாலும் சரி குஷியில் ஆடிக் கொண்டே இருங்கள். "வேட்டையாடப்பட்ட மிருகத்திற்கோ மரணம்! ஆனால் வேட்டைக்காரனுக்கோ அதிக குஷி" என்ற இது தான் பற்றுதலை வென்ற நிலை. பற்றுதலை வென்றவர்கள் தான் வெற்றி மாலையின் மணியாக ஆகிறார்கள். பற்றுதல் மேல் வெற்றி அடைந்து விட்டார் என்றால், எப்பொழுதுமே வெற்றி அடைபவர் தான். தேர்ச்சி அடைந்திருக்கிறீர்களா அல்லது முழுமையாக தேர்ச்சி அடைந்திருக்கிறீர்களா? பரீட்சைகளோ அதிகமாக வரும், பரீட்சை வருவது என்றால் அடுத்த வகுப்பிற்குச் செல்வது, ஒருவேளை பரீட்சையே இல்லை என்றால் எப்படி வகுப்பு மாற்றம் ஆகும். எனவே முழுமையாகத் தேர்ச்சி பெற வேண்டுமேயன்றி தேர்ச்சி பெறுவது அல்ல. நல்லது.

தம்பதிகளுடன்: நினைவு மூலமாக பழைய ஒப்பந்தத்தை ரத்து செய்து தனியாக ஆகுங்கள். பின்பு ஜோடியாகுங்கள். பழைய கணக்கு வழக்கு அனைத்தையும் முடித்து விட்டு புதியதைத் தொடங்குங்கள். மாயாவின் உறவை விவாகரத்து செய்தாகி விட்டது. தந்தையின் உறவோடு நிச்சயம் செய்தாகி விட்டது. மூலம் தான் மாயாவை வென்றவர். பற்றுதலை வென்றவர் ஆகி வெற்றி அடைபவராக இருப்பீர்கள். இதன் உங்களுக்குள் சகயோகியாக இருங்கள் ஆனால் துணைவனாக இல்லை. துணைவன் ஒருவர் தான். மற்றவரோடு துணைவனின் உணர்வு வந்தது என்றால் அனைத்தும் முடிந்தது.

யார் தந்தையின் நினைவில் இருக்கிறார்களோ அவர்கள் மேல் எப்பொழுதும் தந்தையின் கை இருக்கிறது. அனைவரும் மிக அதிர்ஷ்டசாலிகள். வீட்டில் அமர்ந்திருக்கும்பொழுதே பகவான் கிடைத்து விட்டார் என்றால் இதை விட பெரிய அதிர்ஷ்டம் வேறு என்ன வேண்டும்? எது கனவில் கூட இருக்கவில்லையோ, அது நடைமுறையில் வந்து விட்டது என்றால், வேறு என்ன வேண்டும்? தந்தை முதலில் உங்களிடம் வந்தார். பிறகு நீங்கள் வந்தீர்கள்.

பகவானை நான் என்னுடையவராக ஆக்கி விட்டேன் என்ற தன்னுடைய இந்த பாக்கியத்தை எப்பொழுதும் வர்ணனை செய்து கொண்டே எப்பொழுதும் குஷியாக இருங்கள். எங்கே இருந்தாலும் ஆனால் ஒவ்வொரு காரியத்திலும், ஒவ்வொரு தினசரி நடவடிக்கையிலும் எப்பொழுதும் தந்தையின் துணையை அனுபவம் செய்யுங்கள்.

மதுபன் சகோதரர்களுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு:

பாண்டவர்கள் என்றால் எப்பொழுதும் வெற்றி அடைபவர்கள். பாண்டவர்களின் பெயர் வெற்றியின் காரணமாகத் தான் பிரசித்தியானது. பாண்டவ சேனை அதுவும் விசேஷமாக கடற்கரையில் உயர்ந்த தொடர்பில் இருப்பவர்கள். அப்படி எப்பொழுதுமே வெற்றி அடையும் பாண்டவ சேனையா? வெற்றியின் காட்சிகள் எப்பொழுதும் நடந்து கொண்டிருக்கிறதா அல்லது வெற்றி மற்றும் தோல்விக்கானது இருக்கிறதா? இப்பொழுது நேரம் மற்றும் சகயோகத்திற்கு ஏற்றபடி நாடகத்தின் அனுசாரம் என்ன பாக்கியம் கிடைத்திருக்கிறதோ அதன் பிரகாரம் எப்பொழுதும் வெற்றியின் காட்சி இருக்க வேண்டும். நாடகப்படி என்ன சிறப்புக்கள் கிடைத்திருக்கிறதோ அதை எப்பொழுதும் காரியத்தில் ஈடுபடுத்தினீர்கள் என்றால், மற்றவர்களுக்கும் சிறப்புத் தன்மை தென்படும். சிறப்பைப் பார்க்காமல் விஷயங்களைப் பார்க்கிறீர்கள் எனவே தான் தோல்வி ஏற்படுகிறது. ஒவ்வொருவரின் விசேஷத்தை நினைவில் வையுங்கள். ஒவ்வொருவரின் நம்பிக்கைக்குரியவராக இருந்தீர்கள் என்றால், அவருடைய விஷயத்தின் உள்நோக்கம் மாறிவிடும். ஒருவேளை இருவர்கள் அவர்களுக்குள் நண்பர்களாக இருக்கிறார்கள், மேலும் அவர்களிடையே மூன்றாமவர் அவரை நிந்தனை செய்ய வருகிறார் என்றால், அவர் அந்த உணர்வை மாற்றி விடுகிறார். எப்படி உங்களிடம் யாராவது பிரம்மாபாபாவைப் பற்றி இது என்ன, இவரோ திட்டுகிறார் என்று கூறுகிறார் என்றால், நீங்கள் நிச்சயத்தோடு இதுவோ தெளிவுபடுத்துவதேயன்றி திட்டுவதல்ல என்று புரிய வைக்கிறீர்கள். எங்கு நிச்சயம் இருக்குமோ அங்கு வார்த்தைகளின் உள்நோக்கம் மாறி சாதாரணமாக ஆகி விடும். ஒவ்வொருவரின் விசேஷத்தைப் பார்த்தீர்கள் என்றால், அனேகர்கள் இருந்த போதிலும் ஒருவராகத் தென்படுவார்கள். ஒற்றுமையான குழுவாக ஆகி விடும். யாராவது வேறு யாரையோ நிந்தனை செய்யும் விஷயத்தை கூறினார் என்றால்,

அதைக் கேட்பதற்குப் பதிலாக கூறுபவரின் பேச்சையே மாற்றி விடுங்கள். அர்த்தத்தின் பாவனையை மாற்றி விடுங்கள். இந்தப் பயிற்சி வேண்டும். இல்லையென்றால் ஒருவரின் விஷயத்தை இன்னொருவரிடம் கேட்டீர்கள், இன்னொருவரின் விஷயத்தை மூன்றாம் நபரிடமிருந்து கேட்டீர்கள், பிறகு இந்த வீணான விஷயங்கள் சுற்றுப்புறத்தில் பரவிக் கொண்டே இருக்கிறது, அந்தக் காரணத்தினால் சக்திசாலியான சூழ்நிலை உருவாக முடிவதில்லை. சாட்சாத்கார மூர்த்தியாகவும் ஆகமுடிவதில்லை. எனவே எப்பொழுதும் அனைவருக்காக சுப்பாவனை மற்றும் நன்மை பயக்கும் எண்ணங்களே இருக்க வேண்டும். பிறரது நிந்தனையின் விஷயத்தைக் கேட்பது என்றால், நேரத்தை வீணாக்குவது ஆகும். வருமானத்திலிருந்து வஞ்சிக்கப்படுவது. ஒருவேளை அவரை மாற்றம் செய்ய முடியும் என்றால் கேளுங்கள். இல்லையென்றால் கேட்டும் கேளாமல் இருந்து விடுங்கள்.

பிறரது விசேஷத்தை வர்ணனை செய்யுங்கள். யாராவது நான் அப்படி (தவறுகள்) பார்த்தேன் என்று கூறினாலும் கூட உங்களுடைய வாயிலிருந்து அந்த மாதிரி எந்த விஷயமும் வெளியாக வேண்டாம். நீங்கள் அவருடைய விசேஷத்தைக் கூறி அந்த விஷயத்தை மாற்றி விடுங்கள். ஒவ்வொருவரின் வாயிலிருந்தும் பிறரைப் பற்றி ஆஹா, ஆஹா என்ற பாராட்டு வெளிப்படட்டும். அப்பொழுது தான் தந்தையின் ஆஹா, ஆஹா என்பது நிகழும். ஏதாவது ஒரு விஷயத்தை தலைகீழாக இருப்பதைப் பார்த்தீர்கள், கேட்டீர்கள் என்றாலும் மனதில் வைத்துக் கொள்ளாதீர்கள். மேலே சொல்லி விடுங்கள். மேலும் முடிந்தது. எப்பொழுதும் தன்னைத் தானே காலியாக, லேசாக வைத்துக் கொள்ளுங்கள். ஒருவேளை மனதிற்குள் ஏதாவது விதமான விஷயம் இருக்கிறது என்றால், எங்கே விஷயங்கள் இருக்குமோ அங்கே தந்தை இருப்பதில்லை.

யாருடைய அவகுணத்தையும், மற்றவர்களின் எதிரில் வர்ணனை செய்யக்கூடாது. ஏனென்றால் வர்ணனை செய்வது என்றால் நோய்க்கிருமியை பரப்புவது. சில நோய் கிருமிகள் அந்த மாதிரி இருக்கின்றன. அவற்றை அந்த நேரத்திலேயே சக்திசாலியான மருந்து தெளித்து அழிக்கப்பட்டு விடும். யாராவது அவர் எப்படி இருக்கிறார்

என்று கேட்டால், அவர் நன்றாக இருக்கிறார் என்று உள்மனதிலிருந்து வெளியாக வேண்டும். அனேக உணர்வுகளோடு அனேக ஆத்மாக்கள் வருகின்றன.ஆனால் உங்களிடமிருந்து சுப்பாவனையின் விஷயங்களை மட்டும் அவர்கள் எடுத்துச் செல்லட்டும். பாவனை நல்லதாக இருக்கட்டும். ஒரே பாவனை ஒரே விருப்பம், ஒருவரின் அன்பிலேயே மூழ்கியிருந்து தடை யற்றவராக இருக்க வேண்டும். வீணான விஷயங்களின் கையிருப்பு முடிந்து குஷியின் விஷயங்களின் கையிருப்பு சேமிப்பாக இருக்கட்டும். குஷியின் ஊஞ்சலில் ஆடக் கூடிய ஆத்மாக்களாக அனைவரின் பார்வையில் தென்பட வேண்டும். ஒவ்வொரு வார்த்தையிலும் ஆன்மீகத் தன்மை இருக்க வேண்டும். ஆன்மீகத்தன்மையின் வார்த்தை மிக இனிமையானதாக இருக்கும். நேரத்திற்கு ஏற்றபடி உங்களுடைய நிலையும் மிக உயர்ந்ததாக இருக்க வேண்டும். முன்னேறும் கலை என்பதின் அர்த்தமே எது முன்பு இருந்ததோ அதைக் கடந்து சென்று கொண்டே இருக்க வேண்டும். உங்களுடைய நிலை நீங்கள் காட்சியளிக்கும் மூர்த்தியாகத் தென்பட வேண்டும். பிறகு பாருங்கள் எவ்வளவு கூட்டம் நிரம்புகிறது என்று, உங்களுடைய நிலை எப்பொழுது ஒரே சீராக இருந்தது என்றால் பெயர் பிரபலமாகும். உள்உணர்வை, பார்வையை, சுபாவத்தை சோதனை செய்பவர்கள் அனைவரும் வருவார்கள் ஆனால் அவர்களுக்கு உண்மையான ஞானத்தின் அறிமுகம் கிடைத்து விடட்டும். நல்லது. ஓம் சாந்தி

வரதானம்: திருப்தியின் விசேஷத்தின் மூலமாக ஒவ்வொரு கடுமையான பரீட்சையிலும் வெற்றி அடையக்கூடிய உறுதித் தன்மை நிரம்பியவர் ஆகுக!

திருப்தியாக இருப்பது பிராமணர்களின் விசேஷ லட்சணம் ஆகும். என்னென்ன பங்கு கிடைத்திருக்கிறதோ அதில் திருப்தியாக இருப்பது தான் முன்னேறிச் செல்வது ஆகும். ஏதாவது தலைகீழாக ஆனாலும், யாராவது இகழ்ச்சி செய்தாலும் வள்ளலின் குழந்தைகள் ஒருபொழுதும் அதிருப்தியாக இருக்க முடியாது. அவர்கள் தன் மேலும் திருப்தியாக மேலும் மற்றவர்கள் மேலும் திருப்தியாக இருப்பார்கள். இதற்காக எவ்வளவு தான் கடுமையான பரீட்சை வந்தாலும் நான் திருப்தியாக

கண்டிப்பாக இருப்பேன் என்ற திடத்தன்மை நிரம்பிய எண்ணத்தை வைத்தீர்கள் என்றால் வெற்றி ஏற்பட்டுக் கொண்டே இருக்கும்.

சுலோகன்: யாருடைய இதயத்தில் எப்பொழுதும் குஷியின் சூரியன் உதயமாகியிருக்கிறாரோ அவரே குஷி நிறைந்தவராவார்!

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 03.12.1978 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பாவம் மற்றும் புண்ணியத்தின் ஆழமான விளைவுகள்!

இன்று பாப்தாதா அனைத்து குழந்தைகளுக்கும் விசேஷ பயிற்சிக்கான நினைவை ஊட்டுகிறார் ஒரு நொடியில் இந்த சப்தமான உலகத்திலிருந்து விலகிச் சென்று சப்தத்திலிருந்து விலகிய உலகத்தில் வசிப்பவர்களாக ஆக முடியுமா? எவ்வளவு சப்தத்தில் வருவதற்கான பயிற்சி இருக்கிறதோ. கேட்பதற்கான பயிற்சி இருக்கிறதோ சப்தத்தை தாரணை செய்வதற்கான பயிற்சி இருக்கிறதோ, அதே போன்று சப்தத்திலிருந்து விலகிய நிலையில் நிலைத்திருந்து அனைத்து பிராப்திகளையும் அடைவதற்கான பயிற்சி இருக்கிறதா? எப்படி சப்தம் மூலமாக ரமணீகரத்தை அனுபவம் செய்கிறீர்கள், சுகத்தை அனுபவம் செய்கிறீர்கள் அதே போலவே சப்தத்திலிருந்து விலகி அழியாத சுகசொரூபம், ரமணீகரமான நிலையை அனுபவம் செய்கிறீர்களா? அமைதியின் கூடவே மிகுந்த அமைதி மற்றும் அதிக ரமணீகரமான நிலையின் அனுபவம் இருக்கிறதா? நினைவின் பொத்தானை அழுத்தினீர்கள் மற்றும் அந்த நிலையில் நிலைத்து விட்டீர்கள். அந்த மாதிரி ஆன்மீக லிஃப்ட்டின் கிஃப்ட் கிடைத்திருக்கிறதா? எப்பொழுதும் எவரெடியாக இருக்கிறீர்களா? ஒரு நொடியின் சமிக்ஞை மூலம் ஒரே சீரான நிலையில் நிலைத்து விடுங்கள் என்றால், அந்த மாதிரி ஆன்மீகப் படை தயாராகியிருக்கிறதா? அல்லது நிலைத்திருப்பதிலேயே நேரம் சென்று விடுகிறதா? இப்பொழுது அந்த மாதிரி நேரம் வரப்போகிறது. அப்பொழுது இந்த மாதிரி சத்திய பயிற்சியின் எதிரில் அநேகரின் உண்மையற்ற பயிற்சி இயல்பாகவே வெளியாகும். உங்களுடைய பயிற்சி சரியில்லை என்று சொல்ல வேண்டியதாக இருக்காது ஆனால் சரியான பயிற்சியின் சூழல், எண்ண அலைகள் மூலம் தானாகவே நிரூபணம் ஆகி விடும். அந்த மாதிரியான குழு தயாராகி இருக்கிறதா?

இப்பொழுது நேரத்திற்குத் தகுந்தாற் போல் அனேக விதமான மனிதர்கள் சோதிப்பதற்காக வருவார்கள். ஒரே குழுவான ரூபத்தில் நாங்கள் (கூட்டாக) அனைத்து பிராமணர்களும் ஒருவரின் நினைவில் ஒரே சீரான நிலையில் நிலைத்திருப்பவர்கள் என்று சவால் விடுகிறீர்கள் என்பதால், பிராமண குழுவை சோதிப்பதற்காகவே வருவார்கள். தனி ஒருவரின் விஷயமோ ஒன்றும் பெரியதல்ல ஆனால் நீங்கள் அனைவரும் உலகிற்கு நன்மை செய்பவர்கள், உலகை மாற்றம் செய்பவர்கள். உலகை நன்மை செய்யும் குழு. உலகிற்கு தன்னுடைய உள்ளுணர்வு மற்றும் எண்ண அலைகள் மூலமாக மற்றும் தன்னுடைய நினைவு சொரூப சக்தியின் மூலமாக எப்படி சேவை செய்கிறார்கள் என்று அதை சோதிப்பதற்கும் அதிகமானவர்கள் வருவார்கள். இன்றைய அறிவியல் மூலமாக அமைதி சக்தியின் பெயர் நாலாபுறமும் பரவும். யோகா மூலமாக எந்த சக்திகள் எதுவரை பரவுகிறது. அதனுடைய விதி மற்றும் விளைவுகள் என்னவாகிறது என்ற இது அனைத்தும் வெளிப்படையாகத் தென்படும். அந்த மாதிரி குழு தயாராகி இருக்கிறதா? நேரத்திற்குத் தகுந்தாற்போல் இப்பொழுது வீணான விஷயங்களை விட்டு விட்டு சக்தி நிறைந்த சொரூபமானவர் ஆகுங்கள். அந்த மாதிரி உலக சேவாதாரி ஆகுங்கள். இவ்வளவு பெரிய காரியத்திற்காக நீங்கள் பொறுப்பாளர் ஆகியிருக்கிறீர்கள் என்றால், அதை நினைவு வையுங்கள். இவ்வளவு உயர்ந்த காரியத்தின் எதிரில் தனது முயற்சியின் உறுதியற்ற நிலையா? அல்லது தனது பலஹீனங்களா? என்ன அனுபவம் ஆகிறது? தன்னுடைய பலஹீனங்களா! இவ்வளவு பெரிய காரியத்தின் எதிரில் எதை அனுபவம் செய்கிறீர்கள்! நன்றாக இருக்கிறதா? அல்லது தன் மேலேயே வெட்கம் வருகிறதா? சவால் மற்றும் நடைமுறை காரியம் சமமாக இருக்க வேண்டும். இல்லையென்றால், சவால் மற்றும் நடைமுறையில் மிகப் பெரிய வித்தியாசம் இருப்பதினால் சேவாதாரிக்குப் பதிலாக என்ன பட்டம் கிடைக்கும்? அந்த மாதிரி செய்யும் ஆத்மாக்கள் அனேக ஆத்மாக்களை வஞ்சிக்க வைப்பதற்குக் காரணமானவர்கள் ஆகி விடுகிறார்கள். புண்ணிய ஆத்மாவிற்குப் பதிலாக சுமையுள்ள ஆத்மா ஆகி விடுகிறது இந்த பாவம் மற்றும் புண்ணியத்தின் ஆழமான விளைவுகளைத் தெரிந்து கொள்ளுங்கள். பாவத்தின் விளைவாக உயர்ந்த பாக்கியத்திலிருந்து (உங்களையும், பிறரையும்) வஞ்சித்து விடுகிறது. எண்ணம் மூலமாகவும் பாவம்

ஏற்படுகிறது. எண்ணத்தின் பாவத்திற்கும் பிரத்யக்ஷ பலன் ஏற்படுகிறது. எண்ணங்களின் மூலமான தன்னுடைய பலஹீனம், ஏதேனும் விகாரம் இருக்கிறது என்றால், அது பாவக்கணக்கில் தான் சேமிப்பு ஆகும் ஆனால் மற்ற ஆத்மாக்களுக்காக எண்ணத்தில் கூட ஏதாவது விகாரத்தின் வசமான உள்உணர்வு இருக்கிறது என்றால் இதுவும் மகாபாவம் ஆகும்.

ஏதாவது மற்ற ஆத்மாக்களுக்காக கூறப்படும் வீணான வார்த்தைகளும் பாவக் கணக்கில் சேமிப்பு ஆகிறது. அதே போலவே காரியம் அதாவது உறவு மற்றும் நெருக்கம் (தொடர்பு) மூலமாக யார் மேலேயாவது சுப்பாவனைக்குப் பதிலாக வேறு ஏதாவது பாவனை இருக்கிறது என்றால், இதுவும் பாவக் கணக்கில் சேமிப்பு ஆகிறது. ஏனென்றால், இதுவும் துக்கம் கொடுப்பதாகும். சுப்பாவனை புண்ணிய கணக்கை அதிகரிக்கிறது. வீணான பாவனை, வெறுப்பு நிறைந்த பாவனை மற்றும் பொறாமை உள்ள பாவனை பாவக் கணக்கை அதிகரிக்கிறது. எனவே தந்தையின் குழந்தை ஆனீர்கள், ஆஸ்திக்கு அதிகாரி ஆனீர்கள் அதாவது புண்ணிய ஆத்மா ஆனீர்கள் என்ற இந்த நிச்சயமும், போதையும் நல்லது தான் ஆனால் போதையையும், பொறாமையையும் கலந்து விடாதீர்கள். தந்தையின் குழந்தை ஆன பிறகு பிராப்தி எண்ணிலடங்காதது ஆனால் புண்ணிய ஆத்மாவுடன் பாவத்தின் சுமையும் நூறு மடங்கின் கணக்குப்படி இருக்கிறது. எனவே இந்த அளவு அலட்சியமானவராகவும் ஆகாதீர்கள். தந்தையை தெரிந்தீர்கள் மேலும் ஆஸ்தியை தெரிந்தீர்கள், பிரம்மா குமார், குமாரி என்று கூறினீர்கள். எனவே எப்பொழுதும் புண்ணியமே புண்ணியம் தான்! பாவமோ ஆழிந்து விட்டது. மேலும் சம்பூர்ணம் ஆகி விட்டோம் என்று அப்படி நினைக்காதீர்கள். பிராமண வாழ்க்கையில் நியமங்களையும் கவனத்தில் வையுங்கள். மரியாதைகளையும் எதிரில் வையுங்கள், புண்ணியம் மற்றும் பாவம் இரண்டின் ஞானத்தையும் பத்தியில் வையுங்கள். புண்ணிய ஆத்மா என்று கூறிக் கொண்டு எண்ணம், சொல், செயலால் ஏதாவது பாவம் செய்ய வில்லையே என்று தன்னை சோதனை செய்யுங்கள். எந்தக் கணக்கும் சேமிப்பானது, என்னுடைய ஏதாவது விதமான நடத்தை மூலமாக தந்தை மற்றும் ஞானத்தின் பெயர் கெட்டு விடவில்லையே? தந்தையிடமோ ஒவ்வொருவரின் கணக்கும் தெளிவாக இருக்கிறது ஆனால் தன் எதிரிலும் தெளிவாக

வையுங்கள். இதுவோ நடக்கத்தான் செய்கிறது, இதுவோ அனைவரிலும் இருக்கிறது என்று தனக்குத் தானே சமாதானம் அதாவது ஏமாற்றம் கொடுக்காதீர்கள். அனைவரிலும் இருக்கட்டும் ஆனால் நான் பாதுகாப்பாக இருக்க வேண்டும். அந்த மாதிரி சுப விருப்பங்கள் வையுங்கள், அப்பொழுது தான் உலக சேவாதாரி ஆக முடியும், குழுவின் ரூபத்தில் ஒற்றுமை. ஒரே சீரான நிலையின் அனுபவம் செய்விக்க முடியும். இதுவரையிலும் பாவக்கணக்கு தான் சேர்ந்து கொண்டிருக்கிறது ன்றால், எப்பொழுது முடிக்கப்போகிறர்கள்? மற்ற ஆத்மாக்களையும் புண்ணிய ஆத்மா ஆக்குவதற்கு பொறுப்பாளர் எப்படி ஆவீர்கள்? எனவே அலட்சியத்தன்மையில் பாவக்கணக்கை உருவாக்குவதை முடிவுகட்டுங்கள். எப்பொழுதும் புண்ணிய ஆத்மா ஆகுக! என்ற வரதானத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். அஞ்ஞானி மனிதர்கள் தீயதை கேட்காதே, பார்க்காதே, நினைக்காதே' என்ற இந்த சுலோகனை கூறுகிறார்கள். இப்பொழுது தந்தை கூறுகிறார், வீணானதையும் கேட்காதீர்கள், சொல்லாதீர்கள் மற்றும் நினைக்காதீர்கள். எப்பொழுதும் சுபபாவனையோடு நினையுங்கள், நல்ல வார்த்தைகள் பேசுங்கள். வீணானதையும் நல்ல உணர்வோடு கேளுங்கள். எப்படி அறிவியல் சாதனம் தீய பொருட்களையும் மாற்றம் செய்கிறது. நல்லதாக்கி விடுகிறது, ரூபத்தை மாற்றி விடுகிறது என்றால், எப்பொழுதும் நற்சிந்தனை உள்ள ஆத்மாக்கள் நீங்கள் அனைத்து ஆத்மாக்களின் வார்த்தைகளின் உணர்வுகளை பரிவர்த்தனை செய்ய முடியாதா? எப்பொழுதும் உணர்வையும், உள்நோக்கத்தையும் உயர்ந்ததாக வைத்தீர்கள் என்றால் எப்பொழுதும் புண்ணிய ஆத்மா ஆகி விடுவீர்கள். தன்னுடைய மாற்றம் தான் மற்றவர்களின் மாற்றமாகும். இதில் முதலில் நான் என்று அப்படி யோசியுங்கள், இந்த மாதிரி உடலில் இருந்து கொண்டே இறந்து மறுபிறவி உடையவராக ஆவதில் தான் மகிழ்ச்சி இருக்கிறது. இதைத் தான் மகாபலி என்று கூறுவது. பயப்படாதீர்கள், குஷியோடு இருங்கள் - இந்த இறப்பது தான் வாழ்வதாகும். இது தான் உண்மையான உயிர் தானம் ஆகும்.

உங்களுடைய முதல் உறுதிமொழி எது? ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை என்பது அதாவது இறப்பது, பெயர் தான் இறப்பது, ஆனால் அனைத்தையும் அடைவது! இதைக் கடைபிடிப்பது கடினமாக

இருக்கிறதா? சுலபம் தான். மாற்றம் செய்ய மட்டும் தெரிவதில்லை, உணர்வு மற்றும் உள்நோக்கத்தை மாற்றம் செய்யத் தெரிவதில்லை. ஆஹா! நாடகம் ஆஹா! என்று எப்பொழுது கூறுகிறீர்கள் என்றால், இவை அனைத்தும் என்னவானது? ஒவ்வொரு விஷயமும் ஆஹா, ஆஹா ஆனது தான் இல்லையா? ஐயோ, ஐயோ என்பதை முடித்து விடுங்கள், ஆஹா, ஆஹா என்பது வந்து விடும். ஆஹா தந்தை! ஆஹா நாடகம்! மற்றும் ஆஹா என்னுடைய பங்கு! இதே நினைவில் இருந்தீர்கள் என்றால், உலகம் சபாஷ். சபாஷ் என்று கூறும். எப்பொழுது தந்தையின் துணையை மறந்து விடுகிறீர்களோ அப்பொழுது கடினம் அனுபவம் ஆகிறது. தந்தையைத் துணைவனாக்கி கடினத்தை சுலபமாக ஆக்க முடியும். தனிமையாக ஆவதினால் சுமையை அனுபவம் செய்கிறீர்கள். எனவே

அந்த மாதிரி துணைவனாக்கி கடினத்தை சலடமாக ஆக்குங்கள். நல்லது. எப்பொழுதும் சகயோகி, தன்னுடைய மாற்றம் மூலமாக உலக மாற்றம் செய்யக்கூடிய, ஒவ்வொரு எண்ணம் மற்றும் ஒவ்வொரு விநாடியில் புண்ணிய கணக்கை சேமிக்கக்கூடிய, தன்னுடைய சக்தி மூலமாக உலகை சக்திசாலி ஆக்கக்கூடிய, அந்த மாதிரி மகான் உயர்ந்த புண்ணிய ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

பார்ட்டிகளுடன் சந்திப்பு: **1) எப்பொழுதும் தந்தை மூலமாக கிடைத்திருக்கும் மகாமந்திரம் நினைவிருக்கிறதா?** மந்திரம் எவ்வளவு சுலபமானது. இதே மந்திரம் மூலமாக அனைத்து துக்கங்களிலிருந்து விடுபட்டு சுகத்தின் கடல் தந்தைக்குச் சமமாக ஆகி விடுகிறீர்கள். ஏதாவது விதமான துக்கம் வந்தது என்றால், மந்திரத்தை எடுத்தீர்கள் மற்றும் துக்கம் சென்று விட்டது. இப்பொழுது துக்கத்தின் அலை கூட வரமுடியாது. கனவில் கூட கொஞ்சமாவது துக்கத்தின் அனுபவம் இருக்க வேண்டாம். உடல் நோயுற்றதானாலும், பணம் இருந்தாலும் இல்லாவிட்டாலும், என்னவானாலும் சரி, ஆனால் உள்மனதில் துக்க உணர்வுகள் வரக்கூடாது. உணர்வு கடந்து சென்று விட வேண்டும். கடலில் எப்பொழுதாவது குளித்திருக்கிறீர்களா? அலை வருகிறது என்றால், அதை உயரே தாண்டி கடந்து செல்வார்கள். ஒருவேளை முறை தெரியும் என்றால் கடலில் குளிப்பதின் சுகத்தை எடுப்பார்கள்.

இல்லை என்றால், மூழ்கி விடுவார்கள். அப்படி அலைகளில் நீந்த தெரியுமா அல்லது மூழ்கி விடுகிறீர்களா? கடலின் குழந்தைகள் மூழ்கவோ முடியாது, அலையைக் கடந்து செல்லுங்கள், விளையாட்டு விளையாடுவது மாதிரி. துக்கமான நாட்கள் முடிவடைந்து விட்டது.

**2) வெற்றி அடைக! என்ற வரதானம் மூலம் மாயாவிற்கு விடை கொடுப்பது!** பாப்தாதா மூலமாக எப்பொழுதும் வெற்றி அடைக என்ற வரதானம் கிடைத்திருக்கிறதா? எப்பொழுது ஆன்மீகப் பிறவி எடுத்திருக்கிறீர்கள் என்றால் பரிசாக மற்றும் ஜென்மத்தின் வரதானமாக தந்தை "வெற்றி அடைக" என்பதைக் கொடுத்திருக்கிறார். எப்பொழுது இந்த வரதானம் நினைவிருக்கிறது என்றால் மாயா விடைபெற்றுச் சென்று விடுகிறது. மாயா மயங்கி விடுகிறது, எதிர்க்க முடியாது. எப்படி சிங்கத்தின் எதிரில் வெள்ளாடு என்ன செய்கிறது? பார்த்தவுடனேயே மயங்கி விடுகிறது இல்லையா? எனவே எப்பொழுது இந்த வரதானம் நினைவில் இருக்கிறது என்றால் மாயா எதிர்க்க முடியாது. மாயாவின் இராஜ்யமோ இப்பொழுது முடிவடையப் போகிறது. எப்படி யாரையாவது வலுக்கட்டாயமாக முன்னே வைக்கப்படுகிறது, அதே போல் கொஞ்சம் மூச்சு இருந்தாலும் மாயா தன்னுடைய பிடிவாதத்தை காண்பிக்கிறது. மாயா சக்தி நிறைந்தது அல்ல, மேலும் நீங்கள் அனைவரும் மாஸ்டர் சர்வ சக்திவான்கள். மாஸ்டர் சர்வ சக்திவானின் எதிரில் சக்தியில்லாத மாயா என்ன செய்ய முடியும்? எப்படி இவை அனைத்தும் இறந்து கிடக்கின்றன என்று சென்ற கல்பத்திலும் கூறினோம், அதே போலவே இந்த மாயாவும் இறந்திருக்கிறது, உயிரோடு இல்லை. நாம் நிமித்த மாத்திரம் வெற்றி அடைபவராக ஆக வேண்டும்.

**3) வெற்றி அடைபவர் என்ற போதை மூலம் அனைத்து கவர்ச்சிகளிலிருந்தும் விடுபட்ட நிலை!** எப்பொழுதும் தன்னை ஆன்மீக ஆயுதம் தரித்த சக்திசேனை அல்லது பாண்டவ சேனை என்று நினைக்கிறீர்களா? அப்படி சேனைக்கு மற்றும் போர்வீரர்களுக்கு எப்பொழுதும் என்ன நினைவிருக்கிறது? வெற்றி. அப்படியானால் எப்பொழுதும் வெற்றிக் கொடி என் நெற்றியில் பறந்து கொண்டிருப்பதாக அனுபவம் செய்கிறீர்களா? எப்பொழுதும் வெற்றிக் கொடியைப் பறக்க விடக்கூடிய வெற்றி இரத்தினங்கள் தான்

இல்லையா? அப்படி வெற்றி இரத்தினங்களின் நினைவுச்சின்னமாக தந்தையின் கழுத்தின் மாலையாக இன்று வரை பூஜை செய்யப்படுகிறது. ஒவ்வொருவருக்கும் நான் கழுத்தின் மாலையாவேன் என்ற இந்த போதை இருக்கவே வேண்டும். வெற்றியின் அடையாளம் எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்து இருப்பது. எந்தவிதமான கவர்ச்சியிலிருந்தும் விடுபட்டவராக இருப்பது. என்னவானாலும் சரி, ஆனால் தந்தை மாதிரி கவரும் சொரூபம் உடையவர் யாராவது இருக்கிறாரா என்ன? அப்படியானால் அனைவரையும் விட அழகானவர் யார்? சிவபாபா தான் இல்லையா? எனவே எப்பொழுதும் தந்தையின் நினைவிருக்கட்டும், அதே கவர்ச்சியில் கவரப்பட்டவராக இருங்கள். பின்பு எந்தக் கவர்ச்சியும் உங்களைக் கவர முடியாது. ஒருவேளை யாராவது உங்களுக்கு தன்னுடைய இராஜ்ய பாக்கியத்தைக் கொடுக்க வந்தால் பெற்றுக் கொள்வீர்களா? (மாட்டோம்). ஏன்? ஏனென்றால் இன்றைய ஜனாதிபதியின் நாற்காலி கூட முட்களாலான நாற்காலியாகும். கிரீடம், சிம்மாசனத்தை விட்டு விட்டு முட்கள் நிறைந்த நாற்காலியை யார் பெறுவார்? இன்று இருக்கிறது. நாளை இல்லை. நமக்கு என்ன கிடைத்திருக்கிறதோ அது யாருக்கும் கிடைக்க முடியாது என்ற இந்த போதையிலேயே எப்பொழுதும் இருங்கள். இப்பொழுது இந்த ஜனாதிபதி விரும்பினார் என்றால், சொர்க்கத்தில் வர முடியுமா? எதுவரை தந்தையின் குழந்தை ஆகவில்லையோ அதுவரை சொர்க்கத்தில் வர முடியாது. இங்கேயே இருந்து விடுவார்கள். நாம் சொர்க்கத்திற்குச் செல்வோம். அந்த மாதிரி போதை மற்றும் குஷி இருக்கட்டும். நான் உலகத்தின் தலைவனின் குழந்தை ஆவேன், பாக்கியத்தின் சுமங்கல்யம் பிராப்தியாகி இருக்கிறது என்றால், எப்பொழுதும் சுமங்கலியாகி விட்டீர்கள் இல்லையா?

**4) போகும் போதும், வரும் போதும் சைத்தன்ய கவரக்கூடிய செய்திப் பலகை (போர்ட்) -குஷி நிறைந்த முகம்!** யார் பாக்கியசாலியாக இருப்பாரோ அவர் எப்பொழுதும் அளவில்லா குஷியில் இருப்பார். யார் பார்த்தாலும் குஷியின் பொக்கிஷத்தைப் பார்த்து பொக்கிஷத்தின் பக்கம் ஈர்க்கப்பட்டவராக ஆகி விட வேண்டும். அப்படியே பார்த்தாலும் ஏதாவது விலை மதிக்க முடியாத பொருள் வைக்கப்பட்டிருக்கிறது என்றால் விரும்பாவிட்டாலும் அனைவரும் கவர்ந்திழுக்கப்படுவார்கள்.

அப்படி யாரிடம் குஷியின் பொக்கிஷம் இருக்கிறதோ அவர் பின்னால் அனைவருமே இயல்பாகவே கவரப்படுவார்கள். குஷி நிறைந்த முகம், போகும் போதும் வரும்போதும் கவர்ந்திழுக்கக்கூடிய சைத்தன்ய செய்திப்பலகை ஆகும். அவர் எங்கு சென்றாலும் தந்தையின் அறிமுகம் கொடுப்பார். குஷியான முகத்தைப் பார்த்தார்கள் என்றால். அவ்வாறு ஆக்கக்கூடியவர்களின் நினைவு அவசியம் வரும். எப்பொழுது ஒரு பலகை இத்தனை பேருக்கு அறிமுகம் கொடுக்கிறது என்றால், சைத்தன்ய பலகையாகிய நீங்கள் எத்தனை பேருக்கு அறிமுகம் கொடுப்பவர்களாக இருப்பீர்கள். இவ்வளவு கவரக்கூடிய பலகை தயாராகி விட்டது என்றால், இன்னும் இடத்தை (சென்டரை) பெரியதாக ஆக்க வேண்டியதாக இருக்கும்.

**5) பாப்தாதா வழங்கும் அனைத்தையும் விட உயர்ந்த அலங்காரம் -திருப்தி மணி !** திருப்திமணிகளாக இருக்கிறார்களோ அவர்கள் தான் தந்தையின் உயர்ந்த அலங்காரமாகும். யார் எப்பொழுதும் திருப்தியாக இருக்கிறாரோ அவரையே திருப்திமணி என்று கூறுவது. எப்பொழுதும் திருப்தியின் பொலிவு நெற்றியிலிருந்து ஜொலித்துக் கொண்டிருக்கட்டும். அந்த மாதிரியே தான் காட்சி கொடுப்பவராக ஆக முடியும். தன்னை அந்த மாதிரி உயர்ந்த அலங்கரிக்கப்பட்டவர் என்று புரிந்து எப்பொழுதும் குஷி நிறைந்தவராக இருக்கிறீர்களா? அந்த மாதிரியான அதிர்ஷ்டம் முழுக் கல்பத்திலும் யாருக்கும் இருக்க முடியாது. அதிர்ஷ்டம் நிறைந்தவரோ எப்பொழுதும் குஷியில் ஆடிக் கொண்டே இருப்பார். பாப்தாதாவிற்கு எவ்வளவு குஷி ஏற்படுகிறதோ அதைவிட அதிகமாகக் குழந்தைகளுக்கு இருக்க வேண்டும். அலைந்து கொண்டிருப்பவர்களுக்கு புகலிடம் கிடைத்து விட்டது அல்லது தாகத்திலிருப்பவர்களின் தாகம் தீர்ந்து விட்டது என்றால், அவர் குஷியில் ஆடுவார் இல்லையா. யாராவது சோர்வுற்றவர் உங்களைப் பார்த்தார் என்றால், அவரும் குஷியடைந்து விட வேண்டும். அவருடைய சோர்வும் அகன்று விட வேண்டும். அந்த மாதிரி குஷியில் இருங்கள்.

**6) விசேஷ ஆத்மாக்களின் விசேஷ காரியம் -ஒவ்வொரு காரியத்தின் மீதும் கவனம் வைப்பது!** என்ன காரியம் நான் செய்வேனோ என்னைப் பார்த்து அனைவரும் செய்வார்கள். அந்த மாதிரி கவனத்தை ஒவ்வொரு

காரியத்தின் மீதும் வைப்பது இது தான் விசேஷ ஆத்மாக்களின் கடமை ஆகும். உங்களுடையது அந்த மாதிரி இருக்க வேண்டும். அதைப் பார்த்து அனைவரும் "இன்னும் ஒரு முறை" என்று கூற வேண்டும். எப்படி நாடகம் / சினிமாவில் முக்கியமான நடிகர் இருக்கிறார், அவரை கதாநாயக நடிகர் என்று கூறுகிறார்கள், அவருக்கு தன் மேல் எவ்வளவு கவனம் இருக்கிறது, ஒவ்வொரு அடியையும் யோசித்து, புரிந்து எடுத்து வைப்பார். ஏனென்றால், அனைவரின் பார்வையும் கதாநாயகன் மேல் இருக்கும். எனவே அந்த அளவு கவனம் வைத்து நடந்து கொள்ளுங்கள்.

வரதானம்: யோக பலத்தின் மூலமாக மாயாவின் சக்தி மேல் வெற்றி அடையக்கூடிய எப்பொழுதும் வெற்றியாளர் ஆகுக!

ஞான பலம் மற்றும் யோக பலம் அனைத்தையும் விட உயர்ந்த பலம் ஆகும். எப்படி அறிவியலின் பலம் இருள் மேல் வெற்றியை அடையச் செய்து வெளிச்சம் ஆக்கி விடுகிறது. அதே போல் யோக பலம் நிரந்தரமாக மாயா மேல் வெற்றியை அடைந்து வெற்றியாளர் ஆக்கி விடுகிறது. யோக பலம் அந்த அளவு உயர்ந்த பலம் ஆகும். அதன் எதிரில் மாயாவின் சக்தி ஒன்றுமே இல்லை. யோக பலம் உள்ள ஆத்மாக்கள் கனவில் கூட மாயாவிடம் தோல்வி அடைய முடியாது. கனவில் கூட எந்த பலஹீனமும் வர முடியாது. அந்த மாதிரி வெற்றியின் திலகம் உங்கள் நெற்றியில் இடப்பட்டிருக்கிறது.

சுலோகன்: நம்பர் ஒன்னில் வர வேண்டும் என்றால், வீணானதை பயனுள்ளதாக மாற்றம் செய்து விடுங்கள்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 05.12.1978 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மர்ஜீவா (மறுபிறவி) ஜென்மத்தின் இயற்கையான சம்ஸ்காரம் -முதல் நினைவு மற்றும் முதல் வார்த்தை!

இன்று பாப்தாதா உலகின் மிக உயர்ந்த ஆத்மாக்களைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார். அனைத்து ஆத்மாக்களில் மிகக் குறைந்த ஆத்மாக்களுக்குத் தான் அந்த மாதிரி உயர்ந்த பாக்கியம் இருக்கிறது. எப்படி குழந்தைகள் பாக்கியத்தை உருவாக்கும் தந்தையைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார்கள். அதே போல் தந்தையும் பாக்கியவான் குழந்தைகளை அடைந்து குழந்தைகளை விட அதிகமாக குஷி அடைகிறார். ஏனென்றால், இவ்வளவு காலமாக மற்றும் இந்த அனைத்து குழந்தைகளும் பிரிந்து சென்றவர்கள் மீண்டும் கிடைத்து விட்டார்கள் என்றால் ஏன் குஷி ஏற்படாது, ஒவ்வொரு குழந்தையின் விசேஷம் அல்லது ஒவ்வொரு நட்சத்திரத்தின் ஜொலிப்பு, ஒவ்வொரு ஆத்மாவின் ரூபம், ஆன்மீகத்தின் ஈஸ்வரிய பொலிவு ஆகியவற்றை எவ்வளவு தந்தை தெரிந்திருக்கிறாரோ அந்த அளவு குழந்தைகள் அவர்களே சில நேரம் மறந்து விடுகிறார்கள், அனைத்து தடைகளிலிருந்து, அனைத்து விதமான பிரச்சனைகளிலிருந்து அல்லது தாழ்ந்த நிலையில் (தமோபிரதான) உள்ள இயற்கையின் ஆபத்துக்களிலிருந்து ஒரு நொடியில் வெற்றி அடைபவராக ஆவதற்கான ஒரு விஷயத்தின் நிச்சயம் மற்றும் போதையில் மட்டும் இருக்க வேண்டும் -அது எது? அதை அடிக்கடி தெரிந்தும் இருக்கிறீர்கள். எண்ணம் வரை நினைவில் வைக்கிறீர்கள் ஆனால் சம்ஸ்கார ரூபத்தில் வைப்பதில்லை -நினைக்கவும் செய்கிறீர்கள், புரிந்து கொள்ளவும் செய்கிறீர்கள், கேட்கவும் செய்கிறீர்கள், இருந்தும் சில நேரம் மறந்து விடுகிறீர்கள். அது எது? மிகப் பழைய விஷயம் ஆகும் ஆஹா நான் இதைக் கேட்டு குஷியும் அடைகிறீர்கள், இருந்தும் மறந்து விடுகிறீர்கள். இந்த உடலில் இருந்து கொண்டே இறந்து மறுபிறவி எடுத்த

வாழ்க்கையின் சம்ஸ்காரமே ஆஹா நான் என்பது தான். அப்படி தன்னுடைய ஜென்மத்தின் இயற்கையான சம்ஸ்காரம் ஜென்மத்தின் முதல் நினைவு, ஜென்மத்தின் முதல் வார்த்தை நான் உயர்ந்த பிராமண ஆத்மா ஆவேன் என்ற இதையும் மறந்து விடுகிறீர்கள். மறக்கும் விளையாட்டு பிடித்திருக்கிறதா? அரைக்கல்பமாக மறக்கும் விளையாட்டையே விளையாடி வந்தீர்கள். இப்பொழுது கூட இந்த விளையாட்டு தான் பிடித்திருக்கிறதா என்ன? பிராமணன் என்றால் சக்தி நிறைந்த சொரூபம். சொரூபத்தை மறப்பது என்ற இதை என்னவென்று கூறுவது, பாப்தாதாவிற்கு குழந்தைகளின் இந்த விளையாட்டைப் பார்த்து இரக்கம் வருகிறது, சிரிப்பும் வருகிறது. இவ்வளவு மகான் ஆத்மாக்கள் மேலும் என்ன செய்கிறார்கள்? மேலும் ஒரு மிக அதிசயமான விளையாட்டையும் செய்கிறீர்கள். அது எது? மிக நன்றாகத் தெரிந்தும் இருக்கிறீர்கள். என்ன செய்கிறீர்கள் என்று நீங்களே கூறுங்கள். சிலர் கண்ணாமூச்சி விளையாட்டை விளையாடுகிறார்கள். சில நேரம் ஆஹா! என்று கூறுகிறீர்கள். சில நேரம் ஐயோ! என்று கூறுகிறீர்கள். இதையோ செய்கிறார்கள் என்று அனைவரும் தெரிந்திருக்கிறீர்கள். இதையும் விட அதிசயமான வேறு விளையாட்டும் இருக்கிறது. எப்பொழுது தந்தையின் குழந்தையாக ஆனீர்களோ, மறுபிறவி எடுத்தவர்களாக ஆனீர்களோ அப்பொழுது கொடுத்த முதல் உறுதிமொழி என்னவாக இருந்தது? என்ன உறுதிமொழி கொடுத்தோம் என்பதையும் நன்றாக தெரிந்திருக்கிறீர்கள். தந்தை உறுதிமொழி செய்வித்தார். அதை நீங்கள் ஏற்றும் கொண்டீர்கள். ஏற்றுக் கொண்ட பிறகு என்ன செய்கிறீர்கள்? தந்தை கூறுகிறார் - சூத்திரத்தனத்தின் விகார சம்ஸ்காரத்தை விடுங்கள் என்று ஆத்மாவின் விகார சம்ஸ்காரம் என்ற ஆடையை மாற்றி ஈஸ்வரிய சம்ஸ்காரத்தின் தெய்வீக ஆடையை அணிவித்தார். சூத்திரத்தனத்தின் அடையாளங்கள் அசுத்த விருத்தி மற்றும் திருஷ்டியை மாற்றம் செய்து தூய்மையான திருஷ்டி மற்றும் உள்உணர்வு என்ற விசேஷ அடையாளங்களை தாரணை செய்கிறீர்கள். அனைத்தையும் விட உயர்ந்த சம்மந்தம் மற்றும் செல்வத்தின் அதிகாரிகளாக ஆனீர்கள் என்ற இதுவும் மிக நன்றாக நினைவு இருக்கிறது ஆனால் பிறகு என்ன செய்கிறீர்கள்? யார் உயர்ந்த ஆத்மாக்களாக இருப்பார்களோ அவர்கள் எண்ணத்தினால் விட்டவையைக் கூட தியாகம் செய்த விஷயங்களை மீண்டும் தாரணை செய்வதில்லை. எப்படி தரையில் விழுந்த அல்லது வீசப்பட்ட

பொருளை ராயல் குழந்தைகள் ஒருபொழுதும் எடுக்க மாட்டார்கள். நீங்கள் அனைவரும் இந்த விகாரங்களை புத்தியிலிருந்து வீச வேண்டும் என்ற எண்ணத்தை தாரணை செய்தீர்கள். வீணானது என்று புரிந்து, கெட்டுப்போன பொருள் என்று புரிந்து உறுதிமொழி கொடுத்தீர்கள், தியாகம் செய்தீர்கள் மற்றும் இந்த விஷத்தை அருந்த மாட்டேன் என்று சத்தியம் எடுத்துக் கொண்டீர்கள், பிறகு என்ன செய்கிறீர்கள்? வீசப்பட்ட பொருள், கெட்டுப் போன பொருள், உபயோகமற்ற பொருள், வீசப்பட்ட அழுகிப்போன பொருளை மீண்டும் எடுத்து என் உபயோகிக்கிறீர்கள்? என்ன விளையாட்டை விளையாடுகிறீர்கள் என்று புரிந்தீர்களா? அறியாமையின் விளையாட்டை விளையாடுகிறீர்கள். விளையாட்டைப் பார்த்து இரக்கமும் வருகிறது, மேலும் சிரிப்பும் வருகிறது. அனைத்தையும் தெரிந்தவராகவோ ஆகியிருக்கிறீர்கள் ஆனால் செய்பவராக ஆகவில்லை.

இப்பொழுது என்ன செய்வீர்கள். செய்பவர் ஆவதற்கான விசேஷ நிகழ்ச்சியை செய்து காண்பியுங்கள். எண்ணம் மூலமாக தியாகம் செய்யப்பட்ட வீணான பொருட்களை எண்ணத்தில் கூட ஏற்றுக் கொள்ளாதீர்கள். யோசித்துப் பாருங்கள் - நான் யார் மற்றும் என்ன செய்து கொண்டிருக்கிறேன் என்று தன்னிடமே கேளுங்கள். என்ன உறுதிமொழி கொடுத்திருக்கிறேன். மேலும் என்ன செய்து கொண்டிருக்கிறேன்? என்ன உறுதிமொழி கொடுத்தேன்? மேலும் எதைக் கடைபிடித்துக் கொண்டிருக்கிறேன்? தன்னுடைய சுயகௌரவம், உயர்ந்த நினைவு, உயர்ந்த வாழ்க்கையின் பலம் நிரம்பிய சொரூபமானவர் ஆகுங்கள். என்ன சொன்னேன் மற்றும் என்ன செய்தேன்? அந்த மாதிரியான அதிசயப் படும்படியான விளையாட்டிற்கு முடிவு கட்டுங்கள். உயர்ந்த சொரூபம், உயர்ந்த பாத்திரம் ஏற்று செய்பவராகி உயர்வான காட்சிகளில் நடியுங்கள். அந்த மாதிரி முழுமையான ஆகுதி போட வேண்டும் என்ற எண்ணத்தை வையுங்கள். அப்பொழுது தான் மாற்றம் ஏற்பட்டதின் விழா நடக்கும். இந்த விழாவிற்கான தேதியை அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து நிர்ணயம் செய்யுங்கள். நல்லது.

அந்த மாதிரி திடமான எண்ணம் உள்ள. எண்ணம் மற்றும் சொரூபத்தில் சமமாக இருப்பவர்களுக்கு, அறிந்தவர் மற்றும் செய்பவர். ஒவ்வொரு காரியம் மூலமாக தனது உயர்ந்த தன்மை மற்றும் தந்தையை பிரத்யக்ஷம் செய்யக்கூடிய மிக உயர்ந்த ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

தாதிகளுடன்: தந்தையோ குழந்தைகளின் அழைப்பின் பேரில் வருகிறார். குழந்தைகள் என்ன ஆணை இடுகிறார்களோ அதை ஏற்றுக்கொள்கிறார் ஆனால் இந்த தடவை கொஞ்சம் உடனும் எடுத்துச் செல்ல வேண்டும். குழந்தைகளோ உடன் இருக்கவே இருக்கிறார்கள் ஆனால் உடன் என்ன எடுத்துச் செல்வோம்? ஒவ்வொரு குழந்தையின் உறுதியான எண்ணத்தின் இறுதி ஆஹுதியை எடுத்துச் செல்வோம். யாகத்தின் பிரசாதமாக இறுதி ஆகுதி இருக்கிறது. யக்ஞத்தின் படைப்பு சாகார உலகத்தில் சாகார பாபா மூலமாக நடந்தது - பிரம்மா தன்னுடைய பங்கைச் செய்து பிராமணர்களுக்கு யக்ஞகத்தின் பொறுப்பைக் கொடுத்து விட்டார். யக்ஞத்தின் விசேஷ பிரசாதத்தை பாப்தாதா பெற்றுக் கொள்வார். யாராவது சந்திக்க வந்தார்கள் என்றால் அவர்களுக்கு பிரசாதம் கொடுக்கிறீர்கள் தான் இல்லையா? பாப்தாதாவும் பிரசாதத்தை எடுத்துச் செல்வார். இந்த பிரசாதம் கொடுப்பது என்றால், உலகம் மாற்றம் ஆவது. இந்த சிவராத்திரியில் சேவையின் கூடவே, அதன் மூலம் மற்ற அனேக ஆத்மாக்களுக்கு அறிமுகம் கிடைக்க வேண்டும். அதையோ செய்யவே செய்வீர்கள், ஆனால் கூடவே அறிமுகத்தையும் சேர்த்து தந்தையின் தோற்றத்தை பார்ப்பது அல்லது அனுபவம் செய்வதின் பிரசாதத்தையும் எடுத்துச் செல்ல வேண்டும் என்று அந்த மாதிரி எண்ணத்தை வையுங்கள். எப்படி ஏதாவது நிகழ்ச்சி நடக்கிறது என்றால் அங்கு பிரசாதம் கிடைக்கிறது என்றால், அது அனைவருக்கும் ஈர்ப்பினால் இருக்கும். விரும்பாவிட்டால் கூட பிரசாதத்தின் ஈர்ப்பில் மக்கள் தானாகவே வந்து விடுவார்கள். எனவே அந்த மாதிரி லட்சியத்தை வையுங்கள். சூழ்நிலையை உருவாக்குங்கள். தன்னுடைய பலத்தின் ஆதாரத்தினால் பலமற்ற ஆத்மாக்களுக்கு விசேஷமாக இரக்கம் நிறைந்த எண்ணத்தின் ஆகர்ஷணத்தினால் பிராப்தி அல்லது அனுபவத்தின் பிரசாதத்தைக் கொடுங்கள். கூடவே உங்களுடைய மகாவீரர்களின் அந்த மாதிரி விசேஷமான குழுவை உருவாக்குங்கள், அவர்கள் திட எண்ணம்

மூலமாக அனைத்தையும் அறிந்தவர் மற்றும் செய்பவரின் சாட்சாத் சொரூபமாகிக் காண்பிக்க வேண்டும். எப்படி உயிரே சென்றாலும் தர்மத்தை விட மாட்டோம் என்ற பழமொழி இருக்கிறது. அந்த மாதிரி தாரணை இருக்க வேண்டும். எப்படிப்பட்ட சூழ்நிலை வந்தாலும், மாயாவின் மகாவீர் ரூபம் எதிரில் வந்தாலும், தாரணையை விட்டுவிட வேண்டாம். எப்படி தொடக்கத்தில் உங்களுக்குள் முயற்சி செய்யும் குழுவை உருவாக்கினீர்கள் இல்லையா. டிவைன் யுனிட்டி (தெய்வீக ஒற்றுமை) என்பதையும் உருவாக்கினீர்கள், இப்பொழுது எந்தக் கட்சியை உருவாக்குவீர்கள்?

இந்த சிவராத்திரியில் பாண்டவர்கள் மற்றும் சக்திகள் இருவரின் விசேஷ குழுவை உருவாக்குங்கள், அந்தக் குழு விக்ன விநாஷக் (தடையை அழிக்கும்) குழுவாக இருக்கட்டும். இந்த பிரசாதத்தை பாப்தாதா எடுத்துச் செல்வார். யக்ஞத்தின் ஆஹூதியின் நறுமணம் தொலைதூரம் வரை பரவும். அப்படி பாப்தாதாவும் சாகார உலகத்திலிருந்து சூட்சும உலகம் வரை விசேஷமாக யக்ஞத்தின் நறுமணத்தின் நற்செய்தியை எடுத்துச் செல்ல வேண்டும். அந்த மாதிரி பிரசாதத்தை தயார் செய்யுங்கள். உடன் ஏதாவது அவசியம் எடுத்துச் செல்வோம். இந்த ஆஹூதி தான் திரும்பிச் செல்வதற்கான வாசலைத் திறக்கும். இப்பொழுது இவ்வளவு எண்ணிக்கையில் வளர்ச்சி அடைந்திருக்கிறீர்கள் என்றால், செல்வதற்கான வாசலும் திறக்க வேண்டும் இல்லையா? அப்படி வாசலைத் திறப்பவர்கள் யார்? தந்தையோ தனியாக எதையும் செய்ய மாட்டார். எப்பொழுதாவது ஏதாவது செய்திருக்கிறாரா என்ன? இப்பொழுது கூட தனியாக இருக்கிறாரா என்ன? (பாபா நீங்கள் தனியாக சென்று விட்டீர்கள் என்று குழந்தைகளின் உரையாடல் அவர்களுக்குள் நடந்து கொண்டிருக்கிறது.) முதலிலோ பாப் தாதா என அப்படி இருவர்கள் துணைவர்களாக இருக்கிறார்கள். தனியாகவோ இருக்க முடியாது. குழந்தைகளும் இருக்கிறார்கள் -நீங்கள் உடன் இருக்கவில்லையா என்ன? என்ன உறுதிமொழி கொடுத்தீர்கள்? உடன் இருப்போம், உடன் செல்வோம், உடன் அருந்துவோம் என்று தானே? இப்பொழுது அந்த உறுதிமொழி மாறிவிட்டதா என்ன? இப்பொழுதும் அதே உறுதிமொழி தான் இருக்கிறது, மாறவில்லை. சென்று விட்டார் என்று அப்படியில்லை. சாகார உலகத்திலோ கொஞ்ச காலத்திற்கு சாகார பாபா உடன்

இருந்தார். மேலும் மிக குறைந்தவர்களுக்கு சாகார பாபா துணையாக இருந்தார். இப்பொழுதோ அனைவரின் துணையாக இருக்கிறார். சாகாரத்திலோ அனேக விதமான பந்தனங்கள் இருந்தது இப்பொழுதோ பந்தனமற்ற நிலையில் இருக்கிறார். இப்பொழுதோ இன்னும் அதிவேகத்தில் செயல்படுகிறார். தந்தையை அழைத்தீர்கள், மேலும் ஆஜரானார். மோகத்திலிருந்தும் விடுபட்ட உயர்ந்த நிலை -பலியானவர் ஆக வேண்டும். எப்பொழுது பலி ஆகி விட்டீர்கள் என்றால் மோகம் அதில் ஒரு அம்சமே இப்பொழுது உடன் இருப்போம். உடன் செல்வோம். இன்று மட்டும் என்ன, எப்பொழுதுமே உடன் செல்வோம். நல்லது. இப்பொழுது பிரசாதத்தை தயார் செய்யுங்கள். பாண்டவர்கள் என்ன செய்வீர்கள்? (பக்ரீ ஈத் / ஆடுகளை பலி கொடுக்கும் இஸ்லாமியர்களின் விழா) எது வேண்டுமானாலும் செய்யுங்கள் ஆனால் ஏதாவது செய்து முடித்து காண்பியுங்கள். பாண்டவர்களின் குழு பந்தயத்தில் முன்னேறுகிறதா அல்லது சக்திகளின் குழுவா என்று பார்ப்போம். பக்ரீ ஈத்தைக் கொண்டாடுங்கள் அல்லது ஏதாவது ஈத்-ஐ கொண்டாடுங்கள். மே, மே (நான், நான்) என்பதை தியாகம் செய்வது தான் ஈத்-ஐ கொண்டாடுவது. என்ன பிரசாதம் தயார் செய்கிறீர்கள் என்று இப்பொழுது பார்க்கலாம். பாண்டவர்கள் தயார் செய்கிறார்களா அல்லது சக்திகள் தயார் செய்கிறார்களா அல்லது இருவருமே தயார் செய்கிறார்களா என்று பார்க்கலாம். நல்லது.

உத்திரபிரதேச மண்டலம்: உ.பி ஜோன் விசேஷமாக பாக்கியம் நிறைந்ததாக இருக்கிறது. உ.பி-யின் விசேஷம் பாவனை' உள்ள பூமி ஆகும். பக்தியின் பாவனை அதிகமாக இருக்கிறது. அந்த மாதிரி பாவனை நிறைந்த பூமிக்கு பக்தியின் பலனைக் கொடுப்பதற்காக பொறுப்பாளர் ஆகியிருக்கிறீர்கள். அனைத்து ஜோன்களையும் விட நினைவுச் சின்னங்களும் அதிகமாக உபி-யில் இருக்கிறது. அப்படி உ.பி.யின் நினைவுச்சின்ன பூமியை மீண்டும் விசேஷமாக நினைவூட்டுங்கள். உ.பி.யின் விஸ்தாரமும் மிக அதிகம். விஸ்தாரத்தில் தன்னுடைய ஜோனின் விதை விதைத்து தந்தையின் சென்ற கல்பத்து பூந்தோட்டத்தை இன்னும் அதிகமாக தயார் செய்யுங்கள். பார்க்கப்போனால் உ.பி-யின் பூமி நன்றாக விளையும் பூமியாகும். எனவே இன்னும் அதிகமாக மலர்த்தோட்டங்களை அதிகரிக்க முடியும். ஒவ்வொரு ஸ்தானத்திலிருந்தும் ஞான கங்கை

பெருக்கெடுத்து ஓடட்டும். நதியின் மகத்துவமும் உ.பி-யில் இருக்கிறது. ஸ்நானம் செய்யும் மகத்துவமும் மிக அதிகமாக உ.பி.யில் உள்ளது. எப்படி ஸ்தூல ஸ்நானத்தின் மகத்துவம் உள்ளதோ அதே போன்று நாலாபுறங்களிலும் ஞான ஸ்நானத்தின் மகத்துவத்தை அதிகரியுங்கள். உ.பி-யின் மகத்துவம் இருக்கிறது. மகான் தான் இல்லையா? நியமப்பூர்வமாக ஞானத்தின் தீர்த்த ஸ்தலத்தின் ஆரம்பம் கூட உபி-யிலிருந்து ஏற்பட்டது. நியமப்படி அழைப்பு கொடுப்பதற்கு கான்பூர் மற்றும் லக்னோவைச் சேர்ந்த ஆத்மாக்கள் பொறுப்பாளர் ஆனார்கள். தில்லியில் மாதர்களின் அழைப்பு மட்டும் இருந்தது.நியமப்பூர்வமான அழைப்பு கான்பூர் மற்றும் லக்னோவிலிருந்து தான் வந்தது. தில்லியின் மகிமை அதனுடையது. மேலும் உ.பி.யின் மகிமை தனிப்பட்டது. மகான் தன்மையோ மிக அதிகமாக இருக்கிறது. இப்பொழுது எவ்வளவு மகான் தன்மை வர்ணனை செய்யப்பட்டிருக்கிறதோ அதற்கேற்றபடி மகான் காரியங்களை செய்து காண்பியுங்கள். இதுவரை எந்த மண்டலமும் செய்யாத அந்த மாதிரி விசேஷ காரியத்தை செய்யுங்கள். ஒவ்வொரு மண்டலமும் இப்பொழுது ஏதாவது ஒரு புதுமையைக் கண்டுபிடிக்க வேண்டும். மேளாவும் நடந்தது. மகாநாடும் நடந்து முடிந்து விட்டது. இப்பொழுது ஏதாவது புது வடிவத்தில் சேவையை உருவாக்குங்கள். அதைப் பார்த்து, கேட்டு இந்த மாதிரி ஒருபொழுதும் பார்க்கவும் இல்லை மற்றும் கேட்கவும் இல்லை என்று நினைக்க வேண்டும்.

**ஆக்ரா ஜோனுடன் சந்திப்பு:** எப்பொழுதும் தன்னுடைய பாக்கியத்தை நினைவு செய்து குஷியில் இருக்கிறீர்களா? ஆஹா! என்னுடைய பாக்கியம் என்ற இந்தப் பாடல் எப்பொழுதும் மனதில் ஒலித்துக் கொண்டே இருக்கிறதா? ஆஹா தந்தை, ஆஹா நாடகம்! மேலும் ஆஹா என்னுடைய பங்கு -எப்பொழுதும் இதே நினைவில் ஒவ்வொரு காரியத்தையும் செய்து கொண்டே -காரியம் செய்து கொண்டிருந்தும் கர்மத்தின் பந்தனத்திலிருந்து விடுபட்ட, எப்பொழுதும் ஜீவன்முக்த் நிலை என்று அப்படி அனுபவம் ஆகிறதா? சத்யுகத்தில் ஜீவன் முக்தியின் ஆஸ்தியோ அவசியம் பிராப்தி ஆகும் ஆனால் இப்பொழுதைய ஜீவன் பந்தனத்திலிருந்து ஜீவன் முக்தி நிலையின் அனுபவம் சத்யுகத்தை விட அதிகமாகும். எனவே இப்பொழுதும் தன்னுடைய மண்டலம் மற்றும் யோகத்தின் சக்தி மூலம் ஜீவன் முக்த் நிலையை அனுபவம் செய்கிறீர்களா? அல்லது இப்பொழுதும் பந்தனம்

இருக்கிறதா? பந்தனம் அனைத்தும் முடிவடைந்து விட்டது, ஜீவன்முக்தி ஆகி விட்டோம். என்னவானாலும் ஜீவன்முக்த் இருக்கும் காரணத்தினால் அது சோதனை இல்லை, ஆனால் ஏதோ விளையாட்டை விளையாடிக் கொண்டிருப்பது போன்று அனுபவம் ஆகிறது. உடல் நோய் ஏற்பட்டாலும் மாயாவின் அனேக விதமான தாக்குதல் இருந்தாலும், விளையாடுவது போன்ற அனுபவம் இருக்கட்டும். விளையாட்டில் துக்கம் ஏற்படுவதில்லை. விளையாடுவதே பொழுதுபோக்கிற்காகத் தானேயன்றி துக்கத்திற்காக அல்ல. அப்படி விளையாட்டு என்று புரிந்து கொள்வதினால் ஜீவன்முக்த் நிலையை அனுபவம் செய்வீர்கள். அப்படி நீங்கள் ஜீவன்முக்தாக இருக்கிறீர்களா அல்லது ஜீவன் பந்தனமாக இருக்கிறீர்களா? உடலின், உறவுகளின் எந்த பந்தனமும் இருக்க வேண்டாம். இதை விளையாடிக் கொண்டே கடமையை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறீர்கள். கடமையை செய்வதின் விளையாட்டையும் விளையாடிக் கொண்டிருக்கிறீர்கள். பந்தனமற்ற ஆத்மா தான் உயர்ந்த நிலையின் அனுபவம் செய்ய முடியும். பந்தனமுள்ளவரோ கீழேயே கட்டப்பட்டிருப்பார், பந்தனமற்றவர் மேலே பறப்பார். அனைவரும் உங்களுடைய கூண்டை உடைத்து விட்டீர்களா? பந்தனம் தான் கூண்டாகும். அப்படி பந்தனங்களின் கூட்டை உடைத்து விட்டீர்களா? கடமையைச் செய்வது கூட பற்றுதலோடு இல்லாமல் ஒரு காரியம் என்று புரிந்து செய்ய வேண்டும். அப்பொழுது தான் பந்தனமற்ற நிலை என்று கூறுவோம். டிரஸ்டி ஆகி இருந்தீர்கள், என்றால் பந்தனமற்றவர்களாக இருப்பீர்கள். ஏதாவது என்னுடையது என்பது இருக்கிறது என்றால் கூண்டில் அடைக்கப் பட்டிருக்கிறீர்கள். இப்பொழுது கூண்டில் அடைக்கப்பட்ட மைனா இல்லை நீங்கள், சொர்கத்தின் மைனாவாக ஆகி விட்டீர்கள். தொடக்க காலத்து பாடல் இருக்கிறது இல்லையா. கூண்டிலிருக்கும் மைனாவே. இப்பொழுதோ சொர்க்கத்தின் தேவதைகளாக ஆகி விட்டீர்கள், அனைவரும் சொர்க்கத்தில் பறப்பவர்கள். கூண்டில் அடைக்கப்பட்ட மைனாவிலிருந்து பரிஷ்தா ஆகி விட்டீர்கள். இப்பொழுது எங்கேயும் கொஞ்சம் கூட பந்தனம் வேண்டாம். மனதின் பந்தனமும் வேண்டாம். என்ன செய்வேன், எப்படிச் செய்வேன், விரும்புகிறேன் நடப்பதில்லை என்ற இதுவும் மனதின் பந்தனம் ஆகும். விரும்புகிறேன் ஆனால் செய்ய முடிவதில்லை என்றால் இதுவும் பலஹீனம் தான் இல்லையா? இந்த

பந்தனத்திலிருந்தும் விடுபட்ட நிலை என்ற இதைத் தான் நிர்பந்தனம் என்று கூறுவது. தந்தையின் குழந்தையாக ஆகி விட்ட பிறகு, குழந்தை என்றால் சுதந்திரமானவர். எனவே தான் மாணவ வாழ்க்கை தான் மிகச் சிறந்த வாழ்க்கை என்று கூறப்படுகிறது. அப்படியானால் நீங்கள் யாராக இருக்கிறீர்கள். குழந்தைகளா அல்லது வயதானவரா? குழந்தை என்றால் பந்தனமற்றவர். ஒருவேளை தன்னை கடந்த கால வாழ்க்கையிலிருப்பவர் என்று நினைத்தீர்கள் என்றால் பந்தனம் ஆகும். உடலிலிருந்து கொண்டே இறந்து மறுபிறவி எடுத்தவராக ஆகி விட்டீர்கள் என்றால் பந்தனமற்ற நிலை. நீங்கள் குமாராக இருந்தாலும் அல்லது வயோதிகராக இருந்தாலும் அனைவருமே குழந்தைகள் தான். தந்தை கொடுத்த ஒரே ஒரு காரியத்தில் 'நினைவு செய்யுங்கள் மற்றும் சேவையில் இருங்கள்' என்ற இதில் மட்டுமே எப்பொழுதும் பிஸியாக இருங்கள்.

ஸ்தாபனையின் காரியத்தில் ஆரம்பத்திலிருந்து எந்த ஆத்மாக்கள் சகயோகிகளாக இருந்தார்களோ. அவர்களுடைய விசேஷ சகயோகம் நாடகத்தின் அனுசாரம் ஏதாவது ரூபத்தில் அவசியம் பிராப்தி ஆகிறது. அதற்கான உத்திரவாதம் இருக்கிறது. பாப்தாதா இங்கேயே அதற்கான பலனையும் கொடுக்கிறார். மேலும் எதிர்காலத்திற்காகவும் சேமிப்பாகிறது. நல்லது.

வரதானம்: அழியாத மற்றும் எல்லைக்கப்பாற்பட்ட அதிகாரத்தின் குஷி மற்றும் போதை மூலமாக எப்பொழுதும் கவலையற்றவராக ஆகுக!

உலகத்தில் மிகக் கடுமையாக உழைத்த பின்பு அதிகாரத்தை அடைகிறார்கள், உங்களுக்கு எந்தக் கடின உழைப்பும் இன்றி அதிகாரம் கிடைத்து விட்டது. குழந்தை ஆவது என்றால் அதிகாரத்தை பெறுவது 'ஆஹா நான் ஒரு உயர்ந்த அதிகாரி ஆத்மா' என்ற இந்த எல்லைக்கப்பாற்பட்ட அதிகாரத்தின் போதை மற்றும் குஷியில் இருந்தீர்கள் என்றால் எப்பொழுதும் கவலையற்று இருப்பீர்கள். தன்னுடைய அனைத்து பொறுப்புக்களையும் தந்தையிடம் ஒப்படைத்து விட்டீர்கள் என்றால் அனைத்து கவலைகளிலிருந்தும் விடுபட்டு விடுவீர்கள்.

சுலோகன்: யார் நன்மையே பயக்கும் சிந்தனை உள்ளவரோ மேலும் பரந்த மனமுடையவராகவும் இருக்கிறாரோ அவர் தான் ஒற்றுமையின் வேர் ஆவார்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 07.12.1978 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தந்தைக்குச் சமமாக சம்பூர்ணம் ஆவதின் அடையாளம்!

எப்பொழுதும் தன்னுடைய நினைவின் பலத்தினால் தன்னுடைய மூன்று ஸ்தானங்கள் மற்றும் மூன்று நிலைகள் அதாவது நிராகார, ஆகார மற்றும் சாகார அப்படி மூன்று நிலைகளிலும் சுலபமாகவே நிலைத்திருக்க முடியுமா? எப்படி ஆதி (ஆரம்ப, சத்யுக) நிலை சாகார சொரூபத்தில் சுலபமாகவே நிலைத்திருக்கிறீர்கள், அதே போல் அனாதி (முடிவில்லா ஆத்ம லோக) நிராகார நிலையும் இந்த அளவு சகஜமாக அனுபவம் ஆகிறதா? இந்த நேரம் அனாதி மற்றும் அடுத்த நேரம் ஆதி, அப்படி நினைவின் பலம் மூலமாக இரண்டு நிலையில் சமநிலை அனுபவம் ஆக வேண்டும், அந்த மாதிரி அனுபவம் செய்கிறீர்களா? எப்படி தன்னுடைய சாகார சொரூபம் அனுபவம் ஆகிறது, நிலைத்திருப்பதை இயற்கையாக அனுபவம் செய்கிறீர்கள் அதே போல் தன்னுடைய அனாதி நிராகாரி சொரூபத்தில், எது எப்பொழுதும் அழியாததோ, அந்த எப்பொழுதும் அழியாத நிரந்தர சொரூபத்தில் நிலைத்திருப்பதும் இயற்கையானதாக இருக்க வேண்டும். நினைத்தீர்கள் மற்றும் நிலைத்திருந்தீர்கள் என்ற இதைத் தான் தந்தைக்குச் சமமான சம்பூர்ண நிலை, கர்மாதீத் இறுதி நிலை என்று கூறுவது. எனவே இறுதி நிலைக்கு எவ்வளவு அருகில் வந்து சேர்ந்து விட்டோம் என்று தன்னைத் தானே கேளுங்கள். எவ்வளவு சம்பூர்ண நிலைக்கு அருகில் இருப்பீர்களோ அதாவது தந்தையின் அருகில் இருப்பீர்களோ அதன் அனுசாரமே எதிர்கால பிராப்தியின் பலன் அடைவதிலும் இராஜ்ய அதிகாரியாக இருப்பீர்கள். கூடவே தொடக்கத்து பக்தியின் வாழ்க்கையிலும் நெருங்கிய சம்மந்தத்தில் இருப்பீர்கள். பூஜைக்குரிய மற்றும் பூஜாரி இரண்டு வாழ்க்கையிலும் சாகார தந்தையின் அருகில் இருப்பீர்கள் அதாவது முழுக் கல்பத்திலும் ஆரம்பகால ஆத்மாக்களின் உறவு நெருக்கத்தில் இருப்பீர்கள். கதாநாயக பங்கைச் செய்யும் ஆத்மாவுடன் ஆத்மாக்கள்

உங்களுடையதும் விதவிதமான பெயர் உருவத்தில் விசேஷ பங்கு இருக்கும். இப்பொழுதைய சம்பூர்ண நிலையின் அருகாமையினால் அதாவது பாப்தாதாவின் அருகாமையின் ஆதாரம் முழுக் கல்பத்தின் அருகாமையின் ஆதாரம் ஆகும். எனவே எவ்வளவு விரும்புகிறீர்களோ அந்த அளவு தன்னுடைய முழுக் கல்பத்திற்கான பிராப்தியை உருவாக்குங்கள். அருகாமைக்கான ஆதாரம் உயர்ந்த தன்மை ஆகும். உயர்ந்த தன்மையின் ஆதாரம் தன்னுடைய மறுபிறவி எடுத்த வாழ்க்கையில் முக்கியமாக இரண்டு விஷயங்களின் சோதனை செய்யுங்கள். ஒன்று எப்பொழுதும் பரோபகாரியாக இருக்கிறேனா? இரண்டாவது தொடக்கத்திலிருந்து இப்பொழுது வரை எப்பொழுதும் பால பிரம்மச்சாரியாக இருக்கிறேனா? மறுபிறவி வாழ்க்கையின் தொடக்க காலத்திலிருந்து அதாவது குழந்தைப் பருவ காலத்திருந்து இதுவரை எப்பொழுதும் பிரம்மச்சாரியாக இருக்கிறேனா? பிரம்மச்சாரி வாழ்க்கை என்றால் பிரம்மாவுக்குச் சமமான தூய்மையான வாழ்க்கை. அதை பிரம்மச்சாரி என்று சொன்னாலும் அல்லது பிரம்மாச்சாரி என்று சொன்னாலும் தொடக்கத்திலிருந்து இறுதி வரை துண்டிக்கப்படாமல் இருக்கிறேனா? ஒருவேளை அடிக்கடி துண்டிக்கப்பட்டு இருக்கிறேன் என்றால், பால பிரம்மச்சாரி மற்றும் நிரந்தர பிரம்மச்சாரி என்று கூற முடியாது. ஏதேனும் தூய்மை அதாவது சுத்தத்தன்மை குறைந்தது என்றால், உயர்ந்த பூஜைக்குரியவர் ஆக முடியாது. தந்தைக்குச் சமமாக இல்லாத காரணத்தினால் நெருங்கிய சம்மந்தத்திலும் வர முடியாது. எனவே உயர்ந்த தன்மையின் ஆதாரம், நெருக்கத்தின் ஆதாரம் பால பிரம்மச்சாரி அதாவது எப்பொழுதும் பிரம்மச்சாரியாக இருப்பது, இதைத் தான் தந்தையைப் பின்பற்றுவது என்று கூறுவது. எனவே துண்டிக்கப்படாமல் இருந்ததா என்று தன்னை சோதனை செய்யுங்கள், துண்டிக்கப்படாமல் இருப்பவர்களுக்கு அனைத்து பிராப்திகளும் அளவில்லாமல் கிடைத்த அனுபவம் ஆகும். துண்டிக்கப்பட்டு பிறகு மீண்டும் முயற்சி செய்பவர்களுக்கு பிராப்திகளும் அற்ப காலத்திற்குத் தான் அனுபவம் ஏற்படும். எப்பொழுதும் தன்னுடைய பதிவேடு சுத்தமாக இருந்ததா என்று சோதனை செய்யுங்கள். எதேனும் கரையினால் பதிவேடு கெட்டுப் போகவில்லையே? சதா பிரம்மச்சாரி என்றால் எண்ணத்தில் கூட எந்தவிதமான தூய்மையின்மை உள்ளுணர்வை சஞ்சலமுடையதாக ஆக்கக்கூடாது. முதல் தோல்வி உள்ளுணர்வின் சஞ்சலத்தன்மை, பிறகு பார்வ மற்றும் செயல்கள்

சஞ்சலமாகிறது. உள்ளுணர்வின் சஞ்சலத்தன்மை, பதிவேட்டை கறைபடிய வைத்து விடுகிறது. எனவே உள்ளுணர்வினாலும் நிரந்தர பிரம்மச்சாரி.

இன்று பாப்தாதா எத்தனை குழந்தைகள் நிரந்தர பிரம்மச்சாரியாக இருக்கிறார்கள், மேலும் எத்தனை பிரம்மாச்சாரிகள் என்று இந்த பதிவேட்டைப் பார்த்துக் கொண்டிருந்தார். பால பிரம்மச்சாரிக்கு மகத்துவம் இருக்கிறது, பால பிரம்மச்சாரி தற்சமயமும் பூஜைக்குரியவர்கள் அதாவது உயர்ந்தவர்கள். பாப்தாதாவும் அந்த மாதிரியான குழந்தைகளை பூஜைக்குரிய குழந்தைகளின் ரூபத்தில் பார்க்கிறார். உலகின் எதிரில் கூட இப்பொழுது இறுதியில் பூஜைக்குரிய ரூபத்தில் பிரத்யக்ஷம் ஆவார்கள். தந்தையின் எதிரில் பூஜைக்குரியவராக பிரசித்தி ஆகுபவர் எப்பொழுதும் நெருங்கிய சம்மந்தத்தில் இருப்பார்கள். அந்த மாதிரி தன்னுடைய பதிவேட்டைப் பாருங்கள்.

இரண்டாவது விஷயம் -பரோபகாரி! இதனுடைய விஸ்தாரமும் மிக நுண்ணியமானது. இதனுடைய விஸ்தாரத்தை நீங்களே யோசியுங்கள். உலகிற்காக மற்றும் பிராமண பரிவாரத்திற்காக இரண்டு சம்மந்தத்தில் எப்பொழுதுமே உபகாரியாக ஆகியிருக்கிறோமா அல்லது சில நேரம் சுய உபகாரி மற்றும் சில நேரம் பரோபகாரியாக இருந்தோமா? உண்மையில் பரோபகாரம் தான் சுய உபகாரம் ஆகும். இந்த முறையில் இந்த விஷயத்திலும் தன்னுடைய பதிவேட்டை சோதனை செய்யுங்கள். பின்பு பாப்தாதாவும் கூறுவார். புரிந்ததா? நல்லது.

எப்பொழுதும் தன்னுடைய அனாதி மற்றும் ஆதி சொரூபத்தில் சுலபமாக நிலைத்திருக்கக்கூடிய எப்பொழுதும் சுத்தமாக மற்றும் தெளிவாக இருக்கக்கூடிய பூஜைக்குரிய ஆத்மாக்களுக்கு முழு கல்பத்திலும் நெருங்கிய சம்மந்தத்தில் வரக்கூடிய ஆத்மாக்களுக்கு, நிரந்தர பிரம்மச்சாரி குழந்தைகளுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**டீச்சர்களுடன் சந்திப்பு:** டீச்சர்களுக்கு விசேஷ லிஃப்ட் இருக்கிறது. ஏனென்றால் டீச்சர்களுடைய வேலையே அனைத்து ஆத்மாக்களுக்கும்

வழிகாட்டக் கூடியதாகும். அப்படி இரவு பகலாக ஒரே ஈடுபாட்டில் இருக்கக்கூடிய ஒருவரின் நினைவு மற்றும் ஒரே காரியத்தில் இருப்பதினால் ஒரே சீரான நிலை சுலபமாகவே உருவாகி விடுகிறது. ஒருவரின் அன்பின் நினைவிலேயே இருப்பதினால் இலக்கை அடைவது சுலபமாக அனுபவம் ஆகிறது. ஒன்றே ஒன்று தான் என்றால் மார்க்கம் சுலபமாகி விட்டது இல்லையா? ஒரு நொடியில் பொத்தானை அழுத்தினீர்கள். உடனேயே இலக்கை சென்றடைந்தீர்கள். நினைத்தீர்கள் உடனேயே சொரூபமானீர்கள். இது தான் லி்ஃப்ட் ஆகும். டீச்சர்களுக்கு தங்களது பாக்கியத்தைப் பார்த்து எப்பொழுதும் தந்தையின் மகிமையைப் பாட வேண்டும். ஆஹா பாபா! மற்றும் ஆஹா டிராமா! என்ற இந்தப் பாடல் தான் எப்பொழுதுமே ஒலித்துக் கொண்டே இருக்க வேண்டும். இதே குஷியில் உடல் பந்தனமானாலும் சரி அல்லது மனதின் பந்தனமானாலும் சரி, எதுவுமே அனுபவம் ஆகாது, எப்பொழுதும் பிஸியாக இருப்பதினால் எந்தவிதமான மாயாவின் தாக்குதல் இருக்க முடியாது. மாயாவிற்கு தோல்வி ஏற்படும் தாக்குதல் செய்ய முடியாது.

**நெருக்கமான ஆத்மாக்களைப் பொருத்தவரையில் முயற்சியும் ஒரு மனமகிழச்சிக்கான சாதனம்:** பிரம்மாபாபாவின் முதல் விசேஷமாக பற்றுதலை வென்ற நிலை இருந்தது. அதன் ஆதாரத்தில் தான் எப்பொழுதும் (தந்தையின்) நினைவு சொரூபம் ஆனார் என்றால், அந்த மாதிரி தந்தையை பின்பற்றி செல்கிறீர்களா? இதே விசேஷத்தினால் நெருக்கமான ஆத்மா ஆகி விடுவீர்கள். தன் மீதும் மற்றும் மற்றவர் மீதும் பற்றுதலை வென்ற நிலை எனவே நெருக்கமான ஆத்மாக்களுக்கு சுலபமாகவே அனைத்து பிராப்திகளும் ஏற்படுகிறது. முயற்சி செய்வது கூட கடினமாக இல்லாமல் ஒரு விளையாட்டாக அனுபவம் ஆகும். முயற்சி செய்வது கூட ஒரு மனமகிழ்ச்சிக்காகத் தான். பொதுவாக ஏதாவது கணக்கை போடுங்கள் மற்றும் மனமகிழ்ச்சி என்ற முறையோடு கணக்கை போட்டீர்கள் என்றால் வித்தியாசம் ஏற்பட்டுவிடும் இல்லையா? அப்படி நெருக்கமான ஆத்மாக்களின் முயற்சி கூட மனமகிழ்ச்சி அனுபவம் ஆக வேண்டும். நெருக்கமான ஆத்மாவின் முக்கியமான அடையாளம் தொடக்கத்திலிருந்து கடைசி வரை கடினம் அனுபவம் ஆக வேண்டாம்.

<u>வெற்றிக்கான ஆதாரம் சாட்சி மற்றும் துணையின் அனுபவம்:</u> எப்பொழுதும் தன்னை தந்தையின் துணைவன் என்று புரிந்து நடந்து கொள்கிறீர்களா? ஒருவேளை துணையின் அனுபவம் ஆகிறது என்றால் சாட்சி நிலையின் அனுபவமும் ஆகும். ஏனென்றால் தந்தையின் துணை இருக்கும் காரணத்தினால் எப்படி தந்தை சாட்சியாகி, இப்பொழுது கூட துணைவனாக இருக்கும் காரணத்தினால் சாட்சியாகி பங்கைச் செய்கிறார். அப்படியானால் இரண்டையும் அனுபவம் செய்கிறீர்கள். நீங்கள் தனியாக இருக்கவில்லை, எப்பொழுதும் சர்வ சக்திவான் உடன் இருக்கிறார். எங்கு உடன் இருக்கிறாரோ அங்கு வெற்றியோ இயல்பாகவே நிச்சயிக்கப்பட்டது. பொதுவாக பக்தி மார்க்கத்தில் கூட கொஞ்ச நேரத்து துணையை அனுபவம் செய்வியுங்கள், கொஞ்சம் தோற்றத்தைக் காண்பியுங்கள் என்று இதைக் கூறித்தான் அழைக்கிறார்கள் ஆனால் இப்பொழுது என்ன ஆனது? அனைத்து உறவுகளினால் துணைவனாகி விட்டார். தோற்றம் மற்றும் தரிசனம் அற்பகாலத்திற்காசு இருக்கும் ஆனால் சம்மந்தம் நிரந்தரமாக இருக்கும். அப்படி இப்பொழுது தந்தையின் நெருங்கிய சம்மந்தத்தில் வந்து விட்டீர்களா அல்லது இதுவரையிலும் அறியாதவராகத் தான் இருக்கிறீர்களா? அறியாதவரின் நிலை எதுவரை பிராப்தியில்லையோ அதுவரை இருக்கும். இப்பொழுது அறியாதவர் இல்லை, அதிகாரி ஆவீர்கள், ஒவ்வொரு நொடியும் உடன் இருக்கிறீர்கள். ஒவ்வொரு நொடியும் சம்மந்தத்தின் காரணத்தினால் நெருக்கத்தில் இருக்கிறீர்கள். வாழ்க்கையில் துணைவனைத் தேடுகிறார்கள் மேலும் துணைவனின் ஆதாரத்தினால் தன்னுடைய வாழ்க்கையைக் கழிக்கிறார்கள். இப்பொழுது இந்த மாதிரி துணையை உருவாக்கியிருக்கிறீர்கள். அழியாத துணை, வேறு எந்த துணைவனும் தேவையான நேரத்தில் மற்றும் எப்பொழுதுமே வந்து சேர முடியாது, ஆனால் பாப்தாதா எப்பொழுதும் மற்றும் ஒரு நொடியில் வந்தடைய முடியும். அவர் ஒவ்வொரு ஜென்மத்தின் துணையாக இருக்கிறார், எதிர்காலத்தில் கூட தந்தையின் துணை இருக்கும் இல்லையா. சிவபாபா சாட்சியாகி விடுவார். மேலும் பிரம்மாபாபா துணைவனாகி விடுவார். இப்பொழுது இருவருமே துணைவர்களாக இருக்கிறார்கள், அந்த மாதிரி அனுபவம் செய்பவர்கள் எப்பொழுதும் குஷியாக இருக்கிறார்கள். என்ன அடைய வேண்டுமோ அதை அடைந்தாகி விட்டது என்றால் குஷி இருக்கும்

இல்லையா? அடைந்து விட்டீர்கள். மற்றபடி தந்தைக்குச் சமமாகத் தன்னை ஆக்க வேண்டும். இதில் வரிசைக்கிரமமாக இருக்கிறீர்கள்.

சக்திசேனைக்கு பாப்தாதா விசேஷமாக ஏறும் கலைக்கான சகயோகம் ஏன் கொடுக்கிறார்? ஏனென்றால் சக்திகளை, மாதர்களை அனைவரும் கீழே தள்ளினார்கள். இப்பொழுது தந்தை வந்துமே நிலைக்கு உயர்த்துகிறார். தன்னையும் விட முன்னுக்கு சக்திகளை வைக்கிறார் என்றால் சக்திகளுக்கு விசேஷ குஷி இருக்க வேண்டும். சக்திகளின் முகம் எப்பொழுதும் ஜொலித்துக் கொண்டிருப்பதாக தென்பட வேண்டும். ஏனென்றால் விசேஷமாக தந்தை முன்னுக்கு வைத்திருக்கிறார். பொதுவாகவே அற்பகாலத்தின் பிராப்தி ஏற்படுகிறது என்றாலும் அந்த ஜொலிப்பு முகத்தில் தென்படும், இதுவோ எவ்வளவு பிராப்தி. மாதர்கள் ஒருபொழுதும் அழுவதோ இல்லையே, எப்பொழுதாவது கண்களில் நீர் நிரம்புகிறதா? இப்பொழுது கண்களில் ஆன்மீகத்தன்மை வந்து விட்டது, எங்கு ஆன்மீகத்தன்மை இருக்குமோ அங்கு கண்ணீர் இருக்க முடியாது. பாண்டவர்கள் கண்களால் அழுகிறீர்களா அல்லது மனதாலா? எப்பொழுது சுகத்தின் கடலில் மூழ்கியிருப்பவர்கள் என்றால், அழுகை எங்கிருந்து வந்தது. அழுவது என்றால் துக்கத்தின் அடையாளம். சுகத்தின் கடலில் மூழ்கியிருப்பவர் எப்படி அழ முடியும். ஒருபொழுதும் கனவில் கூட துக்கத்தின் உணர்வுகள் வர வேண்டாம். கனவு கூட சுக்சொரூபமானதாக இருக்கட்டும். ஏனென்றால் சுகக்கடல் தன்னுடைய நெருங்கிய சம்மந்தத்தில் வந்து விட்டார். எனவே எப்பொழுதும் சுகத்தில், குஷியில் இருங்கள். ஒருபொழுதும் அழக்கூடாது. சத்யுகத்தில் உங்களுடைய பிரஜை அழுவார்களா என்ன? அப்படியானால் இராஜாவாக ஆகப்போகிறவர் ஏன் அழுகிறீர்கள்? சக்திகளோ ஒரு சாம்பிள் ஆவார்கள். ஒருவேளை சாம்பிள் அழுபவராக இருக்கிறார் என்றால், எப்படி ஒப்பந்தம் செய்வீர்கள். எனவே ஒருபொழுதும் அழக்கூடாது, கண்களாலும், மனதாலும் அழக்கூடாது. புரிந்ததா?

வரதானம்: சேவையின் ஊக்கம் உற்சாகம் மூலமாக பாதுகாப்பின் அனுபவம் செய்யக்கூடிய மாயாவை வென்றவர் ஆகுக!

எந்தக் குழந்தைகள் ஸ்தூல காரியத்தின் கூடவே ஆன்மீக சேவைக்காக ஓடுகிறார்கள். எவரெடியாக இருக்கிறார்கள் என்றால் இந்த சேவைக்கான ஊக்கம் உற்சாகமுமே பாதுகாப்பிற்கான சாதனம் ஆகி விடுகிறது. யார் சேவையிலேயே ஈடுபட்டிருக்கிறாரோ அவர் மாயாவிடமிருந்து பாதுகாப்பாக இருப்பார். மாயாவும் இவர்களுக்கு ஓய்வே இல்லை என்று பார்க்கிறது என்றால், அதுவும் திரும்பிச் சென்று விடுகிறது. எந்த குழந்தைகளுக்கு தந்தை மற்றும் சேவையின் மீது அன்பு இருக்கிறதோ அவர்களுக்கு அதிகப்படியான தைரியத்தின் உதவி கிடைக்கிறது. அதன் மூலம் சுலபமாகவே மாயாவை வென்றவர் ஆகி விடுகிறார்கள்.

சுலோகன்: ஞானம் மற்றும் யோகாவை தன்னுடைய சுபாவமாக ஆக்கி விட்டீர்கள் என்றால், பழைய சுபாவம் மாறிவிடும்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 10.12.1978 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# விஸ்தாரத்தைப் பார்க்காமல் சாரம் அதாவது பிந்துவைப் பாருங்கள்!

மதுபன் நிவாசி என்றால் மதுரத்தின் (இனிமையின்) கடலில் எப்பொழுதுமே நீந்திக் கொண்டிருக்கும் பாப்தாதாவின் விசேஷ கர்ம பூமி, சரித்திர பூமி, இனிமையான சந்திப்பின் பூமி அல்லது மகான் புண்ணிய பூமி, அந்த மாதிரி பூமியில் நிரந்தரமாய் வசிப்போர் எவ்வளவு மகான் ஆத்மாக்களாக இருப்பார்கள்? நிராகார தந்தைக்கு இந்த சாகார பூமி மேல் விசேஷ அன்பு இருக்கிறது, அந்த பூமியில் வசிப்போர் தன்னையும் எப்பொழுதும் அந்த மாதிரி அனுபவம் செய்கிறார்களா? மதுபன் என்றால் மதுரபூமி (இனிமையான பூமி). உள்உணர்விலும் இனிமை, வார்த்தைகளிலும் இனிமை. மேலும் ஒவ்வொரு காரியத்திலும் எப்பொழுதும் இனிமைத் தன்மை இருப்பது, எப்படி பூமியோ அப்படியே பூமியில் இருப்பவர்களும் மகான் ஆத்மாக்கள். எந்த ஆத்மாக்கள் மதுபனிலிருந்து அனுபவம் செய்து செல்கிறார்களோ, அவர்களும் என்ன கூறுகிறார்கள்? மதுபன் சங்கமயுகத்தின் சொர்க்கம் அதாவது சொர்க்க பூமியில் இருப்பவர்கள். இப்பொழுதும் சொர்க்கம் மேலும் எதிர்காலத்திலும் சொர்க்கம், அப்படி இரட்டை சொர்க்கத்தின் அதிகாரி எவ்வளவு விசேஷமானவர் ஆனார். பாப்தாதா இன்று பிரத்யேகமாக மதுபன் நிவாசிகளைச் சந்திக்க வந்திருக்கிறார். சொர்க்கத்தின் விசேஷம் மற்றும் சொர்க்கத்தின் விசேஷ மகிமையாக என்ன இருக்கிறது? என்று பாப்தாதா கேட்கிறார். சொர்க்கத்தின் விசேஷ மகிமையானது 'எப்பொழுதும் நிரம்பிய அதாவது பிராப்தியில்லை என்ற பொருள் சொர்க்கத்தின் கஜானாவில் இல்லை. இந்த மகிமை சங்கமயுகத்து சொர்க்கத்திற்கும் அல்லது எதிர்கால சொர்க்கத்திற்கும் இரண்டிற்கும் கூறப்பட்டிருக்கிறது. அப்படி மதுபன் நிவாசி என்றால் சங்கமயுக சொர்க்கத்தில் வசிப்பவர். அந்த மாதிரி நிரம்பிய நிலையின் அனுபவம் செய்கிறீர்களா? அதன் மூலம் நான் எப்பொழுதுமே திருப்தியாக இருக்கும் ஆத்மா என்ற உணர்வு ஏற்படுகிறதா? எப்படி

ஆசை என்றால் என்னவென்று அறியாத நிலையின் சம்ஸ்காரம் எதிர்கால சொர்க்கத்தில் இயற்கையாக இருக்கும். அதே போல் மதுபன் நிவாசிகளுக்கு இந்த இயற்கையான சம்ஸ்காரம் இருக்கிறதா? சொர்க்கவாசி என்றால் இந்த அனைத்து விஷயங்களின் இயற்கையான சம்ஸ்கார சொரூபம் இருக்கிறதா? யாராவது நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்று கேட்டால் மிகவும் குஷியோடு ஆர்வத்தோடு நாங்கள் மதுபன் நிவாசிகள் (வசிப்போர்) என்று கூறுகிறீர்கள். மதுபன் நிவாசி என்பது முத்திரையிட்டது போல் ஆகி விட்டது. கூடவே எப்படி ஸ்தானமோ அப்படி மனநிலையின் முத்திரையும் இருக்கும் இல்லையா? எப்படி குளிர்சாதன பதப்படுத்தும் அறையில் சென்றீர்கள் என்றால், எப்படி ஸ்தானமோ அப்படியான நிலை இயல்பாகவே இருக்கும் இல்லையா? அப்படி மதுபனின் என்ன மகிமை இருக்கிறதோ அந்த மாதிரி சம்ஸ்காரம் உருவாகியிருக்கிறதா? ஏனென்றால் சாகார ரூபத்தில் லட்சிய சொரூபமாக அனைவரின் எதிரில் மதுபன் இருக்கிறது, அனைவரும் மதுபனை அப்படியே பின்பற்றி (காப்பி) செய்கிறார்கள். எந்தவொரு நிலையிலும் மேலே கீழே செல்கிறது என்றால் மதுபன் அச்சல்கரில் சென்றால் உறுதியாகி விடுவோம் என்ற அச்சல் (உறுதியான) மதுபன் நினைவு வருகிறது. அந்த மாதிரி பாவனையோடு சுபவிருப்பங்களோடு இந்த புண்ணிய பூமியில் அனைவரும் வருகிறார்கள். எப்பொழுது அனைத்து ஆத்மாக்களின் குழப்பத்திற்கான வழி கிடைக்கும் சாதனம் அச்சல்கர் மதுபன் என்றால், மதுபன்னில் இருப்பவர்களும் எப்பொழுதும் அச்சல் அதாவது உறுதியாக இருப்பார்கள் இல்லையா? அந்த மாதிரியான நிலை அனேக ஆத்மாக்களுக்கு வழி காட்டக்கூடியதாக இருக்கும். ஏனென்றால் மதுபன் லைட் ஹவுஸ் ஆகும். அனைத்து சேவை நிலையங்களுக்கும் சகயோகம் கொடுப்பவர்கள் மதுபன் நிவாசிகள். எப்பொழுதும் எண்ணம், சொல் மற்றும் செயலால் ஒவ்வொருவருக்கும் சகயோகியாக இருக்கிறார்கள் என்றால் உடன் இருப்பவர்களுக்கும் சகயோகியாக இருப்பார்கள் இல்லையா? அனைத்து குழந்தைகளுக்கும் அவர்களுடைய ரிசல்ட்டைக் கொடுப்பதற்கு ஒரு வருடம் கிடைத்தது. அப்படி ஒரு வருடத்தில் இப்பொழுது என்ன மாற்றம் கொண்டு வந்திருக்கிறீர்கள். அதைக் கேட்கும் மற்றவர்களும் மாறிவிட வேண்டும். எப்படி யாராவது தன்னுடைய உண்மையான உள்ளத்தோடு, ஊக்கத்தோடு தந்தை மேல் இருக்கும் அன்பினால் தன்னுடைய

அனுபவத்தைக் கூறுகிறார்கள் என்றால், அந்த அனுபவத்தை கேட்டுக் கொண்டே அனேக ஆத்மாக்கள் மாறிவிடுகின்றன என்பதையும் அனேக தடவை பார்த்திருக்கிறோம். ஒருவரின் மாற்றம் அனேக ஆத்மாக்களின் மாற்றத்திற்கான சாதனம் ஆகி விடுகிறது. அப்படி அனேக ஆத்மாக்களுக்கு ஒரு உதாரணமாக இருக்கும் மாதிரி மாற்றம் ஏற்பட்டு இருக்கிறதா? ஒரு வருடத்தில் அந்த மாதிரி ஏதாவது அதிசய அனுபவம் ஆனதா? யார் யார் ஹை ஜம்ப் (மிக உயர்வாக தாண்டுதல்) செய்திருக்கிறீர்கள். யார் லி∴ப்டின் கி∴ப்டை அடைந்தார்கள்,

எப்படி இன்றைய நாட்களின் தொலைக்காட்சியில் நாலா புறங்களிலும் ஒரு இடத்தின் படம் தெளிவாகத் தெரிகிறது. அப்படி மதுபனும் தொலைக்காட்சி நிலையம் ஆகும். நாலாபுறங்களிலும் தொலைக்காட்சிப் பெட்டிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. எப்படி இன்றைய நாட்களில் அறிவியல் சாதனங்கள் மூலம் எண்ணங்களின் வேகம் அல்லது மனநிலையை சோதனை செய்ய முடியும். அதேபோல் மதுபன் நிவாசிகளின் எண்ணங்களின் வேகம் மற்றும் மானசீக நிலை நாலாபுறங்களிலும் பரவுகிறது. எனவே ஒவ்வொரு எண்ணத்தின் மேலும் கவனம் இருக்கட்டும். இதில் அலட்சியம் இருக்க வேண்டாம். மதுபன் நிவாசி மதுபன்னில் அமர்ந்து கொண்டும் ஏதாவது விதமான விசேஷ எண்ணம் மூலமாக அலைகளைப் பரப்ப விரும்புகிறார் என்றால், இந்த ஒரு இடத்தில் அமர்ந்து கொண்டே நாலாபுறங்களிலும் பரப்ப முடியும். எப்படி ஸ்தூல பொருளின் மணம் நாலாபுறங்களிலும் தானாகவே பரவிவிடுகிறது. அதே போல் இந்த அலைகள் எண்ணம் மூலமாக நாலாபுறங்களிலும் இயல்பாகவே பரவிவிட வேண்டும். மதுபன் நிவாசிகளுக்கு இது விசேஷ சேவை ஆகும். எப்படி மதுபனில் விசேஷ பட்டி செய்கிறீர்கள் என்றால் அலைகள் நாலாபுறங்களிலும் சென்றடைகிறது தான் இல்லையா? கடிதங்கள் மூலமாக செய்தி கொடுக்காவிட்டாலும் கூட ஆனால் மதுபனின் சூட்சம வைப்ரேஷன் சுலபமாக நாலாபுறங்களிலும் பரவ முடியும். காரிய விவகாரங்கள் இருக்கின்றன, காரியம் மூலமாக கர்மனா சேவை செய்கிறீர்கள் ஆனால் அதன் கூடவே மனதால் செய்யும் சேவைக்கும் பொறுப்பு இருக்கிறதா? பாப்தாதாவோ இந்த வருடத்தின் ரிசல்ட்டைப் பார்ப்பதற்காக வந்திருக்கிறார் இல்லையா?யார் எப்பொழுதுமே உடன் இருக்கிறாரோ அவர் மதிப்போடு எவ்வளவு தேர்ச்சி பெற்றிருக்கிறார்?

யார் மகான் ஆத்மாக்களுடன் இருக்கிறார்கள், சாகாரத்திலும் அருகில் மற்றும் ஸ்தானமும் மகான் என்றால் அந்த மாதிரியான ஆத்மாக்களின் பிராப்தியாக என்ன உருவாகும். சாஸ்திரங்களிலும் மதுபனின் மகிமையை விசேஷமாக வர்ணித்திருக்கிறார்கள். அப்படி மதுபன் நிவாசி ஒவ்வொரு விஷயத்திலும் விசேஷ ஆத்மாக்கள், ஒவ்வொரு நேரமும் ஏதாவது விசேஷத்தைக் காண்பிப்பவர்கள், எந்த குரூப் வந்தாலும் மதுபன் நிவாசிகளின் விசேஷமாக மதுபன் சொர்க்கத்தில் ஒவ்வொரு ஆத்மாவும் எப்பொழுதும் திருப்தியான நிரம்பிய ஆத்மாவாக இருந்தது என்று அனுபவம் செய்யட்டும்.

இதற்கான ஆதாரமானது எப்பொழுதும் நமக்கு வள்ளலின் குழந்தையாகி அனைத்து ஆத்மாக்களுக்கு கொடுக்க வேண்டுமேயன்றி பெறக்கூடாது என்ற ஒரு லட்சியம் இருக்கட்டும். இவர் செய்தார் என்றால், நான் செய்வேன் என்று அப்படி இருக்க வேண்டாம். ஒவ்வொருவரும் கொடுக்க வேண்டும் என்ற பாவனை வையுங்கள். அனைவரும் கொடுப்பவர்கள் என்றால் நிரம்பிய ஆத்மாக்கள் ஆகி விடுவீர்கள். நிரம்பியவர்களாக இல்லை என்றாலும் கொடுக்கவும் முடியாது. அப்படி யார் நிரம்பிய ஆத்மாவாக இருப்பாரோ அவர் எப்பொழுதும் அவசியம் திருப்தியான ஆத்மாவாக இருப்பார். நான் கொடுக்கக்கூடிய வள்ளலின் குழந்தை ஆவேன், கொடுப்பது தான் பெறுவது ஆகும். எவ்வளவு கொடுப்பீர்களோ அந்த அளவு பெறுவீர்கள். நடைமுறையில் பெறுபவர்களாக இன்றி கொடுப்பவர்களாக ஆக வேண்டும். கொடுக்கும் தன்மையின் பாவனை எப்பொழுதும் தடையற்ற. ஆசை என்றால் என்னவென்று அறியாத நிலையின் அனுபவத்தை செய்விக்கிறது. எப்பொழுதும் ஒரு லட்சியத்தின் பக்கமே பார்வை இருக்கட்டும். அந்த லட்சியம் பிந்து. ஒரு லட்சியம் என்றால் எப்பொழுதும் பிந்து வின் பக்கம் பார்ப்பவர். மற்ற எந்த விஷயத்தையும் பார்த்தும் பார்க்காமல் இருக்க வேண்டும். பார்வை ஒரு பிந்து வின் பக்கம் மட்டுமே இருக்கட்டும். எப்படி நினைவுச் சின்னத்திலும் (அர்ஜுனனுக்கு) மீனின் பக்கம் பார்வை இருக்கவில்லை ஆனால் கண்ணிலும் கூட பிந்து வில் இருந்தது என்று காண்பிக்கிறார்கள். அப்படி மீன் விஸ்தாரம் ஆகும். மேலும் பிந்து சாரம் ஆகும். அப்படி விஸ்தாரத்தைப் பார்க்கவில்லை, ஆனால் சாரம் அதாவது ஒரு பிந்துவைப் பார்த்தார். இதே விதமாக ஒருவேளை ஏதாவது ஒரு

விஷயத்தின் விஸ்தாரத்தை பார்த்தீர்கள் என்றால் தடைகளில் வருகிறீர்கள். மேலும் சாரம் அதாவது ஒரு பிந்து ரூப நிலை உருவாகி விடுகிறது. என்றால், முற்றுப்புள்ளி அதாவது பிந்து இடப்பட்டு விடுகிறது. காரியத்திலும் முற்றுப்புள்ளி அதாவது பிந்து, எண்ணத்தில் கூட பிந்து அதாவது விதை ரூப நிலை ஆகி விடும். இந்த விசேஷ பயிற்சியை செய்யுங்கள். விஸ்தாரத்தைப் பார்த்தும் பார்க்க வேண்டாம். கேட்டும் கேட்க வேண்டாம் என்ற இந்தப் பயிற்சி இப்பொழுதிலிருந்தே வேண்டும். அப்பொழுது தான் இறுதி நேரத்தில் எப்பொழுது நாலாபுறங்களிலும் குழப்பத்தின் மிக துக்கம் நிரம்பிய ஓசை இருக்குமோ, மிக பயங்கரமான காட்சிகள் இருக்குமோ அதில் பாஸ் ஆக முடியும். இப்பொழுதைய விஷயங்களோ அதை ஒப்பிடும்பொழுது ஒன்றுமே இல்லை. ஒருவேளை இப்பொழுதிலிருந்தே பார்த்துக் கொண்டும் பார்க்காமல் இருப்பது, கேட்டுக் கொண்டும் கேட்காமல் இருப்பது என்ற இந்தப் பயிற்சி இல்லை என்றால், இறுதியில் அந்த பயங்கரமான காட்சியைப் பார்த்து ஒரு விநாடியின் பரீட்சையில் நிரந்தரமாக தோல்வி அடையும் மதிப்பெண்கள் கிடைத்து விடும். எனவே இந்த விசேஷ பயிற்சி தேவை. உங்களுடைய நிலை சாகார உடலிலும் ஆகார ரூபம் அனுபவம் ஆக வேண்டும் என்று அப்படி இருக்க வேண்டும். எப்படி ஆகார ரூபத்தில் பார்த்தீர்கள், (பிரம்மாபாபாவை) சாகார உடலிலும் ஆகார பரிஸ்தா ரூபம் அனுபவம் செய்தீர்கள். இல்லையா? நடைமுறை காரியம் செய்து கொண்டே ஆகார பரிஸ்தா அனுபவம் செய்தீர்கள். அதே உடல் தான் இருந்தது இல்லையா, ஆனால் ஸ்தூல உடலின் உணர்வு அகன்று விட்ட காரணத்தினால் ஸ்தூல உடல் இருந்த போதிலும் ஆகார ரூபத்தை அனுபவம் செய்தீர்கள். அந்த மாதிரியான பயிற்சி உங்கள் அனைவருக்கும் இருக்கட்டும். கர்மேந்திரியங்கள் மூலமாக காரியங்கள் நடந்துக் கொண்டே இருக்கட்டும் ஆனால் மனசக்தி மூலமாக வாயுமண்டலம் சக்திசாலியான, அன்பு நிரம்பிய, அனைவரின் சகயோகத்தின் அலைகள் பரப்பப்பட்டதாக இருக்கட்டும். எந்த இடத்திற்கு சென்றாலும் இந்த பரிஸ்தா ரூபம் தென்படட்டும். காரியம் செய்து கொண்டிருக்கிறீர்கள் ஆனால் ஒரே நேரத்தில் காரியம் மற்றும் மனநிலை இரண்டின் சேவையின் சமநிலை இருக்கட்டும். எப்படி தொடக்க காலத்தில் செய்யும் காரியம் மிகவும் சாதாரணமாக இருந்தாலும் ஆனால் மனநிலை அந்த மாதிரி மகானாக இருக்கட்டும்.

அதன் மூலம் சாதாரண காரியம் செய்து கொண்டிருந்தும் காட்சியளிக்கும் மூர்த்தியாகத் தென்பட வேண்டும் என்று பயிற்சி செய்விக்கப்பட்டது. எந்தவொரு ஸ்தூல காரியம் வண்ணான் துறை காரியமானாலும் அல்லது வீட்டை சுத்தம் செய்யும் காரியம் செய்து கொண்டிருக்கிறீர்கள் அல்லது சமையலறையின் காரியம் செய்துக் கொண்டிருக்கிறீர்கள் என்றாலும் மனநிலை மகானாக இருக்கட்டும். அந்த மாதிரி நேரமும் நடைமுறையில் வரும் பார்ப்பவர்களும் இவ்வளவு பரிஸ்தா ரூபத்தில் இருக்கும் மகான் ஆத்மாக்கள் மேலும் என்ன காரியம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்ற இந்த வர்ணனையைத் தான் செய்வார்கள். செய்யும் காரியம் சாதாரணம் ஆனால் மனநிலை மிக உயர்ந்தது. எப்படி சத்யுக அரச குடும்பத்தில் வரும் ஆத்மாக்கள் வந்தார்கள் என்றால் அவர்கள் எதிர்காலத்தின் ரூபத்தை நடைமுறையில் பார்த்து இவ்வளவு பெரிய மகாராஜாக்கள் மேலும் என்ன காரியம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று ஆச்சரியம் அடைந்தார்கள். உலகிற்கே மகாராஜா மேலும் உணவை சமைத்துக் கொண்டிருக்கிறார். அதே போலவே வரக்கூடிய ஆத்மாக்கள் எங்களுடைய இவ்வளவு உயர்ந்த இஷ்ட தேவதைகள் மேலும் இந்தக் காரியம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று வர்ணனை செய்வார்கள். போகும்போதும், வரும்போதும் இஷ்ட தேவதை அல்லது தேவியின் சாட்சாத்காரம் தெளிவாக தென்படட்டும். இறுதியில் பூஜ்ய சொரூபத்தை பிரத்யக்ஷமாக பார்க்கத் தொடங்குவார்கள், பரிஸ்தா ரூபம் பிரத்யக்ஷமாக தென்படத் தொடங்கும். எப்படி அர்ஜுனனின் சென்ற கல்பத்தின் வர்ணனையும் இருக்கிறது சாதாரண நண்பன் ரூபத்தையும் பார்த்தார் ஆனால் உண்மையான ரூபத்தின் சாட்சாத்காரம் செய்வித்த பிறகு நீங்கள் யார் என்று மகிமையும் செய்தார். இவ்வளவு உயர்ந்தவர் மேலும் இந்த சாதாரண தோழனின் ரூபம். இதே போல் வரும்போதும் செல்லும்போதும் உங்களுடைய சாட்சாத்காரமும் ஏற்படும். திவ்ய திருஷ்டியில் சென்று பார்ப்பது என்பது வேறு விஷயம் ஆகும். எப்படி தொடக்க காலத்தில் வரும்போதும், போகும்போதும் பார்த்துக் கொண்டே இருந்தீர்கள். இது தியானத்தில் சென்று பார்ப்பதின் விஷயம் இல்லை. எப்படி ஒரு சாகார பாபா தொடக்கத்தில் அனுபவம் செய்தார். அதே போல் இறுதியிலும் அனைவருக்கும் சாட்சாத்காரம் ஏற்படும். இந்த சாதாரண ரூபம் மறைந்து விடும், பரிஸ்தா ரூபம் அல்லது பூஜ்ய ரூபத்தை பார்ப்பார்கள்.

எப்படி தொடக்கத்தில் ஆகாரி பிரம்மா மற்றும் ஸ்ரீகிருஷ்ணனின் சாட்சாத்காரம் சேர்ந்தே தென்பட்டது. அதே போல் இப்பொழுதும் இந்த சாதாரண ரூபத்தை பார்த்துக் கொண்டு இருந்தாலும் தென்பட வேண்டாம். உங்களுடைய பூஜைக்குரிய தேவி அல்லது தேவதை ரூபம் அல்லது பரிஸ்தா ரூபத்தை பார்க்கட்டும் ஆனால் எப்பொழுது உங்கள் அனைவரின் முயற்சியாக பார்த்துக் கொண்டும் பார்க்காமல் இருப்பதாக இருக்குமோ அப்பொழுது தான் ஏற்படும். அனேக ஆத்மாக்களுக்கும் மகான் ஆத்மாக்கள் உங்களுடைய சாதாரண ரூபத்தை பார்த்துக் கொண்டிருந்தாலும் தென்படாது. கண்கள் திறந்திருக்கும்பொழுதே ஒரு நொடியில் காட்சிகள் கிடைக்கும். அந்த மாதிரி நிலையை உருவாக்குவதற்காக பார்த்தும் பார்க்காதீர்கள், கேட்டும் கேட்காதீர்கள் என்ற விசேஷ பயிற்சி செய்ய வேண்டும் என்று கூறினோம். ஒரு விஷயத்தை மட்டும் கேளுங்கள் மேலும் ஒரு பிந்துவை மட்டும் பாருங்கள். விஸ்தாரத்தைப் பார்க்காமல் ஒரு சாரத்தைப் பாருங்கள். விஸ்தாரத்தை கேட்காமல் எப்பொழுதும் சாரத்தை மட்டுமே கேளுங்கள். அப்பொழுது இந்த மதுபன் மந்திர சக்தி நிறைந்த நகரம் ஆகி விடும். அப்படி மதுபனின் மகத்துவம் அதாவது மதுபன் நிவாசிகளின் மகத்துவத்தை கேட்டீர்களா? நல்லது.

**மதுபனின் சகோதரிகளுடன்:** மதுபனின் சக்திசேனை என்றால் விசேஷ ஆத்மாக்களின் சேனை. ஒவ்வொருவரும் தன்னுடைய விசேஷத்தை நல்ல முறையில் தெரிந்திருக்கிறீர்களா? விசேஷத்தின் காரணமாகத்தான் விசேஷ பூமியின் நிவாசியாக ஆகியிருக்கிறீர்கள், இந்த குஷி இருக்கிறதா? பழைய கணக்கோ ஒவ்வொருவரின் அவரவர்களுடையது இருக்கிறது. அது முடிந்து கொண்டும் இருக்கிறது ஆனால் கூடவே நாடகத்தின் படி ஏதாவது விசேஷமும் இருக்கிறது. அந்தக் காரணத்தினால் விசேஷ பங்கு கிடைத்திருக்கிறது. எப்பொழுதும் புண்ணிய பூமி மற்றும் உயர்ந்த ஆத்மாக்களின் தொடர்பின் விசேஷ பங்கு, இதுவொன்றும் குறைந்த பாக்கியம் இல்லை. கோவிலின் ஜட விக்கரகங்களின் பூசாரி கூட தன்னை எவ்வளவு மகான் என்று நினைக்கிறார். அவரோ பூஜாரி தான் ஆனால் போதை எவ்வளவு இருக்கிறது. ஏனென்றால் மூர்த்தியின் நெருங்கிய சம்மந்தம் உடையவர் என்று நினைக்கிறார். அப்படி ஜட விக்கிரகங்களின் பூசாரி கூட இவ்வளவு போதை வைக்கிறார். இங்கோ பூசாரிக்கான விஷயம்

இல்லை. இங்கோ நெருக்கத்தில் இருக்கக்கூடிய, தொடர்பில் இருக்கக்கூடிய உடன் இருக்கும் துணைவர்களுக்கு எவ்வளவு போதை மற்றும் குஷி இருக்க வேண்டும். ஈஸ்வரிய பரிவாரத்தில் வந்திருக்கும் ஆத்மாவில் ஒரு விசேஷமும் இல்லை என்ற இதுவோ இருக்கவே முடியாது. எனவே தன்னுடைய விசேஷத்தை தெரிந்து அதைக் காரியத்தில் ஈடுபடுத்துங்கள். எந்தெந்த குணம் மற்றும் விசேஷத்தன்மை இருக்கிறதோ அது காரியம் செய்வதின் குணமாக இருந்தாலும் அல்லது இனிமைத் தன்மையின் குணமாக இருந்தாலும், அன்பினுடையதாக இருந்தாலும் அதைக் காரியத்தில் ஈடுபடுத்துங்கள். எப்படி இரும்பு பாரஸ் என்ற உலோகத்தோடு இணைவதினால் பாரஸ் அதாவது தங்கமாகி விடுகிறது. அதே போல் ஒரு குணம் அல்லது விசேஷத்தை சேவையில் ஈடுபடுத்துவதினால் சேவையின் பலன் ஒன்றிற்கு லட்சம் மடங்கு கிடைப்பதினால் அந்த ஒரு விசேஷம் அனேக நேரத்தின் பலன் கொடுப்பதற்கு தகுதியானதாக ஆகி விடுகிறது. எப்படி ஒரு விதை போடுவதினால் எத்தனை பழங்கள் உருவாகிறது. அதே போல் ஒரு விசேஷத்தையாவது காரியத்தில் ஈடுபடுத்துவது என்றால் பூமியில் விதை போடுவதாகும். அப்படி நீங்கள் எவ்வளவு அதிர்ஷ்டம் நிறைந்தவர்கள் என்று புரிந்து கொண்டீர்களா? பிராமண பரிவாரத்தில் ஜென்மம் ஏற்பட்டது என்றால் ஜென்மத்தின் கூடவே ஏதாவது ஒரு விசேஷத்தின் அதிர்ஷ்டத்தை உடன் எடுத்தே வந்திருக்கிறீர்கள். அதை எந்த அளவு காரியத்தில் ஈடுபடுத்துகிறீர்கள் என்பதில் மட்டும் வித்தியாசம் வந்து விடுகிறது. ஜென்மத்தின் பாக்கியம் இருக்கிறது ஆனால் பாக்கியத்தை காரியத்தில் அல்லது சேவையில் ஈடுபடுத்துவதினால் அனேக நேரத்தின் பாக்கியத்தின் பலன் உருவாகிறது. விதை விதைப்பதற்கான முறை தெரிய வேண்டும். பழமோ அவசியம் கிடைக்கும். விதை விதைப்பது என்றால் விசேஷம் என்ற விதையை சேவையில் ஈடுபடுத்துவது. இங்கேயோ அனைவரும் எப்பொழுதும் பாக்கியத்தின் சிம்மாசனதாரியாக இருக்கிறார்கள். இந்த பாக்கியத்தைத் தான் சென்ற கல்பத்தின் நினைவுச்சின்னத்தில் கூட இதுவரையிலும் ஒரு விநாடியாவது நெருக்கத்தில் இருப்பதை மகான் பாக்கியம் என்று நினைக்கிறார்கள். அப்படி யார் நடைமுறையில் இருக்கிறார்கள், அவர்களுடைய குஷி மற்றும் அவர்களுடைய பாக்கியம் எவ்வளவு உயர்ந்தது. உயர்ந்ததை எதிரில் வைப்பதினால் வீணானது முடிவடைந்து விடுகிறது. நல்லது.

வரதானம்: மாயாவின் கொடூரமான ரூபத்தின் விளையாட்டை பார்வையாளராகி பார்க்கக்கூடிய மாயாவை வென்றவர் ஆகுக!

மாயாவை வரவேற்பவர்கள் அதனுடைய கொடூரமான ரூபத்தை பார்த்து பயப்படுவதில்லை. பார்வையாளராகி விளையாட்டைப் பார்ப்பதினால் மகிழ்ச்சி வருகிறது. ஏனென்றால் வெளிமுகமாக மாயாவின் ரூபம் சிங்கத்தின் ரூபமாகும் ஆனால் அதில் சக்தி பூனை அளவில் கூட இல்லை. அதை நீங்கள் பயந்து கொண்டு என்ன செய்வது, எப்படி செய்வது என்று பெரியதாக ஆக்கி விடுகிறீர்கள் ஆனால் என்ன நடந்துக் கொண்டிருக்கிறதோ, அது நல்லது மேலும் என்ன நடக்கப் போகிறதோ அது இன்னும் நல்லதாக இருக்கும் என்ற இந்த பாடத்தை நினைவு வைத்துக் கொள்ளுங்கள். பார்வையாளராகி விளையாட்டைப் பார்த்தீர்கள் என்றால் மாயாவை வென்றவர் ஆகி விடுவீர்கள்.

சுலோகன்: யார் சகித்துக் கொள்பவராக இருப்பாரோ அவர் யாருடைய பாவ, சுபாவத்தில் வெந்து போவதில்லை, வீணான விஷயங்களை ஒரு காதில் வாங்கி இன்னொரு காதில் விட்டு விடுவார்!

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 12.12.1978 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பரோபகாரியாக ஆவது எப்பது?

இன்று ஆன்மீக மலர்த்தோட்டத்தை அதாவது எப்பொழுதும் மலர்ந்திருக்கும் ஆன்மீக ரோஜா போன்ற குழந்தைகளின் கூட்டத்தைப் பார்த்து பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் விசேஷத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். மூன்று விதமான விசேஷங்கள் இருக்கின்றன. ஒன்று எப்பொழுதும் தன்னுடைய ஆன்மீக நிலையில் நிலைத்திருப்பவர்கள் அதாவது எப்பொழுதும் மலர்ந்திருப்பவர்கள், இரண்டாவது, ஆன்மீக நிலைக்கேற்றபடி எப்பொழுதும் மலர்ந்திருப்பவர்கள் இல்லை ஆனால் நிச்சயத்தில் உறுதியாக சொரூபம் இருக்கும் காரணத்தினால் ரூபத்தின் அழகு நன்றாக இருக்கிறது. மூன்றாவது தந்தை மேல் இருக்கும் அன்பு மற்றும் சம்மந்தத்தின் ஆதாரத்தினால் பாதி மலர்ந்திருந்தும் அன்பு மற்றும் சம்மந்தத்தின் நறுமணம் நிரம்பியிருக்கிறது. அந்த மாதிரி மூன்று விதமான ஆன்மீக ரோஜாக்களின் மலர்த்தோட்டத்தைப் பார்த்து பாப்தாதா எப்பொழுதுமே நறுமணத்தை நுகர்ந்து கொண்டே இருக்கிறார். இப்பொழுது இதில் நான் யார் என்று தன்னைத் தானே பாருங்கள். நம்பர் ஒன் ஆவதில் என்னென்ன குறை இன்னும் இருக்கிறதோ அதை நிறைவேற்றி சம்பூர்ணம் ஆகுங்கள். ஏனென்றால், சம்பூர்ண தந்தையின் குழந்தைகளும் தந்தைக்குச் சமமாக சம்பூர்ணமாக இருக்க. வேண்டும். ஒவ்வொரு குழந்தையின் லட்சியமும் சம்பூர்ணம் ஆவதற்குத் தான். எனவே லட்சியத்திற்கு ஏற்றபடி அனைத்து லட்சணங்களையும் தன்னுள் நிரப்பி சம்பன்னம் ஆகுங்கள். இதற்காக விசேஷ தாரணையாக ஏற்கனவே கூறியிருக்கிறோம் - எப்பொழுதும் பிரம்மாச்சாரி அதாவது பிரம்மச்சாரி. மேலும் எப்பொழுதும் பரோபகாரியாக இருப்பது.

பரோபகாரி என்பதின் விளக்கம் புரிந்து கொள்வதற்கு சுலபம் தான். மேலும் மிகவும் நுணுக்கமானதும் தான். 1) பரோபகாரி என்றால்

ஒவ்வொரு நேரமும் தந்தைக்குச் சமமாக ஒவ்வொரு ஆத்மாவின் குணத்தைப் பார்ப்பார், 2) பரோபகாரி யாருடைய பலஹீனம் மற்றும் அவகுணத்தை பார்த்தும் தன்னுடைய சுப பாவனை, உதவி செய்யும் நல்விருப்பங்கள் மூலம் அந்த ஆத்மாவையும் குணம் நிறைந்தவராக ஆக்குவதற்கான சக்தியை தானம் செய்வார்கள். 3) பரோபகாரி என்றால் எப்பொழுதும் தந்தைக்குச் சமமாக தன்னிடமுள்ள பொக்கிஷங்களை பிற அனைத்து ஆத்மாக்களுக்கும் கொடுக்கக்கூடிய வள்ளல் ரூபத்தில் இருப்பார்கள். 4) பரோபகாரி எப்பொழுதும் தன்னை அனைத்து பொக்கிஷங்களாலும் நிரம்பிய பேகம்பூரின் (துக்கமற்ற நகரத்தின்) மகாராஜாவாக அனுபவம் செய்வார்கள். பேகம்பூர் என்றால், எங்கு எந்த துக்கமும் இல்லையோ அந்த ஊர். எண்ணத்தில் கூட துக்கத்தின் சம்ஸ்காரம் அனுபவம் இருக்க வேண்டாம். 5) பரோபகாரி என்றால் எப்பொழுதும் விசேஷ ரூபத்தில் தன்னுடைய மன சக்தி அதாவது எண்ண சக்தி மூலமாக, வார்த்தைகளின் சக்தி மூலமாக, தன்னுடைய தொடர்பின் பிரபாவத்தின் மூலமாக, சம்மந்தத்தின் அன்பு மூலமாக, குஷியின் குறைவில்லா பொக்கிஷம் மூலமாக இடைவிடாது தானம் செய்து கொண்டே இருப்பார். எந்தவொரு ஆத்மா தொடர்பில் வந்தாலும் குஷியின் பொக்கிஷத்தால் நிரம்பியவராகிச் செல்வார். அந்த மாதிரி இடைவிடாத வள்ளலாக இருப்பார்கள். விசேஷ நேரம் அல்லது நெருக்கத்தில் இருப்பவர்கள். அதாவது, குறிப்பிட்ட ஆத்மாக்களுக்காக வள்ளலாக இல்லாமல், அனைவருக்காகவும் எப்பொழுதும் பெரும் வள்ளலாக இருப்பார்கள். பரோபகாரி அவரே அனைத்தும் நிறைந்தவராக இருக்கும் காரணத்தினால் எந்தவொரு ஆத்மாவிடமிருந்தும் ஏதாவது பெற்று, பிறகு கொடுப்பதற்கான ஆசை வைப்பவராக இருக்க மாட்டார். இவர் செய்தார் என்றால், நான் செய்வேன். இவர் மாறினார் என்றால், நான் மாறுவேன். கொஞ்சம் அவர் மாறினால் நானும் கொஞ்சம் மாறுவேன் என்று அவருக்கு எண்ணத்தில் கூட வராது. ஆத்மாவின் ஒரு விஷயத்தின் மாற்றம் என்னுள் பத்து விஷயங்களின் மாற்றம் இருக்கும் என்று பாவனை வைப்பவர்களை பரோபகாரி என்று கூற முடியாது. அவர் மகாதானி ஆவதற்குப் பதிலாக வியாபாரம் செய்யக்கூடிய வியாபாரி ஆகி விடுகிறார். இவ்வளவு கொடுத்தார் என்றால், நான் இவ்வளவு கொடுப்பேன், எப்பொழுதும் நானே தான் வளைந்து கொடுத்துக் கொண்டிருக்க வேண்டுமா? நான் மட்டும் கொடுத்துக் கொண்டே இருக்கனுமா? எதுவரை மற்றும்

எவ்வளவு வரை செய்வது? என்ற இந்த மாதிரியான எண்ணம் கொடுப்பவரிடம் இருக்க முடியாது எப்பொழுது மற்ற ஆத்மா ஏதாவது பலஹீனத்தின் வசமாகியிருக்கிறது. மாற்றத்தின் வசமாகியிருக்கிறது, சம்ஸ்காரத்தின் வசமாகியிருக்கிறது, சுபாவத்தின் வசமாகியிருக்கிறது. இயற்கையின் சாதனங்களின் வசமாகியிருக்கிறது என்றால், அந்த மாதிரி மற்றவைகளின் வசமான ஆத்மா அதாவது அந்த நேரத்தில் யாசிக்கும் ஆத்மா, யாசிப்பவர் என்றால் சக்தியில்லாதவர் சக்திகளின் பொக்கிஷத்தினால் காலியானவர்.

மகாதானி யாசிப்பவரிடமிருந்து ஒரு பைசா பெறுவதற்கான இச்சை வைக்க முடியாது. இவர் மாறினால் அல்லது இதைச் செய்தால் அல்லது இந்த கொஞ்ச உதவியைச் செய்தால், அடியை முன்னுக்கு எடுத்து வைத்தால் என்று அந்த மாதிரியான எண்ணம் அல்லது அந்த மாதிரி சகயோகத்தின் பாவனையை சக்தியில்லாத மற்றவைகளின் வசமான, யாசிக்கும் ஆத்மாவிடமிருந்து என்ன வைக்க முடியும்? ஏதாவது ஒன்றை அடைந்து கொஞ்சம் கொடுப்பவரை பரோபகாரி என்று கூற முடியாது. 7) பரோபகாரி என்றால், யாசிப்பவரை அனைத்தும் நிறைந்தவராக ஆக்குபவர் அபகாரிகள் மேலும் உபகாரம் செய்பவர். திட்டுபவரை அரவணைத்துக் கொள்பவர். தன்னுடைய பரோபகாரத்தின் சுபபாவனை, அன்பு, சக்தி, இனிமையான வார்த்தைகள், ஊக்கம், உற்சாகம் நிறைந்த சகயோகத்தின் மூலம் மனமுடைந்து போனவரை சக்தி நிறைந்தவராக ஆக்கி விடுவதின் அதாவது யாசிப்பவரை மகாராஜா ஆக்கி விடுவது. 8) பரோபகாரி திரிகாலதரிசியாக இருக்கும் காரணத்தினால் தான் ஆத்மாவின் சம்பூர்ண சகயோகத்தை எதிரில் வைத்துக் கொண்டே ஒவ்வொரு ஆத்மாவின் பலஹீனத்தைத் தெரிந்து கொண்டே அந்த பலஹீனத்தை தனக்குள் தாரணை செய்ய மாட்டார்கள், வர்ணனை செய்ய மாட்டார்கள் ஆனால் மற்ற ஆத்மாக்களின் பலஹீனத்தின் முள்ளை நன்மை பயக்கும் சொரூபம் மூலம் அழித்து விடுவார்கள். முட்களுக்குப் பதிலாக முட்களையும் மலர் ஆக்கி விடுவார்கள். அந்த மாதிரி பரோபகாரி எப்பொழுதும் திருப்தி மணிக்குச் சமமாக தானும் திருப்தியாக இருப்பார். மேலும் மற்றவர்களையும் திருப்தி படுத்துபவராக இருப்பார். நம்பிக்கை இழந்தோருக்கு நம்பிக்கையை உருவாக்கி விடுவார். இது தான் அதிசயம் ஆகும். 9) யாரைப் பற்றி அனைவரும் நம்பிக்கை இழந்த

நிலையை காண்பித்தார்களோ அந்த மாதிரி நபர் மற்றும் அந்த மாதிரி சூழ்நிலையை நிரந்தரமாக அவருடைய நம்பிக்கையின் தீபத்தை எழுப்பி விடுவார். எப்பொழுது உங்களுடைய ஜட விக்கிரகங்கள் இன்று வரை அனேக ஆத்மாக்களின் அற்ப காலத்தின் மனவிருப்பங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றன. என்றால் சைத்தன்ய ரூபத்தில் ஒருவேளை யாராவது உங்களுடைய சகயோகி சகோதர மற்றும் சகோதரி பரிவாரத்தின் ஆத்மாக்கள் அறியாமையில் மற்றும் பிடிவாதத்தினால் அற்ப காலத்தின் ஒன்றை சதா காலத்தின் பிராப்தி என்று புரிந்து, அற்ப காலத்தின் பெயர், புகழ், மரியாதை அல்லது அற்ப காலத்து பிராப்திகளின் மீது இச்சை வைக்கிறார் என்றால், மற்றவர்களுக்கு மரியாதை கொடுத்து சுயம் தான் பணிவானவர் ஆவது என்ற இது தான் பரோபகாரம். இந்த கொடுப்பது தான் நிரந்தரமாகப் பெறுவது. எப்படி ஒன்றும் அறியாத குழந்தை ஏதாவது நஷ்டத்தை விளைவிக்கும் பொருளையும் பொம்மை என்று புரிந்து கொள்கிறது. என்றால், அவருக்கு வேறு ஏதாவது கொடுத்து அந்தப் பொருளை அவரிடமிருந்து பிடுங்க வேண்டியதாக இருக்கிறது. பிடிவாதத்தினால் நிரந்தரமான நஷ்டம் ஏற்பட்டு விடுகிறது. அந்த மாதிரி அறியாத ஆத்மாக்களும் அந்த நேரத்து அற்ப கால பிராப்தியை அதாவது நிரந்தரமான நஷ்டம் ஏற்படுத்தும் விஷயங்களை தனது நன்மைக்கான சாதனம் என்று நினைக்கிறது. அந்த மாதிரி ஆத்மாக்களை இந்த விஷயங்களிலிருந்து வலுக்கட்டாயமாக அகற்றுவதினால் பிரச்சனையில் வந்து அவருடைய முயற்சி செய்யும் வாழ்க்கை முடிவடைந்து விடுகிறது. எனவே எதையேனும் கொடுத்து நிரந்தரமாக விடுவிக்க வேண்டும். அந்த மாதிரியான யுக்தி நிறைந்த நடத்தை மூலமாக இயல்பாகவே அற்ப காலத்தின் யாசிக்கும் ஆத்மா, ஒன்றும் அறியாத நிலையில் இருந்து அனைத்தும் அறிந்தவராகி விடுவார். இது அற்பகாலத்தின் சாதனம் என்று அவரே உணருவார். அந்த மாதிரி ஒன்றும் அறியாத ஆத்மாக்கள் மேலும் பரோபகாரி. அந்த மாதிரி பரோபகாரி இயல்பாகவே உபகாரி ஆகி விடுகிறார். கொடுப்பது தான் தனக்காகப் பெறுவது என்று ஆகி விடுகிறது. மகாதானி தான் அனைத்து அதிகாரமும் நிறைந்தவராக இயல்பாகவே ஆகி விடுகிறார். அப்படி பரோபகாரியின் விளக்கம் என்ன என்று புரிந்து கொண்டீர்களா? அந்த மாதிரி பரோபகாரி தான் அனைத்து ஆத்மாக்களின் மூலமாக இதயப்பூர்வமான ஆசீர்வாதம் பெறுவதற்கு உரியவர் ஆகி விடுகிறார்.

அந்த மாதிரி பரோபகாரி ஆத்மாக்கள் மேல் எப்பொழுதும் அனைத்து ஆத்மாக்கள் மூலமாக பாராட்டு மலர்களின் மழை பொழிகிறது. புரிந்ததா? நல்லது.

அந்த மாதிரி தந்தைக்குச் சமமாக எப்பொழுதும் உபகாரி, தன் மேலும் மற்றும் மற்றவர்கள் மீதும் சுப்பாவனை மற்றும் உயர்ந்த விருட்பங்கள் வைக்கக்கூடிய, குறைவில்லா பொக்கிஷங்களின் அதிபதி, இடைவிடாத வள்ளல், மனமுடைந்து போனவர்களை சக்திசாலியாக ஆக்கக்கூடிய, யாசிப்பவரை நிரந்தரமாக மகாராஜா ஆக்கக்கூடிய, அந்த மாதிரியான உயர்ந்த ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

தாதிகளுடன்: இறுதியாக இருப்பதை தொடக்கமாக ஆக்கக்கூடிய அந்த மாதிரி ஆல்ரவுண்ட் பங்கைச் செய்யும் பரோபகாரி குரூப் பாப்தாதாவிற்கு தேவையாக இருக்கிறது. எப்படி ஒவ்வொரு விசேஷ காரியத்திற்கும் குழுக்களை உருவாக்குகிறீர்கள் இல்லையா? அப்படி இந்த நேரம் அந்த மாதிரி கொடுக்கக்கூடிய வள்ளலாக இருக்கும் பரோபகாரி குரூப் தேவையாக இருக்கிறது. எப்படி இராஜா வள்ளலாக இருக்கிறார். இன்றைய நாட்களிலோ இராஜாக்களே இல்லை. அனைத்தும் நிரம்பிய இராஜாக்கள் எப்பொழுதும் பிரஜைகளுக்குக் கொடுப்பவர்களாக இருப்பார்கள். ஒருவேளை பிரஜையிடமிருந்து பெறுபவராக இருக்கிறார் என்றால், பிரஜையே இராஜா ஆகி விட்டார். எனவே நிரம்பிய இராஜாக்கள் ஒருபொழுதும் பெறுவதில்லை, கொடுப்பவர்களாக இருப்பார்கள். நிரம்பிய இராஜாக்களின் கை ஒருபொழுதும் பெறுபவரின் கையாக இருப்பதில்லை, கொடுப்பதாக இருக்கும், சொர்க்கத்தின் உலக மகாராஜா பிரஜையிடமிருந்து பெறுவாரா என்ன? பிரஜையும் நிரம்பியவராக இருக்கிறார் என்றால், உலக மகாராஜா என்னவாக இருப்பார். எனவே எப்படி எதிர்காலத்தில் வள்ளல் ஆவதற்கான பங்கைச் செய்ய வேண்டும் என்றால் இப்பொழுதிலிருந்தே அந்த வள்ளல் தன்மையின் சம்ஸ்காரத்தை நிரப்ப வேண்டும். யாரிடமிருந்தாவது ஏதாவது வசதிகளைப் பெற்று, பிறகு அந்த வசதிகளை மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணமும் இருக்க வேண்டாம். இதைத் தான் பிச்சைக்காரனிலிருந்து இளவரசன் ஆவது என்பதாகும். அவரிடம் பெறுவதற்கான இச்சை

இல்லாமல் இந்த அற்பகால இச்சையிலிருந்து பிச்சைக்காரன். அற்ப கால சாதனங்களை ஏற்றுக் கொள்வதிலும் பிச்சைக்காரன், அந்த மாதிரி பிச்சைக்காரன் தான் நிரம்பியவராக இருப்பார். ஒரு பக்கம் பிச்சைக்காரன், இன்னொரு பக்கம் நிரம்பியவர். இப்பொழுது பிச்சைக்காரனிலிருந்து இளவரசனின் பங்கை நடைமுறையில் செய்யக்கூடிய ஆத்மாக்களை, மேலும் எப்பொழுதும் தியாகி மற்றும் எப்பொழுதும் உயர்ந்த பாக்கியசாலி என்று கூறுவது. தியாகத்தின் மூலம் நிரந்தரமான பாக்கியம் இயல்பாகவே உருவாகி விடுகிறது. தியாகம் செய்தவுடன் அதிர்ஷ்டத்தின் ரேகை உருவானது. அப்படி இப்பொழுது, அந்த மாதிரி யார் தன் பொருட்டு ஆசை என்றால் என்னவென்றே தெரியாதவர், இடைவிடாத வள்ளலாக இருக்கும் பரோபகாரி குணம் வேண்டும். எப்படி தந்தையை பார்த்தீர்கள். தன்னுடைய நேரத்தையும் சேவைக்காக கொடுத்தார், அவரே பணிவானவராக ஆகி குழந்தைகளுக்கு மரியாதை கொடுத்தார். முதலில் குழந்தைகள் பெயர் குழந்தைகளுக்கு கிடைக்க வேண்டும் ஆனால் வேலை அவருடையது. செய்த வேலைக்காக புகழ் கிடைப்பதிலிருந்தும் தியாகம். பெயரிலேயும் பரோபகாரி ஆக வேண்டும். தன்னுடையதை தியாகம் செய்து மற்றவர்களுக்கு பெயர் கிடைக்கச் செய்தார், தன்னை எப்பொழுதும் சேவாதாரியாக வைத்தார். இது தான் பரோபகாரம் ஆகும். குழந்தைகளை எஜமானராக வைத்தார். மேலும் தன்னை சேவாதாரியாக வைத்தார். அப்படி எஜமானத்தன்மையின் மரியாதையும் கொடுத்தார். புகழையும் கொடுத்தார், பெயரையும் கொடுத்தார். ஒருபொழுதும் தன்னுடைய பெயரைக் குறிப்பிடவில்லை, என்னுடைய குழந்தைகள் என்று தான் சொன்னார். அந்த மாதிரி எப்படி தந்தை பெயர், புகழ், மரியாதை அனைத்தையும் தியாகம் செய்தார், பரோபகாரம் செய்தார். குழந்தைகளின் சுகத்தில் தன்னுடைய சுகம் இருக்கிறது என்று இருந்தார். குழந்தைகளின் நினைவு மறந்த நிலை காரணமாக ஏற்படும் துக்கத்தின் அனுபவத்தை தன்னுடைய துக்கமாக நினைத்தார். குழந்தைகளின் தவறையும் தன்னுடைய தவறு என்று புரிந்து குழந்தைகளை சரியாக நடப்பவர்களாக ஆக்கினார். இதைத் தான் பரோபகாரி என்று கூறுவது.

தற்சமயம் மற்றவர்களின் பலஹீனங்களை அழித்து சக்தி கொடுக்கக்கூடிய அந்த மாதிரி குழு தேவையாக இருக்கிறது. அப்படி அனைவரும் ஆகி விட்டார்கள் என்றால், என்னவாகி விடும்? உங்கள் அனைவரின் நேரம் மிச்சமாகி விடும். பிறகு புகார்கள், வழக்குகள் முடிந்து விடும். மேலும் எப்பொழுதும் ஆன்மீக அன்பு சந்திப்பு இருக்கும். உலக நன்மை காரியத்தில் அதிவேகம் வந்து விடும். இப்பொழுதோ எவ்வளவு திட்டங்கள் உருவாக்க வேண்டியதாக இருக்கிறது. சில திட்டங்கள் அதாவது வெடிமருந்து அதன் காரியத்தை செய்யாமலேயே அழிந்து விடும், எப்படி வெடிமருந்து சில நேரம் வெடிப்பதில்லை அங்கேயே அழிந்து விடும் ஆனால் உலக நன்மைக் காரியத்தில் அதிவேகத்தில் இந்த நேரம் இந்த விஷயம் இருக்க வேண்டும் என்று எண்ணத்தை வைத்தீர்கள். மேலும் நாலாபுறங்களிலும் நிமித்த மாத்திரம் செய்தீர்கள் மற்றும் சப்தம் பரவியது. எப்படி சாகார பாடாவைப் பார்த்தீர்கள், ஞானத்தின் அத்தாரிட்டியின் கூடவே ஞானம் மூலமாக அனுபவம் நிறைந்தவரின் அத்தாரிட்டியும் இருந்தது. இந்த அத்தாரிட்டியின் காரணமாக ஒவ்வொரு விஷயத்தில் ஞானத்தின் கூடவே அனுபவமும் இருந்தது. அப்படி இரட்டை அத்தாரிட்டி இருந்தது. அதே போலவே ஒவ்வொரு குழந்தையும் இரட்டை அத்தாரிட்டியோடு வார்த்தைகளைக் கூறினீர்கள் என்றால், அனுபவத்தின் அம்பு, ஞானத்தின் அத்தாரிட்டியின் அம்பு ஒரு நொடியில் பாதிப்பை ஏற்படுத்தும். சொரூபம் மற்றும் வார்த்தை இரண்டுமே அத்தாரிட்டியானதாக இருக்கிறது என்றால் தான் வெற்றி சுலபமாக ஏற்படும். இல்லை என்றால் ஞானமோ மிகவும் நல்லது, மிக உயர்ந்தது ஆனால் தாரணை செய்வது கடினமாகும் என்ற இதைத் தான் கூறுகிறார்கள். எனவே தாரணை நிறைந்தவராக, தாரணை சொரூபமானவராக நடைமுறையில் தென்பட வேண்டும். வெளிப்படையான நிரூபணத்தை கிரகிப்பது சுலபமாகும். அப்படி இரட்டை அத்தாரிட்டி நிறைந்த குழு தேவையாக இருக்கிறது. அவர்களைத் தான் மகிழ்ச்சி நிறைந்த ஃபகீர் என்று சொல்வது. எந்தவொரு ஆசையும் இருக்க வேண்டாம். நல்லது. ஓம் சாந்தி.

**பார்ட்டிகளுடன்: 1.தந்தையின் அன்பிற்குப் பாத்திரம் ஆவதற்கான வழி -விலகியிருப்பவராக ஆகுங்கள்!**

எப்படி தாமரை மலர் எப்பொழுதும் விலகியிருந்து அனைவருக்கும் பிடித்தமானதாக இருக்கிறதோ அதே போல் எப்பொழுதும் தாமரைக்குச் சமமாக விலகியிருக்கிறீர்களா? இல்லறத்தில் இருந்து கொண்டே உலகத்தின் சூழ்நிலையில் இருந்து கொண்டே சூழ்நிலையிலிருந்து விலகியிருப்பவர். யார் விலகியிருப்பவராக இருக்கிறாரோ அவர் தான் தந்தையின் அன்பிற்குப் பாத்திரமானவர் ஆகிறார். எவ்வளவு விலகியிருப்பவரோ அவ்வளவு அன்பிற்குரியவர். விலகியிருப்பதின் ஆதாரத்தினால் வரிசை எண் உருவாகிறது. மிகவும் விலகியவர் என்றால் மிகவும் பிரியமானவர்.

**2. தன்னுடைய பூஜைக்குரிய சொரூப நினைவின் மூலம் இயல்பான சேவை!**

எப்பொழுதும் தன்னுடைய சென்ற கல்பத்தின் நினைவுச் சின்னத்தைப் பார்த்து மற்றும் கேட்டு இது என்னுடைய மகிமை தான் ஆகிக் கொண்டிருக்கிறது என்ற போதை இருக்கிறதா? எந்தவொரு நினைவுச் சின்னத்தின் ஸ்தானத்தில் செல்லும் போது இது என்னுடைய நினைவுச் சின்னம் தான் என்ற போதை இருக்கிறதா? யார் சைத்தன்யத்தில் இருந்து கொண்டு தன்னுடைய ஜட நினைவுச் சின்னத்தை பார்க்கிறார் என்ற இது தான் அதிசயமான விஷயம் ஆகும். ஒரு பக்கம் ஜட விக்கிரகங்கள், இன்னொரு பக்கம் நாம் குப்தமாக சைத்தன்யத்தில் இருக்கிறோம். எத்தனை பக்தர்கள் என்னை அழைத்துக் கொண்டிருக்கிறார்கள். பூஜைக்குரியவர் என்று நினைப்பதினால் பக்தர்கள் மேல் இரக்கம் வரும். பக்தர்கள் யாசிப்பவர்கள் மேலும் நீங்கள் நிரம்பியவர்கள். அப்படி பக்தர்களைப் பார்த்து இரக்கம் வருகிறதா? பக்தர்களுக்கு பக்தியின் பலனைக் கொடுப்பதற்கு பொறுப்பாளர் ஆக வேண்டும் என்ற ஆசை உருவாகிறதா? சேவைக்கான ஊக்கம் உற்சாகம் எப்பொழுதும் இருக்கிறதா? சேவை மூலமாக அனேகர்களுக்கு நன்மையும் ஏற்படுகிறது, மேலும் எதிர்காலத்திற்காக சேமிப்பும் ஆகிறது. ஒவ்வொரு ஆத்மாவிற்கும் அவசியம் வழங்கி திருப்தி செய்ய வேண்டும். யாரையும் வெறும் கையோடு அனுப்பக் கூடாது. தன்னுடைய பூஜ்ய சொரூபத்தை நினைவில் வைத்தீர்கள் என்றால் விரும்பாவிட்டாலும் கூட எப்பொழுதுமே சேவையிலேயே ஈடுபட்டுக் கொண்டிருப்பீர்கள்.

**3. இராயல் குழந்தைகள் அதாவது செல்லக்குழந்தைகளின் அடையாளம் -தேக உணர்வு என்ற மண்ணிலிருந்து தூரமாக இருப்பவர்!**

யார் பல கோடி மடங்கு பாக்கியம் நிறைந்த ஆத்மாக்களோ அவர்கள் எப்பொழுதும் குஷியின் ஊஞ்சலில் ஆடுவார்கள். அவர்களுடைய புத்தி என்ற கால்கள் கீழே வருவதில்லை. யார் செல்லமான காணாமல் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளாக இருக்கிறார்களோ அவர்கள் எப்பொழுதும் மடியில் இருப்பார்கள். கீழே கால்களை வைப்பதில்லை. கம்பளி விரிப்பின் மேல் வைப்பார்கள். பல கோடி மடங்கு பாக்கியம் நிறைந்த காணாமல் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகள் உங்களுடைய புத்தி என்ற கால் எப்பொழுதும் தேக உணர்வு அல்லது தேகத்தின் உலகத்தின் நினைவிலிருந்து மேலே இருக்க வேண்டும். எப்பொழுது பாப்தாதா மண்ணிலிருந்து மேலே கொண்டு வந்து ஆசனதாரியாக ஆக்கி விட்டார் என்றால், ஆசனத்தை விட்டு விட்டு மண்ணில் ஏன் செல்கிறீர்கள்? தேக உணர்வில் வருவது என்றால் மண்ணில் விளையாடுவது. சங்கமயுகம் ஏறும் கலைக்கான யுகம் ஆகும், இப்பொழுது கீழே இறங்குவதற்கான நேரம் முடிவடைந்து விட்டது, இப்பொழுது மேலே ஏறுவதற்காக கொஞ்ச நேரம் இருக்கிறது. எனவே கீழே ஏன் வருகிறீர்கள். எப்பொழுதுமே மேலேயே இருங்கள். நல்லது. ஓம் சாந்தி.

**வரதானம்: தந்தையை உடன் வைத்துக் கொண்டு தூய்மை என்ற இயற்கையான குணத்தை சுலபமாகக் கடைபிடிக்கக்கூடிய மாஸ்டர் சர்வ சக்திவான் ஆகுக!**

உங்களுடைய இயற்கையான குணம் தூய்மை ஆகும். தூய்மையின்மை மாற்றான் குணம் ஆகும். எப்பொழுது இயற்கையான குணத்தின் நிச்சயம் ஏற்பட்டு விட்டது என்றால் மாற்றான் குணம் உங்களை அசைக்க முடியாது. தந்தை என்னவாக இருக்கிறார், எப்படி இருக்கிறார் என்று ஒருவேளை அவரை மிகச் சரியாக தெரிந்து உடன் வைத்துக் கொள்கிறீர்கள் என்றால் தூய்மை என்ற இயற்கையான குணத்தை தாரணை செய்வது மிக சுலபமாகும். ஏனென்றால் உடன் இருப்பவர் சர்வ சக்திவான் ஆவார். சர்வ சக்திவானின் குழந்தைகள் மாஸ்டர் சர்வ சக்திவானின் எதிரில் தூய்மையின்மை வர முடியாது. ஒருவேளை

எண்ணத்தில் கூட மாயா வருகிறது என்றால் அவசியம் ஏதோ ஒரு கதவு திறந்திருக்கிறது. மேலும் நிச்சயத்தில் குறை இருக்கிறது.

சுலோகன்: திரிகாலதரிசி எந்தவொரு விஷயத்தையும் ஒரு கால கண்ணோட்டத்தில் பார்ப்பதில்லை, ஒவ்வொரு விஷயத்திலும் நன்மை இருக்கிறது என்று புரிந்து கொள்வார்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

## 14.12.1978 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தடைகளிலிருந்து விடுபடுவதற்கான சுலப வழி!

பாப்தாதா எப்பொழுதும் காணாமல் போய்க் கண்டெடுக்கப்பட்ட தன்னுடைய செல்லக் குழந்தைகளை, அன்பு நிறைந்த பார்வையோடு, தன்னுடைய மிக உயர்ந்த கிரீடத்திற்குச் சமமான மிக உயர்ந்த குழந்தைகளை அதே பலமடங்கு பாக்கியம் நிறைந்த ரூபத்தில் பார்த்துக் கொண்டே பிரிந்து சென்ற, சென்ற கல்பத்து குழந்தைகள் எவ்வளவு உயர்ந்த பதவியை அடைவதற்குத் தகுதி ஆகியிருக்கிறார்கள் என்று பார்த்து எப்பொழுதும் குஷி அடைகிறார். ஒவ்வொரு குழந்தையின் தகுதி, ஒவ்வொரு குழந்தையின் விசேஷம் பாப்தாதாவின் எதிரில் எப்பொழுதும் தெளிவாக இருக்கிறது. மேலும் பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் விசேஷத்தின் மதிப்பைத் தெரிந்து கொண்டு ஒவ்வொருவரையும் விலைமதிக்க முடியாத இரத்தினம் என்று நினைக்கிறார். சகயோகி குழந்தைகள் எப்பொழுதும் பாப்தாதாவின் நினைவு சொரூபத்தில் இருக்கிறார்கள். பாப்தாதா தன்னுடைய விதவிதமான விலை மதிக்க முடியாத இரத்தினங்களின் கூடவேதான் எப்பொழுதும் இருக்கிறார். அந்த மாதிரி விலைமதிக்க முடியாத இரத்தினம் யாரை தந்தை தன்னுடைய கழுத்தின் மாலையாக ஆக்கியிருக்கிறார், இதய சிம்மாசனதாரியாக ஆக்கியிருக்கிறார். கண்களின் மணிகளாக ஆக்கியிருக்கிறார். தலையின் கிரீடமாக ஆக்கியிருக்கிறார். உலகில் தன்னுடன் சேர்த்து பூஜைக்குரியவர்களாக ஆக்கியிருக்கிறார், அனேக பக்தர்களின் இஷ்ட தேவதைகளாக ஆக்கியிருக்கிறார் என்றால் அந்த மாதிரி சயகௌரவத்தில் நீங்கள் எப்பொழுதும் நிலைத்திருக்கிறீர்களா? எந்தப் பார்வையோடு பாப்தாதா பார்க்கிறாரோ மற்றும் உலகின் தேவதை என்ற அதே சொரூபத்தில் எப்பொழுதும் நிலைத்திருக்கிறீர்களா?

# 1978 அவ்யக்த முரளி

இன்று தந்தை மற்றும் தாதா (பிரம்மாபாபா) இடையே குழந்தைகளைப் பற்றிய ஆன்மீக உரையாடல் நடந்து கொண்டிருந்தது. பாப்தாதா கூறினார். சகஜயோகி குழந்தைகள், இராஜரிஷி குழந்தைகள் சென்று கொண்டிருக்கும்போதே அதிவேகத்திற்குப் பதிலாக சில நேரம் நின்றுவிடுகிறார்கள். ஏன் நிற்கிறார்கள்? தன்னுடைய வாழ்க்கையின் எதிர்காலத்தின் உயர்ந்த இலக்கு தெளிவாக தென்படவில்லையா? இனி என்ன நடக்கும் என்ற இந்தக் கேள்விக்குறியின் பரீட்சை எதிரில் வருகிறது. அதன் காரணமாக அதிவேகம் மற்றும் தீவிர முயற்சி மாறி, வெறும் முயற்சியின் ரூபத்தில் ஆகி விடுகிறது. வந்திருக்கும் தடையை அகற்றுவதற்கு மற்றும் பாறையைக் கடந்து செல்வதற்கான தைரியம் குறைந்து விடுகிறது. எனவே சென்று கொண்டிருக்கும்போதே களைப்படைந்து விடுகிறார்கள். சிலர் களைப்படைந்து விடுகிறார்கள். சிலர் மனமுடைந்து போய் விடுகிறார்கள் அதாவது தன் மேல் உள்ள நம்பிக்கையை இழந்தவர்களாக ஆகி விடுகிறார்கள். அந்த மாதிரி நேரத்தில் தந்தையின் ஆதரவு கிடைத்த போதிலும் தன்னை ஆதரவற்றவர்களாக அனுபவம் செய்கிறார்கள் ஆனால் பாப்தாதா ஒரு நொடிக்கான சுலபமான சாதனம் மற்றும் எந்தவொரு தடையிலிருந்து விடுபடுவதற்கான வழியாக அவ்வப்போது என்ன கூறிவந்திருக்கிறாரோ அதை மறந்து விடுகிறார்கள். ஒரு நொடியில் தன்னுடைய சொரூபம் அதாவது ஆத்மீக ஜோதி சொரூபம், மேலும் காரியத்தில் கருவி என்ற உணர்வு சொரூபம் அப்படி இந்த டபுள் லைட் சொரூபம் ஒரு நொடியில் உயரே தாண்டுதலை செய்விக்கக்கூடியது ஆனால் குழந்தைகள் என்ன செய்கிறார்கள்? உயரே தாண்டுவதற்குப் பதிலாக பாறையை உடைக்கத் தொடங்கி விடுகிறார்கள். அகற்றுவதில் ஈடுபட்டு விடுகிறார்கள். இதன் காரணமாக அவரவர்களின் சக்திக்கு ஏற்ப என்ன தைரியம் மற்றும் உற்சாகம் இருக்கிறதோ அது அதிலேயே முடிவடைந்து விடுகிறது. மேலும் களைப்படைந்து விடுகிறார்கள் அல்லது மனமுடைந்து போய் விடுகிறார்கள். அந்த மாதிரி குழந்தைகளின் கடுமையான உழைப்பை பார்க்கிறார் என்றால் பாப்தாதாவிற்கும் இரக்கம் வருகிறது. தாண்டி விடுங்கள் மேலும் ஒரு நொடியில் கடந்து விடுங்கள் என்ற இதை மறந்து விடுகிறார்கள். அப்படி இன்று இந்த ஆன்மீக உரையாடல் குழந்தைகள் என்ன செய்கிறார்கள் மற்றும் பாப்தாதா என்ன கூறுகிறார் என்பது நடந்து கொண்டிருக்கிறது.

எளிய வழியைக் கூட கொஞ்சம் மறந்து விட்ட காரணத்தினால், அவர்களே களைப்படையும் அளவிற்கு கடினமாக்கி விடுகிறார்கள்.

வேறு என்ன செய்கிறார்கள்? தன்னுடைய வீணான எண்ணங்களின் புயலை அவர்களே உருவாக்குகிறார்கள். மேலும் அதே புயலில் அவர்களே ஆடி விடுகிறார்கள். தன்னுடைய நிச்சயத்தின் அஸ்திவாரம் மேலும் அனேக விதமான பிராப்திகளின் ஆதாரத்தில் அவர்களே ஆடிப் போய்விடுகிறார்கள். விநாஷம் ஆகுமா அல்லது ஆகாதா, ஒன்றும் தெரியவில்லை, பகவானின் மகாலாக்கியம் சரியா அல்லது இல்லையா? உலகின் எதிரில் நிச்சயத்தோடு சொல்லவா அல்லது வேண்டாமா, குப்தமாக இருப்பதா அல்லது வெளிப்படுத்துவதா, சேமிப்பு செய்யவா அல்லது சேவையில் ஈடுபடுத்தவா குடும்பத்தை கவனிக்கவா அல்லது சேவையில் ஈடுபடுத்தவா? கடைசியில் என்ன ஆகுமோ? தந்தையோ நிராகாரமானவர் மற்றும் ஆகாரி ஆகி விட்டார். சாகாரத்தில் எதிர்கொள்வதோ நாங்கள் தான். இந்த மாதிரி வீணான எண்ணங்களின் புயலை உருவாக்கி தன்னையே மேலே கீழே ஆட வைக்கிறார்கள். தன்னுடைய நிச்சயத்தின் அஸ்திவாரத்தை ஆட்டி விடுகிறார்கள். எப்படி புயல் ஒருவரை எங்கேயோ கொண்டு சேர்த்து விடும், அதே போல் வீணான எண்ணங்களின் புயல் தீவிரமாக முயற்சி செய்பவரிலிருந்து, (சாதா) முயற்சி செய்பவரின் பக்கம் எடுத்துச் செல்லும். அந்த மாதிரி புயலில் வராதீர்கள். பாப்தாதா அந்த மாதிரி குழந்தைகளைப் பார்த்து இதுவரையிலும் டிரஸ்டியாக இருக்கிறீர்களா அல்லது குடும்பஸ்தனா? என்று கேட்கிறார். டிரஸ்டியாக இருக்கிறீர்கள் என்றால், பொறுப்பாளர் யார்? தந்தையா அல்லது நீங்களா? எப்பொழுது தந்தையின் பொறுப்பாக இருக்கிறது என்றால், ஆகுமா அல்லது ஆகாதா, என்னவாகும் என்ற இது தந்தையின் பொறுப்பா அல்லது உங்களுடையதா?

நிச்சயபுத்தியின் முதல் அடையாளம் என்னவாக இருக்கும்? நிச்சயபுத்தி என்றால் எப்பொழுதும் கவலையற்று இருப்பவர், எப்பொழுது தந்தை உங்களுடைய அனைத்து கவலைகளையும் தன் மேல் எடுத்துக் கொண்டார் என்ற பிறகும் நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள். விநாஷம் ஆகுமா அல்லது ஆகாதா, மேலும் எப்பொழுது ஆகும் என்ற இந்தக் கவலை பிராமண வாழ்க்கையில் ஏன் இருக்கிறது? பிராமண வாழ்க்கை,

வைரத்திற்குச் சமமான வாழ்க்கை, தந்தையோடு சந்திப்பைச் செய்யும் வாழ்க்கை, முன்னேறும் கலைக்கான வாழ்க்கை, அனைத்து பொக்கிஷங்களால் நிரம்பிய வாழ்க்கை, அனைத்து அனுபவம் நிரம்பிய வாழ்க்கை. அப்படிப்பட்ட அந்த வாழ்க்கை பிடிக்கவில்லையா? விரைவிலேயே முடிக்க விரும்புகிறீர்களா? ஏதாவது கஷ்டம் மற்றும் சிரமங்கள் இருக்கிறதா என்ன? பக்தி மார்க்கத்தில் இந்த அதீந்திரிய சுகத்தின் வாழ்க்கையின் நாட்கள் ஒன்றிலிருந்து நூறுமடங்கு ஆகி விட வேண்டும் என்று தான் அழைத்தீர்கள். மேலும் இப்பொழுது களைப்படைந்து விட்டீர்களா? அந்த மாதிரி எண்ணம் வைப்பவர்கள் மேல் பாப்தாதாவிற்கு சிரிப்பு வருகிறது. அந்த மாதிரி எண்ணம் வைக்கும் அளவிற்கு என்ன பிராப்தி இல்லை. எப்பொழுது நன்மையே செய்யும் தந்தை என்று கூறுகிறீர்கள் என்றால், நன்மையே பயக்கும் வாழ்க்கை என்று கூறுகிறீர்கள் என்றால், என்னென்ன பகவானின் மகாவாக்கியங்களோ அதில் அனேக விதமான நன்மை அடங்கியிருக்கிறது. ஏன் கூறினார் மற்றும் எப்படி கூறினார் என்ற இந்த எண்ணத்தினால் நிச்சயபுத்தியின் அஸ்திவாரத்தை ஏன் அசைக்கிறீர்கள்? ஒருவேளை அந்த மாதிரி சிறு சிறு புயல்களில் அஸ்திவாரம் ஆடுகிறது என்றால், மகாவிநாஷத்தின் மகான் புயலில் எப்படி நிலைத்து நிற்க முடியும். இதுவோ தன்னுடைய ஒரு வீணான எண்ணங்களின் புயல் மட்டும் தான் ஆனால் மகாவிநாஷத்திலோ அனேக விதமான புயல்கள் நாலாபுறங்களிலும் இருக்கும். பின்பு என்ன செய்வீர்கள்? இந்த சின்னஞ்சிறு விஷயத்தில் இதற்காக நேரமும் கிடைத்திருக்கிறது, துணையும் கிடைத்திருக்கிறது, அனேக் விதமான பொக்கிஷங்களும் கிடைத்துக் கொண்டிருக்கின்றன, பிராப்தி ஆகிக் கொண்டிருக்கும் போதே முடிவின் விருப்பத்தை ஏன் செய்கிறீர்கள்? சுகமான நாட்கள் வருகின்றன என்று பொறுமையாக இருங்கள். எப்பொழுது மற்றும் ஏன் என்ற தைரியமற்றவர்களாக ஆகாதீர்கள். தன்னுடைய வீணான எண்ணங்களின் புயலை முடிவு கட்டுங்கள், செல்வந்தன் ஆகுங்கள். சக்தி நிறைந்தவர் ஆகுங்கள். எப்பொழுதுமே நிச்சயபுத்தியுடையவராக இருங்கள். நன்மையே பயக்கும் தந்தை மற்றும் நன்மையே பயக்கும் நேரத்தின் ஒவ்வொரு விநாடியின் லாபத்தை எடுத்துக் கொள்ளுங்கள். முழு கல்பத்தில் அந்த மாதிரி செல்வம் நிறைந்த, பாக்கியம் நிறைந்த நாட்கள், பாக்கியத்தை உருவாக்குபவரின் தொடர்பு இருக்கும் நாட்கள் மீண்டும்

வரப்போவதில்லை, விநாஷ நேரத்திலும் இந்த பிராப்தியின் காலத்தை நினைவு செய்வீர்கள். எனவே நாடகப்படி நன்மைக்காக நாடகத்தில் என்னென்ன காட்சிகள் நடந்து கொண்டிருக்கின்றனவோ அதை திரிகாலதரிசியாக ஆகி, தைரியம் மற்றும் உற்சாகம் நிறைந்த சக்திசாலியான ஆத்மாக்கள் ஆகி, நீங்களும் சக்திசாலியாக இருங்கள் மற்றும் உலகத்தையும் சக்திசாலி ஆக்குங்கள். பாறையை உடைப்பதில் களைப்படையாதீர்கள். தன்னுடைய புயலில் ஆடாதீர்கள், உறுதியாக இருங்கள். என்ன செய்கிறீர்கள் மற்றும் என்ன செய்ய வேண்டும்? புரிந்ததா? இதே ஆன்மீக உரையாடல் அதாவது குழந்தைகள் என்ன விளையாட்டைக் காண்பிக்கிறார்கள் என்பது தான் நடந்தது. இப்பொழுது சக்தி நிறைந்த விளையாட்டை விளையாடுங்கள் அதன் மூலம் மற்ற அனைத்து விளையாட்டும் முடிவடைந்து விடட்டும். மனமுடைந்து போவதற்குப் பதிலாக இதயம் எப்பொழுதும் குஷியடைந்து விடட்டும். இப்பொழுது அந்த மாதிரியான எண்ணத்தை இந்த மகான் யக்ஞத்தில் ஆகுதியாக போட்டுச் செல்லுங்கள், உடன் எடுத்துச் செல்லாதீர்கள், நிரந்தரமாக சுவாஹா, எப்பொழுது நீங்களே சுவாஹா ஆகியிருக்கிறீர்கள் என்றால் இந்த எண்ணம் எப்படி வர முடியும்? எனவே இப்பொழுது சுவாஹா என்பதற்கு போக் வைத்துச் செல்லுங்கள். சக்திசாலியான எண்ணங்கள் என்ற மலர்களின் போக் வையுங்கள். எந்த போக் வைக்க வேண்டும் என்று புரிந்ததா? நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் கவலையற்ற, எப்பொழுதும் நிச்சயபுத்தியுடைய ஒவ்வொரு மகாவாக்கியத்தின் மகான் அர்த்தத்தை தெரிந்திருக்கக்கூடிய, எண்ணத்திற்கும் டிரஸ்டி அதாவது எது தந்தையின் எண்ணமோ அதுவே குழந்தைகளின் எண்ணம் அந்த மாதிரி மனம், புத்தி, சம்ஸ்காரத்தில் சமமான, பாப்தாதாவின் நெருக்கமான ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

பார்ட்டிகளுடன் சந்திப்பு: பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் அனைவரையும் விட உயர்ந்த ஆத்மாவின் ரூபத்தில் பார்க்கிறார். ஏனென்றால் உலகினுள் எத்தனை தான் உயர்ந்த ஆத்மாக்கள் இருந்தாலும் உங்கள் எதிரில் அவர்கள் என்ன? ஒன்றுமே இல்லை. எந்த ஆத்மாக்கள் தன்னுடைய அழியாத தந்தையின் விசேஷ படைப்பாகிய சொர்க்கத்தின் அதிகாரி ஆக முடியாது என்றால், அவர் நிலை தான்

என்ன? எந்தக் குழந்தை தந்தையின் சொத்தின் உரிமையிலிருந்து வஞ்சிக்கப்பட்டு விட்டார் என்றால் அவர் நிலை என்ன? அப்படி எவ்வளவு பெயர் பெற்ற ஆத்மாக்கள் இருந்தாலும், உங்களுடைய உயர்ந்த பிராப்தியின் எதிரில் அவர்கள் ஒன்றுமே இல்லை. அப்படி அனைவரையும்விட உயர்ந்தவர்கள் ஆனீர்கள் இல்லையா? இன்றைய உலகத்தின் ஜனாதிபதி கூட உங்களைப் பார்த்து பிரம்மா குமாருக்கு பதிலாக ஜனாதிபதி ஆகி விடுங்கள் என்று கூறினார் என்றால் ஆவீர்களா? இல்லை தான் இல்லையா? ஏனென்றால் எங்கே இன்றைய பழைய உலகத்தின் அற்ப காலத்து பதவி, எங்கே நிரந்தரமான பதவி என்பதை தெரிந்திருக்கிறீர்கள். அப்படி எண்ண அளவில் கூட புத்தி அங்கே வளைந்து கொடுக்க முடியாது. ஏனென்றால் எப்பொழுது இராஜாக்களுக்கெல்லாம் இராஜா ஆகிறீர்கள் என்றால், இது எப்படிப்பட்ட நிலை? இவர்களோ கிரீடமற்ற இராஜாக்களாகவும் இல்லை, இராஜாக்களிலோ சக்தி இருக்கும், அது எங்கே இருக்கிறது? ஒன்று கிரீடமற்றது, இன்னொன்று சக்தியில்லாதது என்றால், அங்கே பார்வை மூழ்குமா என்ன? அந்த மாதிரி உயர்ந்த நிலை மற்றும் மகான் நிலையை எப்பொழுதும் நினைவில் வையுங்கள். எப்பொழுதும் நினைவு சொரூபம் இருப்பதினால் அனைத்து பிராப்தியின் அனுபவம் செய்ய முடியும். கொஞ்சத்தில் திருப்தி ஆகுபவராக இருக்கக் கூடாது. கொஞ்சத்தில் யார் திருப்தி ஆவார்? பக்தர்கள். அப்படி நீங்கள் பக்தனோ இல்லையே, அதிகாரி தான் இல்லையா? அதிகாரிக்கு தன்னுடைய அதிகாரத்தின் அனுபவம் இருக்கும். இன்று வீட்டில் இருப்பவர்கள் தன்னுடைய முழுமையான அதிகாரத்தைக் கேட்கிறார்கள். வேலைக்காரன் கூட முழு அதிகாரத்தைக் கேட்பார். ஒருவேளை கொஞ்சம் குறைந்தது என்றாலும், என்னுடைய அதிகாரத்தை கொடுங்கள் என்று கூறுவார். தந்தையோ அனைத்து அதிகாரத்தையும் கொடுப்பவர் என்றால், அனைத்து அதிகாரத்தையும் பிராப்தி செய்யுங்கள். பக்தனாக இல்லாமல் அதிகாரி ஆகுங்கள். பக்த ஆத்மா எதுவரை பிராமணன் ஆகவில்லையோ அதுவரை சொர்க்கத்தில் வர முடியாது. பக்தனிலிருந்து பிராமணன் ஆக வேண்டும். பிறகு பிராமணனிலிருந்து தேவதை ஆக வேண்டும். பக்த தன்மையின் அம்ச மாத்திரமும் இருக்க வேண்டாம். இதைத் தான் சம்பூர்ண அதிகாரி என்று கூறுவது. பக்தன் மற்றும் பகவானின் சந்திப்பு, குழந்தைகள் மற்றும் தந்தையின் சந்திப்பு இரண்டிலுமே இரவு, பகலுக்கான வித்தியாசம்

இருக்கிறது இல்லையா? அப்படி எந்த சந்திப்பு பிடித்திருக்கிறது? மாயாவின் வசமாகி விடுகிறீர்கள் என்றால், எந்த ரூபத்தில் சந்திக்கிறீர்கள்? "கிருபை செய்யுங்கள், ஆசீர்வாதம் கொடுங்கள், சக்தி கொடுங்கள், என்ன செய்வது, எப்படி செய்வது, ஏதாவது வழி கொடுங்கள். எங்களிடம் மாயாவை அனுப்பாதீர்கள்" - இது பலஹீனம் தான் இல்லையா? மகாவீரன் என்னிடம் எதிரிகள் வரக்கூடாது, நான் மகாவீரன் ஆவேன் என்றால் அவரை என்னவென்று கூறுவார்கள்? மகாவீரனோ எதிரியை வா, வா என்று அழைப்பார். மேலும் நான் வெற்றி அடைபவன் ஆவேன் என்று சொல்வார். மகாவீரன் சோதனையைப் பார்த்து பயப்படமாட்டார்கள், சவால் விடுவார்கள். ஏனென்றால் மூன்று காலத்தையும் தெரிந்தவராக இருக்கும் காரணத்தினால் நான் ஒவ்வொரு கல்பத்திலும் வெற்றி அடைபவன் என்று தெரிந்திருக்கிறார்கள். நல்லது.

இராஜஸ்தான் மற்றும் இந்தூர் மண்டலத்தின் பார்ட்டிகளுடன் தனிப்பட்ட சந்திப்பு: இராஜஸ்தானுக்கு மிகுந்த வரதானம் கிடைத்திருக்கிறது. முதலில் சேவையின் சாதனம் பரிசாக இராஜஸ்தானுக்குக் கிடைத்திருக்கிறது. முதன் முதல் தீர்த்த ஸ்தானமோ இராஜஸ்தான் தான் ஆகிறது இல்லையா? தந்தை மற்றும் பிரம்மாபாபா இருவரின் வரதானம் இராஜஸ்தானுக்கு இருக்கிறது. வரதானம் பலனையோ அவசியம் கொடுக்கவே கொடுக்கும் ஆனால் எந்த நேரம் கொடுக்கும், அந்த நேரத்தை பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். மேளாவின் கூடவே விசேஷ ரூபத்தில் அந்த மாதிரி சூழ்நிலையை உருவாக்குங்கள். எப்படி காந்தம் அனைத்தையும் தன் பக்கம் ஈர்த்து விடுகிறதோ, அந்த மாதிரி ஆன்மீக சூழ்நிலை ஆத்மாக்களை தன் பக்கம் ஈர்க்க வேண்டும். இது தான் மேளாவின் வெற்றி. விசேஷ கவனம் வைத்து ஒவ்வொரு துறையைச் சேர்ந்த ஆத்மாக்களையும் இந்த மேளாவின் சாதனம் மூலமாக நெருக்கத்தில் கொண்டு வாருங்கள். சாதனம் மிகவும் ஈர்க்கக்கூடியது. சாதனத்தின் முழு லாபத்தை எடுங்கள். அனைவருக்கும் செய்தி சென்றடைய வேண்டும். கடுமையாக உழைப்பதினால் அவசியம் பலன் கிடைக்கும். இராஜஸ்தானின் எண்ணிக்கை அதிசயத்தின் பட்டியலில் வந்து விட்டது என்ற அந்த ஒரு நாளும் அவசியம் வரும். இதற்காக பரோபகாரியாக மட்டும் ஆகுங்கள். பரோபகாரி மூலம் உலகிற்கு உபகாரி ஆகி விடுவார்கள். பாப்தாதாவின்

விசேஷ பூமி எதன் மேல் தந்தையின் பார்வை பட்டதோ அது அவசியம் பலன் கொடுக்கும். இராஜஸ்தானின் மகிமையை தந்தை தெரிந்திருக்கிறார், இராஜஸ்தானில் இருப்பவர்கள் அதை குறைவாக தெரிந்திருக்கிறார்கள். என்ன ஆகப் போகிறது என்று தந்தை தெரிந்திருக்கிறார். ஆகும்! பிறகு நீங்கள் கூறுங்கள். முக்கிய தலைமையகமும் இராஜஸ்தானில் இருக்கிறது தான் இல்லையா? எனவே அக்கம் பக்கத்திலும் அவசியம் ஈர்க்கக்கூடிய நிலையங்கள் உருவாகும். அந்த நேரமும் வரும். சாகார பாபாவின் முதன் முதற்பார்வை எங்கு சென்றது? இராஜஸ்தான் மேல். அப்படியானால் ஏதாவது விசேஷம் இருக்கும் இல்லையா? எப்பொழுது நேரம் வந்தடைந்து விட்டதோ, திரை விலக்கப்பட்டதோ அப்பொழுது காட்சி எதிரில் வந்து விடும். நல்லது.

**டீச்சர்களுடன் சந்திப்பு:** டீச்சர்களின் விசேஷ காரியமே தந்தையின் நினைவு மற்றும் சேவை தான். அப்படி அனைத்து டீச்சர்களும் தைரியத்தை நன்றாகக் காண்பித்தீர்கள், உழைப்பும் நன்கு செய்து கொண்டிருக்கிறீர்கள். மேலும் உழைப்பின் பலனும் நாளாக நாளாக கைகூடுவதாக இருக்கும். மத்திய பிரதேசத்திற்கு பூத்துக் குலுங்கும் வரதானம் இருக்கிறது. ஏனென்றால் ஒரு வழி மற்றும் ஒரே சீரான நிலையில் இருந்து கொண்டு ஒரே காரியத்தில் ஈடுபட்டிருக்கும் ஆத்மாக்கள் அவர்களே எப்பொழுதும் முகமலர்ந்து இருக்கிறார்கள். மேலும் பூமியையும் பலன் அளிப்பதாக ஆக்குகிறார்கள். இன்றைய நாட்களின் அறிவியல் மூலமாக இந்த நேரம் விதை விதைக்கிறார்கள், பின்பு குறைந்த நேரத்தில் பலன் பெறுகிறார்கள். முன்பை விட அதிவேகம் இருக்கிறது. விதை விதைத்தார்கள். பலன் கிடைத்தது. அதே போல் தன்னுடைய அமைதியின் பலம் மூலம் சுலபமாக மற்றும் அதிவேகத்தில் பிரத்யக்ஷதாவையும் பார்ப்பார்கள், உயரே தாண்டி செல்பவர்கள் தான் இல்லையா? பாறையை உடைப்பவர்கள் அல்ல எப்படி பொறுப்பிலிருக்கும் ஆத்மாக்கள் இருக்கிறார்களோ அதே போல் வாயுமண்டலமும் உருவாகிறது. அவர்களே சகயோகியாக இருக்கிறார்கள் என்றால், வரக்கூடிய ஆத்மாக்களையும் சகயோகி ஆக்கி விடுகிறார்கள். அவர்களே குழப்பத்தில் இருக்கிறார்கள் என்றால் வரக்கூடிய ஆத்மாக்கள் கூட அதே எண்ண அலைகளைத் தான் பரப்புகிறார்கள். அப்படி பொறுப்பிலிருக்கும் ஆத்மாக்கள் எப்பொழுதும்

தடையற்றவராக, ஒரு தந்தையின் அன்பிலேயே மூழ்கியிருக்கக்கூடிய நிலையில் இருக்க வேண்டும். நல்லது.

**வரதானம்: வீணானது மற்றும் தொந்தரவு செய்யும் வார்த்தையிலிருந்து விடுபட்டு டபுள் லைட் அவ்யக்த ஃபரிஸ்தா (Angel) ஆகுக!**

அவ்யக்த ஃபரிஸ்தா ஆக வேண்டும் என்றால் வீணான வார்த்தை, எது யாருக்குமே பிடிப்பதில்லையோ அதை நிரந்தரமாக முடிவு கட்டுங்கள். விஷயம் இரண்டு வார்த்தைகளினுடையதாக இருக்கும் ஆனால் அதை பெரிதுபடுத்திப் பேசிக் கொண்டே இருப்பது என்ற இதுவும் வீணானதாகும். எந்தக் காரியம் 4 வார்த்தைகளில் முடியுமோ அதற்கு 12 - 15 வார்த்தைகள் கூறாதீர்கள். குறைவாகப் பேசுங்கள், மெதுவாகப் பேசுங்கள் -இந்த சுலோகனை கழுத்தில் டாலராகப் போட்டுக் கொள்ளுங்கள். வீணானவை மற்றும் தொந்தரவு செய்யும் வார்த்தையிலிருந்து விடுபட்டவர் ஆனீர்கள் என்றால் அவ்யக்த ஃபரிஸ்தா ஆவதில் மிகுந்த உதவி கிடைக்கும்.

சுலோகன்: யார் தன்னை பரமாத்ம அன்பிற்காக பலி ஆக்குகிறாரோ அவருக்கு வெற்றி கழுத்தின் மாலையாகி விடுகிறது!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 19.12.1978 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# உண்மை நிலை தான் அனைத்தையும் விட உயர்ந்த இராஜவம்ச நிலை ஆகும்!

பாப்தாதா குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். ஏனென்றால் இதே குழந்தைகள் தான் எதிர்காலத்தில் இப்படி ஆகுபவர்கள் என்று தெரிந்திருக்கிறார். ஒவ்வொரு குழந்தையின் நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தின் அதிர்ஷ்டத்தைப் பார்த்து பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் உருவத்தில் அதிர்ஷ்டத்தைப் பார்க்கிறார். பிராமணர்களின் தற்சமயத்து லட்சணங்கள் மூலமாக எதிர்காலத்தைப் பார்க்கிறார். ஒவ்வொரு குழந்தையும் சொர்க்கத்தின் அதிகாரி ஆவார். குழந்தைகளின் அதிகாரத்தைப் பார்த்து பாப்தாதாவிற்கும் முழு உலகத்தில் அந்த மாதிரி அதிர்ஷ்டம் நிறைந்த குழந்தைகள் வேறு யாருக்குமே இருக்க முடியாது என்று ஈஸ்வரிய பெருமிதம் இருக்கிறது. அந்த மாதிரி குழந்தைகளுக்கும் எங்களுடைய அதிர்ஷ்டம் மாதிரி வேறு யாருக்குமே இருக்க முடியாது என்று பெருமிதம் இருக்கிறது.

பாப்தாதா இன்று விசேஷ ரூபத்தில் ஒவ்வொரு குழந்தையிடம் உண்மையின் இராஜவம்ச நிலை எவ்வளவு வந்திருக்கிறது என்று அந்த விசேஷத்தை பார்த்துக் கொண்டிருக்கிறார். உண்மை நிலை தான் இராஜவம்ச நிலை ஆகும். இதை விட பெரிய இராஜவம்ச நிலை வேறு எதுவுமே இல்லை. இராஜவம்ச நிலை எந்த விஷயத்தில் மற்றும் உண்மை நிலை எந்த விஷயத்தில்? முதலில் தன்னுடைய சொரூபத்தின் உண்மை நிலை, ஒருவேளை உண்மை நிலை அதாவது தன்னுடைய உண்மையான சொரூபத்தின் நினைவு எப்பொழுதும் இருக்கிறது என்றால் சொரூபத்தின் உண்மை நிலை மூலம் இந்த ஸ்தூல முகத்திலும் ஆன்மீக இராஜவம்ச நிலை பார்க்கத் தென்படும். யார் பார்த்தாலும், இவர் இந்த உலகத்தைச் உ சேர்ந்தவர் அல்ல ஆனால் ஆன்மீக உலகத்தின் ஃபரிஸ்தாக்கள் மேலும் சொர்க்கத்தில் இருந்து இறங்கிய ஏதோ ஒரு தேவதை என்று தான் அவர்கள் வாயிலிருந்து

வெளியாகும். அந்த மாதிரி இராஜவம்ச நிலையின் அனுபவம் ஆகும். இன்னொரு விஷயம் நினைவில் கூட உண்மை நிலை அதாவது ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை. இந்த உண்மை நிலையின் நினைவு மூலம் காரியத்தில் மற்றும் வார்த்தையில் இராஜவம்ச நிலை தென்படும். ஒவ்வொரு காரியமும் சத்தியமானதாக அதாவது உயர்ந்ததாக இருக்கும் காரணத்தினால் யாரெல்லாம் தொடர்பில் வருவார்களோ அவர்களுக்கு இவருடைய ஒவ்வொரு காரியத்தில் தந்தைக்குச் சமமான சரித்திரம் அனுபவம் ஆகும். ஒவ்வொரு வார்த்தையில் தந்தைக்குச் சமமான அதிகாரம் நிறைந்த நிலை மற்றும் பிராப்தியின் அனுபவம் ஆகும் அதாவது ஒவ்வொரு வார்த்தையும் சக்திசாலியானதாக அதாவது பலன் கொடுப்பதாக இருக்கும். இதைத் தான் சத்திய வாக்கு என்று சொல்வார்கள். அந்த மாதிரி காரியம் மற்றும் வார்த்தையில் உண்மை நிலை தான் இராஜவம்ச நிலையாக இருக்கும். அவருடைய தொடர்பு அதாவது உடன் இருப்பு உண்மையாக இருக்கும் காரணத்தினால் பாரஸ்-ன் காரியம் செய்யும். பாரஸ் என்ற உலோகம் இரும்பையும் மாற்றிவிடுகிறது. அந்த மாதிரி உண்மை நிலையின் இராஜ நிலை உள்ள ஆத்மாவின் உடன் இருப்பு சக்தியற்றவரையும் சக்திசாலியாக ஆக்கி விடும் அதாவது போலியானதை உண்மையானதாக ஆக்கி விடும். அந்த மாதிரி ஆத்மாவின் உண்மை நிலை மற்றும் உயர்ந்த பார்வையுடைய கண்கள் அதாவது தெய்வீக திருஷ்டி மந்திரப் பொருள் மாதிரியான காரியம் செய்யும். இந்த நேரம் ஜீவன்முக்தியின் நிலையின் அனுபவம், அடுத்த நேரம் கடைசி இறுதி கடைசி ஜென்மம் மேலும் இன்னொரு நேரம் முதல் ஜென்மத்தின் தெளிவான சாட்சாத்காரத்தை செய்விப்பார்கள். இந்த நேரம் மிகுந்த துக்கமான நிலை, அடுத்த நேரம் மிக சுகம் நிறைந்த வாழ்க்கையின் அனுபவம் செய்விப்பார்கள். நான் தான் அது - அது தான் நான்' என்பதின் மந்திர சக்தியை அனுபவம் செய்விட்டார்கள். அதாவது 84 ஜென்மங்களின் ஞானத்தைத் தான் நினைவூட்டுவார்கள். இந்த நேரம் ஸ்தூல உலகம், சங்கமயுகத்தின் சுகத்தின் அனுபவம் செய்விட்டார்கள். அடுத்த நேரம் சூட்சும ஃபரிஸ்தா சொரூபத்தின் அனுபவம் செய்விப்பார்கள். இந்த நேரம் பரந்தாமத்து நிவாசி, ஆத்மீக சொரூபத்தின் அனுபவம் செய்விட்டார்கள், அடுத்த நேரம் சொர்கத்தின் சுகம் நிறைந்த வாழ்க்கையின் அனுபவம் செய்விப்பார்கள். ஒரு

நொடியில் இந்த நான்கு உலகங்களின் அனுபவம் செய்விட்டார்கள். அப்படி இது மந்திர சக்தி ஆனது தானே.

அந்த மாதிரி இராஜவம்ச நிலை உள்ளவர்கள் எப்பொழுதும் அனைத்து கர்மேந்திரியங்கள் மூலமாக ஏதாவது பிராப்தி செய்விப்பவராக அதாவது கொடுக்கக்கூடிய வள்ளலாக இருப்பார். அந்த மாதிரி இராஜவம்ச நிலை உள்ளவர் எந்த விதமான மாயாவின் கவர்ச்சியின் பக்கம் எண்ணம் மூலமாகக்கூட ஈர்க்கப்பட மாட்டார் அதாவது பிரபாவம் அடைய மாட்டார். எப்படி இன்றைய நாட்களின் இராஜவம்ச நிலையில் உள்ள ஆத்மாக்கள் எப்பொழுதும் நிரம்பியிருக்கும் காரணத்தினால் எங்குமே யாருடைய அடிமையாக இருக்க மாட்டார். அந்த மாதிரி எப்பொழுதும் புத்தி நிரம்பியிருக்கும் காரணத்தினால், உலகில் வயிறு நிரம்பியிருக்கிறது என்று கூறுவார்கள், மேலும் இங்கு புத்தி ஒவ்வொரு பொக்கிஷத்தினால் நிரம்பியிருக்கும், எனவே எந்தவொரு நபர் மற்றும் சாதனங்களின் பக்கம் எவை அற்பமானவை மற்றும் அற்பகாலத்திற்கானவையோ அங்கு புத்தி செல்லாது அதாவது இல்லை என்ற பொருள் ஒன்றும் இருக்காது. எனவே அதை அடைவதற்காக பார்வை எங்கும் செல்லாது. அவர்களுடைய கண்களில் எப்பொழுதும் புள்ளி ரூபமான தந்தை தான் நிரம்பியிருப்பார். இது தான் இராஜவம்ச நிலை அதாவது உண்மை நிலை ஆகும். இந்த உடலும் உண்மை இல்லை ஆத்மா தான் உண்மையானதாகும். எனவே உண்மை நிலையின் இராஜவம்ச நிலை எந்த அளவு வந்திருக்கிறது என்று தன்னைத் தானே கேளுங்கள். வரிசைக்கிரமமாக இருக்கும் இல்லையா. அப்படி தன்னுடைய வரிசை எண் எது என்று சோதனை செய்யுங்கள். முதல் டிவிசனில் இருக்கிறதா அல்லது இரண்டாவதிலா. மூன்றாவதில் என்றோ சொல்ல மாட்டோம் இல்லையா.

பஞ்சாபின் வரிசை எண் எது? அனைவருமே முதல் டிவிசனில் வருபவர்கள் தான் இல்லையா? ஒருவேளை யாராவது இரண்டாவதில் இருந்தால் கூட இன்று முதலில் வந்து விடுங்கள். இரண்டாம் நம்பரில் இருப்பவர்களுக்குக்கூட சங்கமயுகத்தின் அனைத்து பிராப்திகளின் அனுபவம் இருக்காது. சில பிராப்தி இருக்கும், சில பிராப்தி இருக்காது. எப்படி சிலர் அமைதியின் அனுபவமோ ஆகிறது ஆனால் அதீந்திரிய சுகத்தின் அனுபவம் இல்லை என்று கூறுகிறார்கள். குஷியின்

அனுபவம் ஆகிறது ஆனால் சக்தி ரூபத்தின் அனுபவம் ஆவதில்லை. முதல் டிவிசனில் வருபவர்களுக்கு ஒவ்வொரு குணத்தின் அனுபவம் மற்றும் ஒவ்வொரு சக்தியின் அனுபவம் இருக்கும். ஒருவேளை ஏதாவது குறை இருக்கிறது என்றால் 14-கலை உள்ள இரண்டாம் டிவிசனை சேர்ந்தவர். அந்த மாதிரியான ஆத்மாக்கள் இப்பொழுதும் கூட உயர்ந்த பிராப்தியிலிருந்து வஞ்சிக்கப்பட்டு இருந்து விடுகிறார்கள். மேலும் எதிர்காலத்தில் கூட சதோபிரதான பிராப்திக்கு பதிலாக சதோ பிராப்தியை செய்கிறார்கள். அப்படியானால் இரண்டாம் டிவிசனாக ஆகி விட்டது தான் இல்லையா. முதல் டிவிசனை சேர்ந்தவர்கள், இராஜ்யத்தின், இயற்கையின் சதோபிரதான நிலையின் சுகத்தைப் பெறுவார்கள் மேலும் இவர்கள் சதோவின் சுகத்தை பெறுவார்கள். சதோபிரதானத்தின் சுகத்தை பெற மாட்டார்கள். எனவே எதைப் பெற வேண்டும் என்று இப்பொழுது யோசியுங்கள். சதோபிரதான நிலையின் பிராப்தியா அல்லது சதோவின் பிராப்தியா? அனைத்து பிராப்திகளின் அனுபவம் இருக்கிறதா அல்லது ஏதாவது பிராப்தியின் அனுபவம் இருக்கிறதா என்று நீங்களே முடிவு செய்தீர்கள் என்றால் தர்மராஜிடம் செல்ல வேண்டியது இருக்காது. அப்படி உண்மை நிலை தான் இராஜவம்ச நிலை எப்படி என்று புரிந்து கொண்டீர்களா? இராஜவம்ச நிலையின் விஸ்தாரம் இன்னும் என்னென்ன இருக்கிறது என்று பின்பு கூறுவோம். நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் இராஜவம்ச நிலையில் இருப்பவர்களுக்கு, எப்பொழுதும் அனைத்து பிராப்தியின் அனுபவ சொரூபமான, ஒவ்வொரு காரியத்தையும் சரித்திரம் அதாவது உயர்ந்த காரியம் செய்யக்கூடிய, ஒரு நொடியில் நான்கு உலகங்களின் அனுபவம் செய்விக்கக்கூடிய அந்த மாதிரி உயர்ந்த அதிர்ஷ்டம் நிறைந்த குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்,

தாதி அவர்களுடன் உரையாடல்: எதிர்காலத்து இராஜ்யத்தின் அரச குடும்பம் இப்பொழுதிலிருந்தே பிரத்யக்ஷம் ஆகிக் கொண்டே இருக்கும் இல்லையா? பாப்தாதாவின் மகாவாக்கியமாகிய கடைசியில் அனைத்தும் தெளிவாக சாட்சாத்காரம் ஆகும் என்று கேட்டிருக்கிறீர்கள். அந்த சாட்சாத்காரம் திவ்ய திருஷ்டி மூலமாக ஆகுமா?

சாட்சாத்காரமாக இருக்குமா அல்லது சாட்சாத் ரூபத்தில் இருக்குமா? அனைவருக்கும் திவ்ய திருஷ்டி மூலம் சாட்சாத்காரம் ஏற்படுவதற்காக நாடகத்தில் இருக்கிறது என்றால் அப்படியாகும் ஆனால் இது சாட்சாத் ரூபத்தில் சாட்சாத்காரம் ஆகும். இப்பொழுது விரைவிலேயே ஒவ்வொரு ஆத்மா தன்னுடைய உண்மை நிலை மூலமாக இராஜவம்ச நிலையின் ரூபத்தை பிரத்யக்ஷ ரூபத்தில் காண்பிப்பார். அதன் மூலம் ஆகுமா அல்லது ஆகாதா என்ற கேள்வி யாரிடமும் இருக்காது. இப்பொழுதோ உங்களுக்குள் வரிசை எண்ணை ஒருவேளை எடுத்தீர்கள் என்றால் கூட இது எப்படி, அது எப்படி என்று கேள்வி எழும் ஆனால் இப்பொழுது விரைவிலேயே இராஜா யார். இராணி யார் மற்றும் அரச குடும்பத்தில் யார் என்று பிரத்யக்ஷமாக பார்ப்பீர்கள். இதற்கான முயற்சி செய்வதின் வேகம் மிகவும் ஆழமானது. சமமாக இருந்த போதிலும் இப்பொழுது கொஞ்சம் உயர்ந்த நிலையில் கூட தென்படுகிறீர்கள் இருந்தும் முயற்சி செய்வதின் வேகம் நுணுக்கமானதாக இருக்கும் காரணத்தினால் வரிசை எண் ஒன்று, இரண்டு. என்று ஆகியே விடுகிறது. இப்பொழுது ஒவ்வொருவரின் முயற்சி செய்வதின் விசேஷம் தென்படவும் செய்கிறது ஆனால் எப்படி தூசியின் நடுவில் வைரம் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது என்றால் சில நேரம் தெளிவாகத் தென்படும். சில நேரம் மறைந்திருப்பதாகத் தென்படும். அப்படி இப்பொழுதைய முயற்சியில் ஜொலித்துக் கொண்டிருக்கும் வைரம் அவசியம் பார்க்கத் தென்படுகிறார்கள் ஆனால் அந்த மாதிரி தென்படுகிறார்கள் மேலும் பிறகு கடைசியில் அதாவது கடைசி நேரத்தில் இல்லை சங்கமயுகத்தின் இறுதியில் அதாவது கொஞ்ச காலத்திற்கு முன்பாகவே அவசியம் பிரத்யக்ஷம் இருக்கும். பிரத்யக்ஷத்தின் பங்கை செய்து கொண்டே தன்னுடைய தற்சமயத்து மாலையின் மணியின் எண் மற்றும் எதிர்கால இராஜ்யத்தின் சொரூபம் இரண்டுமே பிரத்யக்ஷம் ஆகும் ஆனால் இப்பொழுது கொஞ்சம் பொறாமையின் தூசியின் திரைச்சீலை இருக்கிறது. இப்பொழுது பந்தயத்தில் சென்று கொண்டே சில நேரம் பந்தயத்திற்கு பதிலாக பொறாமையில் மாறிவிடுகிறது. இந்த தூசியின் திரைச்சீலை தான் ஜொலித்துக் கொண்டிருக்கும் வைரத்தை மறைத்து விடுகிறது, மேலும் எப்பொழுது இந்த திரைச்சீலை அகன்றுவிடுமோ அப்பொழுது மறைந்திருந்த வைரங்கள் தன்னுடைய சம்பன்ன சொரூபத்தில் பிரத்யக்ஷமாக வந்து விடுவார்கள். இந்த திரைச்சீலை அகன்றுவிடும்.

# 1978 அவ்யக்த முரளி

சம்பன்னத்தின் சாட்சாத்காரம் ஏற்படுவதினால் இவரும் இந்த எண்ணை பெற முடியும் என்ற எண்ணம் எழாது அதாவது பொறாமையின் திரைச்சீலை அகன்றுவிடும். மேலும் நிரம்பிய வைரம் ஜொலித்துக் கொண்டே மேடையில் பிரத்யக்ஷம் ஆகி விடும். எப்படி சாகாரத்தில் மம்மா, பாபா மேல் யாருக்கும் பொறாமை இருக்க முடியாது இல்லையா? அந்த மாதிரி அவ்வளவு தெளிவாக வரிசைக்கிரமம் தென்படும். அதன் மேல் யாரும் பொறாமை படவே முடியாது. அந்த மாதிரி அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இப்பொழுதிலிருந்தே இராஜவம்ச நிலையில் தென்படுவார்கள். இப்பொழுதோ 8-எண் கூட எடுக்க முடியாது தான் இல்லையா. இப்பொழுது கேள்விக்குறியும் வந்து விடுகிறது. பின்பு முற்றுப்புள்ளியும் வந்து விடும். இப்பொழுது தெளிவான ரூபத்தில் 8-எண்கள் பொறுக்குவதில் கூட வைக்கலாமா அல்லது வைக்க வேண்டாமா என்ற கேள்வி எழுகிறது.

இப்பொழுது தீவிர முயற்சி செய்வதின் பாலிஷ் நடந்து கொண்டிருக்கிறது. பாலிஷ் செய்வதினால் குறைகள் கொஞ்சம் கொஞ்சம் மறைந்து விடுகிறது. எப்பொழுது 8 எண்கள் இருக்கின்றன என்றால் முதல் எண்ணை விட மற்ற எண்களில் கொஞ்சமோ குறை இருக்கும் இல்லையா ஆனால் தெளிவாகத் தென்படும் அளவிற்கு அவ்வளவு இருக்காது. எனவே பாலிஷ் ஆகிக் கொண்டிருக்கிறது. இப்பொழுதோ தீவிரமாக முயற்சி செய்வதின் நிகழ்ச்சிக்கான எண்ணம் இருக்கிறது. இராஜ குடும்பத்திலோ அதிகமானவர்கள் வந்து விடுவார்கள். நல்லது. இன்றோ பஞ்சாபின் வாய்ப்பாகும். எப்படி பெயர் இருக்கிறதோ அப்படியே தான் நீங்கள் செய்யும் காரியமும் இருக்கிறது இல்லையா, சிங்கத்தின் விசேஷமாக என்ன இருக்கிறது. தனியாக இருந்தாலும் தன்னை மகாராஜா என்று நினைக்கும் அதாவது பயமற்றதாக இருக்கும். இது தான் சிங்கத்தின் விசேஷமாகும். அப்படியானால் பஞ்சாபில் இருப்பவர்கள் அந்த மாதிரி பயமற்றவர்கள் தான் இல்லையா. எந்தவிதமான மாயாவின் ரூபத்தினால் பயப்படுபவர்கள் அல்ல. பஞ்சாப் அந்த மாதிரி தான் இருக்கிறது இல்லையா.

பஞ்சாபின் பூமிக்கு விசேஷ மகத்துவம் என்ன இருக்கிறது என்று அதை தெரிந்திருக்கிறீர்களா? பஞ்சாப் ஸ்தாபனையின் தொடக்கத்தில்

தன்னுடைய விசேஷ சக்தி ரூபத்தின் காட்சியை நன்றாக காண்பித்தார்கள். அனேக விதமான குழப்பத்தில் கூட உறுதியாக இருந்தார்கள். ஏனென்றால் பஞ்சாபின் பூமி விசேஷமாக தர்மத்தின் பூமியாகும். அந்த மாதிரி தர்மத்தின் பூமியில் ஆதி சனாதன தர்மத்தின் ஸ்தாபனை செய்வது, இதில் எதிர்நோக்கி வெற்றி அடைந்தவர்களாகி இருக்கிறார்கள். பஞ்சாபின் பூமியின் விசேஷமாக நாலாபுறங்களிலும் குழப்பத்தின் நெருப்பின் நடுவில் கொஞ்ச குழந்தைகள் வெற்றி அடைந்தவர்கள் ஆகி பஞ்சாபிலும் வெற்றிக் கொடியை பறக்க விட்டார்கள் என்று சரித்திரத்திலும் இருக்கிறது. இம்சை நிறைந்த பூமியின் மேல் அஹிம்சையின் வெற்றி ஏற்பட்டது. அப்படி இதுவும் பஞ்சாபின் பூமியின் சரித்திரமாக விசேஷ ரூபத்தில் வர்ணிக்கப்படுகிறது. இரண்டாவது விசேஷம் பஞ்சாபின் நதிகளின் மகிமை அதிகமாகும். அதே போலவே பஞ்சாபிலிருந்து ஞான கங்கைளும் அதிகமாக உருவாகியிருக்கிறார்கள். தொடக்க காலத்தின் கணக்குப்படி பஞ்சாயிலிருந்து ஞான நதிகளும் அதிகமாக உருவாகியிருக்கிறார்கள் என்றால் பஞ்சாபின் பூமி கன்யா தானத்தில் உயர்ந்ததாக வெளிப்பட்டது அதாவது மகாதானியாக வெளிப்பட்டது. மூன்றாவது விசேஷமும் இருக்கிறது, பஞ்சாபின் பூமியில் சேலையின் விஸ்தாரத்தின் பூமியும் மகத்துவம் நிறைந்தது, எப்படி நதிகளின் தண்ணீர் நாலா புறங்களிலும் விஸ்தாரமாக பரவி இருக்கிறது, அதே போல் பஞ்சாபிலும் சேவை நிலையங்களின் விஸ்தாரம் நன்றாக இருக்கிறது. பல இடங்களில் தீர்த்த ஸ்தானம் உருவாகியிருக்கின்றன. மகிமையைக் கேட்டு குஷி அடைந்து விட்டீர்கள். எப்பொழுதுமே அந்த மாதிரி குஷியாக இருங்கள், பஞ்சாபின் விஸ்தாரத்தைப் பார்த்து பாப்தாதா குஷி அடைகிறார். இப்பொழுது என்ன செய்ய வேண்டும். பஞ்சாபின் பூமியிலிருந்து பெயர் மூலமாக காரியம் செய்யக்கூடிய சாரம் நிறைந்த ஆத்மாக்களை உருவாக்குங்கள். அவர்களுடைய பெயரைக் கேட்டே அனேக ஆத்மாக்கள் தன்னுடைய பாக்கியத்தை உருவாக்க வேண்டும். அந்த மாதிரி விசேஷ சேவையை இப்பொழுது இன்னும் செய்ய வேண்டும். பலத்த சப்தத்தோடு சவால் விடுங்கள். மெல்லிய சப்தத்தில் செய்கிறீர்கள் என்றால் அங்கே குருத்துவாராக்களின் சப்தத்தில் மறைந்து விடுகிறது. நல்லது.

## 1978 அவ்யக்த முரளி

கேள்வி: நிரந்தர போதையில் யார் இருக்க முடியும், நிரந்தர போதையில் இருப்பவர்களின் அடையாளம் என்னவாக இருக்கும்?
பதில்: யார் பாப்தாதாவின் இதயசிம்மாசனதாரியோ அவர் தான் நிரந்தர போதையில் இருக்க முடியும். சங்கமயுகத்து உயர்ந்த ஆத்மாக்களின் ஸ்தானமே தந்தையின் இதயசிம்மாசனம் தான். அந்த மாதிரி ஆசனம் முழுக்கல்பத்திலும் கிடைக்க முடியாது. உலக இராஜ்யத்தின் மற்றும் மாநில இராஜ்யத்தின் ஆசனமோ கிடைத்துக் கொண்டே இருக்கும் ஆனால் அந்த மாதிரி ஆசனம் மீண்டும் கிடைக்காது, அது அந்த மாதிரி விசாலமான ஆசனம் அதில் நடக்கலாம், சுற்றலாம். சாப்பிடலாம். தூங்கலாம் ஆனால் எப்பொழுதும் ஆசனத்தில் அமர்ந்திருப்பவராக இருங்கள். யார் அந்த மாதிரி ஆசனதாரி குழந்தைகளாக இருக்கிறார்களோ, அவர்கள் பழைய உடல், பழைய உலகத்திலிருந்து நினைவு மறந்திருக்கிறார்கள். பார்த்துக் கொண்டும் பார்க்காமல் இருப்பார்கள்.

கேள்வி: எந்த தாரணையின் ஆதாரத்தினால் எப்பொழுதும் சுகக்கடலில் மூழ்கியிருப்பார்கள்?
பதில்: உள்நோக்குப் பார்வை உடையவர் ஆகுங்கள் - 'உள்நோக்குப் பார்வை உடையவர் எப்பொழுதும் சுகமானவர். இந்தூரில் வசிப்பவர்கள் என்றால் உள்நோக்குப் பார்வை உடைய எப்பொழுதும் சுகமானவர்கள், தந்தை சுகத்தின் கடலாக இருக்கிறார் என்றால் குழந்தைகளும் சுகக்கடலில் அன்பில் மூழ்கியிருப்பவராக இருப்பார்கள். சுகவள்ளலின் குழந்தைகள் அவர்களும் சுகவள்ளல், அனைத்து ஆத்மாக்களுக்கு சுகத்தின் பொக்கிஷத்தை வழங்குபவர்கள். யார் வந்தாலும், எந்த பாவனையோடு வந்தாலும், அந்த பாவனையை உங்களிடமிருந்து நிறைவேற்றி செல்ல வேண்டும். அனைத்தும் நிரம்பிய மூர்த்திகளாக ஆகுங்கள். எப்படி தந்தையின் பொக்கிஷத்தில் இல்லை என்ற பொருள் எதுவும் இல்லை. அதே போல் குழந்தைகளும் தந்தைக்குச் சமமாக திருப்தியான ஆத்மாவாக இருப்பார்கள். நல்லது. ஓம் சாந்தி.

வரதானம்: மன்மனாபவ என்ற மந்திரம் மூலமாக மனதின் பந்தனத்திலிருந்து விடுபடக்கூடிய பந்தனமற்ற, டிரஸ்டி ஆகுக!

எந்தவொரு பந்தனமும் கூண்டாகும். கூண்டுக்கிளி இப்பொழுது பந்தனமற்ற பறக்கும் பறவையாகி விட்டது. ஒருவேளை ஏதாவது உடலின் பந்தனம் இருக்கிறது என்றாலும் மனம் பறக்கும் பறவை ஆகும். ஏனென்றால் மன்மனாபவ இருக்கும் காரணத்தினால் மனதின் பந்தனம் விடுபட்டு விடுகிறது. குடும்பத்தை கவனிக்கும் பந்தனமும் இல்லை. டிரஸ்டி ஆகி கவனிப்பவர் எப்பொழுதும் பந்தனமற்றவராக இருப்பார். குடும்பஸ்தன் என்றால் சுமை. சுமையுள்ளவர் ஒருபொழுதும் பறக்க முடியாது ஆனால் டிரஸ்டியாக இருக்கிறார் என்றால் பந்தனமற்றவர் மேலும் பறக்கும் கலை மூலம் ஒரு நொடியில் இனிமையான இல்லத்தை சென்றடைய முடியும்.

சுலோகன்: சோர்வை தன்னுடைய அடிமையாக்கி விடுங்கள், அதை முகத்தில் வர விடாதீர்கள்!

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺
✺✺✺✺✺✺✺✺

# 21.12.1978 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஒவ்வொரு கல்பத்தின் மிக நெருக்கமான ஆத்மாக்களின் ரூபம், ரேகை மற்றும் வேளை!

இன்று பாப்தாதா அமிர்தவேளையில் குழந்தைகளுடன் இனிய சந்திப்பை செய்து கொண்டே நாலாபுறங்களிலுமுள்ள குழந்தைகளைப் பார்த்து ஒரு விசேஷ விஷயத்தின் மேல் அவர்களுக்குள் ஆன்மீக உரையாடல் செய்து கொண்டிருந்தார்கள். எந்த விஷயத்தின் மேல்? ஒவ்வொரு குழந்தையின் தெய்வீக ஜென்மத்தின் (தேவதா பிறவி) ரூபம், ரேகை மற்றும் ஜென்மத்தின் நேரத்தை பார்த்துக் கொண்டிருந்தோம். ஒவ்வொருவரின் நேரம் மற்றும் ரூபம், ரேகை ஆகியவற்றின் ஆதாரம் தான் தற்சமய சங்கமயுக வாழ்க்கை மற்றும் எதிர்கால வாழ்க்கைக்கான ஆதாரம் ஆகும். ரூபத்தில் என்ன பார்த்தோம்? பிறந்தவுடனேயே சக்தி ரூபத்தின் ஜொலிப்பு இருந்ததா? அல்லது பிரிந்திருந்த நிலையிலேயே யோகாவின் ரேகை (ஸ்திதி, நிலை) இருந்ததா? அதாவது துடிப்பு (யோகத்தின் உயர் நிலையை அடைய வேண்டும் என்கிற) மற்றும் தாகத்தின் ரூபம் இருந்ததா அல்லது சேவாதாரி சொரூபம் இருந்ததா அல்லது வந்தவுடனேயே எப்பொழுதும் அதீந்திரிய சுகத்தின் சுக ரூபம் இருந்ததா? அதன் கூடவே வேறு என்ன ரேகைகள் இருந்தன. வரதானியின் ரேகை இருந்ததா, தைரியம் மற்றும் உற்சாகத்தின் ரேகை இருந்ததா அல்லது பிறந்தவுடனேயே சகயோகத்தின் ஆதாரத்தில் நடந்து கொள்வதற்கான ரேகை இருந்ததா? அதே போலவே வேளையையும் பார்த்துக் கொண்டிருந்தோம். ஒரு நொடியின் நிச்சயபுத்தி இருந்ததா? ஒரு வார பாடத்திற்குப் பிறகு இருந்ததா, அல்லது இன்னும் அதிக நேரத்திற்குப் பிறகு நிச்சயபுத்தி உடையவராக ஆனாரா அல்லது சந்தேகம் மற்றும் நிச்சயத்தின் யுத்தம் நடந்து, நடந்து பின்பு நிச்சயபுத்தி உடையவராக ஆனாரா அல்லது இப்பொழுது கூட யுத்தத்திலேயே இருந்து

கொண்டிருக்கிறாரா? ஒரு நொடியின் நிச்சயம் என்றால், பார்வையாலேயே நன்மை அடைவது. இரண்டாம் ணிலி பவர்கள் உயர்ந்த வார்த்தைகளினால் நன்மை அடைவது, மூன்றாவது எண்ணில் இருப்பவர்கள் வியாபாரியுடன் செய்யும் வியாபார ஒப்பந்தம் மாதிரி மதிப்பை அடிக்கடி தெரிந்த பிறகு இறந்து மறுபிறவி எடுத்தவர் ஆனாரா, நான்காவது எண்ணில் கொஞ்சம் பிராப்தியின், அன்பின், தொடர்பின், பரிவர்த்தனையின் (மாற்றம்) ஆதாரத்தில் சில நேரம் சந்தேகம், சில நேரம் நிச்சயம் என்று அப்படி இருக்கிறார்களா? அந்த மாதிரி பாப்தாதா இன்று ஒவ்வொரு குழந்தையின் இந்த விஷயங்களைப் பார்த்துக் கொண்டே ஆன்மீக. உரையாடல் செய்து கொண்டிருந்தார். இந்த இறந்து மறுபிறவி எடுத்த வாழ்க்கையில் எப்பொழுதும் தடையற்ற எப்பொழுதும் தீவிரமாக முயற்சி செய்பவர். எப்பொழுதும் பிராப்தி மூலமாக அனுபவி ஆனவர், முயற்சி செய்யும் வாழ்க்கையில் ஏறும் கலையா அல்லது இறங்கும் கலையா? எந்த மாதிரி வேகத்தில் செல்லும் வாழ்க்கையாக இருக்கிறது? இந்த மூன்று விதமான வாழ்க்கையின் ஆதாரம் ரூபம், ரேகை மற்றும் வேளையின் மேல் இருக்கிறது.

யார் ஒவ்வொரு கல்பத்தின் மிக நெருக்கமான ஆத்மாக்களோ அல்லது பல கோடி மடங்கு பாக்கியம் நிறைந்த ஆத்மாக்களோ அவர்களின் ரூபம், ரேகை மற்றும் வேளை என்னவாக இருக்கும் என்று தெரிந்திருக்கிறீர்களா? அந்த மாதிரி ஆத்மாக்கள் ஒரு நொடியில் வந்து சேர்ந்தார்கள், உடனேயே தந்தையின் குழந்தையாக ஆனார்கள். சென்ற கல்பத்தின் பாக்கியத்தின் உணர்த்துதலின் ஆதாரத்தில் பிறந்தவுடனேயே பிராமணன் ஆக வேண்டும், இல்லை ஆனால் பிராமணனாக இருந்தேன், இதற்கு முன்பும் இருந்தேன் மேலும் இப்பொழுதும் இருக்கிறேன்' என்று அனுபவம் செய்வார்கள். ஒரு நொடியில் தன்னுடையது என்ற அனுபவம் செய்வார்கள். பார்த்தார் மற்றும் தெரிந்து கொண்டார். அந்த மாதிரி வேளை உள்ளவர்களின் ரூபம் மற்றும் ரேகை என்னவாக இருக்கும். இப்பொழுது கூறிய முதல் நம்பரின் வேளையின் ரூபம் என்னவாக இருக்கும்? பிறந்தவுடனேயே அனைத்து பொக்கிஷங்களின் அதிகாரியாக இருப்பார்கள். அந்த மாதிரி ஒவ்வொரு சொரூபத்தின் பிராப்தியின் அதிகாரத்தை அனுபவம் செய்வார்கள். எப்படி விதையில் முழு மரத்தின் சாரம்

நிரம்பியிருக்கிறது. அதே போல் முதல் நம்பரில் இருப்பவர்கள் அதாவது தந்தைக்குச் சமமான நெருக்கமான ஆத்மாக்கள் அல்லது முதல் நம்பரின் வேளையில் பிறந்த ஆத்மாக்கள் அனைத்து சொரூபத்தின் பிராப்தியின் பொக்கிஷங்களில் வந்தவுடனேயே அனுபவியாக இருப்பார்கள். இந்த சொரூபம் தான் என்னுடைய இயற்கையான சொரூபம் என்று அப்படி அனுபவம் செய்வார்கள். சுகத்தின் அனுபவம் இருக்கிறது, அமைதியின் அனுபவம் இல்லை அல்லது சாந்தியின் அனுபவம் இருக்கிறது, சுகத்தின் அனுபவம் இல்லை. சக்தியின் அனுபவம் இல்லை என்று முதல் நம்பரின் வேளையின் அனுபவமாக இருக்காது. ஒரு நொடியில் ஆஸ்தியின் அதிகாரி, இது தான் வேளை மற்றும் சொரூபம்.

இப்பொழுது ரேகையாக (நிலை, ஸ்திதி) என்ன இருக்கும்? நிச்சயபுத்தி ஆக வேண்டும் அல்லது நிச்சயம் செய்ய வேண்டும் என்ற இது எண்ண அளவில் கூட இருக்காது. பிறந்தவுடனேயே இயற்கையான நிச்சயபுத்தியின் ரேகை இருக்கும். எப்படி அல்லது அப்படி என்ற விஸ்தாரத்தில் செல்ல மாட்டார்கள். இருக்கவே இருக்கிறது. இதில் இப்படி அல்லது அப்படி என்ற கேள்வி எழாது. அந்த மாதிரி முழு வாழ்க்கையின் அசைக்க முடியாத நிச்சயத்தின் ரேகை (ஸ்திதி) மற்ற ஆத்மாக்களுக்கும் தெளிவாகத் தென்படும். நிச்சயத்தின் ரேகையின் கோடு துண்டுபடாததாக இருக்கும், இடையிடையே துண்டுபட்டதாக இருக்காது. அந்த மாதிரி ரேகை உடையவர்களின் நெற்றியில் அதாவது நினைவில் எப்பொழுதும் வெற்றித் திலகத்தைப் பார்க்க தென்படும். அந்த மாதிரி ரேகை உள்ளவர்கள், எப்படி பிராமணர்களின் எதிர்கால ரூபமான ஸ்ரீகிருஷ்ணர் பிறக்கும் பொழுதே கிரீடம் அணிந்தவராக காண்பித்திருக்கிறார்கள், அதே போல் ஜென்மம் எடுத்தவுடனேயே சேவையின் பொறுப்பிற்கான கிரீடம் அணிந்தவராக இருப்பார், எப்பொழுதும் ஞான ரத்தினங்களுடன் விளையாடுபவராக இருப்பார். எப்பொழுதும் நினைவு மற்றும் குஷியின் ஊஞ்சலில் ஆடிக் கொண்டே வாழ்க்கையைக் கழிப்பவராக இருப்பார். எப்பொழுதும் ஒவ்வொரு காரியத்திலும் வரதான கை தன் மேல் இருப்பதாக அனுபவம் செய்வார். முழு நாளின் ஒவ்வொரு நடவடிக்கையிலும் தன்னுடன் அனைத்து உறவுகளாலும் (பாபா) நெருக்கம் மற்றும் சாகார ரூபத்தில் துணையின் அனுபவம் செய்வார். இயல்பான யோகி மற்றும் சகஜயோகியாக

இருப்பார். இது தான் நம்பர் ஒன் ரூடம், ரேகை மற்றும் வேளை உள்ளவர்களின் அடையாளம். இப்பொழுது தன்னைத் தானே முதல் எண்ணின் ரூபம், ரேகை மற்றும் வேளை உள்ளவர்கள் எத்தனை பேர் இருப்பார்கள் என்று சோதனை செய்யுங்கள். 8 அல்லது 108? நீங்கள் அனைவரும் எதில் இருக்கிறீர்கள்? இப்பொழுது கூட மாற்றம் செய்ய முடியும். கடைசியில் இருப்பவர் கூட வேகமாகச் செல்ல முடியும். இப்பொழுது கூட மாற்றம் செய்வதற்கான வாய்ப்பு இருக்கிறது. இப்பொழுது மிகவும் கால தாமதம் என்ற பலகை போடப்படவில்லை. மறைவாக, ரகசியமாக முயற்சி செய்வது, இரவு, பகல் ஒரு திட எண்ணத்தின் முயற்சி செய்பவர். உயரே தாண்டிச் செல்பவராக ஆக முடியும். எனவே தன்னுடைய பாக்கியத்தை நம்பர் ஒன் ஆக ஆக்கும் முயற்சி செய்வது என்ற லாட்டரி வாங்கினீர்கள் என்றால், அந்த எண் வந்து விடும். என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா? கடைசி வாய்ப்பு எனவே கடந்ததைக் கடந்ததாக ஆக்குங்கள், எதிர்காலத்தை உயர்ந்ததாக ஆக்குங்கள். எனவே பாப்தாதா அனைவருக்கும் வாய்ப்பு அளிக்கிறார். பிறகு நாங்கள் செய்ய முடியும், ஆனால் செய்யவில்லை, நேரம் கிடைக்கவில்லை, சூழ்நிலை சாதகமாக இல்லை என்று கூறி புகார் செய்யாதீர்கள். இப்பொழுது கூட இரக்க மனமுடைய தந்தையின் கருணைக்கரம் அனைவரின் மேல் இருக்கிறது. எனவே தன் மேலும் இரக்க மனமுடையவராக ஆகுங்கள். நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் தந்தையின் வரதானங்களின் கரத்தை தன் மேல் அனுபவம் செய்யக்கூடிய, எப்பொழுதும் தன் மேல் மற்றும் அனைவர் மேல் இரக்கமனமுடைய, குறைவில்லா இடைவிடாத நிச்சயபுத்தி உடைய, இடைவிடாத யோகி, எப்பொழுதும் வெற்றித் திலகம் அணிந்த, பிறந்தவுடனேயே கிரீடம் அணிந்த அந்த மாதிரி எப்பொழுதும் ஆசனத்தில் அமர்ந்திருக்கும் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

பார்ட்டிகளுடன் சந்திப்பு: 1.தன்னுடைய உலகம் மற்றும் தன்னுடைய சொரூபத்தின் நினைவு மூலம் விலகியிருக்கும் நிலை!

தன்னுடைய உண்மையான சொரூபம் மற்றும் தன்னுடைய உலகத்தின் நிலை எப்பொழுதும் நினைவிருக்கிறதா? நிராகார உலகம் மற்றும் நிராகார ரூபம் இரண்டின் நினைவானது, இந்த பழைய உலகத்தில்

இருந்தாலும் எப்பொழுதும் விலகியிருப்பவராக மற்றும் அன்பானவராக ஆக்கி விடுகிறது. இந்த உலகத்தைச் சேர்ந்தவரே இல்லை. நிராகார உலகத்தில் வசிப்பவராகவே இருக்கிறார், இங்கு சேவைக்காக அவதரித்து இருக்கிறார். அப்படி யார் அவதாரமாக இருப்பாரோ அவர்களுக்கு என்ன நினைவு இருக்கும். எந்த காரியத்திற்காக அவதாரம் எடுத்தார்களோ அதே காரியம் நினைவிருக்கும் இல்லையா? அவதாரம் அவதரிப்பதே தர்மத்தின் ஸ்தாபனைக்காகத் தான் என்றால் நீங்கள் அனைவரும் அவதரித்தவர்கள் அதாவது அவதாரம் என்றால் என்ன நினைவிருக்கிறது? தர்ம ஸ்தாபனை செய்யும் காரியம் தான் நினைவிருக்கிறது. தானே தர்ம ஆத்மா ஆகி தர்ம ஸ்தாபனை செய்யும் காரியத்தில் எப்பொழுதும் இருக்கக்கூடியவர் என்றால் சக்தி அவதாரம் ஆகி விட்டீர்கள் இல்லையா? ஒவ்வொரு சக்தியும் அவதாரம் ஆவீர்கள். பாண்டவர்களும் சக்தி ரூபமாகும். ஒரு சர்வ சக்திவான் இருக்கிறார். மற்ற அனைவரும் சக்திகள் அப்படி அனைவரும் சக்தியின் அவதாரங்கள். இந்த நினைவு மட்டும் இருந்தால் கூட எவ்வளவு இனிமையான வாழ்க்கையின் அனுபவம் செய்வீர்கள். நான் இந்த மரண உலகத்தைச் சேர்ந்தவன் இல்லை ஆனால் அவதாரம் ஆவேன் என்ற இந்த சிறிய விஷயம் மட்டும் நினைவிருந்தால் கூட விலகியவர்கள் ஆகி விடுவீர்கள். ஒருவேளை தன்னை அவதாரம் என்று நினைக்காமல் குடும்பஸ்தன் என்று நினைத்தீர்கள் என்றால் குடும்பஸ்தனின் வண்டி சேற்றில் மாட்டிக் கொண்டிருக்கும். குடும்பஸ்தன் இருப்பதே சுமையான நிலையில்! ஆனால் அவதாரம் முற்றிலும் லேசான நிலை. அவர் மாட்டிக் கொண்டிருக்கிறார், இவரோ முற்றிலும் விலகியிருப்பவர். சில நேரம் அவதாரம், சில நேரம் குடும்பஸ்தன் என்ற இந்த சக்கரம் ஒருவேளை சுற்றிக் கொண்டே இருக்கிறது என்றால், சங்கமயுகத்து உயர்ந்த வாழ்க்கையின், மங்களமான சுகத்தின் வாழ்க்கை சில நேரம் அனுபவம் ஆகும். எப்பொழுதும் ஆகாது. அந்த மாதிரி சுகமான நாட்கள் மீண்டும் ஒருபொழுதும் வராது, சங்கமயுகத்தின் ஒவ்வொரு நாளும் மிகப் பிரியமானது என்றால் அந்த மாதிரி பிரியமான நாளின் மங்களமான நேரத்தை எப்படி கழித்துக் கொண்டிருக்கிறீர்கள். விலை மதிப்பற்ற முறையில் கழித்துக் கொண்டிருக்கிறீர்களா அல்லது சாதாரண முறையிலா? ஒவ்வொரு விநாடிக்கும் மதிப்பு இருக்கிறது அதைத் தெரிந்திருக்கிறீர்களா? 5000 வருடங்களின் உயர்ந்த பிராப்திக்கான ஆதாரம் இந்த குறைந்த நேரம்

தான். அப்படி விலை மதிக்க முடியாத நேரத்தை விலை மதிக்க முடியாத முறையில் உபயோகிக்க வேண்டும் இல்லையா? சாதாரண முறையில் கழிப்பது என்றால் இரத்தினத்தின் மதிப்பை கல்லுக்கு சமமாக ஆக்குவது. ஒருவேளை நேரத்தை வீணாக இழக்கிறீர்கள் என்றால் இரத்தினத்தை கல்லுக்குச் சமமாக உபயோகிக்கிறீர்கள். நேரத்திற்கு மதிப்பு வைப்பது என்றால் தன்னுடைய மதிப்பை வைப்பது. நேரத்தை தெரிந்திருக்கிறீர்கள், ஆனால் தெரிந்த சொரூபமாகி நடக்க வேண்டும் என்ற இந்த கவனம் வேண்டும். இந்த சங்கமயுகத்தின் ஒரு விநாடி கூட என்ன செய்ய முடியாது. ஒரு விநாடியில் இங்கிருந்து நான்கு உலகங்களின் அனுபவத்தை செய்து வர முடியும். அந்த மாதிரி அனுபவியா? சின்னச் சின்ன விஷயங்களில் நேரம் வீணாகி விடவில்லையே? இப்பொழுது உயரம் தாண்டிச் செல்லுங்கள். இப்பொழுது மெதுவாகச் செல்லும் நேரம் முடிவடைந்தது. குழந்தைப் பருவம், குறும்பு காரியங்கள் செய்வதாக இருக்கும். குழந்தைப் பருவத்தின் குறும்பு காரியம் அனைவருக்கும் பிடிக்கும். பெரியவராகி மதிப்போடு நடந்தீர்கள் என்றால் பிடிக்கும். அப்படி குழந்தைப் பருவம் கடந்து விட்டது. வயோதிக நிலை வரை வந்தடைந்து விட்டீர்கள். இப்பொழுது இந்த குறும்பு காரியம் செய்வது அழகே இல்லை. வயோதிக நிலையில் ஒரே ஒரு காரியம் மட்டும் தான் இருக்கிறது. தந்தையின் நினைவு மற்றும் சேவை. தூங்கினாலும் கூட நினைவு மற்றும் சேவை. இதைத் தான் வயோதிக நிலை என்று சொல்வது. இப்பொழுது கூட ஒருவேளை குழந்தைப் பருவத்தின் விஷயங்கள், குழந்தைப் பருவத்தின் சம்ஸ்காரம் இருக்கிறது என்றால் அதற்கு முடிவு கட்டுங்கள். பந்தனம் இருக்கிறது, என்ன செய்வேன், எப்படி செய்வேன் என்ற இவை அனைத்தும் குழந்தைப் பருவத்தின் சிணுங்கல்கள். இப்பொழுது இந்த நாட்கள் முடிவடைந்து விட்டன. மூன்று காலத்தையும் தெரிந்தவர் தன்னைத் தெரிந்து கொள்ள முடியாதா? என்ன செய்வது என்று எப்படி கூறுவீர்கள். இப்பொழுது இந்த நேரத்தை இழக்காதீர்கள். ஆகத் தான் வேண்டும், விரும்புகிறோம் ஆனால் செய்ய முடிவதில்லை என்ற இந்த குழந்தைப் பருவத்தின் விஷயங்களின் விளையாட்டை முடிவு கட்டுங்கள். இதற்கு இப்பொழுது முடிவு விழா கொண்டாடுங்கள். நல்லது.

**2. டிரஸ்டி என்று புரிந்து கொள்வதினால் சக்தி நிறைந்த நிலையின் அனுபவம்!**

அனைவரும் எப்பொழுதும் தன்னை டிரஸ்டி என்று புரிந்து கொண்டு நடந்து கொள்கிறீர்களா? டிரஸ்டி என்றால் எப்பொழுதும் லேசானவர், குடும்பஸ்தன் என்றால் எப்பொழுதும் சுமையுடையவர். குடும்பஸ்தனாக இருந்தீர்கள் என்றால் இறங்கும் கலையில் செல்வீர்கள், டிரஸ்டியாக இருந்தீர்கள் என்றால் ஏறும் கலையில் செல்வீர்கள். டிரஸ்டி எப்பொழுதும் கவலையில்லா மகாராஜாவாக இருப்பார் அதாவது கவலையிலிருந்து விடு பட்டவராக இருப்பார், நான் மாஸ்டர் சர்வ சக்திவான் என்று அவருக்கு ஆன்மீகப் பெருமிதம் இருக்கும். எப்படிப்பட்ட சூழ்நிலையாக இருந்தாலும் ஆனால் அவர் லேசாக இருப்பார், எப்பொழுதும் விலகியவராக இருப்பார். கொஞ்சம் கூட சூழ்நிலையின் பாதிப்பில் வர மாட்டார். குடும்பஸ்தன் என்று நினைப்பதினால் என்ன, ஏன் என்பது தொடங்கி விடுகிறது, டிரஸ்டி என்று புரிந்து கொள்வதினால் முற்றுப்புள்ளி வந்து விடுகிறது. முற்றுப்புள்ளி என்றால் சக்திசாலியான நிலையின் அனுபவம்.

**3. அங்கதனுக்குச் சமமான நிலையை உருவாக்குவதற்காக நிச்சயத்தின் அஸ்திவாரத்தை உறுதியாக ஆக்குங்கள்!**

அனைவரும் அங்கதனுக்குச் சமமாக உறுதியாக இருக்கிறீர்களா? மாயாவின் எந்தவிதமான குழப்பத்திலும் உறுதியானவர். மாயாவின் எந்தவொரு தாக்குதலும் நிலையை அசைக்க முடியாது. அசைவதற்கான காரணமாக என்ன இருக்கிறது? நிச்சயத்தின் அஸ்திவாரம் உறுதியாக இல்லாத காரணத்தினால் தான் ஆடுகிறார்கள். ஒருவேளை நன்மையே பயக்கும் நேரம் ஆகும், ஒவ்வொரு விஷயத்திலும் நன்மை இருக்கிறது என்ற நிச்சயம் ஒருவேளை இருக்கிறது என்றால். எவ்வளவு தான் புயல் வந்தாலும் கூட அசைக்க முடியாது. இப்பொழுது நிச்சயத்தின் அஸ்திவாரத்தைத் தீவிரமாக முயற்சி செய்வது என்ற தண்ணீர் விட்டு உறுதியாக்கினீர்கள் என்றால், எப்பொழுதும் அங்கதனுக்குச் சமமாக இருப்பீர்கள். மாயாவின் தாக்குதலை தாக்குதல் என்று நினைக்க மாட்டீர்கள். ஆடுவதற்கான நேரம் சென்று விட்டது, ஒருவேளை இப்பொழுது கூட ஆடிக் கொண்டே இருந்தீர்கள் என்றால், இறுதி சோதனையிலும் ஆடிப்போய் விடுவீர்கள். பிறகு பல ஜென்மங்களுக்காக தோல்வி அடைந்து விடுவீர்கள். எனவே

நினைவின் சம்ஸ்காரத்தை உறுதி ஆக்குங்கள். இந்த அங்கதனின் நினைவுச்சின்னம் என்னுடைய நினைவுச் சின்னம் தான் என்று எப்பொழுதும் நினைவு வைத்தீர்கள் என்றால் சக்தி வந்து விடும்.

**4. தைரியம் மற்றும் உற்சாகத்தை ஒரே சீராக ஆக்குவதற்காக ஒருவரின் ரசனையிலிருக்கும் நிலை!**

எப்பொழுதும் தைரியம் மற்றும் உற்சாகம் ஒரே சீராக இருக்கிறதா? எப்பொழுது ஒரே சீரான நிலை இருக்குமோ அப்பொழுது தைரியம் மற்றும் உற்சாகமும் எப்பொழுதும் ஒரே சீராக இருக்கும். மேலே கீழே என்று அப்படி இருக்காது. சில நேரம் அதிகமாக மற்றும் சில நேரம் குறைவாக இருப்பதின் காரணம் என்ன? அனைத்து பிராப்தியின் அனுபவம் எப்பொழுதும் எதிரில் மற்றும் நினைவில் இருப்பதில்லை. இன்று அற்ப காலத்தின் பிராப்தி கூட தைரியம் மற்றும் உற்சாகத்தில் கொண்டு வருகிறது என்றால் இதுவோ சதா காலத்திற்கானது மற்றும் அனைத்து பிராப்திகளும் ஆனது. அந்த அனைத்து பிராப்திகளின் பட்டியலை எதிரில் வையுங்கள். பிராப்தி உறுதியானதாக அசைக்க முடியாததாக இருக்கிறது என்றால் தைரியம் மற்றும் உற்சாகமும் அசையாததாக இருக்க வேண்டும். உறுதியானதற்குப் பதிலாக எப்பொழுதும் மனம், சஞ்சலமாகிறது. நிலை சஞ்சலத்தில் வருகிறது என்றால் இந்த சஞ்சலத்தின் சம்ஸ்காரம் யாரிடம் இருக்கும். இப்பொழுதோ உலகில் நீங்கள் ஆத்மாக்கள் அனைவரையும் விட பெரியவர்கள், அனுபவிகள், பிறகு சஞ்சலம் ஏன் வருகிறது? எப்பொழுதும் தந்தை மற்றும் பிராப்தியை எதிரில் வைப்பதினால் ஆடாத அதாவது ஒரே சீரான நிலை உருவாகி விடும். அனைத்து தடைகளும் அழிந்து விடும். பிறந்தவுடனேயே வெற்றித் திலகம் இடப்பட்டிருக்கிறது அது அழிந்து விடக்கூடாது என்ற கவனம் மட்டும் வைக்க வேண்டும். எப்பொழுதும் புதிய ஊக்கம், புதிய உற்சாகம் மற்றும் புதிய திட்டம் இருக்க வேண்டும். குறைந்த செலவு மற்றும் வெற்றி அதிகமாக இருக்கிற மாதிரி சேவையின் திட்டத்தை உருவாக்குங்கள். இப்பொழுது சேவைக்கான மிகுந்த வாய்ப்பு இருக்கிறது. அதை நிறைவேற்றுங்கள். ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் விசேஷம் மற்றும் புதுமை அவசியம் இருக்கட்டும் அனைவருக்கும் அனுபவம் செய்விக்கும் திட்டத்தை உருவாக்குங்கள். நல்லது.

டீச்சர்களுடன்: டீச்சர்களோ தந்தைக்குச் சமமானவர்கள் இல்லையா? எப்படி தந்தை ஆசிரியராக இருக்கிறார் என்றால், அதே போல் நீங்களும் ஆசிரியர்கள். எனவே சமநிலை ஆகி விட்டது இல்லையா? அப்படி சமமானவர்களை என்னவென்று கூறுவது நண்பன். டீச்சர்களும் பாப்தாதாவும் நண்பர்கள். இந்த நட்பின் உறவு கூட நினைவிருந்தால் சகஜயோகி ஆகி விடுவீர்கள். நட்பின் உறவு மிக நெருக்கமான உறவு ஆகும். நண்பர்கள் அவர்களுக்குள் எவ்வளவு மறைக்காமல் இருப்பார்களோ அந்த அளவு தன்னுடைய தாய் தந்தையிடமும் இருப்பதில்லை. நண்பனின் உறவு நினைவிருக்கிறது என்றால் உன்னோடு தான் சாப்பிடுவேன், உன்னோடு தான் அமர்வேன், உன்னோடு தான் விளையாடுவேன் என்ற இந்த பயிற்சி சுலபமாகி விடும். அப்படி அனைத்து நண்பர்களுக்கும் வாழ்த்துக்கள். பஞ்சாப் மற்றும் டில்லி இரண்டின் ஆசிரியர்கள் என்றால் இருவர்களும் சகோதரன் சகோதரி ஆகி விட்டீர்கள், டில்லி சகோதரன், பஞ்சாப் சகோதரி பஞ்சாப் கூட டில்லியிலிருந்து தான் உருவானது இல்லையா? நல்லது. ஓம் சாந்தி

வரதானம்: பார்வையாளர் நிலையில் நிலைத்திருந்து சூழ்நிலைகளின் விளையாட்டைப் பார்க்கக்கூடிய திருப்தியான ஆத்மா ஆகுக!

எப்படிப்பட்ட அசைக்கக் கூடிய சூழ்நிலையாக இருந்தாலும் ஆனால் பார்வையாளர் நிலையில் நிலைத்து விட்டீர்கள் என்றால் உண்மையில்லை, பொம்மலாட்டம் நடப்பது போல் அனுபவம் செய்வீர்கள். தன்னுடைய மரியாதையிலிருந்து கொண்டே விளையாட்டைப் பாருங்கள். சங்கமயுகத்தின் உயர்ந்த மரியாதை திருப்தியான ஆத்மா ஆவது மற்றும் திருப்தியாக இருப்பது. இந்த மரியாதையில் இருப்பவர் ஒருபொழுதும் தொந்தரவு அடைய முடியாது. சங்கமயுகத்தில் பாப்தாதாவின் விசேஷ பரிசு திருப்தியாகும்.

சுலோகன்: மனதின் குஷி முகத்தில் தெளிவாகத் தென்படுகிற மாதிரி குஷி நிறைந்தவர் ஆகுங்கள்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 26.12.1978 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# இஷ்ட தேவதையின் விசேஷங்கள்!

இன்று பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் நான்கு ரூபங்களின் வம்சத்தை ஒரே நேரத்தில் பார்த்துக் கொண்டிருக்கிறார். முதலில் ஒவ்வொருவரும் சிவ வம்சம், இரண்டாவது பிரம்மா வம்சம், மூன்றாவது தேவதை வம்சம் மற்றும் நான்காவது இஷ்ட தேவ வம்சம். ஒவ்வொருவரின் நான்கு வம்சங்களின் ரூபம் பாப்தாதாவின் எதிரில் தெளிவாக இருக்கிறது. பக்தி மார்க்கத்தில் உயர்ந்த ஆத்மாக்கள் நீங்கள் தான் விதவிதமான ரூபத்தில் பக்தர்களின் இஷ்ட தேவதை ஆகிறீர்கள். இந்த நேரம் கூட உங்கள் அனைவரின் பக்தர்கள் இஷ்ட தேவதைகள் மற்றும் தேவிகள் உங்களை அழைத்துக் கொண்டே இருக்கிறார்கள். பிரத்யக்ஷத்தின் நேரம் தெளிவாக இருக்கிறது, மேலும் அருகில் வந்து கொண்டும் இருக்கிறது. அதே போல் உங்கள் அனைவரின் தேவதை வம்சம் அதாவது இராஜ வம்சம் மற்றும் இஷ்ட வம்சத்தின் பிரத்யக்ஷம் (வெளிப்பாடு) ஆகிக் கொண்டே இருக்கும். நானே தான் இஷ்ட தேவதை ஆவேன். அனேக பக்த ஆத்மாக்களின் மனவிருப்பங்களை நிறைவேற்றுபவன் என்று அப்படி அனுபவம் செய்கிறீர்களா? எப்படி இராஜ வம்சத்தில் வரிசைக்கிரமம் இருக்கிறது, அது போலவே பூஜைக்குரிய ரூபத்திலும் வரிசைக்கிரமமாக இஷ்ட தேவதை ஆகிறீர்கள். நான் எந்த இஷ்ட தேவதை என்று நினைவிருக்கிறதா? எந்த தேவியின் ரூபத்தில் உங்களுடைய பூஜை நடந்து கொண்டிருக்கிறது? உங்களுடைய பக்தர்களின் மாலையைத் தெரிந்திருக்கிறீர்களா? யார் இப்பொழுது சேவையில் சகயோகியாக துணைவர்களாக இருக்கிறார்களோ, அவர்களில் சிலர் இராஜ வம்சத்தில் வருகிறார்கள், சிலர் பிரஜையில் வருகிறார்கள் என்றால் அப்படி இந்த நேரத்தின் சேவையின் சகயோகி அல்லது நெருக்கமான துணைவர்களாக யார் இருக்கிறார்களோ அவர்கள் எதிர்காலத்தில் இராஜ குடும்பத்தில் அல்லது பிரஜையில் மேலும் பக்தியில் இஷ்ட வம்சத்தினர் மற்றும் பக்தர்களாக ஆகிறார்கள். இஷ்ட தேவதைகளின் வம்சாவளியையும்

காண்பிக்கிறார்கள். எனவே இராஜவம்சியாக இருக்கும் நான் இஷ்ட வம்சியாகவும் ஆகிறேனா என்று தன்னைத் தானே கேளுங்கள். எந்த வரிசை எண்ணின் இஷ்ட தேவதையாக இருக்கிறீர்கள்? சில இஷ்ட தேவதைகளுக்கு தினசரி பூஜை நடக்கிறது, சிலருக்கு எப்பொழுதாவது நடக்கிறது, சிலருக்கு நியமப்படி மிகச் சரியான ரூபத்தில் பூஜை நடக்கிறது. மேலும் சிலருக்கு எப்படி விரும்புகிறார்களோ, எப்பொழுது விரும்புகிறார்களோ, அப்படியே நடக்கிறது. சிலருக்கு மிக கோலாகலமாக விதவிதமான பிரசாத படைப்போடு பூஜை நடக்கிறது, மேலும் சிலருக்கு சில நேரம் கோலாகலமான பூஜை நடக்கிறது. சிலருடைய பக்த மாலை மிகப் பெரியதாக இருக்கிறது. எண்ண முடியாத எண்ணிக்கையில் பக்தர்கள் இருக்கிறார்கள். மேலும் சிலருக்கு மிகக்குறைந்த பக்தர்கள் இருக்கிறார்கள் ஆனால் பிராமண வம்சியிலிருந்து இராஜ வம்சியாக சிறிய அல்லது பெரிய இஷ்ட தேவதையாக அவசியம் ஆகிறார்கள். அப்படி நீங்கள் அனைவரும் பக்தர்களின் இஷ்ட தேவதை ஆவீர்கள்.

பாப்தாதா இன்று அனைவரையும் இஷ்ட தேவதை அல்லது இஷ்ட தேவியின் ரூபத்தில் தன்னுடைய குழந்தைகள் எவ்வளவு பூஜைக்குரியவர்கள் என்று பார்த்துக் கொண்டிருக்கிறார். தன்னுடைய பூஜைக்குரிய சொரூபத்தையும் எப்பொழுதும் எதிரில் வையுங்கள். உயர்ந்த இஷ்ட தேவதை ஆகுபவர்களின் விசேஷமாக எட்டு விஷயங்களை நினைவில் வையுங்கள். எப்படி அஷ்ட சக்திகள் நினைவிருக்கிறது இல்லையா? அதே போல் இஷ்ட தேவதை ஆவோருக்கு எட்டு விசேஷங்கள் இருக்கின்றன. அதை மிக நன்றாகத் தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா? தன்னுடைய நினைவுச் சின்ன விக்ரகங்களை பார்த்தவுடனேயே அந்த விசேஷங்கள் அனுபவம் ஆகிறது.

முதல் விசேஷம் -இஷ்ட தேவதை எப்பொழுதும் இரக்க மனமுடையவராக இருப்பார். எந்த இரக்கம்? ஒவ்வொரு ஆத்மாவையும் அலைவதிலிருந்து மற்றும் பிச்சைக்காரத்தனத்திலிருந்து காப்பாற்றுவதற்கான இரக்கம் இருக்கும். ஒவ்வொருவரின் மீதும் இரக்கம் காட்டுவார். சுயநலமற்ற இரக்க மனமுடையவராக இருப்பார். சிலர் மேல் இரக்கம், மேலும் சிலர் மேல்

இல்லை என்று அப்படி இருக்காது, அதாவது எல்லைக்கப்பாற்பட்ட ரூபத்தில் இரக்க மனமுடையவராக இருப்பார். அவருடைய இரக்கம் நிறைந்த எண்ணத்தினால் மற்ற ஆத்மாக்களுக்கு தன்னுடைய ஆன்மீக ரூபம் மற்றும் ஆத்மாவின் லட்சியம் ஒரு நொடியில் நினைவில் வந்து விடுகிறது. அவருடைய இரக்கம் நிறைந்த எண்ணத்தினால் பிச்சைக்காரனுக்கு அனைத்து பொக்கிஷங்களின் தோற்றம் தென்படும். அலைந்து கொண்டிருக்கும் ஆத்மாக்களுக்கு முக்தி மற்றும் ஜீவன்முக்தியின் கரை அல்லது இலக்கு எதிரில் தென்படும். அந்த மாதிரி இரக்கமனமுடையவராக இருப்பார்.

இரண்டாவது விஷயம் -இஷ்ட தேவ ஆத்மா எப்பொழுதும் அனைவரின் துக்கத்தை நீக்கி சுகம் கொடுப்பவரின் பங்கைச் செய்வார். மற்றவர்களின் துக்கத்தை தன்னுடைய துக்கத்திற்குச் சமம் என்று புரிந்து சகித்துக் கொள்ள முடியாது. துக்கத்தை மறப்பதற்கு மற்றும் துக்கமானவரை சுகமானவராக ஆக்குவதற்கான யுக்தி மற்றும் சாதனம் எப்பொழுதும் அவரிடம் மந்திரச்சாவிக்கு சமமாக இருக்கும்.

மூன்றாவது விஷயம் -எப்பொழுதும் எண்ணம், சொல் மற்றும் செயலில் தூய்மையின் தனித்தன்மையுடன் தென்படுவார்.

நான்காவது விஷயம் -எப்பொழுதும் சுபாவத்தில், சம்ஸ்காரத்தில், நடத்தையில் சாதாரணமாக ஆனால் உயர்ந்ததாக தென்படும்.

ஐந்தாவது விஷயம் -எப்படி உங்களுடைய ஜட விக்ரகங்கள் எப்பொழுதும் அலங்கரிக்கப்பட்டிருப்பதாக காண்பிக்கிறார்கள். அதே போல் அனைத்து குணங்களின் அலங்காரத்தினால் எப்பொழுதும் அலங்கரிக்கப்பட்டவராக தென்படுவார். ஏதாவது ஒரு குணம் என்ற அலங்காரம் கூட குறைவாக இருக்காது.

ஆறாவது விஷயம் -மாதிரி இஷ்ட ஆத்மாக்களின் தோற்றம் எப்பொழுதும் அவரும் தாமரை மலருக்குச் சமமாக இருப்பார். மேலும் மற்றவர்களையும் தாமரைக்குச் சமமாக விலகிய மற்றும் அன்பானவராக ஆக்கி விடுவார்.

ஏழாவது விஷயம் -அந்த மாதிரி இஷ்ட தேவ ஆத்மா எப்பொழுதும் மனநிலையில் ஆடாத, அசையாதவராக இருப்பார். எப்படி விக்ரகங்களை ஸ்தாபனை செய்கிறார்கள் அதே போல் அவர் சைத்தன்ய விக்ரகம் எப்பொழுதும் ஒரே சீரான நிலையில் நிலைத்திருப்பார்.

எட்டாவது விஷயம் -அவர் எப்பொழுதும் அனைவருக்காக எண்ணம் மற்றும் சொல்லில் வரதானியாக இருப்பார். நிந்தனை மற்றும் புகார் கூறுபவர்கள் மீது கூட வரதானியாக இருப்பார். நிந்தனை செய்பவருக்காகவும் ஆஹா! ஆஹா! என்ற மலர்களின் மழையை பொழிபவராக இருப்பார். இதனுடைய பலனாக இஷ்ட தேவதை ரூபத்தில் மலர்களின் மழை அதிகமாக இருக்கும். மகிமை செய்பவரை மகிமை செய்வது என்பது பொதுவான விஷயம் ஆனால் நிந்தனை செய்பவரின் கழுத்திலும் குண மாலை அணிவிப்பது, பல பிறவிகளுக்காக பக்தர்களை நிச்சயம் செய்து விடுவது மற்றும் கூடவே தற்சமயத்தின் நிரந்தர சகயோகியாக ஆக்குவது என்ற இவை நிச்சயமாகி விடும். எப்படி இன்றைய நாட்களில் விசேஷ ஆத்மாக்கள் உங்களை வரவேற்கும் நேரத்தில் கழுத்தில் ஸ்தூல மாலை போடுகிறார்கள் என்றால் பிறகு நீங்கள் என்ன செய்கிறீர்கள்? போடுபவர்களின் கழுத்தில் அதே மாலையை நீங்கள் போட்டு விடுகிறீர்கள் இல்லையா? நிந்தனை செய்பவர்களுக்கும் நீங்கள் குணமாலையை அணிவித்தீர்கள் என்றால், அவர்கள் தானாகவே அந்த மாதிரி உங்களுடைய குண மாலையை உங்களுக்கே திருப்பி அணிவிப்பார்கள். எப்படி தந்தையின் ஒவ்வொரு அடி, ஒவ்வொரு செயலை மகிமை பாடுகிறார்கள். அதே போல் இஷ்ட தேவ ஆத்மாக்கள், மகான் ஆத்மாக்கள் உங்களையும் எப்பொழுதும் மகிமை பாடிக் கொண்டே இருப்பார்கள், அதாவது இந்த கொடுப்பது அனேக தடவை பெறுவதாக ஆகி விடுகிறது. இஷ்ட தேவதைகளின் விசேஷங்கள் என்னவென்று இப்பொழுது புரிந்து கொண்டீர்களா? இப்பொழுது நீங்கள் அனைவரும் எனக்கு இஷ்ட தேவதை சொரூபம் எந்த அளவு தயார் ஆகியிருக்கிறது என்று தன்னைத் தானே சோதனை செய்யுங்கள், எப்பொழுது மூர்த்தி தயாராகி விடுகிறதோ அப்பொழுது தான் திரைச்சீலையை அகற்றுவார்கள். அப்படியானால் நீங்கள் அனைவரும் தயாராகி விட்டீர்களா அல்லது சிலர் தயார் ஆகிக்

கொண்டிருக்கிறீர்களா? உங்களுடைய பக்தர்கள் அரைகுறையான சாட்சாத்காரத்தில் திருப்தி அடைய மாட்டார்கள். எனவே தன்னுடைய இஷ்ட தேவதை ரூபத்தை எப்பொழுதும் அலங்கரிக்கப்பட்டதாக வைத்துக் கொள்ளுங்கள். இப்பொழுது என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா?

டில்லியிலிருப்பவர்கள் தயாராக வேண்டும் ஏனென்றால், சம்பூர்ணம் மற்றும் சம்பன்ன நிலையின் கொடி மற்றும் இராஜ்யத்தின் கொடி இரண்டுமே டில்லியிலிருக்க வேண்டும் என்றால் டில்லியிலிருப்பவர்கள் கொடியேற்று விழாவின் தேதியை நிச்சயம் செய்ய வேண்டும். இப்பொழுதிலிருந்தே தீவிரமாக ஏற்பாடுகள் செய்வதில் ஈடுபட்டு விட வேண்டும். வெளிநாட்டினரோ முதலில் காரியம் செய்வார்கள் வெளிநாட்டினர் வெளிநாட்டிலிருந்து சக்திசாலியான ஓசை மூலமாக வெற்றிக் கொடிக்கான வேரை ஊன்றுவார்கள். அனைத்து வெளிநாட்டின் வேறு வேறு ஸ்தானங்களிலிருந்து விசேஷ ஆத்மாக்களின் சகயோகத்தின் ஆதாரத்தினால் வெற்றிக்கான அஸ்திவாரம் போடப்படும். எப்படி இன்றைய உலகில் கூட ஒவ்வொரு இடத்தின் மண்ணை ஒரு இடத்தில் ஒன்றாக சேர்ப்பார்கள். அப்படி வெளிநாட்டின் ஒவ்வொரு ஸ்தானத்தில் விசேஷ நபர்களின் ஒலி மூலமாக பாரதத்தின் வெற்றிக் கொடியின் அஸ்திவாரம் உறுதியாகும். அப்படி வெளிநாட்டினர் இந்தக் காரியத்தின் ஸ்தாபகர்கள். கொடியேற்றுவதற்கு முன்பு அஸ்திவாரம் போட வேண்டும். ஒவ்வொரு ஸ்தானத்திலிருந்து உருவான விசேஷ ஆத்மாக்கள் என்ற மலர்கள் அடங்கிய பூச்செண்டை பாப்தாதா மற்றும் அனைத்து பரிவாரத்தின் எதிரில் முதலில் வெளிநாட்டினர் அளிப்பார்கள். பூச்செண்டு உருவாகிக் கொண்டிருக்கிறது இல்லையா? அந்த மாதிரி விசேஷ நறுமணம் அதாவது விசேஷத் தன்மை வெளிநாட்டிலிருந்து பாரதம் வரை வந்த சேர்ந்து கொண்டே இருக்க வேண்டும். அந்த மாதிரி நறுமணம் நிரம்பிய ஆன்மீக ரோஜா மலர்களின் பூச்செண்டு தயாராகிக் கொண்டிருக்கிறது. எப்படி ஏதாவது மனதை ஈர்க்கும் அளவிற்கான மிக நல்ல நறுமணம் இருக்கிறது என்றால் விரும்பாவிட்டால் கூட அதன் பக்கம் எங்கிருந்து இந்த நறுமணம் வருகிறது என்று கவனம் செல்லத் தான் செய்யும். அப்படி ஆன்மீக ரோஜா மலர்களின் நறுமணம் எப்பொழுது பாரதம் வரை

வந்தடையுமோ அப்பொழுது அனைவரின் கவனத்தை தன் பக்கம் கவர்ந்திழுக்கும். அனைவரும் இந்த நறுமணம் எங்கிருந்து வந்திருக்கிறது என்று தேடுவார்கள்? இந்த நறுமணத்தின் இருப்பிடம் எது என்று தேடுவார்கள். நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் அலங்கரிக்கப்பட்ட மூர்த்திகளுக்கு, இராஜவம்சியிலிருந்து இஷ்ட வம்சியாக ஆகும் அனைத்து ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் உயர்ந்த எண்ணங்கள் மூலமாக வரதானம் கொடுக்கக்கூடிய, இரக்க மனமுடையவராகி அனைத்து ஆத்மாக்களுக்கும் லட்சியத்தை காண்பிக்கக்கூடிய அந்த மாதிரி மகாதானி வரதானி இஷ்ட தேவ ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**தாதிகளுடன் உரையாடல்:** பாப்தாதாவிற்கு ஒரு கேள்வி இருக்கிறது சில மகாரதிகளின் சம்ஸ்காரம் பிரம்மாவிற்குச் சமமாக அதிகமாக இருக்கிறது, மேலும் சிலருக்கு விஷ்ணுவிற்குச் சமமான சம்ஸ்காரம் இருக்கிறது. சிலரின் ஜாதகத்தில் தொடக்கத்திலிருந்து இறுதிவரை ஸ்தாபனைக்கு பொறுப்பாளர் ஆகும் சம்ஸ்காரம் இருக்கிறது. மேலும் சிலருக்கு பாலனைக்கான சம்ஸ்காரம் இருக்கிறது. இதற்கான இரகசியம் என்ன? இதன் மேல் உங்களுக்குள் ஆன்மீக உரையாடல் செய்யுங்கள். இருவருமே விசேஷ ஆத்மாக்கள் தான் ஆனால் வித்தியாசமும் விசேஷமாக இருக்கிறது. அப்படி இருவரில் நம்பர் ஒன் ஆக யார் ஆனார்கள். மேலும் இதற்கு எதிர்காலத்தினுடன் என்ன சம்மந்தம் இருக்கிறது? தற்சமயம் இரண்டின் விசேஷ பிராப்திகள் என்ன? மேலும் இருவர்களின் பூஜையிலும் என்ன வித் இருக்கிறது. இதன் மேல் ஆன்மீக உரையாடல் செய்யுங்கள். பெரிய தலைப்பு இல்லையா? இந்த தலைப்பு மூலம் எனக்கு எந்த பூஜ்ய ரூடம் இருக்கும் என்று தன்னுடைய பூஜ்ய ரூபத்தையும் புரிந்து கொள்ள முடியும், அந்த உணர்வு ஏற்படும். எப்படி இப்பொழுது உங்களை யாராவது உங்களுடைய பெயர் சொல்லி அழைத்தார்கள் என்றால், உடனே என்னை அழைக்கிறார்கள் என்று உணர்வு ஏற்படுகிறது தான் இல்லையா? அந்த மாதிரி தெளிவான உணர்வு ஏற்படும். நல்லது.

**இன்றோ டில்லியின் வாய்ப்பு ஆகும்:** டில்லி மேல் அனைவரும் முற்றுகை இட வேண்டும். டில்லியின் பூமியை அவசியம் நமஸ்காரம் செய்ய வேண்டும். டில்லியின் விசேஷ பங்கு ஸ்தாபனையில் இருக்கிறது. மேலும் மும்பையின் விசேஷ பங்கு விநாஷத்தில் இருக்கிறது. கல்கத்தாவின் பங்கு கூட செய்தியை பரப்புவதில் நல்ல சகயோகியாக இருப்பார்கள். நல்லது. இப்பொழுது டில்லியைச் சேர்ந்தவர்கள் என்ன செய்வீர்கள்?

தில்லியை தில் அதாவது இதயம் என்று கூறுகிறார்கள். அப்படியானால் இதயத்துடிப்பு எப்படி இருக்கிறது? பாப்தாதாவின் இதயம் என்றால் ஸ்தாபனையின் இதயம். அப்படி ஸ்தாபனையின் இதயத்தின் நிலைமை என்னவாக இருக்கிறது? அதிவேகமாக இருக்கிறதா அல்லது குறைந்த வேகமா? டில்லியைச் சேர்ந்தவர்கள் விசேஷமாக அனைத்து வர்க்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு வகை வகையான சேவை செய்து பூச்செண்டை எப்பொழுது தயார் செய்வார்களோ அப்பொழுது தான் ஸ்தாபனை காரியம் அதிவேகமாக நடக்கிறது. என்று சொல்வோம். இப்பொழுது தொடர்பின் நூலை இன்னும் கட்டவில்லை. அனைவரின் பார்வை டில்லியின் பக்கம் இருக்கிறது. தந்தையின் பார்வையும் இருக்கிறது. அனைவரின் பார்வையும் இருக்கிறது. ஏனென்றால், ஸ்தாபனையின் புள்ளியும் அங்கே தான் என்றால், இராஜ்யத்தின் புள்ளியும் அதுவே தான். அப்படி அனைவரின் பார்வை பிந்து வின் (புள்ளியின்) பக்கம் செல்ல வேண்டும். டில்லியின் மகாவீரர்கள் பாண்டவ சேனையோ அதிகமாக இருக்கிறார்கள். பாண்டவர்கள் அனைவரும் சேர்ந்து ஒவ்வொரு மாதமும் ஏதாவது நிரூபணம் கொடுக்க வேண்டும். ஏனென்றால், டில்லியின் கடமை உணர்வு நிறைந்த மகன் பிரபலமானவர் அதாவது நிரூபணம் கொடுப்பவர். டில்லியிலிருந்து சேவைக்கான பிரேரணை கிடைக்க வேண்டும். எப்படி மத்திய அரசாங்கம் இருக்கிறது என்றால், மத்தியிலிருந்து அனைத்து இடங்களுக்கும் டைரக்ஷன் கிடைக்கிறது. அதே போல் சேவையின் திட்டங்கள் மற்றும் சேவையில் புதுமையைக் கொண்டு வருவதற்காக பாராளுமன்றம் இருக்க வேண்டும். இதே பாண்டவ பவன், பாண்டவ அரசாங்கத்தின் பாராளுமன்றம் ஆகும். அப்படி பாராளுமன்றத்தில் அனைத்து தரப்பின் அனைத்து உறுப்பினர்களின் கருத்துக்களின் ஆதாரத்தில் புதிய சட்டம் உருவாகிறது. டில்லியிலிருந்து ஒவ்வொரு

மாதமும் விசேஷ திட்டம் வெளியாக வேண்டும். உ அப்பொழுது தான் முடிவு அருகில் வரும். மேலும் இதே பாராளுமன்றத்தில் வெற்றி முழக்கம் ஏற்படும். பாண்டவர்கள் மேலே கூறியதை தெளிவாகக் கேட்டீர்களா? சக்திகளின்றி பாண்டவர்கள் ஒன்றுமே செய்ய முடியாது. சக்திகள் பாண்டவர்களை முன்னுக்கு வைக்க வேண்டும். மேலும் பாண்டவர்கள் சக்திகளை முன்னுக்கு வைக்க வேண்டும். அப்பொழுது தான் விஷ்ணுபுரி ஸ்தாபனை ஆகும். விஷ்ணுபுரியின் ஸ்தாபனையில் இணைந்த ரூபத்தின் பங்கு இருக்கிறது என்றால், ஸ்தாபனையின் காரியத்தில் கூட இணைந்த ரூபத்தின் காரியம் நடப்பதினால் தான் வெற்றி ஏற்படும்.

டில்லியில் திட்டமிடும் புத்தி உள்ளவர்கள் இருக்கிறார்கள் ஆனால் இப்பொழுது குப்தமாக (மறைவாக) இருக்கிறார்கள். இப்பொழுது அனைவரும் அவர்களுடைய விசேஷம் என்ற விரலைக் கொடுக்க வேண்டும். அனைவரின் விசேஷத்தின் விரல் மூலமாக ஸ்தாபனைக் காரியம் நிறைவேறும். விசேஷத்தை குப்தமாக வைக்காதீர்கள். காரியத்தில் ஈடுபடுத்துங்கள் ஆனால் சுயநலமில்லாமல். எப்படி ஸ்தாபனையில் டில்லி நம்பர் ஒன் ஆக இருக்கிறது. அதே போல் விசேஷங்களின் பூச்செண்டில் கூட நம்பர் ஒன் ஆக வேண்டும். டில்லியில் அனைத்து மகாரதிகளின் சகயோகத்தின் கரம் இருக்கிறது. அனைத்து மகாரதிகளின் சகயோகத்தின் நீர் டில்லியின் நிலத்தில் விழுந்திருக்கிறது. டில்லியின் அஸ்திவாரத்தில் எந்த மகாரதியும் இருக்கவில்லை. அனைவரும் தண்ணீர் விட்டார்கள். இப்பொழுது யோகாவின் வெயில் மட்டும் வேண்டும். பின்பு விசேஷ ஆத்மாக்களின் பிரத்யக்ஷ பலன் எப்படி உருவாகிறது என்று பாருங்கள். அவர்களாகவே பெறுவதற்காக உங்களிடம் வருவார்கள். டில்லியின் பூமிக்கு மிகுந்த விசேஷங்கள் இருக்கின்றன. முதலிலோ திட்டத்தை உருவாக்குங்கள், அதில் நாலாபுறங்களிலுமுள்ள மகாரதி மற்றும் சக்திகளின் குழு இருக்க வேண்டும். ஒரு இடத்தில் மகாரதிகள் ஒன்றாகக் கூடுவது கூட ஸ்தாபனை காரியத்தை உள்உணர்வு மற்றும் சூழ்நிலை மூலமாக அருகில் கொண்டு வருவதற்கான காரியம் செய்கிறது. எப்படி மதுபன் சரித்திர பூமி, சந்திப்பு செய்வதற்கான பூமி, தந்தையின் சாகார ரூபத்தில் அனுபவம் செய்விக்கும் பூமியாக இருக்கிறது. அதே போல் டில்லியின் பூமி சேவைக்கு பிரத்யக்ஷ ரூபம் கொடுப்பதற்கு பொறுப்பாக

இருக்கிறது. அப்பொழுது தான் டில்லியிலிருந்து பேரொலி வெளியாகும். இப்பொழுது அனைவரின் புத்தியில் என்ன நடந்து கொண்டிருக்கிறதோ அதன் மூலம் ஒன்றுமே ஆகப்போவதில்லை என்பது எண்ணத்தின் அளவு வரை உருவாகியிருக்கிறது. இப்பொழுது அனைத்து ஆதாரங்களும் உடைய ஆரம்பிக்கும். எனவே அந்த நேரத்தில் சரியான ஆதாரத்தை இப்பொழுது விரைவில் தேடுவார்கள். கேட்பார்கள். அந்த மாதிரி புது விஷயத்தை யாராவது கூறினால் மற்றும் இறுதியில் நாலாபுறங்களிலும் அலைந்து திரிந்த பிறகு தந்தையின் ஆதாரத்தின் எதிரில் அனைவரும் தலை வணங்குவார்கள். டில்லியைச் சேர்ந்தவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று இப்பொழுது புரிந்ததா? நல்லது.

வரதானம்: விஷயங்கள் (பிரச்சனைகள்) என்ற மேகங்களைப் பார்த்து பயப்படுவதற்குப் பதிலாக ஒரு நொடியில் கடந்து செல்லக்கூடிய வெற்றி சொரூபமானவர் ஆகுக!

சில குழந்தைகள் சாஸ்திரவாதிகள் மாதிரி விஷயங்களை உருவாக்குவதில் மிகுந்த திறமை நிறைந்தவர்களாக இருக்கிறார்கள். அதைக் கேட்டவுடனேயே தந்தைக்கும் சிரிப்பு வந்து விடுகிறது ஆனால் மற்றவர்கள் பாதிப்பில் வந்து விடுகிறார்கள். அந்த மாதிரி விஷயங்களை உருவாக்குகிறார்கள். இந்த அனேக விதமான வீணான விஷயங்கள் வீணான பதிவேட்டை உருவாக்கிக் கொண்டே இருக்கிறது. எனவே அதிலிருந்து விடுபடுபவர்களாக ஆகுங்கள். கள்ளம் கபடமற்றவர்களாக ஆகுங்கள். விஷயங்களைப் பார்க்காதீர்கள். தந்தையைப் பாருங்கள். இந்த விஷயங்கள் தான் மேகங்கள் ஆகும். இவற்றை கடந்து செல்வதின் விதி மூலம் சித்தி சொரூபமானவராக ஆகுங்கள்.

சுலோகன்: எந்த விஷயத்திலும் கேள்விக்குறி எழுவது என்றால் வீணான கணக்கை தொடங்குவது ஆகும்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

**28.12.1978 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்**

# பரமாத்மா பிரத்யக்ஷம் ஆவதற்கான ஆதாரம் சத்தியம் மேலும் சத்தியத்தின் ஆதாரம் தூய்மை மற்றும் பயமற்ற நிலை!

இன்று பாப்தாதா அனைத்து குழந்தைகளை சக்தி சேனை மற்றும் பாண்டவ சேனையின் ரூபத்தில் பார்த்துக் கொண்டிருக்கிறார். சேனாதிபதி தன்னுடைய சேனையைப் பார்த்து மகிழ்ச்சியும் அடைகிறார் கூடவே தன்னுடைய சேனையில் மகாரதி (யானைப்படை) மற்றும் குதிரைப்படையினர் இருவரையும் காண்கிறார். மகாரதி என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் மற்றும் குதிரைப்படையினர் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று இருவரின் காரியத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். இரு பிரிவினரும் அவரவர்களின் பங்கைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இதுவரையிலும் நாடகத்தின்படி ஒவ்வொருவரும் என்னென்ன பங்கைச் செய்தார்களோ அது வரிசைக்கிரமமாக நன்றாக இருந்தது என்று சொல்லுவோம் ஆனால் இப்பொழுது என்ன செய்ய வேண்டும்? மகாரதிகளுக்கு இப்பொழுது தன்னுடைய எந்த மகாவீரத்தன்மையைக் காண்பிக்க வேண்டும். பாப்தாதா விசேஷமாக மகாவீராங்கனைகளின் மற்றும் மகாவீரர்களின் சேவையின் பங்கைப் பார்த்துக் கொண்டிருந்தார். இதுவரையிலும் சேவை ஷேத்திரத்தில் எதுவரை வந்து சேர்ந்திருக்கிறார்கள்? எப்படி ஸ்தூல சேவையின் சேனாதிபதி வரைபடத்தின் ஆதாரத்தில் சேனை எதுவரை வந்து சேர்ந்திருக்கிறது என்று பார்த்துக் கொண்டே இருப்பார். எந்த இலாக்காக்கள் மேல் வெற்றி அடைந்தவர் ஆகியிருக்கிறோம். ஆயுதங்கள் மற்றும் வெடி மருந்துகள் மேலும் மற்ற சாமான்கள் கையிருப்பில் எவ்வளவு இருக்கிறது? வரும் நாட்களில் என்ன லட்சியம் இருக்கிறதோ, லட்சியத்தின் இலக்கிலிருந்து எந்த அளவு தூரமாக இருக்கிறோம்? எந்த வேகத்தில் முன்னேறிக் கொண்டிருக்கிறோம்? என்று பார்ப்பார். அதே போல் இன்று பாப்தாதா

தொடக்கத்திலிருந்து இதுவரையிலுமான சேவையின் வரைபடத்தை பார்த்துக் கொண்டிருந்தார். முடிவாக என்ன பார்த்தார்? மகாவீரர்கள் மற்றும் மகாவீராங்கனை சேவையின் ஷேத்திரத்தில் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறார்கள், ஆயுதங்களும் அனைத்தும் உடன் இருக்கின்றன. பிடித்த இலாக்காக்களையும் அதிகரித்துக் கொண்டே சென்று கொண்டிருக்கிறார்கள், ஆனால் இதுவரையிலும் ஆத்மீக குண்டை போட்டார்கள். இப்பொழுது பரமாத்மா குண்டை போட வேண்டும். ஆத்மீக சுகம் மற்றும் ஆத்மீக சாந்தியின் அனுபவம், ஆன்மீகத்தின் அனுபவத்தின் விதவிதமான ஆயுதங்களை வரிசைக்கிரமமாக நேரத்திற்கு ஏற்றாற்போல் காரியத்தில் ஈடுபடுத்தினார்கள் ஆனால் இறுதி குண்டு அதாவது பரமாத்மா குண்டு தான் தந்தையை பிரத்யக்ஷம் செய்வதாகும், யார் பார்த்தார்களோ, யார் தொடர்பில் வந்து கேட்டார்களோ அவர்கள் மூலமாக தந்தை வந்து விட்டார் என்ற செய்தி வெளியாக வேண்டும். சர்வ சக்திவானின் காரியம் நேரடியாக நடந்து கொண்டிருக்கிறது. இது தான் இறுதியில் போட வேண்டிய குண்டாகும். இதன் மூலம் நாலாபுறங்களிலும் செய்தி வெளியாகும். இப்பொழுது இந்தக் காரியத்தை இன்னும் செய்ய வேண்டியதாக இருக்கிறது. இது எப்படி ஆகும், மேலும் எப்பொழுது ஆகும்? பரமாத்மாவின் பிரத்யக்ஷத்தின் (வெளிப்படுதல்) ஆதாரம் சத்தியமாகும். சத்தியம் தான் பிரத்யக்ஷம் ஆவதாகும். ஒன்று தன்னுடைய மனநிலையின் சத்திய நிலை. இன்னொன்று சேவையின் சத்திய நிலை, சத்திய நிலையின் ஆதாரம் தூய்மை மற்றும் பயமற்ற நிலை. இந்த இரண்டின் தாரணைகளின் ஆதாரத்தினால் சத்திய நிலை மூலமாகத்தான் பிரத்யக்ஷம் ஏற்படும். எந்த விதமான தூய்மையின்மை அதாவது கொஞ்சமாவது உண்மை மற்றும் சுத்தத்தின் குறை இருக்கிறது என்றால் காரியத்தின் சித்தி பிரத்யக்ஷம் ஆக முடியாது.

உண்மை மற்றும் தூய்மை: உண்மை என்றால் நான் என்னவாக இருக்கிறேன், எப்படி இருக்கிறேன் என்று அந்த உண்மையான சதோபிரதான சொரூபத்தில் எப்பொழுதும் நிலைத்திருப்பது. ரஜோ மற்றும் தமோ நிலை உண்மையின் ஒரிஜினல் நிலை இல்லை. இது தீய சேர்க்கையின் நிலை ஆகும். யாருடைய சேர்க்கை? மாயா மற்றும் இராவணன், ஆத்மாவின் சத்திய நிலை சதோபிரதான நிலை ஆகும். அப்படி முதலில் இந்த உண்மை இருப்பது. இரண்டாவது விஷயம்

வார்த்தைகள் மற்றும் காரியத்திலும் உண்மை மற்றும் சத்திய நிலையின் நிலை சதோபிரதான நிலை ஆகும் மற்றும் இப்பொழுது ரஜோ மற்றும் தமோ கலந்திருக்கிறதா? சத்திய நிலை இயற்கையான சம்ஸ்கார ரூபத்தில் இருக்கிறதா அல்லது முயற்சி செய்வதினால் சத்தியத்தின் நிலையைக் கொண்டு வர வேண்டியது இருக்கிறதா? எப்படி தந்தையை சத்தியம் என்று கூறுகிறார்கள். அதே போலவே ஆத்மீக சொரூபத்தின் உண்மை நிலை சத்தியம் தான் அதாவது உண்மை தான். அப்படி சத்திய நிலை சதோபிரதான நிலையைக் கூறுவது. அந்த மாதிரி உண்மை இருக்கிறதா?

அடுத்தது தூய்மை. கொஞ்சம் கூட எண்ணம் மூலமாகக் கூட அசுத்தம் அதாவது தீயவற்றை மற்றும் அவகுணங்களைத் தொட்டீர்கள் மற்றும் தாரணை செய்தீர்கள் என்றால் சம்பூர்ண சுத்தம் என்று கூற மாட்டோம். எப்படி ஸ்தூலத்தில் கூட எந்தவிதமான அசுத்தத்தைப் பார்ப்பதற்கும் பிடிப்பதில்லை, பார்த்தவுடனேயே அங்கிருந்து விலகிச் சென்று விடுவார்கள். அப்படி தீயதை நினைப்பது கூட தீயதைத் தொடுவதாக கேட்பது மற்றும் பேசுவது அல்லது செய்வது என்று தானே தீயதை தாரணை செய்கிறார்கள். தூய்மை என்றால் எண்ண அளவில் கூட அசுத்தம் இருக்கலாகாது. இதைத் தான் உண்மை மற்றும் தூய்மை என்று கூறுவது. இன்னொரு விஷயம் பயமற்ற நிலை. பயமற்ற நிலையின் விளக்கம் கூட மிக நுட்பமானது.

முதல் விஷயம்: தன்னுடைய பழைய தமோகுண சம்ஸ்காரங்கள் மேல் வெற்றி அடைவதில் பயமின்மை. என்ன செய்வேன், நடப்பதில்லை, சம்ஸ்காரம் மிகவும் பலம் நிரம்பியதாக இருக்கிறது என்ற இந்நிலை பயமற்ற நிலையாகாது. மற்ற ஆத்மாக்களின் உறவு மற்றும் நெருக்கத்தோடு தன்னுடைய சம்ஸ்காரத்தை இணைந்து போக வைப்பது மேலும் மற்றவர்களின் சம்ஸ்காரத்தை மாற்றம் செய்வது இதில் கூட பயமற்ற நிலை இருக்க வேண்டும். இந்த மாதிரி இருக்க முடியுமா, கடைபிடிக்க முடியுமா? நான் கூறுவதை ஏற்றுக் கொள்வார்களா அல்லது மாட்டார்களா ஒன்றும் தெரியவில்லை என்று இவ்வாறு ஒருவேளை பயம் இருக்கிறது என்றால் இதை சம்பூர்ண பயமற்ற நிலை என்று கூறமாட்டோம். மூன்றாவது விஷயம் - உலகின் சேவையில் அதாவது சேவையின் ஷேத்திரத்தில் வாயுமண்டலம்

மற்றும் மற்ற ஆத்மாக்களின் சித்தாந்தங்களின் பரிபக்குவ நிலையைப் பார்த்துக் கொண்டே எண்ணத்தில் கூட அவர்களின் பரிபக்குவ நிலையின் அல்லது சூழ்நிலை வாயுமண்டலத்தின் பாதிப்பு ஏற்படுவது என்ற இதுவும் பயமாகும். இவர்கள் கெடுத்து விடுவார்கள், குழப்பம் ஆகி விடும். பிரச்சனை ஆகி விடும் என்ற இவற்றிலிருந்தும் பயமற்ற நிலை இருக்க வேண்டும். ஆத்ம ஞானி தண்டுகளாகிய உங்கள் மூலமாக வெளியாகியிருக்கும் கிளைகள், அவர்கள் கூட தமது மிகக் குறைந்த நம்பிக்கையில் பயமற்ற நிலையின் பாதிப்பை ஏற்படுத்துகிறார்கள், தன்னுடைய அற்ப வழியை பிரத்யக்ஷம் செய்வதில் பயமின்மை இருக்கிறது. பொய்யை உண்மையாக்கி நிரூபிப்பதில் ஆடாத மற்றும் அசையாதவர்களாக இருக்கிறார்கள் என்றால் தந்தையின் உயர்ந்த வழி மற்றும் அனாதி, ஆதி சத்தியத்தை பிரத்யக்ஷம் செய்வதில் சங்கோஜப்படுவது கூட பயம் ஆகும். கிளைகள் ஆடக்கூடியதாக இருக்கும், தண்டு ஆடாமல் உறுதியாக இருக்கும் என்றால் கிளைகள் பயமற்றவைகளாக இருந்து, தண்டு சங்கோஜத்தின் பயத்தில் ஆடுகிறது என்றால், இதை என்னவென்று கூறுவது? எனவே பிரத்யக்ஷத்தின் ஆதாரமாக இருக்கும் தூய்மை மற்றும் பயமற்ற நிலையை சோதனை செய்யுங்கள். இதைத் தான் சத்திய நிலை என்று கூறுவது. இந்த சத்தியத்தின் ஆதாரத்தினால் தான் பிரத்யக்ஷம் ஆகும். எனவே பரமாத்மாவை பிரத்யக்ஷம் செய்யும் இறுதி சக்திசாலியான குண்டை போட இன்னும் தொடங்கவில்லை. இதுவரையிலும் உள்ள முடிவில் இராஜயோகி ஆத்மாக்கள் உயர்ந்தவர்கள், இராஜயோகம் உயர்ந்தது, செய்யும் காரியம் உயர்ந்தது. பரிவர்த்தனையும் உயர்ந்தது என்ற இதுதான் பிரத்யக்ஷம் ஆகியிருக்கிறது ஆனால் கற்றுக் கொடுப்பவர் நேரடியாக சர்வ சக்திவான் ஆவார். ஞான சூரியன் இந்த சாகார உலகத்தில் உதயமாகியிருக்கிறார் என்ற விசயம் இன்னும் வெளியாகவில்லை. பரமாத்மா குண்டின் ரிசல்ட் எப்படி இருக்கும்?

உலகின் அனைத்து ஆத்மாக்களின் அற்ப காலத்தின் அனைத்து ஆதாரங்களும் முடிவடைந்து ஒரு தந்தையின் ஆதாரம் அனுபவம் ஆகும். எப்படி அறிவியலின் குண்டு மூலமாக முழு தேசமும் அழிந்து முந்தைய காட்சிகள் எதையுமே பார்க்க முடிவதில்லை, அனைத்தும் அழிந்து விடுகிறது, அப்படி இந்த இறுதி குண்டு மூலமாக அனைத்து அற்ப காலத்தின் சாதனா (பெரு முயற்சி) என்ற சாதனம் முடிவடைந்து

ஒரே ஒரு யதார்த்தமான சாதனம் இராஜயோகா மூலமாக ஒவ்வொருவரின் மத்தியில் தந்தையின் பிரத்யக்ஷம் ஏற்படும். உலகின் தந்தை தெளிவாகத் தென்படுவார். ஒவ்வொரு மதத்தைச் சேர்ந்த ஆத்மா மூலமாக எங்களுடைய தந்தை, இந்துக்கள் மற்றும் முஸ்லிம்களின் தந்தை அல்ல அனைவரின் தந்தை என்ற வார்த்தை தான் வெளியாகும். இதைத் தான் பரமாத்மா குண்டு மூலமாக இறுதி பிரத்யக்ஷம் என்று கூறுவது. இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறோம் மேலும் என்ன செய்ய வேண்டும் என்ற முடிவைக் கேட்டீர்களா? இந்த வருடத்தில் பரமாத்மா குண்டைப் போடுங்கள். தூய்மை மற்றும் பயமற்ற நிலையின் ஆதாரத்தினால் சத்திய நிலை மூலம் பிரத்யக்ஷம் செய்யுங்கள். நல்லது.

அந்த மாதிரி தந்தையை உலகின் எதிரில் பிரத்யக்ஷம் செய்யக்கூடிய, எப்பொழுதும் பயமற்ற, எப்பொழுதும் ஒரே விஷயத்தில் மூழ்கியிருந்து சுற்றி வரும் சகஜ இராஜயோகி, இறுதி நேரத்தை அருகில் கொண்டு வரக்கூடிய அதாவது அனைத்து ஆத்மாக்களின் மன விருப்பங்களை நிறைவேற்றக்கூடிய தந்தைக்குச் சமமான இரக்கம் மற்றும் கருணையின் கடல், அந்த மாதிரி இரக்க மனமுடைய குழந்தைகளுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

பார்ட்டிகளுடன் உரையாடல்: அனைவரும் தங்களுடைய உயர்ந்த பாக்கியத்தை மகிமை பாடிக் கொண்டே எப்பொழுதும் குஷியில் இருக்கிறீர்களா? அந்த மாதிரி உயர்ந்த பாக்கியம் எதை சுயம் பகவானே மகிமை செய்கிறார். அந்த மாதிரி பாக்கியம் பிறகு எப்பொழுது கிடைக்கும்? எதிர்காலத்தில் கூட அந்த மாதிரி பாக்கியம் இருக்காது, இப்பொழுது இல்லையென்றால், ஒருபொழுதும் இல்லை. அந்த மாதிரி குஷி ஏற்படுகிறதா? பாக்கியத்தின் நட்சத்திரம் எப்பொழுதும் மின்னிக் கொண்டிருக்கிறது என்றால் மின்னிக் கொண்டிருக்கும் பொருளின் பக்கம் இது என்ன என்று அனைவரின் கவனம் செல்லும். அந்த மாதிரி ஒவ்வொருவரின் நெற்றியின் இடையே பாக்கியத்தின் நட்சத்திரம் எப்பொழுதும் மின்னிக் கொண்டே இருக்கிறது என்றால், உலகின் பார்வை இது எந்த பாக்கியத்தின் நட்சத்திரம் மின்னிக் கொண்டிருப்பது தென்படுகிறது என்று தானாகவே செல்லும் எப்படி ஏதோவொரு விசேஷ நட்சத்திரம் விசேஷ ரூபத்தில் மின்னிக் கொண்டிருக்கிறது

என்றால் தானாகவே அனைவரின் கவனம் செல்கிறது. அதே போல் பாக்கியத்தின் நட்சத்திரம் அனைவரையும் கவர்ந்திழுக்க வேண்டும். அந்த மாதிரி மின்னிக் கொண்டிருக்கும் நட்சத்திரமாக தனக்கும் தென்பட வேண்டும். மேலும் உலகிற்கும் தென்பட வேண்டும். மின்னிக் கொண்டிருக்கும் பொருள் விரும்பாவிட்டாலும் பார்வையை விலக்கினாலும் அவசியம் தென்படும். அப்படி நாலாபுறங்களிலும் பார்வையை சுற்றினாலும் இறுதியில் உங்கள் பக்கம் தான் பார்வை வரும். அந்த மாதிரி மின்னிக் கொண்டிருக்கும் பாக்கியம் அனுபவம் ஆகிறதா?

இந்த நேரத்தின் உயர்ந்த நிலையின் முடிவு முழு கல்பத்திலும் உயர்ந்ததாகும். இந்த நேரத்தின் உயர்ந்த நிலை உள்ளவர் உயர்ந்த பதவி அடைபவராக இருப்பார், உலகில் பூஜ்ய ரூபத்திலும் உயர்ந்தவராக இருப்பார். தந்தையின் குழந்தையாகவும் உயர்ந்தவர், பக்தியிலும் உயர்ந்தவர் மற்றும் ஞானத்திலும் உயர்ந்தவர், இராஜ்யம் செய்வதிலும் உயர்ந்தவராக இருப்பார். ஒவ்வொரு பங்கையும் உயர்ந்த பங்கை செய்யும் காரணத்தினால் உயர்ந்ததிலும் உயர்ந்த ஆத்மாவாக அனுபவம் செய்வார்.

**வரதானம்: இராயல் மற்றும் சிம்பிள் (எளிமை) இரண்டின் சமநிலை மூலமாக காரியம் செய்யக்கூடிய பிரம்மாபாபாவிற்குச் சமமானவர் ஆகுக!**

எப்படி பிரம்மாபாபா மிக உயர்ந்த நிலையிலும் இல்லாமல், மிகத் தாழ்ந்த நிலையிலும் இல்லாமல் சாதாரணமாக இருந்தார். தொடக்க காலத்திலிருந்து இதுவரையிலும் பிராமணர்களின் விதி முறை என்னவென்றால், மிகவும் சாதாரணமாகவும் இருக்க வேண்டாம். மேலும் மிகவும் இராயலாக இருக்க வேண்டாம் என்பது தான். இடைப்பட்டதாக இருக்க வேண்டும். இப்பொழுது சாதனம் அதிகமாக இருக்கிறது சாதனத்தை கொடுப்பவர்களும் இருக்கிறார்கள். இருந்தாலும் எந்தவொரு காரியம் செய்தாலும் இடைப்பட்ட நிலையில் இருக்குமாறுச் செய்யுங்கள். இங்கு இராஜ குடும்பத்தின் பகட்டு இருக்கிறது என்று எவரும் கூறிவிடக்கூடாது. எவ்வளவு எளிமையோ அந்த அளவு இராயல் இரண்டிற்கும் சமநிலை இருக்கட்டும்.

சுலோகன்: மற்றவர்களைப் பார்ப்பதற்குப் பதிலாக தன்னைப் பாருங்கள். மேலும் "எந்த காரியத்தை நான் செய்வேனோ என்னைப் பார்த்து பிறரும் செய்வார்கள்" என்பதை நினைவில் வையுங்கள்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

## பொருளடக்கம்

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂